# தமிழரசு

1-4-1979 50காசு.



இந்த இதழுடன்

இலவச இணைப்பு

# எங்கும் சமநீதி

மாண்புமிகு
**முதல்வர்**
அவர்கள்

சட்டப்பேரவையில்
ஆற்றிய உரையில்
ஒரு பகுதி




**இலவச இணைப்பு**

அடுத்த இதழுடனும் உண்டு



## ஒரு கோடி ரூபாய் செலவில் தந்தை பெரியார் அறிவாலயம்

சென்னையில் தந்தை பெரியார் நினைவாக மிகப் பெரிய அளவில் ஒரு கோடி ரூபாய் செலவில் அறிவாலயம் அமைக்கும் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு வகுத்துள்ளது.

இத்தகவலைத் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

சென்னையில் அமைக்கப்படும் தந்தை பெரியார் அறிவாலயத்தில் நூலகமும், ஆராய்ச்சிக் கூடமும் அமைக்கப்படும்.


# தமிழரசு

மலர் 9 இதழ் 19

1—4—1979



# கனி வளம் காப்போம்!

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்

திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி



நமது வாழ்விற்கும் வசதிக்கும் இன்றியமையாத விவசாயம் மற்றும் ஏனைய தொழில்கள் நடைபெற நாம் பூமியின் செல்வங்களையும், மண் வளத்தையுமே நம்பியிருக்கின்றோம்.

இரும்பு, பெட்ரோலியம், செம்பு, அலுமினியம் போன்ற கனிவளங்களை முறையாகப் பயன்படுத்தியதன் வாயிலாக முன்னேறிய நாடுகள் என்று குறிப்பிடப்படும் அமெரிக்கா, சோவியத் குடியரசு, ஜெர்மனி போன்றவை மேலும் வளமடைந்தன. அண்மைக் காலம் வரை மிகுந்த ஏழ்மை நிலையிலிருந்த ஈரான், ஈராக், குவைத், அரேபியா போன்ற மத்தியக் கிழக்கு நாடுகள் தமது எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் மிகுந்த செல்வ நிலையை எய்தியதை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

எனவே, மக்கள் நல்வாழ்விற்காகக் க்னி வளங்களைப் பயன்படுத்தத் திறமையுடனும் ஆர்வத்துடனும் இடைவிடாத கனி வள ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியது நமது இன்றியமையாத கடமையாகும். இந்நிலையில் மனிதன் முழு அளவு தன் வாழ்விற்காகவும், வளமைக்காகவும் அன்னை பூமியைச் சார்ந்திருப்பது புலனாகிறது.

'இலமென் றசைஇ
இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'

—என்பதல்லவா வள்ளுவர் வாக்கு!

தொன்றுதொட்டே தமிழகத்தில் க்னி வளத் தொழில் விவசாயத்தைப் போலப் பரவலான அளவில் செய்யப்பட்டு வந்தது. விவசாயப் பொருள்கள், வாசனைத் திரவியங்கள் மட்டுமின்றி, உலோகங்களையும் விலை உயர்ந்த வைரக் கற்களையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் புராதன ரோம் நாட்டுக்கு ஏற்றுமதி செய்து வாணிபம் நடத்தியுள்ளனர்.

இடைக்காலத்தில் சிரியாவில் டெமாஸ்களில் செய்யப்பட்ட கத்தி, ஈட்டி, கேடயம் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க படைக்கலன்கள் செய்யத் தமிழ்நாட்டின் இரும்பே பயன்படுத்தப்பட்டதென்பது வரலாறு தரும் சான்றாகும்!

இதுமட்டுமின்றி, அப்போதே தமிழர்கள் செம்பு, உலோகம், போன்ற பலவகைக் கனிவளங்களையும் பயன்படுத்த அறிந்திருந்தனர். தமிழகக் கோயில்

களின் நெடிதுயர்ந்த கோபுரங்கள் நமது முன்னோர்களுக்குக் கட்டடக் கலையிலும், சிற்ப வேலைகளிலும் இருந்த திறமையையும் அறிவாற்றலையும், காலத்தை வென்று பறைசாற்றுகின்றன.

இத்தகைய பெருமை மிக்க பாரம்பரியத்தில் வந்த தமிழ்க் குடிப் பெருமக்கள், நிறைந்த அளவு தமிழ்நாட்டில் பரந்து கிடக்கும் கனி வளங்களை நமது நாட்டின் வளத்திற்காகவும் மக்களின் நல்வாழ்விற்காகவும் பயன்படுத்தத் தீவிர முனைப்புடன் ஈடுபட வேண்டியது, அவர்களின் இன்றியமையாக் கடமையாகும்.

## தமிழகத்தின் கனிவளம்

தமிழ் நாட்டில் பெரிய அளவுகளில் கனிவள இருப்புகள் உள்ளதற்கு, இந்தியாவிலேயே, ஏன் ஆசியாவிலேயே மிகப் பெரிய திறந்த வெளிச் சுரங்கமான, நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கமே சிறந்த சான்றாகும்.

நெய்வேலியைச் சுற்றிலும் சுமார் 200 கோடி டன் பழுப்பு நிலக்கரி உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஏராளமான தண்ணீரை வாரியிறைத்து, தண்ணீருக்கடியிலுள்ள பழுப்பு நிலக்கரியை வெட்டியெடுப்பது வியத்தகு பொறியியற் சாதனையாகும். இத்தகைய பெரிய கனிவள இருப்புகள்தான் தென்னாட்டில் வளர்ச்சிக்காக நெய்வேலியில் ஒரு கனரக மின்உற்பத்தி நிலையத்தைத் துவக்கும் எண்ணத்தை இந்திய அரசினிடம் தோற்றுவித்தன.

நெய்வேலியின் பழுப்பு நிலக்கரி உற்பத்தியை இன்னும் பெருக்க தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாட்டில் நிறைந்துள்ள சுண்ணாம்புக்கல் தான் தமிழ் நாட்டை சிமெண்ட் உற்பத்தியில் இந்தியாவிலேயே முதன்மை பெற்றிட வழிவகுத்துள்ளது. இங்கு ஏழு பெரிய தொழிற்சாலைகளில் ஆண்டுக்கு 35 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தியானதுடன், அரியலூரில் ஒரு ராட்சத சிமெண்ட் ஆலை உருவாக்கவும் வழியேற்பட்டு கட்டுமானப் பணி நடந்துவருகின்றது.

## இரும்பு உற்பத்தி

நமது மாநிலத்தில் சேலம், தர்மபுரி, வடாற்காடு மாவட்டங்களில் விரவிக் கிடக்கும் 60 கோடி டன் இரும்புக் கனிகள் பயன்படுத்தப்படாது உள்ளன. கர்நாடக மாநிலத்திலுள்ள 'குதிரமுக்' திட்டம் போல இங்கு மேற்கண்ட இரும்புக்கனி வளத்தைப் பயன்படுத்த முனைந்தால் இவை உள்நாட்டு இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகளுக்குப் பயன்படுவதுடன், வெளிநாடுகளுக்குப் பெருமளவு ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியைப் பெருமளவு ஈட்டவும் வாய்ப்புள்ளது. பீங்கான் சாதனங்கள் செய்யப் பயன் படும் வெள்ளைக் கனி தமிழ்நாட்டில் நிறைந்து கிடப்பதால் அண்மையில் தமிழ்நாட்டில் விருத்தாச்சலம் சென்னை ஆகிய இடங்களைச் சுற்றிலும் நிறைய பீங்கான் பாண்டத் தொழிற்சாலை

### நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுச் சங்கங்கள்.

தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள், பழங்குடி மக்கள் போன்ற சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் பயனுக்காகவே பல கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்தப் பணிகளைப் பெறுவதன் மூலம் அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகின்றன. பிற வகைச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு பணிவசதிகளையோ அல்லது கடன் உதவியோ அளிக்கின்றன. இச்சங்கங்களுக்குப் பங்கு மூலதனம், கடன், உதவித்தொகை, இலவசமாக துறைப் பணியாளர்கள் சேவை ஆகியவற்றை அரசு அளித்து வருகிறது.

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள், தங்களுக்கென சொந்த வண்டிகளை வைத்துக்கொள்ள உதவும் பொருட்டு, சென்னையில் ஒன்றும், திண்டுக்கல்லில் ஒன்றுமாக சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

*1979–80 ஆம் ஆண்டில் மேலும் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி 30 உறுப்பினர்களுக்கு, 30 சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவதற்காக 0·51 இலட்ச ரூபாய் நிதியுதவி அளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.*

1979–80 ஆம் ஆண்டில் மூன்று தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, ஒவ்வொன்றிற்கும் 0·55 இலட்ச ரூபாய் வீதம் நிதியுதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு நவீன முடிதிருத்தும் நிலையம் ஒன்றை அமைப்பதற்காக 0·21 இலட்ச ரூபாய் வழங்கவும் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுக்கு நவீன உலர் சலவைப் பிரிவினை அமைப்பதற்காக 0·33 இலட்ச ரூபாய் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு உப்புக் கூட்டுறவுச் சங்கத்திற்கு லாரி வாங்குவதற்காக ஒரு இலட்ச ரூபாய் வழங்க நிதி யொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இயந்திரங்களை நவீனப் படுத்துவதற்கும், குறிப்பேடுகள் தயாரிக்கும் பிரிவை அமைப்பதற்கும் கூட்டுறவு அச்சகங்களுக்கு உதவி செய்வதற்காக 16·68 இலட்ச ரூபாய் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கள் தோன்றியுள்ளதுடன், வருங் காலத்தில் இத்தொழில் மேலும் மேலும் வளர்ச்சியடையவும் வாய்ப்பு உள்ளது.

இவை மட்டுமின்றி, வெங்கக் கல் (Quartz) பெல்ஸ்பார் போன்ற பயனுள்ள கனிவளங் களையும் நாம் பெற்றுள்ளோம். சேலத்தில் நான்கு கோடி டன் கள் உள்ளதாக மதிப்பிடப்பட் டுள்ள மாக்னசைட் இந்தியாவி லேயே மிகவுயர்ந்த தரமுடை யது என்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. உலைகள் கட்டுவதில் பயன்படும், உயர்வெப்பத்தைத் தாங்கக் கூடிய, வெப்பத் தடுப் புக் கற்கள் தயாரிக்கவும், இரும்பு எஃகு மற்ற உலோகங்களையும், கலப்பு உலோகங்களையும் உரு கவும் பயன்படும் இம் மதிப்பு வாய்ந்த பயன்மிக்க மாக்ன சைட்டைப் பெருமளவு உயர் தரத்தில் உற்பத்தி செய்ய உள்ள வாய்ப்புக்களைப் பற்றித் தமிழ் நாடு அரசு தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது.

## தோரியம் — இல்மெடைட்

'இல்மெடைட்' என்பது உறுதி மிக்க உயர்தரமுடைய எஃகு தயாரிக்கப்பயன்படும் டிடானி யத்தின் தாதுவாகும். மோன சைட் என்பது கதிர்வீச்சும் (Radio Activity) கொண்ட தோரியம் என்ற மூலகத்தின் தாதுவாகும். தோரியம் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு அணுச்சக்திக் கலன்கள் வாயி லாகப் பயன்படக் கூடியது.

மேற்கண்ட இல்மெடைட், மோனசைட் ஆகிய இரண்டு தாதுப் பொருள்களும், கன்னி யாகுமரியின் மணவாளக் குறிச் சியை யொட்டிய கடற்கரை மணலில் நிறைந்துள்ளன.

பலவகைத் தொழிற்சாலை களிலும் பயன்படக்கூடிய சிர் கான், ரூடைல், சிலிமெனைட் போன்ற கனி வகைகளும் இதே இடத்தில் கிடைக்கின்றன. மற் றும் சேலம் மாவட்டத்தில் கிடைக்கும் அலுமினியத்தின் தாதுவான பாக்சைட், திருநெல் வேலி கோவை மாவட்டங்களில் கிடைக்கும் ஜிப்சம், ராமநாத புரம் மாவட்டத்தில் கிடைக்கும் கிராபைட் செங்கற்பட்டிலும், தென்னாற்காடு மாவட்டத்தி லும் கிடைக்கும் மிக உயர்ந்த தரமுடைய கண்ணாடி மணல் ஆகியவை தமிழ்நாட்டின் இதர முக்கிய கனிவளங்களாகும்.

இத்தகைய கனிவளங்களை நாம் பெற்றிருக்கின்றோம் என்ற மனநிறைவுடன் நில்லாமல், மேலும் புதிய முறைகளில் ஆய்வு களைத் தொடர்ந்து, இன்னும் பல கனிவள இருப்புகளைக் கண்டு பிடிக்க வேண்டும். ஒரு காலத்தில் நாம் திரும்பிக்கூடப் பாராத கருப்புக் கருங்கல் மீது இன்று ஏற்றுமதியாகும் கனி வளங்களிலேயே இது மிகுந்த மதிப்புடையதாகி விட்டதால், ஆர்வம் காட்டுகிறோம். இது போல, இன்று உடனடித் தேவை இல்லாதது போல் தோன்றினா லும், நாட்டின் தொழில் வளர்ச் சியைப் பொறுத்து எதிர்காலத் தில் பல கனிவளங்கள் பயனுக் குக் கொண்டு வரப்படும். எனவே கனிவள இருப்புக்களைக் கண் டறிய முறையான ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற முற்போக்கான சிந்தனை யுடன் தமிழ்நாடு அரசு செயல் படுகின்றது.



இந்தியாவிலேயே முதன் முதலாகத் தமிழகத்தில் தான் ஐக்கிய நாடுகள் (United Nations) உதவியுடன், மாநிலத்தில் பல பகுதிகளில் கனிவள ஆய்வுகள் நடத்தப்பட்டன. இதன் வாயி லாக உள் நாட்டிலும், வெளி நாடு சென்றும் பூமியில் ஆழப் புதைத்துள்ள கனிவளங்களைக் கண்டறிவதில் பயிற்சி பெற்ற ஊக்கமுடைய இளம்புவியில மைப்பு அறிஞர்களைத் தமிழ் நாடு மாநிலப் புவியியலமைப்பி யல் பிரிவு பெற்றுள்ளது.

## இயற்கையின் அன்பளிப்பு

கனிவளங்களைத் தேடிக்கண்ட றிதல் எவ்வளவு முக்கியமானதோ அது போல இவற்றை முறையாகப் பயன்படுத்துவதும் இன்றியமையாததாகும். குறிப் பாக இயற்கையின் அன்பளிப் பான கனிவளங்கள் உருவாக ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகின்றன. எனவே இவற்றை ஒருமுறை வெட்டியெடுத்துவிட் டால் மறுமுறை உருவாக்க முடி யாது. வெட்டியெடுத்ததில் தகுந்த முறை கையாளப்படாத தால் வீணாகியுள்ள கனிவளங் களுக்கு எவ்வளவோ எடுத்துக் காட்டுகளைக் காட்ட முடியும்.

எனவே, கனிவளத்தை வீணாக் காமல் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டிய அவ சியத்தை உணர்ந்துள்ள தமிழ் நாடு அரசு திட்டமிட்ட தொழில் நுணுக்க வரையறைகளின்படி கனிவளங்களை வெட்டியெடுத்து அவற்றிலிருந்து பெறக் கூடிய மிக அதிகமான அளவுப் பயன்களை அடைய வேண்டும் என்பதில் கருத்தாயுள்ளது.

அதே நேரத்தில், மிகக் கடின மான மனித உழைப்பைத்தவிர்க்க மட்டுமே இயந்திரங்கள் பயன் படுத்தவும், மற்ற வேலைகளில் குறிப்பாகத் திறமை மிகவும் தேவைப்படும் இடங்களில் மனித உழைப்பிற்கே முதலிடம் கொடுத்து வேலைவாய்ப்பினைப் பெருக்கவும் தமிழக அரசு ஆர் வமாயுள்ளது. இக் குறிக்கோள் களுடன் தான் சில மாதங்களுக்கு முன்னால் அரசு தமிழ்நாடு கனிப் பொருள் நிறுவனத்தைத் தோற் றுவித்தது.

## அரசின் முயற்சிகள்

தற்போதுள்ள பெருமளவு கருப்புக் கருங்கல் சுரங்கங்களை இயக்கிவரும் தனிப்பட்ட குத்த கையாளர்கள், குறைந்த காலத் தில் ஏராளமான இலாபத்தை ஈட்டவேண்டுமென்ற குறுகிய நோக்குடன், இத்தொழிலின் வளர்ச்சி, தொழிலாளர் நலன் இவற்றைப் புறக்கணித்து விட்டுச் செயல்படுகின்றனர். மேற்பரப் பிலேயே எளிதாக எடுக்கக்கூடிய கற்களைமட்டும்வெட்டியெடுத்து விட்டு, ஆழத்தில் உள்ள நல்ல

## முகப்பில்

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் சார்பில், மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள், கை வண்ண வேலைமிகுந்த கலைப் பொருளான தஞ்சாவூர்த் தட்டை சோவியத் பிரதமர் திரு கோஸிஜின் அவர்களிடம் அன்பளிப்பாகப்பெங்க ளூரில் 13-3-1979 அன்று அளித் தார்கள். திரு கோஸிஜின் அவர் களிடம் நிதியமைச்சர் அவர்கள் உரையாடும் காட்சி.

தரமுள்ள கற்களை ஒதுக்கிவிடுகின்றனர். தொழில் நுணுக்க வரையறைகளின்படி வெட்டியெடுக்காததனால் பெருமளவு கனிவள இருப்புகள் வீணாகிவிடுகின்றன.

அண்மையில் நான் குன்னம் சென்றிருந்தபோது, உயர்ந்த தரத்தில் நிறைந்த அளவில் கிடைக்கும் உலகப் புகழ்பெற்ற பெரும் கருப்புக் கருங்கற் பாறைகளைப் பார்வையிட்டேன். அப்பொழுது அங்கே முறையான திட்டமின்றித் தவறான முறைகள் கையாளப்படுவதால் பெருமளவுக் கற்கள் வீணாகிக் கிடக்கும் காட்சி என் நெஞ்சைத் தொட்டது.

தேவைப்படாத சிறு கற்களும் மண்ணும் அகற்றப்படுவதில்லை. எனவே இத்தகைய முறைகேடுகளை அகற்றி, கற்களில் ஒரு பாளம் கூட வீணாக்கப்படாமல் முறையாக வெட்டியெடுக்கப்பட ஆவன செய்தல் நமது இன்றியமையாத கடமையாகும். ஆகையால் அறிவாற்றலும் அனுபவமும் மிக்க தொழில் நுணுக்க வல்லுநர்களைப் பெற்றுள்ள தமிழ்நாடு கனிப்பொருள் நிறுவனம் குறைந்த காலத்தில் இலாபகரமான முறையில் தகுந்த தொழில் நுணுக்க முறைகளைக் கையாண்டு இக்கற்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பது தமிழக அரசின் ஆவலாகும். அத்துடன் இந்நிறுவனம் தொழிலாளர் நலனையும் கருத்திற் கொண்டு செயல்பட இருக்கிறது.

வெட்டியெடுக்கப்பட்டுத் தகுந்த அளவில் அறுக்கப்பட்ட இக் கருப்புக் கருங்கற்கள், ஜப்பான், இத்தாலி, இங்கிலாந்து போன்ற வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. குறிப்பாக ஜப்பானில் இவை பலகைகளாக மேலும் அறுக்கப்பட்டு ஒரு பக்கத்தில் மெருகேற்றப்படுகின்றன. அடர்ந்த கருமையான நிறங்கொண்ட இக்கற்கள் மெருகேற்றப்பட்டவுடன் கண்ணாடியைப் போன்ற பளபளப்பைப் பெற்றுக் கண்ணைக் கவருகின்றன. மெருகேற்றப்பட்ட கற்கள் தமது உறுதியாலும் கடினத்தன்மையாலும் நிறைய ஆண்டுகள் பொலிவுடன் நிலைத்து நிற்கின்றன.

மூலகற்களை ஏற்றுமதி செய்வது மட்டுமின்றி, இங்கேயே கற்களை அறுத்து மெருகேற்றும் பெரிய தொழிற்சாலைகளை வெளி நாடுகளில் உள்ளதைப் போல அமைப்பதற்கு உள்ள வாய்ப்புகள் பற்றித் தமிழ்நாடு அரசு ஆராய்ந்து வருகின்றது. இத்தகைய தொழிற்சாலைகள் கூடிய விரைவில் அமைக்கப்பட்டு முழுவதும் இங்கேயே செய்து முடிக்கப்பட்ட பொருள்களாக இக்கற்கள் ஏற்றுமதியாகும் நாள் வெகு தொலைவில் இல்லை, இதற்கிடையில் இந்நிறுவனம் இம்மாநிலத்தில் பல இடங்களில் கிடைக்கும் கருப்புக் கருங்கற்களைப் பெருமளவு வெட்டியெடுத்து வெளிநாட்டு விற்பனையைப் பெருக்க ஆவன செய்யும்.

வெளி நாட்டு வாணிபத்திற்கு குறித்த காலத்தில் தரமுள்ள கற்களை ஏற்றுமதி செய்து நல்ல விலைகளைப் பெறுவதுடன், உள்நாட்டுத் தொழில்களின் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்பதே நமது நியாயமான ஆர்வமாகும்.

தர்மபுரி, சேலம், தென்னார்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் துவக்கப்படுகின்ற ஒவ்வொரு சுரங்கத்திலும் சுமார் நூறு பேர் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

**பின்தங்கிய பகுதிக்கு நல்வாழ்வு !**

உலகத்தின் எண்ணெய்வளம் எப்படிப் பாலைவனங்களிலும், கடலுக்கு அடியிலும் காணப்படுகின்றதோ, அதுபோன்ற பெருமளவு கனிவளங்கள் விவசாயத்திற்கு உதவாத முரட்டு நிலப் பரப்புகளிடையே கிடைக்கின்றன.

கருப்புக் கருங்கல்லும் இதற்கு விதிவிலக்கல்ல.

பின்தங்கிய பகுதிகளிலும், மலைகளிலும், காட்டுப் பகுதிகளிலும் கிடைக்கும் இக்கற்களை வெட்டியெடுப்பதைத் தீவிரப் படுத்த, நிறைய சுரங்கங்களை இயக்குவதன் மூலம் பின்தங்கிய பகுதிகளைச் சார்ந்த பலவீனமான மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றப்படுவது திண்ணம். இச்சுரங்க வேலைகளுக்காக அமைக்கப்படும் சாலைகள் பெருமளவு மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிப்பது மட்டுமின்றி பின்தங்கிய ஒதுக்குப்புறமான கிராமப் பகுதிகள் வெளி உலகத்துடன் இணைப்பைப் பெறுகின்றன.

தர்மபுரியில் பரவலாகக் கிடைக்கும் கருப்புக் கருங்கற்களை வெட்டியெடுக்க சுரங்கங்கள் அமைக்கப்படுவது மிகவும் பின்தங்கியுள்ள இம்மாவட்டத்தை முன்னேற்றப் பேருதவி புரியும்.

நான் மகிழ்ச்சியுடன் தர்மபுரி மாவட்டத்தில் துவக்கி வைத்த சுரங்கம், தமிழ்நாடு கனிப்பொருள் நிறுவனம் தொடங்க இருக்கும் சுரங்கங்களில் ஒன்றாகும். அப்பகுதிகளில் கல்வெட்டும் பணியைத் தொடங்குவதில் நிறைய இடர்ப்பாடுகள் ஏற்பட்ட போதிலும், இப்பணி மேலும் தீவிரப்படுத்தப்பட்டு கருப்புக் கருங்கற்கள் உற்பத்தி உடனடியாக அதிகரிக்கப்பட வேண்டுமென்பது அரசின் குறிக்கோளாகும்.

சீக்கிரத்திலேயே அந்தப் பகுதியில் குறைந்தது ஆறு சுரங்கங்கள் இயக்கப்பட இருக்கின்றன.

தமிழ்நாடு கனிப்பொருள் நிறுவனம் இயக்கும் சுரங்கங்களால் தர்மபுரியின் மிகப் பின்தங்கிய பகுதிகளுக்கு நிறைந்த நன்மைகள் கிடைக்கும் என்று உறுதியாக நம்புகின்றேன்.



‘பெல்’ நிறுவனத்தில்

# குழந்தைகள் கண்காட்சி



திருச்சி என்றதும் நம் நினைவுக்கு வருவது மலைக்கோட்டை அடுத்து, திருச்சிக்குப் புகழ் தேடித் தரும் ‘பெல்’ நிறுவனம்.

இரும்பு-கனரகப் பொருள்களுடன் உறவாடிக் கொண்டிருக்கும் ‘பெல்’ நிறுவனம், இளஞ் சிறார்களின் அறிவு வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறைகொண்டு அண்மையில் குழந்தைகள் அறிவியல் கண்காட்சி ஒன்றை மிகச் சீரும் சிறப்புமாக நடத்திக் காட்டியது.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டையொட்டி குழந்தைகள் கண்காட்சி ஒன்றை பிப்ரவரி திங்களில் 2 வாரத்திற்கு இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தனர் மத்திய அரசின் ‘பெல்’ நிறுவனத்தினர்.

**கைவண்ணம் காணீரோ !**

‘பெல்’ என்று சுருக்கமாகக் கூறப்படும் பாரத கனரகக் கொதிகலன் தொழிற்கூடத்திற்கு அருகே அமைந்துள்ள 30 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கண்காட்சி அமைக்கப்பட்டது. மலைக்கோட்டையின் சாயலில் நுழைவாயில். உள்ளே 60 அரங்கங்கள். ஆடம்பரமின்றி எளிமையாகத் தென்னங்கீற்றுக் தட்டிகளினால் அமைக்கப்பட்ட இந்த அரங்கங்களில் 30ல் பள்ளிகளைச் சேர்ந்த மாணவ-மாணவியரின் கைவண்ணங்கள் இடம் பெற்றிருந்தன.

பாட சம்பந்தமானதாகவும், அறிவியல் கண்ணோட்டத்துடனும் ஆவலைத் தூண்டக்கூடிய பல்வேறு கருவிகளைப் பிஞ்சு உள்ளங்கள் நிருமாணித்திருந்தன. தகர டப்பாக்களும், அட்டைப் பெட்டிகளும், புட்டிகளும்தான் அவர்களது சாதனங்கள். அவற்றின் மூலம் தம் கைவண்ணத்தை காட்டி பல அற்புதங்களை-அறிவியல் சாதனங்களை நிகழ்த்திக் காட்டியிருந்தனர் அந்தச் சின்னஞ்சிறு அரும்புகள்!

**மாயாஜாலம் !**

பொருட்காட்சி என்றதும் பிரம்மாண்டமான அரங்கங்களையும் வியாபாரக் கடைகளையும் எதிர்பார்த்து வந்தவர்களுக்கு, துவக்கத்தில் இந்த அரங்கங்கள் சற்று வித்தியாசமாகக் காட்சி தந்திருக்கும், ஆனால், அரங்கத்தில் நுழைந்தததும் 10, 12 வயது சிறுவர் சிறுமியர் தனது அறிவியல் ஞானத்தை ஆர்வத்தோடு விளக்கிய பாங்கும், பெரியவர்களுக்குக்கூட தெரியாத, ஆனால் எளிதில் விளங்கக் கூடிய முறையில் விஞ்ஞானமாயாஜாலங்களை விளக்கிய முறையும் பார்த்தவர்களை மூக்கில் விரல் வைத்து வியக்கச் செய்தது.

ஒரு சிறு அறையில் நுழைந்ததும் அலாரம் மணி அடித்தது. நமது வரவால் ஒளி தடைப்பட்டதும், மணி எவ்வாறு அடிக்கிறது என்பதை விளக்கினான் அந்த அரங்கிலிருந்து ஒரு சுட்டிப்பயல்!

## சிந்தனை...

**சிந்திக்கத் தெரிந்த தவித்திறன் காரணமாகவே மனிதன் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். சிந்தனையால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. மனிதனாகப் பிறந்தவன் கட்டாயமாகச் சிந்திக்க வேண்டும். சிந்திக்கச் சிந்திக்கத்தான், மனிதனுடைய எண்ணங்கள் உரிய உருப்பெற்று சிறப்படையும். சிந்திப்பது மனிதனுடைய தனி உரிமை. சிந்திக்கத் தெரிந்தவனே மனிதன்!**

**—ஐன்ஸ்டின்.**

வளைந்த பிளாஸ்டிக் குழாய் மூலம் கீழுள்ள தொட்டியிலிருந்து தண்ணீர் மேல் நோக்கிச் சென்ற விந்தை. இரு கயிறுகளுக்கிடையே கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் கூம்பு உருளை, தானாக ஓடும் ஊர்தி இவற்றை இயக்கிக் காட்டினர் மற்றொரு அரங்கில்.

இரசாயன பொருட்களைத் தாளில் கலந்து சூரிய ஒளியின் மூலம் புனகப்படத்தின் நகல் எடுப்பது எப்படி என்று விளக்கினாள் ஒரு மேல்நிலைப்பள்ளி மாணவி.



**வருங்கால விஞ்ஞானிகள்!**

பெரும்பாலும் பாடத்தில் படித்த அறிவியல் கருத்துக்கள் அதனைக் கண் முன்னே நிறுத்துவதில் வெற்றி கண்டிருந்தனர் மாணவ - மாணவிகள். நாள் தோறும் வந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு எள்ளளவும் சோர்வின்றி எடுத்துக் கூறிவந்த பிள்ளைகளைஎவ்வளவு பாராட்டினாலும் தகும்.

வழக்கமாக பொருட்காட்சிகளில் பெரியவர்கள் விளக்க சிறுவர்கள் வேடிக்கைப் பார்ப்பதற்கு மாறாக, இங்குச் சிறுவர்கள் விளக்க, பெரியவர்கள் ஆர்வத்தோடு பார்த்துக் கேட்டு ரசித்ததில் இனிமை, ஒரு பெருமிதம் இருந்தது!

இந்த அரங்கத்தில் பங்குபெற்றவர்களில் அல்லது இந்தக் கண்காட்சிகளைப் பார்த்த மாணவ-மாணவியரில் ஒரு 10 பேராவது பெரிய விஞ்ஞானிகளாக நிச்சயம் மாறுவார்கள், அதற்கான ஊக்கத்தை இந்தக் கண்காட்சி ஏற்படுத்தியுள்ளது என்ற நம்பிக்கை பார்த்தோர் மனதில் ஏற்பட்டது.

இந்த அறிவியல் கண்காட்சியில் மாணவர்கள் அரங்கம் தவிர வேறு முக்கிய பல அரங்கங்கள் இடம் பெற்றிருந்தன. அவற்றில் குறிப்பாக 'பெல்' நிறுவனத்தினரின் சக்தி அரங்கம், நீர் மின்சாரம், அனல் மின்சாரம் ஆகியவை பற்றிய சிறிய மாதிரிகளைப் படைத்திருந்ததோடு சிறிய நீர்மின் நிலையத்தை உருவாக்கி செயல்படுத்தியும் காட்டினார்கள்.

**எத்தனை அரங்கங்கள்!**
**எத்தனை காட்சிகள்!**

மக்களைக் கவர்ந்த அவர்களது மற்றொரு அரங்கம் கணக்குப் பார்க்கும் கருவிகள், அமைந்த கம்ப்யூட்டர் அரங்கம் அதில் பல் வேறு கம்ப்யூட்டர் இயந்திரங்களை வைத்திருந்தனர். அதைச் செயல்படுத்தியும் காட்டினர்.

எல்லோருக்கும் தன்னைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் உண்டல்லவா கம்ப்யூட்டரிடம், உங்கள் பெயர் பிறந்த தேதி, பிறந்த நேரம், பிறந்த இடம் ஆகியவற்றைக் குறித்துக் கொடுத்தால், 5 நிமிடத்தில் உங்கள் ஜாதகம் கட்டம் போட்டு கிரகங்கள் ராசிகளைக் குறிப்பிட்டு உங்கள் கையில் கிடைக்கிறது. அடுத்தது உங்கள் குணநலனைக் குறிப்பிடும் ஒரு விந்தைக் கருவி.

இன்னொரு அரங்கத்தில் நகல் எடுக்கும் பல்வேறு கருவிகளையும் அதன் வளர்ச்சியையும் காட்சிகளையும் வைத்திருந்தனர்.

தமிழ்நாடு அரசின் 5 அரங்கங்கள் இந்தக் கண்காடசியில் இடம் பெற்றன. அரசின் சிறு தொழில்கள் கைத்தொழில்கள் பற்றி மாணவ - மாணவியர் அறிந்துகொள்ளும் விதத்தில் இந்த அரங்கங்கள் அமைந்திருந்தன.

பட்டுப்புழு வளர்ப்பு அரங்கத்தில், பட்டுப்பூச்சியின் முட்டை முதல் புழுக்கள், கூட்டுப்புழுக்கள், பட்டுக்கூடுகள், பட்டு நூல் ஆகிய பல்வேறு நிலைகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கதர் கிராமத் தொழில் அரங்கத்தில் கை வினைஞர்கள் வந்





திருந்து மண்பாண்டம் தயாரிப்பது, பொம்மைகள் தயாரிப்பதை நேரில் செய்து காட்டினர்.

சிறு தொழில் அரங்கத்தில் திருச்சியின் முக்கிய சிறு தொழிலான செயற்கை வைரம் பட்டைத் தீட்டப்படுவதைச் செய்து காட்டினர். தொழிலாளர்கள். சிறுவர்களுக்கான செப்புகள் செய்து காட்டினர், நெல்லை மாவட்ட அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் மரத்தில் அற்புதமான மரச் சிற்பங்களில் தங்களது திறமையைக் காட்டினர்.

கைத்தறி அரங்கத்தில் கைத்தறி மூலம் நெசவு செய்து காட்டப்பட்டது.

வேளாண்மை அரங்கத்தில் வீரிய விதைகளைப் பயன்படுத்தி ஒரு சிறிய மாதிரிப் பண்ணையையே நிருமாணித்திருந்தார் திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த துணை வேளாண்மை அலுவலர்.

**குழந்தைகள் படம்...**

பொருட்காட்சி என்றால் பொழுதுபோக்கு அம்சம் இருக்க வேண்டுமே! அதற்கும் இங்கே குறைவில்லை. ஆனால், அவையும் பள்ளி மாணவ மாணவியருக்குப் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன.

சிறுவர்களுக்கான திரைப் படங்கள், இரண்டு அரங்கங்களில் அரை மணிக்கொரு காட்சியாக காட்டப்பட்டன. இதற்காக இங்கிலாந்து, ஜப்பான், ஜெர்மனி, சோவியத்நாடு ஆகிய நாட்டுத் தூதரகங்களிலிருந்தும், தமிழ்நாடு அரசு மீன் வளத்துறை வனவளத்துறை ஆகியவற்றிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட திரைப் படங்கள் கொண்டுவரப் பட்டன.

சிங்கம், புலி, சிறுத்தை போன்ற விலங்குகள் அடங்கிய காட்சிச்சாலையொன்றும், மீன் காட்சிச்சாலை ஒன்றும் இதில் இடம் பெற்றிருந்தது.

இந்தக் கண்காட்சி 17.2.79 அன்று துவக்கப்பட்டது. விழாவிற்கு வந்தவர்களை வரவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி. சங்கர், ஐ.ஏ.எஸ்., அவர்கள் ''இது குழந்தைகளுக்காக குழந்தைகளால் நடத்தப்படும் கண்காட்சி'' என்று எடுத்துரைத்தார்.

கண்காட்சியைத் துவக்கி வைத்த மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள்பேசுகையில் ''குழந்தைகள் மட்டும் அல்ல, பெரியவர்களும் பார்க்க வேண்டிய கண்காட்சி. பொருட்காட்சி என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். இதை ஏற்பாடு செய்த 'பெல்' நிறுவனத்தை ஆயிரம் முறை பாராட்டுகிறேன். இது போன்ற பிற பொதுத்துறை தொழிற்கூடங்களும் இதனைப் பின்பற்றவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

'பெல்' நிறுவன நிருவாக இயக்குநரும் பொது மேலாளருமான திரு வி.ஆர். தீனதயாளு அவர்கள் கண்காட்சி பற்றி எடுத்துரைத்து, அதனை வெற்றிகரமாக அமைக்க தனக்கு உதவிய அனைவரையும் பாராட்டினார்.

27.2.79 அன்று திருச்சிக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி. ஆர் அவர்கள் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டார் முதல்வருடன் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் ஆகியோரும் கண்காட்சிக்கு வந்தனர். கண்காட்சி அரங்கத்தில் பங்குபெற்றமாணவ மாணவியருக்கு முதல்வர் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

அரங்கத்தின் பிரதிநிதியாக ஒரு மாணவன் அல்லது மாணவி வந்து முதல்வரிடம் பரிசு பெற்றனர். பரிசு பெற வந்த இளஞ்சிறார்களை கண்ணுற்றதும் முதல்வருக்கு மகிழ்ச்சி பொங்கியது. ஒவ்வொரு இளஞ்சிறாரையும் தனது உயரத்திற்குத்தூக்கிக் கூட்டத்தினருக்கு அறிமுகப்படுத்தினார். மக்களின் மகிழ்ச்சியும் கைதட்டலும், விண்ணை அதிரச் செய்தன.

பிப்ரவரி 17 ஆம் தேதி துவக்கப்பட்ட இந்தக் கண்காட்சி மார்ச் 4ஆம் தேதி நிறைவு பெற்றது. 15 நாளில் சுமார் இரண்டரை இலட்சம் மக்கள் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டனர். அதில் சுமார் அரை இலட்சம் மாணவ-மாணவியர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருச்சி மாவட்டம் மட்டுமின்றி, புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்களிலிருந்தும் பள்ளி மாணவ-மாணவியர் கண்காட்சியைக் கண்டு களித்தனர். கண்காட்சிக்கு வருபவர்களுக்கு மிகவும் சிறந்த முறையில் போக்குவரத்திற்கான பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

நிறைவு விழாவில் கலந்து கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் கண்காட்சியைச் சிறப்பாக நடத்திய 'பெல்' நிறுவனத்திற்குத் திருச்சி மாவட்ட மக்கள் சார்பில் வேலைப்பாடுகள் மிகுந்த தஞ்சாவூர்த் தட்டுகள் வழங்கினார்.

அரங்கங்கள் அமைத்த அனைத்து பள்ளிகளுக்கும் வெற்றிக்கு உதவிய அனைத்து அலுவலர்களுக்கும், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மாணவ-மாணவியரின் கலை நிகழ்ச்சிகள், நிறைவுநாள் விழாவிற்கு முடிசூட்டியதுபோல் அமைந்திருந்தன.

—கே. நடராஜன்.
மாவட்ட ஆட்சித் தலைவரின்
தனி உதவியாளர்.
செய்தி-மக்கள் தொடர்பு

# எழுத்துச் சீர்திருத்தம் தேவையே

டாக்டர் மு. வரதராசனார்

**[காலஞ்சென்ற தமிழ் அறிஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், அவர் வாழ்ந்த நாளிலேயே எழுத்துச் சீர்திருத்தத்தை ஆதரித்துக் கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரையை மீண்டும் இங்கே வெளியிடுகிறோம்.]**

கட்டை வண்டி கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் அது ஒரு விந்தையான படைப்பாகவே போற்றப்பட்டது. ஆனால், அந்தக் காரணம் கொண்டு இன்று அதைப் போற்றத்தேவையில்லை. கார்களும், லாரிகளும் நிறைந்த இந்தக் காலத்திற்கு ஏற்றபடி வாழ்க்கையில் முன்னேற வேண்டுமே தவிர, பழைய கண்டுபிடிப்புக்களின் பெருமையை நினைந்து தேங்கி நிற்கக்கூடாது. எங்கள் முன்னோர் படைத்தவை என்று அவற்றை விட மனமில்லாமல் தயங்கக் கூடாது.

ஒரு மொழியின் எழுத்துக்களைப் பற்றியும் இதே உண்மை பொருந்தும். உலக மொழிகளின் எழுத்துக்கள் எல்லாவற்றிற்கும் பொருந்தும்; தமிழ்மொழியின் எழுத்துக்களுக்கும் பொருந்தும்.

கற்களில் எழுத்துக்களைச் செதுக்கிய காலத்திலும், பனை ஓலைகளில் எழுத்தாணிகொண்டு எழுதிய காலத்திலும், எழுத்துக்களின் வடிவங்கள் அவற்றிற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டு இருந்தன. இன்று, கற்களில் செதுக்கப்படும் தமிழ் மிகமிகக் குறைவு; பிளாஸ்டிக் முதலியவற்றில் எழுத்துக்களைச் செய்து பொருத்தல் பெருகிவிட்டது. பனை ஓலையில் எழுத்தாணி சொண்டு எழுதும் முறை அடியோடு மறைந்து விட்டது. வெள்ளைத் தாளில் உயர் ஊற்றுப் பேனா கொண்டு எழுதும் முறை ஓங்கி விட்டது. தட்டெழுத்தில் அடிக்கும் முறையும், அச்சுப் பொறியில் எழுத்துக்களைக் கோத்து அச்சிடும் முறையும், குறைந்த நேரத்தில் மிக வேகமாகச் செய்யும் லினோ டைப் முறையும் பெருகிவிட்டன. படித்தல் என்றால், தட்டெழுத்து முறையில் அடிக்கப்பட்டவற்றையும், அவற்றைவிட மிகுதியாக அச்சிடப்பட்ட செய்தித் தாள்களையும் நூல்களையும் படிப்பதே வழக்கமாகிவிட்டது.

ஆகவே, பனை ஓலையில் இரும்பாணியினால் எழுதுவதற்கு உதவியாக அமைக்கப்பட்ட பழங்கால எழுத்து வடிவங்களை இனியும் போற்றிக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை. தட்டெழுத்துப் பொறிக்கும், அச்சுப் பொறிக்கும் ஏற்ற வகையில் அவற்றைச் சிறிது மாற்றியமைக்க முற்பட வேண்டும். முன்னேற்றம் கருதி இப்படி சீர் திருத்தம் செய்யும்போது, கண்மூடித்தனமான பழமைப் பற்று மொழிப் பற்று குறுக்கிடலாகாது.

தமிழ் எழுத்துக்கள் கூடிய வரையில் முற்போக்காக அமைந்த எழுத்துக்களே, சீன எழுத்துக்களும் ஜப்பான் எழுத்துக்களும் (படங்கள்) போல் அமைந்து நூற்றுக் கணக்கில் பெருகியவை அல்ல; அரபி முதலிய எழுத்துக்களைப் போல் புள்ளிகளும் நுண் கோடுகளும் மிகுந்தவைகளும் அல்ல. உயிரெழுத்து பதினெட்டும் ஆகச் சுருங்கிய அளவில் முப்பது எழுத்துக்கள் உடையது தமிழ்.

அந்த முப்பது எழுத்துக்களும் தெளிவான வடிவ வேறுபாடுகள் கொண்டவை; மயக்கத்திற்கு அவ்வளவாக இடம் தராத வகையில் தெளிவு பெற்றவை. மெய்யெழுத்துக்களை அடுத்து உயிர் எழுத்துக்கள் வரும்போது, உயிர்மெய் எழுத்துக்கள் எனப் பெயர் பெற்றுச் சேர்த்து அமைக்கப்படுவதில் சில குறைகள் உள்ளன. இன்று அந்தச் சில குறைகளே தட்டெழுத்துக்கும் அச்சுக்கும் இடர்பாடுகளாக உள்ளன. எடுத்துக் காட்டாக a e i o u என்னும் ஆங்கில உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களோடு சேரும்போது Ka, Ke, Ki, Ko, Ku, Pa, Pe, Pi, Po, Pu என மெய்யும் உயிரும் தனித் தனியே எழுதப்படுகின்றன. அதனால் மெய்யும் உயிருமாகிய 26 எழுத்துக்களைக் கொண்டே தட்டெழுத்தும் அச்செழுத்தும் அமைகின்றன. அதனால் எழுத்துச் சுருக்கமும் வடிவ தெளிவும் ஐரோப்பிய மொழிகளுக்கு இயல்பாக உள்ளன.

தமிழிலும் அவ்வாறு அமைய வேண்டுமானால், உயிர் பன்னிரெண்டும் மெய் பதினெட்டுமாகச் சில எழுத்துக்களில் சுருக்கலாம். அவ்வாறானால் க, கா, கி, கீ, : ப, பா, பி, பீ என மெய்யும் உயிரெழுத்தின் சில குறியீடுகளுமாக முப்பது எழுத்துகளுக்கு மேல் பத்து அல்லது பதினொன்று வளரவேண்டி வரும். ஆக நாற்பது நாற்பத்தொன்று வடிவங்கள் அமைக்க நேரும். ஆங்கிலத்தில் முதல் எழுத்து வடிவங்களும் சிறு எழுத்து வடிவங்களும் (capital letters and small letters) ஆக ஐம்பத்திரண்டு வடிவங்கள் இருப்பதை உணரும்போது, நாற்பது நாற்பத்தொன்று வடிவங்கள் மிகுதியல்ல.

ஆனால், உயிரெழுத்தின் குறியீடுகள் ஒழுங்காக இருந்தால் தான் இது இயலும். கா, ஙா, சா, ஞா, டா, ணா, தா, நா, பா, மா, யா, ரா, லா, வா, ழா, ளா, றா, னா என ஆகாரத்தின் குறியீடு எல்லா மெய்களுக்கும் பின்னர் ா என அமையவேண்டும். ணா என்பது ணா எனவும், றா என்பது றா எனவும் முறை மாறாக அமைந்துள்ளன. அது போன்ற இடர்பாடுகளைக் களைந்தால்தான், தட்டெழுத்தும் அச்செழுத்தும் ஒழுங்கு பெறும்.

பனை ஓலையில் எழுதிய காலத்தில் ஆணி கொண்டு ஓலையில்எழுதும்போது, ஓர் எழுத்தை முடிக்கும்போது ஆணியை நிறுத்

# வெண்பாப் போட்டி

## தமிழரசு

தமிழரசு துவக்கம் ஆகியபொழுது—வாசகர்களுக்கு 'வெண்பாப் போட்டி'யை அறிமுகம் செய்தோம். ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து இடம் பெற்றிருந்த இந்தப் பகுதி வாசகர்களின் பேராதரவைப் பெரிதும் பெற்றது.

தற்போது, பெரும்பான்மையான வாசகர்களின் விருப்பத்திற்கு இணங்க, 'வெண்பாப் போட்டி'யை மீண்டும் 'தமிழரசு' இதழில் மகிழ்ச்சியுடன் தொடங்குகிறோம்.

வெண்பாவின் ஈற்றடி வழங்கப்படும். பங்கு கொள்ளும் கவிஞர்கள் வெண்பாவின் முதல் மூன்றடிகளையும் உருவாக்கி—ஈற்றடியையும் இணைத்து அனுப்ப வேண்டும். நேரிசை வெண்பாவாக அனுப்பப் பெறல் அவசியம்.

வெண்பாப் போட்டியில் யார் வேண்டுமென்றாலும் கலந்து கொள்ளலாம். எத்தனை வயதுடையவர்கள் வேண்டுமென்றாலும் பங்கு பெறலாம். ஆனால்... அரசியல் விவகாரங்கள்--தாக்குதல்கள் இல்லாத வகையிலே வெண்பாக்கள் அமைந்திருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம். பரிசு பெற்ற வெண்பாவை எழுதியவருக்கு 'தமிழரசு' ஓராண்டுக்கு இலவசமாக அனுப்பப் பெறும்.

வெண்பா, 'தமிழரசு' அலுவலகத்துக்கு வந்துசேர வேண்டிய கடைசி நாள்: 20-4-79.

ஈற்றடி: 'பெரியார் பெரும்புகழே பேசு'

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
வெண்பாப் போட்டி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

---

துவதும், அடுத்த எழுத்தைத் தொடங்கும்போதும் ஆணியைக் குத்தித் தொடங்குவதும் இடர்பாடாக இருந்திருக்கலாம். அதனால் ணா றா னா என்று எழுதுவது எளிதாக இருந்திருக்கலாம். ணா றா னா என்று எழுதுவது இடையூறாக இருந்திருக்கலாம். அதனால் சேர்த்து எழுதும் அந்த வடிவங்களைக் கையாண்டு பழகியிருக்கலாம்.

ஆனால், ஓலையும் எழுத்தாணியும் இல்லாத இந்தக் காலத்தில் வெள்ளைத் தாளில் ஊற்றுப் பேனாவால் எழுதும் வாய்ப்பு உள்ளபோது, ணா, றா, னா என்று ஒரு முறைப்படுத்தி எழுதுவதுதான் எளிது. இயல்பானது. ஆகையால் அந்தச் சிறு சீர்திருத்தம் செய்யத் தயங்குவது அறியாமை அல்லது கண்மூடித் தன்மை எனலாம்.

ஊற்றுப் பேனா மிகுந்த இந்தக் காலத்தில் ஒழுங்கான குறியீட்டைக் கையாண்டு எழுதுவதில் இடர்பாடு இல்லை. தட்டெழுத்துக்கும், அச்சுக்கும் நன்மையே யாகும். இந்தச் சீர்திருத்த முறையைத் துணிந்து கையாண்டு புதுவழி காட்டிய பெருமை தந்தை பெரியாருக்கு உரியது என்பதை எவரும் மறுக்க இயலாது. பல ஆண்டுகளுக்கு முன்பே அவரால் புகுத்தப் பெற்ற இந்தச் சீர்திருத்தத்தை இன்னும் நாடு முழுவதுமாக ஏற்றுக் கொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கது. நன்மையும், முற்போக்கும் வெற்றி பெறாமல் கண்மூடிப் பழக்கமே நீடித்திருக்க விட்டிருப்பது அறிவியல் நூற்றாண்டாகிய இக் காலத்திற்குச் சிறிதும் பொருந்தாததாகும்.

நம் முன்னேற்றத்திற்கு உதவியான எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஒவ்வொருவரும், எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த முற்போக்கிற்கு முட்டுக்கட்டை இடுவதற்கு யாரும் முன்வராதவாறு விளக்க வேண்டும். மொழி வளர்ச்சிக்கு உரிய நல்லதொரு தொண்டு இது என்பதைத் தமிழகம் விரைவில் உணர்வதாக!

## அனைத்து நாட்டு குழந்தைகள் ஆண்டையொட்டி

# புதிய நாணயங்கள்




அனைத்து நாட்டு குழந்தைகள் ஆண்டைக் குறிக்கும் வகையில் மார்ச்சு 5ஆம் நாளன்று நான்கு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

இந்த நாணயங்கள் 50 ரூபாய், 10 ரூபாய், 10 காசு, 5 காசு மதிப்புக்களில் வெளியிடப்பட்டுள்ளன. 50 ரூபாய், 10 ரூபாய் நாணயங்கள் பொதுமக்களின் புழக்கத்திற்கு விடபடமாட்டாது, ஆயினும் இந்த நாணயங்கள் சட்டப்பூர்வமாக செல்லத்தகுந்தவையாகும். 10 காசு, 5 காசு நாணயங்கள் பொதுமக்களிடையே புழக்கத்திற்கு வந்துள்ளது.

டெல்லியில், மத்திய சமூகநலத்துறை ஏற்பாடு செய்திருந்த ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் துணைக் குடியரசுத் தலைவர் திரு ஜாட்டி இந்த நாணயங்களை வெளியிட்டார். ''மகிழ்ச்சியான குழந்தையே நாட்டின் பெருமை'' என்ற வாசகம் இந்த நாணயங்கள் அனைத்தின் பின்புறங்களில் இந்தியிலும், ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது.

அனைத்து நாட்டு குழந்தைகள் ஆண்டிற்கான இந்திய சின்னம் இந்த நாணயங்களின் பின்புறத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வட்டத்திற்குள் ஒரு சிலேட் பொறிக்கப்பட்டிருப்பது அனைத்து நாட்டு குழந்தைகள் ஆண்டிற்கான இந்தியச் சின்னம். இந்த சிலேட்டின் நடு மேல்பகுதி ஒரு சூரியனும் அந்தச் சூரியனுக்குச் சற்றுக்கீழே ஒரு சிறுவன் ஒரு சிறுமி படம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தச் சின்னத்தினை இரண்டு இலைகள் தாங்கிக் கொண்டிருப்பதுபோல் பொறிக்கப்பட்டுள்ளது.

புதிய 10 காசு, 5 காசு நாணயங்கள் இந்திய ரிசர்வ் வங்கியின் அலுவலகங்களிலும் அதனுடைய ஏஜென்சி வங்கிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. 50 ரூபாய், 10 ரூபாய் நாணயங்கள் பின்னர் அறிவிக்கப்படவிருக்கிற குறிப்பிட்ட காலத்திற்குள் பம்பாயிலுள்ள இந்திய அரசாங்க நாணயச்சாலையில் ஆர்டர்கள் கொடுப்பதையொட்டி பொதுமக்களுக்கு வழங்கப்படும். இந்த நாணயங்கள் அவைகளின் செலவாணி மதிப்பைவிட அதிக விலைக்கு விற்பனை செய்யப்படும். இந்த விற்பனையின் மூலம் கிடைக்கும் தொகை தேசீய குழந்தைகள் நிதிக்கு நன்கொடையாக வழங்கப்படும். இந்த நான்கு நாணயங்களும் சட்டப்படி செல்லத்தகுந்தவையாகும்.

# முல்லிக்காடு அணை

கடந்த 1909 ஆம் ஆண்டு முதல் 60 ஆண்டுக்காலமாக, கோரிக்கை அளவிலேயே இருந்து வந்த!, தர்மபுரி மாவட்டம் பாபி ரெட்டிப் பட்டியை அடுத்த முல் லிக்காடு அணைத் திட்டத்திற்கு மத்திய மாநில அரசுகள் ஐந்து கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் அரூர் வட்டத்தில் உள்ள பாபிரெட்டிப் பட்டி, வெள்ளச்சமுத்திரம், மோளையானூர்-புதுப்பட்டி, மெணக் உட்பட சுமார் 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள ஆயிரத்து முன்னூறு ஏக்கர் நிலம் ஆயக்கட்டாக மாற்றப் படும் என்றும், இதன் மூலம் 12 ஆயிரத்து 500 டன் உணவு உற்பத்தி அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

இந்த அணைத் திட்ட வேலைகள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டு நான்காண்டுக் காலத்திற்குள் முடிக்கப்படும்.

* * * * *

மறைந்த மாமேதை மூதறிஞர் ராஜாஜியின் நூற்றாண்டு விழா நாடு முழுவதும் நடைபெறுவதை யொட்டி அவர் பிறந்த பகுதி யான ஓசூரில் அமைக்கப்பட்டு வரும் 'சிப்காட்' தொழில் நகரத் திற்கு, 'ராஜாஜி நகர்' என்று பெயர் மாற்றப்படும் என்று அறி விக்கப்பட்டிருக்கிறது. **






# மகளிரும் பேருந்து ஓட்டுநர் ஆகலாம்!

தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்வதென்பது மனிதனின் கூடப்பிறந்த தன்மை. சாலைப் பாதுகாப்பின் முதல் குறிக்கோளும் இதுதான். ஒவ்வொரு ஓட்டுநரும் மிகக் கவனமாக ஓட்ட வேண்டியது அவரது கடமையாகும். ஓர் ஓட்டுநர் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்கவில்லை என்பதற்காக மற்றவரும் அம்மாதிரி செய்யக் கூடாது. அத்துடன் வண்டி ஓட்டுவதில் பண்பாடும் இருக்க வேண்டும். கவனத்துடன் கண்ணியமும், பொறுமையும் சேர்ந்தால் சாலை விபத்துக்கள் நேராமல் தடுத்து உயிர்களைப் பாதுகாக்க உதவும்.

காவல் துறை சார்பில் 'போக்குவரத்து விழா 2-3-79 அன்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு சி. பொன்னையன் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார்கள்.

தலைமை உரையில் அவர் குறிப்பிட்டதாவது:

''தமிழகத்தில் ஏறத்தாழ 2.5 இலட்சம் வாகனங்கள் உள்ளன. சென்னை நகரைச் சார்ந்த 80,000 வாகனங்களும், தமிழகத்தின் மற்றைய பகுதிகளிலிருந்தும் சென்னைக்கு வரும் 40,000 வாகனங்களும் சேர்ந்து தினசரி 1 இலட்சத்து 20,000 வாகனங்கள் சென்னையில் ஓடுகின்றன. இதன் காரணமாக ஏற்படும் விபத்துக்களை எப்படித் தடுப்பது என்பது பற்றி தமிழக அரசு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.



எதிர் எதிரே வரும் வாகனங்கள் விளக்கை அணைத்து, அணைத்து போடாமல் வரும் போதும், அதே நேரத்தில் பிரதி



பலிப்பு சாதனங்கள் இல்லாமல் இருந்தாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

**மாட்டு வண்டிகள்:**

கிராமப்புறங்களில் மாட்டு வண்டிகளில் பிரதிபலிப்புச் சாதனங்கள் பொருத்தப்படாததால் தான் விபத்துக்கள் ஏற்படுகின்றன. விபத்துக்களைத் தவிர்க்க தமிழகத்தில் உள்ள அனைத்து மாட்டு வண்டிகளிலும் கட்டாயம் 'ரிப்ளக்டர்' என்ற பிரதிபலிப்பு சாதனம் பொருத்த அரசு உத்திரவிடும்.

சென்னையில் ஓடும் பேருந்துகளில் படிகளில் பயணம் செய்வதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதைத் தடுக்க தானாக இயங்கும் கதவுகள் சென்னையில் விரைவில் போடப்படும்.

**ஆட்டோ ரிக்ஷா**

சென்னை நகரப் போக்குவரத்தில் நெரிசல் அதிகமாக இருப்பதால் ஆட்டோ ரிக்ஷா விபத்துக்கள் அதிக அளவில் ஏற்படுகின்றன. எனவே ஆட்டோ ரிக்ஷாக்களில் குறைந்த அளவு வேகக்கட்டுப்பாடு செய்ய 'மெக்கானிக்கல்' முறையை கொண்டு வர அரசு உத்தேசித்துள்ளது. ஆட்டோ ரிக்ஷாக்களில் இருபுறமும் இறங்க வழி உள்ளது. இனி வலதுபுறம் இறங்க முடியாதபடி கதவு போட விரைவில் உத்திரவு பிறப்பிக்கப்படும்.

**ஹெல்மேட்:**

மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற இரண்டு சக்கர வாகனங்களில் செல்வோர். 'ஹெல்மெட்' அணியாததால் உயிர் இழப்புக்கு ஆளாகின்றனர். எனவே கண்டிப்பாக 'ஹெல்மெட்' போடுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுத்தது. மைய அரசும் இது போன்ற 'ஹெல்மெட்' கட்டாயம் போட வேண்டும் என்பது குறித்து சட்டம் கொண்டு வருவதாக கூறி இருக்கின்றது.

**வாகன விளக்குகள்:**

மோட்டார் வாகனங்களில் விளக்குகளை அணைத்து, அணைத்துப் போடாததால் ஏற்படும் விபத்துக்களை தடுக்க ''ஆட்டோ டிப்பர்'' கண்டிப்பாக பொருத்த உத்திரவு பிறப்பிக்கப்படும். ஓட்டுநராக இருப்பவர் இப்போது குறைந்தது 8-வது வகுப்பு வரையாவது படித்திருக்க வேண்டும் என்று உத்தரவு இடப்பட்டுள்ளது. நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளில் ஓட்டுநராவதற்கு 10-வகுப்பு வரை படித்திருக்க வேண்டும் என்று உத்திரவு பிறப்பிக்கப்படும். அதோடு இந்தியப் போக்குவரத்து விதிகள் படித்து இருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட வேண்டும்.''

போக்குவரத்து விதிகளைப் பற்றிய கட்டுரை போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி, உயர் நிலைப் பள்ளி மாணவர்கட்கு போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு சி. பொன்னையன் அவர்கள் பரிசுகள் வழங்கினார்கள்.

காவல்துறை சார்பில் வெளியிடப்பட்ட 'போக்குவரத்து வழிகாட்டி' என்னும் சிறிய கையேட்டினை மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் வெளியிட்டார்கள். முதல் பிரதியை 'பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தைச் சார்ந்த நிர்வாக இயக்குநர் திரு எல். எஸ். வைத்தியநாதன் பெற்றுக் கொண்டார்.

கையேட்டினை வெளியிட்டு, செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''இங்கே போக்குவரத்து விதிகள் பற்றி நடந்த போட்டிகளில் மாணவிகளுக்குத்தான் முதல் பரிசு கிடைத்தது. சுழல் கோப்பையும் மாணவிகளே பெற்றார்கள்.

''இதிலிருந்து பெண்களுக்குச் சாலைப் போக்குவரத்துச் சீர்திருத்தத்தில் எந்த அளவுக்கு ஈடுபாடு இருக்கிறது என்பது தெரியவருகிறது.

''கடந்த ஆண்டில், மோட்டார் சைக்கிள் போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசு வழங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

''அந்த விழாவில் பேசும்போது ஒரு கருத்தை வெளியிட்டேன். அந்தக் கருத்தை இங்கே மீண்டும் தெரிவிப்பதும் பொருத்தமாகவே இருக்கும் எனக் கருதுகிறேன். ஏனென்றால் அந்தப் போட்டியிலும் பெண்கள் கலந்து கொண்டு பரிசு பெற்றார்கள். இங்கும் பெண்களே பரிசு பெற்றார்கள்.

''நம் நாட்டில் கார் ஓட்டுவது, வாகனங்கள் ஓட்டுவது ஏதோ ஆண்களுக்கு மட்டுமே உரிய ஒரு வேலை என்று இருந்தது மாறி மகளிரும் கார் ஓட்டலாம் என்ற நிலை இன்றைக்கு ஏற்பட்டுள்ளது.

''நாம் ஏன் பேருந்துகளில் ஓட்டுநர்களாகப் பெண்களையும் வேலைக்கு அமர்த்தக்கூடாது என்ற ஒரு கருத்தினைப் போக்குவரத்துத்துறை அமைச்சருக்கும், காவல்துறை அதிகாரிக்கும் வேண்டுகோளாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''நீண்ட தூரம் பிரயாணங்களில் வேண்டுமானால் பெண்களை ஓட்டுநர்களாகப் போடாமல் இதுபோன்ற நகரங்களில் மட்டுமாவது பெண் ஓட்டுநர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாமே என்ற கருத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆத்திரத்தில், அவசரத்தில் உணர்ச்சி வசப்பட்டு மனிதன் தவறு செய்து விடுகிறான். சிறு

பொறி, பெரும் தீயாக மாறி விடுகிறது. பேருந்துகளில் ஓட்டுநர்களாக இருப்பவர்கள் போட்டிக்காக வேகமாக ஓட்டப்போய் அது தகராறில் முற்றி விபத்தில் முடிந்து விடுகிற அபாய நிலை இருக்கிறது. ஆனால் சகோதரிகள் ஓட்டுநர்களாக இருந்தால் தாயுள்ளத்துடன் அவர்கள் இருப்பார்கள்.

**ஆணுக்குப் பெண் சமம்:**

காலம் மாறிவிட்டது எல்லாத் துறையிலும் பெண்களும் ஆண்டுகளுக்குச் சமமாக வரலாம் என்ற நிலை வந்துவிட்டது.

நெடுஞ்சாலைவிபத்துக்களைப் பார்த்தால் நமக்குத் தலை சுற்றுகிறது. அவைகளைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். இந்த மாதிரியான விபத்துக்கள் இரவு நேரங்களில் குறிப்பாக லாரிகளில் தான் அதிகம் ஏற்படுகின்றன.

இரவு நேரங்களில் லாரிகளில் இரண்டு ஓட்டுநர்கள் கண்டிப்பாக இருந்தாக வேண்டும் என்ற ஒரு சட்டத்தினைக் கொண்டு வர வேண்டும்.

சென்னையில் புறப்படும்போது போலீஸ் நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும். மீண்டும் விழுப்புரத்தில் காவல் நிலையம் போய் ஓட்டுநர் மாறியது பற்றிப் பதிவு செய்ய வேண்டும். இடையில் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

விபத்துப் படங்களைப் பெரியதாக வரைந்து சாலை ஓரங்களில் மக்கள் பார்வையில் படும் வகையில் வைக்க வேண்டும்.

அதில் எச்சரிக்கை வாசகங்களும் இருக்கவேண்டும். சென்னையிலிருந்து திருச்சி செல்லும் வரை குறைந்தது 10 இடத்திலாவது இந்த மாதிரிபானர்களைபெயிண்டிங் செய்து வைக்க வேண்டும்.

**சட்டதிருத்தம் தேவை:**

இங்கே பேசிய கமிஷனர் பரமகுரு, கொலை செய்தவனுக்கு சட்டத்தில் அதிகபட்சம் தூக்கு தண்டனையும் அல்லது ஆயுள் சிறை தண்டனையும் அளிக்க வகை செய்யும் சட்டம். விபத்து காரணமாக ஓர் உயிர் ஒழிக்க நேரிடும் நேரத்தில் அந்தக் குற்றத்தைச் செய்த ஓட்டுநருக்கு அதிக பட்சம் 6 மாதம் மட்டுமே தண்டனை வழங்கப்படுவதாகச் சொன்னார்.

''இப்படி விபத்தில் மரணம் ஏற்படும்போது சாதாரண தண்டனையை மட்டுமே பெற வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டால் விபத்து என்ற பெயரால் பல அசம்பாவிதங்கள் ஏற்பட வழி இருக்கின்றன அல்லவா?

''எனவே, அந்தப் பழைய சட்டத்தை மாற்றி, விபத்து உண்மையிலேயே எதிர்பாராமல் நடந்த விபத்துதான் என்று தெளிவாகாதவரை இதுபோன்ற விபத்துக்களையும் கடுமையான குற்றம் எனக் கருதித் தண்டனையை அதிகரிக்க வேண்டும்.''

சென்னைப் பெருநகரக் காவல் துறைப் போக்குவரத்துப் பிரிவு, துணை ஆணையாளர் திரு. வீரராகவன் நன்றி கூறினார்.



## ஆளுநர் முன்னிலையில் சேலத்தில் திருமணம்



ஆளுநர் முன்னிலையில் திருமணம் என்றால் அந்தத் தம்பதிகள் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும்? பெரும்பணக்காரக் குடும்பங்களையோ அல்லது பெரும் பதவியில் உள்ள உறவினர்களையோ சார்ந்தவர்களாக இந்தத் தம்பதிகள் இருக்க வேண்டும். என்று, சாதாரணமாக நினைக்கத் தோன்றும். வசதியில்லாத வீட்டுத் திருமணங்களுக்குச் சொந்தக்காரர்களே போகத் தயங்கும் இந்தக் காலத்தில், இப்படிப்பட்ட புகழ்மிகு திருமணங்களைப் புரிந்து கொண்ட தம்பதிகள் ஏழைபாழைகள் என்றால், நமக்கு அதிசயமாகத்தான் இருக்கும்.

ஆனால், இன்றுள்ள தமிழக அரசு இப்படிப்பட்ட ஏழை எளிய மக்களின் பக்கம் தான் இருக்கிறது என்பதை உணர்ந்துள்ளவர்களுக்கு இது புதுமையாகவோ, புதிராகவோ இராது. அரசு எப்படி ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட, அரிசன அருந்ததி மக்களுக்கு உதவி வருகிறதோ, அதே போன்று இந்த அறப்பணியில் தொண்டு நிறுவனங்களும், அறக் கொடையாளர்களும் ஈடுபட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கடி கேட்டுக் கொண்டு வருகிறார்கள்.

அதனைச் செயல்படுத்தும் வகையில், சேலத்தில் சென்ற மாதக் கடைசியில் ஒரு வண்ணமிகு விழா நடைபெற்றது.

அங்கே-ஒரே மேடையில் 15 ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் செய்து வைக்கப்பட்டது!

சேலம் ஜேசீஸ் சங்கத்தினர் இதனை நடத்தினர். கேரள ஆளுநர் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் முன்னிலையில், முத்தமிழ்க்காவலர் திரு கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் தலைமையில் இந்தத் திருமணம் நடைபெற்றது.

தமிழக அரசின் புதுடில்லி சிறப்புப் பிரதிநிதி திரு க. இராசாராம் அவர்கள் இப்பணியினை வெகுவாகப் புகழ்ந்துரைத்தார்.

# சேய் நலனும் தடுப்பு மருந்துகளும்



—டாக்டர் சாந்திகோஷ்

இன்று பல நோய்கள் வருமுன் தடுத்துக்கொள்ளக் கூடியவை (முடியும்). இந்நோய்களில் பல தொடர்ந்து உடல் நலனைக் கெடுப்பன; ஊட்டச்சத்தைக் குறைப்பன; இறப்பையும் கொடுப்பன; ஊட்டச்சத்துக்குறைபாடு குழந்தைகளின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. குழந்தைகளுக்கு உரிய காலத்தில் நோய் தடுப்பு ஊசி போடச் செய்வது பெற்றோரின் முக்கிய கடமையாகும்.

திருமணம், ஊர்ப் பயணம், வீட்டுவேலைகள் முதலான காரணங்களால் பெற்றோர் உரிய நேரத்தில் தடுப்பு ஊசிகொடுக்கத்தவறிவிடுகின்றனர். அதைத்தள்ளிப்போட்டுக்கொண்டே போவதால் மிகுந்த தாமதம் ஏற்பட்டு விடுகிறது. நோய்த்தடுப்பு ஊசி கொடுக்கும்போது குழந்தை உடல் நலமுடன் இருக்கவேண்டும். குழந்தைக்கு வயிற்றுப்போக்கு இருந்தால் இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து கொடுக்கக்கூடாது; தோல் தடிப்பு, படை முதலியன உள்ளபோது அம்மைப்பால் வைக்கக்கூடாது. என்றாலும் தடுப்பு ஊசி போடச் செய்வதை நீண்ட நாட்களுக்குத் தள்ளிப் போடக்கூடாது.

நோய்த்தடுப்பு மருந்துகள் குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே பாதுகாப்பளிக்கத் தக்கது என்பதை மறத்தலாகாது. நீண்ட நாட்களுக்கு நோய்த்தடுப்பாற்றல் இருக்க வேண்டுமானால் மேற்கொண்டு தொடர்ந்து தர வேண்டிய வேளைமருந்து (ஊக்குவிப்பு அளவு) களைத் தவறாமல் தர வேண்டும். எந்தெந்த மருந்துகள் எவ்வவ்போது தரவேண்டும். எத்தனை வேளை தர வேண்டுமென்பது எதிரே அட்டவணையில் தரப்படுகிறது.

**பி. சி. ஜி.**

பி.சி.ஜி. காச நோயிலிருந்து பாதுகாப்பளிக்கிறது. இவ் ஊசியை மூன்று மாதத்தில் கொடுக்க வேண்டும். இவ்வூசி இடது தோளில் கொடுக்கப்படும். 4-6 வாரங்களுக்குப் பின்னர் ஊசி போட்ட இடத்தில் சிறு கொப்பளம் தோன்றும். 10-12 வாரங்களில் புண் ஆறிவிடும். வடு மட்டும் இருக்கும். இதுகுழந்தை தடுப்பாற்றல் பெற்றுவிட்டது என்பதைக் காட்டுகிறது. 3-4 மாதங்களில் மூன்று நோய்த் தடுப்பு ஊசியுடன் பி.சி.ஜி. கொடுக்கலாம்.

பெரியம்மை இந்தியாவிலிருநது அறவே ஒழிக்கப்பட்டு விட்டது. கடந்த மூன்றாண்டுகளாக நம் நாட்டில் இந்நோய் தோன்றவில்லை என்றாலும் முதல் முறை அம்மைப்பால் தொடர்ந்து வைக்கப்பட்டு வருகிறது. அம்மைப்பால் தோலில் வைக்கப்படுகிறது. அம்மைப்பால் வைத்த இடம் சிவந்து விடும். 4-5 நாட்களில் தடிப்பு ஏற்பட்டு, தடுப்பு பெரிதாகி படிப்படியே உலர்ந்து பொக்கு காட்டும். மூன்று வாரத்துக்குள் பொக்கு உதிர்ந்து விடும். வடு எப்போதும் இருக்கும். அம்மைபால் வைத்த இரண்டு மூன்று நாட்களில் குழந்தைக்குக் காய்ச்சல் வரும்; அரிப்புத் தோன்றும். இதற்கு நாட்டு மருந்து ஏதும் தடவத் தேவையில்லை. அம்மைப்பால் வைக்

**நோய்த் தடுப்பு மருந்து குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே பாதுகாப்பளிப்பது. நீண்ட காலப் பாதுகாப்புக்கு மறுபடியும் ஊக்குவிப்பு அளவு (Booster Dose) மருந்து கொடுக்க வேண்டும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.**

கப்பட்ட இடத்தில் ஈ மொய்க்காமலும், தூசு படாமலும் காக்க வேண்டும். பெரியம்மை நம் நாட்டிலிருந்து ஒழிக்கப்பட்டு விட்டதால் மறுமுறை அம்மைப்பால் வைக்கத் தேவை யில்லை. முதல் முறை அம்மைப்பால் 4-6 மாதங்களில் இரண்டு அல்லது மூன்றாவது மூன்று நோய்த்தடுப்பு ஊசி கொடுக்கும்போது உடன் வைக்கப்படலாம்.

**மூன்றுநோய்த் தடுப்பு ஊசி**

இத்தடுப்பு மருந்து-மூன்று நோய்களுக் கும் இணைந்த தடுப்பாற்றல் தரும் ஊசி மருந் தாகும். தொண்டை அடைப்பான், இசிவு அல்லது ஜன்னி நோய், கக்குவான் இருமல் ஆகிய மூன்று நோய்களிலிருந்து இந்த ஊசி மருந்து பாதுகாப்பளிக்கிறது. சிறு குழந்தை களுக்குக் கக்குவான் இருமல் மிகுந்த ஆபத்தை விளைவிக்கும்; எனவே, இத்தடுப்பு ஊசியை ஆரம்ப காலத்திலேயே கொடுக்க வேண்டும். இத்தடுப்பு ஊசி மூன்று வேளை மருந்தாக 1 முதல் 1½ மாத இடைவெளியில் கொடுக்கப் பட வேண்டும். இரண்டு மாதங்களுக்குப் பின்னர் காலம் கடத்தக் கூடாது. ஊசி குப் பின்னர் மற்றும் ஒரு மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடவேண்டும். பின்னர் ஐந்து வயதில் இரு நோய்த் தடுப்பு ஊசி (தொண் டை அடைப்பான், இசிவு நோய்) போட வேண்டும். மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளுக்கு ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குக் காய்ச்சல் இருக்கலாம். இதனால் தடுப்பு ஊசி போட பெற்றோர் தயக்கம் காட்டக்கூடாது.

குழந்தைகள் விளையாடும்போது கீழே விழுந்து அடிபடக்கூடும். இசிவு நோய்க்கிருமி கள் மண்ணில் கலந்துள்ளன. எனவே, இந்நோய்ப்பாதுகாப்பு மிகவும் தேவையாகும்.

இசிவு நோய்த் தடுப்பு ஊசி 10 வயதி லும், 15-16 வயதிலும் திரும்பப் போட வேண்டும். மூன்று நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்பட்ட குழந்தைக்குக் காயம் படும் போது இசிவு நோய்த் தடுப்பு ஊசி (Tetanus Taxoid) தனியே போடத் தேவை யில்லை. இசிவு நோய்த் தடுப்பு ஊசி ஐந் தாண்டுகளுக்கு ஒருமுறை போடுவது நல்லது.

**அட்டவணை**

**இந்த அட்டவணைப்படி தடுப்பு ஊசிகள் கொடுக்கவும்**

| வயது | தடுப்பு மருந்து ஊசி | |
|---|---|---|
| 3—4 மாதம் | மூன்று நோய்த் தடுப்பு ஊசி<br>இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து<br>பி.சி.ஜி. | முதல் ஊசி<br>முதல் வேளை மருந்து |
| 4—5 மாதம் | மூன்றுநோய்த் தடுப்பு ஊசி<br>இளம்பிள்ளை வாதத்தடுப்பு மருந்து<br>அம்மைப்பால் | இரண்டாவது ஊசி<br>முதல்வேளை மருந்து. |
| 5—6 மாதம் | மூன்றுநோய்த் தடுப்பு ஊசி<br>இளம்பிள்ளை வாதத் தடுப்புமருந்து | மூன்றாவது ஊசி<br>மூன்றாவது வேளை மருந்து. |
| 1½—2 வயது | மூன்று நோய்த் தடுப்பு ஊசி<br>இளம்பிள்ளை வாதத்தடுப்பு மருந்து | முதல் ஊக்குவிப்பு அளவு.<br>முதல் ஊக்குவிப்பு அளவு |
| 5—வயது | இருநோய்த் தடுப்பு ஊசி | டைபாய்டு காய்ச்சல் தடுப்பு ஊசி ஒவ்வொரு இரண்டு (அ) மூன்றாண் டுகளுக்குப் பின்வரும் (7-10 நாள் இடை-வெளியில்) இரண்டு வேளை மருந்து கொடுக்க வேண்டும். |

போடுவதற்கு முன்னர் குழந்தைக்கு நோய் தொற்றாமல் இருக்க, குறித்த நாளில் தவ றாமல் ஊசி போடச் செய்ய வேண்டும். சில நேரங்களில் சில காரணங்களால் கால இடை வெளி நீண்டு போகலாம். அத்தகைய சந்தர்ப் பங்களில் எல்லா ஊசிகளையும் முதலிலிருந்து மறுபடியும் தொடங்கிப் போட வேண்டிய தில்லை. இந்த மூன்று ஊசிகளும் போடப் பட்ட பின்னர் 1½ ஆண்டு கழித்து அல்லது மூன்றாவது ஊசி போட்ட சுமார் ஓராண்டுக்

இசிவு நோய் சிறு குழந்தையைத் தாக் கக்கூடிய கடுமையான நோயாகும். எனவே, கருத்தரித்துள்ளபோது தாய்மார்களுக்கு இசிவு நோய்த்தடுப்பு இரண்டு ஊசிகள் அல்லது மூன்று போடுவதன் மூலம் இதைத் தவிர்க்க லாம். இதனால் தாயும், கருவிலுள்ள சேயும் இசிவு, நோய்த் தடுப்பாற்றல் பெறுகின்றனர்.

**இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து**

இளம்பிள்ளை வாதம், உடலின் எப் பகுதியையும் செயலற்றதாக்கும் வாத

# முதல்வரின் முத்துக்கள்



* பணத்தைக் கொடுத்து எதையும் பெற்றுவிடலாம்; அதிகாரத்தைப் பயன்படுத்தி எதையும் சாதிக்கலாம்-ஒன்றே ஒன்றைத் தவிர! ஆம்! அன்பை விலை கொடுத்து வாங்க முடியாது. அன்பைக் கொடுத்துத்தான் அன்பை வாங்க முடியும்!

* உழைப்பவர்களே உயர்ந்தவர்கள் என்று சொல்கிறோம்; எழுதுகிறோம். அது இப்பொழுது வெறும் நியதியாகத்தான் இருக்கிறது. இதுவே சட்டமாகிற காலம் வரத்தான் போகிறது. உழைப்பவர்களே உரிமைபெறவேண்டிய-எல்லாம் அனுபவிக்க வேண்டிய காலம் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அது விரைந்து வருவதற்குள் நாம் கருவிகளை ஏந்தி-உழைக்க-கடமையாற்றத் தயாராவோம்!

* உழைப்புக்குச் சரியான ஊதியம் கிடைக்கிறதா என்பது ஒருபுறம் கேட்கப்பட்டாலும், உழைப்பு என்பது அத்தியாவசியமானது. அதில் உயர்வு தாழ்வு கிடையாது-உயர்வு தாழ்வு கூடாது!

* நாம் எந்த உருவத்தை, எந்தப் பொருளை உருவாக்கிட விரும்புகிறோமோ அதற்கேற்றாற்போல் அமைவதே ஈரமண். அதுபோலத்தான் குழந்தைகளும். இந்தப் பருவத்தில் நாம் எப்படி உருவாக்குகிறோமோ, அதன்படிதான் எதிர்காலத்தில் குழந்தைகள் இருக்கும்!

* குழந்தைகள் பெரியவர்கள் போல் நடந்தால் அதன் விளைவு நல்லதாகவே இருக்கும். குழந்தைகளின் சுட்டித்தனம் சமுதாயத்தை ஒருபோதும் பாதிக்காது. ஆனால், பெரியவர்களாக இருப்பவர்கள் இன்னும் குழந்தைகளாகவே இருந்து கொண்டு செய்யும் செயல்கள் விபரீதமான விளைவுகளை ஏற்படுத்திவிடக் கூடும்!

நோயாக மாறலாம்; இளம்பிள்ளைவாதத்திலிருந்து பாதுகாப்பளிக்கிறது. இம்மருந்து வாய் வழியாகக் கொடுக்கப்படுவது. இம்மருந்தின் திறம் குறையாமலிருக்க இதைக் குளிர்பதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். மருந்து கொடுக்க எடுக்கும்போதும், பனிக்கட்டி போடப்பட்ட குளிர் சாதனக் குவளையில் வைக்க வேண்டும். இம்மருந்து 3-4 மாதத்தில் தொடங்கி 1 முதல் 1½ மாத கால இடைவெளியில் மூன்று வேளை கொடுக்கப்படுகிறது. இதை மூன்று நோய்த் தடுப்பு ஊசியுடன் மற்றொரு வேளை மருந்து கொடுக்க வேண்டும். குழந்தைக்கு வயிற்றுப் போக்கு (பேதி) இருக்கும்போது இளம் பிள்ளை வாதத் தடுப்பு மருந்து கொடுக்கக் கூடாது என்ற பழைய நம்பிக்கை சரியல்ல. குழந்தைக்குப் பசிக்கும்போது தாய்ப்பால் கொடுக்கலாம்.

**டைபாய்டு காய்ச்சல் தடுப்பு மருந்து**

டைபாய்டு காய்ச்சல் ஒரு கடுமையான நோய். அதனால் தொடர்ந்து உடல் நலக் கேடும், பல சிக்கல்களும் நேரலாம். தடுப்பு ஊசி போடுவதன் மூலம் இந்நோயிலிருந்து குழந்தைக்குப் பாதுகாப்பு அளிக்கலாம். 7-8 நாட்கள் இடைவெளியில் இரண்டு ஊசிகள் போட வேண்டும். இவ்வூசி 4-5 வயதில் கொடுக்கத் தொடங்கி 2-வது ஆண்டுகளுக்கு முறை கொடுத்து வர வேண்டும். இதற்கு இப்போது புதிய தடுப்பு மருந்து உள்ளது. ஊசி போட்ட இடத்தில் வீக்கமும் வலியும் இருக்கும். ஓரிரு நாட்களுக்குக் காய்ச்சல் வரலாம்.

குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசிகள், உரிய காலத்தில் போடச் செய்ய வேண்டும். இதனால் பல நோய்களைத் தவிர்த்துச் சேய் நலனைக் காக்க முடியும்.

நன்றி: 'ஸ்வஸ்த் இந்து'



# விமானத்தில் வந்த ஜெர்சி மாடுகள்

பொ. துரைசாமி, ஐ.ஏ.எஸ்.,
இயக்குநர்,
கால் நடை பராமரிப்புத் துறை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஈச்சங்கோட்டை என்னும் இடத்தில், மத்திய நிதி உதவி பெறும் திட்டத்தின் கீழ், ஓர் உயரின கால் நடை வளர்ச்சிப் பண்ணை ஒன்று 1344.61 ஏக்கரில், 3.4.76 அன்று துவக்கப்பட்டு செயல்பட்பட்டு வருகிறது. இப்பண்ணை, தஞ்சாவூரிலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இப்பண்ணைக்கு மத்திய அரசு 75 சதவிகிதம் மானியமாகவும் 25 சதவீதம் கடனாகவும் நிதி உதவி அளித்து வருகிறது. இப்டண்ணை நிறுவுவதற்கு 93.33 இலட்சம் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**கால்நடை வளர்ச்சிப் பண்ணையின் நோக்கம் :**

உயரின ஜெர்சி ஆவினங்களை வளர்த்து உயர்ந்த தரமுள்ள ஜெர்சி இனப் பொலிகாளைகளைக் கொண்டு முதல் கட்டமாகத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும்-செயற்கை முறை கருவூட்டல் மூலம் இன அபிவிருத்தி செய்யவும், பின்னர் இந்த வசதிகளை தமிழ்நாடு முழுவதும் விரிவடையச் செய்யவும் ஆவன செய்தல்.

கால்நடை வளர்ப்பில் சரியான முறைகளைக் கையாளவும் மற்றும் தீவன புல் உற்பத்திப் பெருக்கத்தைப் பற்றி தஞ்சை மாவட்டத்தில் உள்ள சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு தக்க முறையில் உதவி கால்நடை வளர்ப்பை வருவாய் தரக்கூடிய ஒரு தொழிலாக மேற்கொள்ளவும், உதவி செய்தல்.

தீவன புல் உற்பத்திக்கு உத்வேகம் அளிக்க உயர் உற்பத்தித்





**விமான நிலையத்தில் வந்திறங்கிய ஜெர்சி இன மாடுகளை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் பெற்றுக் கொள்ளும் காட்சி.**

தரம் உடைய பசும் புல் வகைகளைப் புகுத்துதலும், மேலும் பயிர் முறைகளை மாற்றம் செய்தல், மேய்ச்சல் நிலங்கள் அபிவிருத்தி செய்தல், தீவன புல் வகைகளை தக்க முறையில் பாதுகாத்தல் முதலியவற்றுடன் தக்க விரிவாக்க முறைகள் மூலம் இப் பண்ணையின் வசதிகளை தஞ்சை மாவட்டம் முழுமையும் பயன் பெறுமாறு செய்தல்.

**ஜெர்சி இன கால்நடைகளின் குண நலன்கள் :**

ஜெர்சி இன கால்நடைகளின் முக்கிய குணங்கள் வருமாறு: ஜெர்சி இன கால்நடைகள் முதன் முதலில் இங்கிலாந்து நாட்டில் பராமரிக்கப்பட்டு, பின்னர் அதனுடைய உயர்ந்த தன்மைகளை அறிந்த மற்ற நாடுகளும் அவற்றை நல்ல முறையில் பராமரித்து பேணி வருகின்றன. அவை அளவில் சிறியதாகவும், பழுப்பும் வெண்மையும் கலந்த நிறம் கொண்டதாகவும் மென்மையான தோலும் ரோமங்களும் கொண்டுள்ளதாகவும், ஒரு ஈத்தில் 4 சதவீதம் தொகுப்பு சத்துள்ள சுமார் 3,000 கிலோ பால் உற்பத்தி திறன் கொண்டுள்ளதாகவும் பொதுவாக விளங்குகிறது.

ஈச்சங்கோட்டைப் பண்ணைக்கு ஜனவரி 78-ல் ஆஸ்திரேலிய நாட்டிலிருந்து மத்திய அரசு மூலமாக 50 ஜெர்சி இன கிடேரிகளும், 2



ஜெர்சி இன காளைகளும் வந்துள்ளன. மேலும் 11-3-79-ல் 100 ஜெர்சி இன கிடேரிகள் ஆஸ்திரேலியாவிலிருந்து மத்திய அரசு மூலமாக வரப்பெற்றுள்ளன. அவைகளை சென்னைக்கு அருகிலுள்ள மீனம்பாக்கம் நிலையத்தில் கொழும்பு திட்ட கால்நடை வல்லுநர் திரு பி.சி. கேலி மற்றும் ஆஸ்திரேலியா தூதரக உயர் அதிகாரி திரு கிரசி மத்திய அரசு அலுவலர் திரு பானர்ஜி ஆகியோர்கள் முன்னிலையில், மாண்புமிகு சமூகநல மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி அவர்களால் பெறப்பட்டு, உடனே அவைகள் ஈச்சங்கோட்டை உயர் இன கால்நடை அபிவிருத்திப் பண்ணைக்கு லாரிகள் மூலம் அனுப்பப்பட்டன. அங்கு அவைகள் தொத்து நோய் தடுப்பு பாதுகாப்புக்காக (Quarantine) தனியாக வைக்கப்பட்டுள்ளன.

இப்பண்ணையில் உறைவிந்து வங்கி ஒன்றும் (Frozen Semen Bank) துவங்க, நிதி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. உறைவிந்து வசதிகளை உருவாக்க இப் பண்ணையில் திரவ நைட்டிரஜன் கருவிகள் (Liquid Nitrogen Plant) கொண்ட கூடம் ஒன்று அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான தக்ககட்டிட வசதிகள் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் அவ்வங்கிக்கு தேவையான உபகரணங்களை, டென்மார்க் அரசு தர இசைந்துள்ளது. கட்டடங்கள் கட்டி உபகரணங்கள் வரப்பெற்றதும், இவ் வங்கி செயல்பட ஆரம்பிக்கும். ஆஸ்திரேலியாவிலிருந்து திரவ நைட்டிரஜன் கொள் கலங்கள் (Liquid Nitrogen Containers) வரப்பெற்றுள்ளன. இவ்வசதிகள் மூலம் கால்நடை செய்கை முறை இனப்பெருக்கத்தில் நவீன உறைவிந்து முறைகள் மூலம் கால்நடை வளர்ச்சி நல்ல முன்னேற்றம் காண இயலும்.

# அண்ணா பிறந்த மண்ணில் ஐயா நூற்றாண்டு விழா!



இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பகுத்தறிவுச் செம்மலாய், மண்டும் மதங்கள் அண்டா நெருப்பாய், படரும் சாதிப் படைக்கு மருந்தாய்த் திகழ்ந்து மறைந்தவர் தந்தை பெரியார்.

அந்தத் தன்மானச் சிங்கத்துக்குத் தமிழக அரசு நன்றி செலுத்தும் விதத்திலே—இந்த ஆண்டு முழுதும் நூற்றாண்டு விழா கொண்டாடி வருகிறது.

இந்த வகையில்—

மார்ச்சுத் திங்கள் பத்தாம் நாளன்று, செங்கை மாவட்டச் சார்பில், காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா அரங்கத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலரும் பங்கேற்ற கருத்தரங்கோடு தொடங்கியது விழா.



கூட்டுறவுத்துறை அமைச்சரின் பேரவைச் செயலர் திரு. ஆனூர் கோ. செகதீசன் எம். எல். ஏ., அவர்கள் வரவேற்புரையாற்றினார். இசையோடு தொடங்கிய விழா முடிவில் திரு கே. பாலாஜி எம். எல். ஏ., அவர்கள் நன்றி நவின்றார்.

விழாக் கோலம் பூண்டிருந்த அறிஞர் அண்ணா அரங்கத்திலே நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் கருத்தரங்கத்திற்கு - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் தலைமை ஏற்றுச் சிறப்பித்தார்.

### தொழிலாளர் நலத்துறை அமைச்சர் உரை

கருத்தரங்கத் தலைமை உரையில், மாண்புமிகு அமைச்சர் எஸ். இராகவானந்தம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சுயமரியாதைச் சுடராம் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற பேறு இந்த அரசுக்குக் கிடைத்ததற்காக நாங்கள் மிகவும் பெருமைப் படுகிறோம்.

பெரியார் அவர்களிடத்திலே நாங்கள் வைத்திருந்த மதிப்பும், மரியாதையும் அளவற்றவைகளாகும். நான் கடலூர் ஸ்டேஷன் மாஸ்டராகப் பணியாற்றிய காலத்திலேயே கருப்புச் சட்டையும் வெள்ளைப் பேண்டுமாகத் தான் பணியாற்றுவேன்.

மீன் குழம்புச் சாப்பாடென்றால், மிகவும் பிரியமாகச் சாப்பிடக்கூடியவர் பெரியார் அவர்கள். நான் கடலூரில் பணியாற்றிய காலத்தில், ஐயா அவர்கள் அவ்வழியாக எங்காவது பயணம் செல்ல நேரும்போதெல்லாம் எனக்கு முன்கூட்டியே தெரிவிப்பார்கள். மீன் குழம்புச் சாப்பாட்டோடு நாங்கள் காத்திருப்போம்.

உணவைப் பரிமாறும்போதோ ஐயா அவர்கள் ''பத்து ரூபாய் பணம் வைத்தால்தான் சாப்பிடுவேன்'' என்பார்கள். உளமுவந்து கொடுப்போம். மனமுவந்து சாப்பிடுவார்கள்.

அப்படிச் சேர்த்த பணத்தை சுயதேவைப்பூர்த்திக்காக அவர்கள் ஒருநாளும் செலவிட்டதில்லை.

'ஓடி ஓடி உழைக்கணும்; ஊருக்கெல்லாம் கொடுக்கணும்' என்பதற்கேற்பவே செலவிட்டார்கள். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டினார்கள்.



ஏ. எம். லலிதகுமாரி

'பகுத்தறிவுத் தந்தை பெரி





யார்' என்ற தலைப்பில் திருமதி ஏ. எம். லலிதகுமாரி அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டதாவது :

பெண்ணினத்தை அடிமை கொள்வது மடமையிலும் மடமை என்று ஆணித்தரமாகக் குரலெழுப்பிய பெருமைக்குரியவர் தந்தை பெரியார். விதவை மணத்தை வலியுறுத்திய பெருமையும் அவர்களைத்தான் சாரும்.

மகளிரினத்தின் முன்னேற்றம் கருதிய ஐயா அவர்கள்— பெண்களே! பிள்ளைகளைப் பெறுவதைத் தவிர்ப்பீர்! ஆண்களுக்குச் சமமாக உயர்வீர்!' என்று அறிவுப் புரட்சி நடத்தினார்.



**சரசுவதி கோவிந்தராசன்**

'போராட்ட வீரர் பெரியார்' என்னும் தலைப்பின்கீழ் பேசுகையில் திருமதி சரசுவதி கோவிந்தராசன் அவர்கள் குறிப்பிட்டதாவது:

ஆண்டாண்டுக் காலமாகப் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த கொடுமைகள் எண்ணிறந்தவைகளாகும். அந்தக் கொடுமைகளையெல்லாம் வேரோடும் வேரடி மண்ணோடும் கெல்லியெறியப் போராடியவர் தந்தை பெரியார் அவர்களாவார்!

மனித உரிமைகள் மறுக்கப்படக் கூடாது என்று நடத்தப்பட்ட அவருடைய போராட்டங்கள் தான்-தமிழினம் மேம்பட வேண்டும் என்று அவரால் நடத்தப்பட்ட கிளர்ச்சிகள்தான் நாமெல்லாம் இந்த அளவிற்குத் தலைநிமிர்ந்து வாழவே முழுமுதற் காரணங்களாயின!

**அரசு மணிமேகலை**

'பெணணடிமை சாடிய பெரி



யார்' எனுந் தலைப்பில் பேசுகையில் திருமதி அரசு. மணிமேகலை அவர்கள் குறிப்பிட்டதாவது :

'பெண்களே நாட்டின் கண்கள்' என்று பேச்சளவில் நின்ற தலைவர்களின் மத்தியிலே, அதை நடைமுறைப்படுத்திக் காட்டும் செயல் வீரராக விளங்கியவர்தான் தந்தை பெரியார்.

பெண்மையைக் குன்றின் மேலிட்ட விளக்காக்கி, அழியாத தமிழக வரலாற்றின் கிழியாத தாளாகத் திகழ்பவர் அவர்!

பெண்ணினத்தின் விடுதலைக்காகப் பாடுபட்ட பெரியார், முடைநாற்றம் வீசுகின்ற மூடக் கருத்துக்களைத் தடைபோட்டு நீக்கிய தகைசால் தலைவர்! மேனாட்டுப் பெண்களைப்போல் சட்டத்தின் முன் சகல உரிமைகளையும் இந்நாட்டுப் பெண்களும் பெறவேண்டுமென இரவு பகல் பாராமல் பாடுபட்டு ஏற்றம் கண்டவர் அவர் - மகளிரினம் ஏற்றம் காணச் செய்தவர் அவர்.

காந்தியார் மறைந்தும் அவர் குரலை வானொலியில் நாம் கேட்க முடிவதுபோல், தந்தை பெரியாரின் பேச்சும் வானொலி மூலம் ஒலிபரப்பப்பட வேண்டும். தந்தை பெரியாரின் வரலாற்றைத் திரைப்படமாக்கி வெளியிட வேண்டும்.

**வசந்த கோகிலம்**

'சீர்திருத்தச் சிற்பி பெரியார்' என்ற தலைப்பின் கீழ், துணைப் பேராசிரியை வசந்த கோகிலம் அவர்கள் உரை விவரம் வருமாறு:

தன்னுடைய சொந்தக் கருத்துக்களைத் தனது சொந்த முயற்சியின் மூலம் இந்த நாட்டில் பரப்பி, சீர்திருத்த வித்தூன்றிச் சிறப்புற்றவர் பெரியார்.

புத்தர், மகாவீரர் போன்றவர்களெல்லாம் சாதிக்காததை தம் செயல்திறத்தால் சாதித்து— தமிழக வரலாற்றிலே மட்டுமல்லாமல், உலக வரலாற்றிலேயே இடம் பெற்று விட்டவர் அவர் என்பதை யாரும் மறுக்கவும் முடியாது: மறக்கவும் முடியாது!

**திருவாரூர் தங்கராசு**

'பகுத்தறிவுப் பகலவன்' என்ற தலைப்பில் பேசுகையில் திருவாரூர் கே. தங்கராசு அவர்கள் பேசியதாவது:



பகுத்தறிவுப் பகலவனால் ஆளாக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த ஊரான இந்தக் காஞ்சிபுரத்திலே தந்தை பெரியார் நூற்றாண்டு விழா நடப்பது மிகமிகப் பொருத்தமுடையதாகும்.

பகுத்தறிவுப் பகலவன் என்று ஐயா அவர்களைக் குறிப்பிடுகிறோம்.

ஏனென்றால்—

காலையில் எழுகின்ற கதிரவன், மாலைவரை இந்த உலகத்தார்க்கு உற்ற வழியிலெல்லாம் உதவிகள் பல புரிகிறான். நடுப்பகலில், வெய்யில் தாளாமல் தன்னை ஏசுகின்றவர்களைப் பற்றியெல்லாம் அவன் கவலைப் படுவதில்லை.

அதைப்போலவேதான், தந்தை பெரியார் அவர்கள் தனது பகுத்தறிவுக் கொள்கைகளை மற்றவர்கள் எப்படி ஏற்கிறார்கள். மறுக்கிறார்கள் என்பதையெல்லாம் எண்ணாமல் இந்தச் சமுதாயத்தின் ஏற்றத்திற்காகப் பாடுபட்டார்கள்.

பகலவனால் ஒளி பெற்றுத்தான் நிலவு ஒளி வீசுகிறது என்பார்கள். அதைப்போல் பகுத்தறிவுப் பகலவனாம் தந்தை பெரியாரால்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்நாட்டில் ஒளி நிலவாய் வாழ்ந்தார்கள்.

தந்தை பெரியாருக்கு விழா எடுப்பதோடு மட்டும் நில்லாமல், அவருடைய கொள்கைகளை நிறைவேற்றப் பாடுபட்டு வருகிற இன்றைய அரசை இதய பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

**நெ. து. சுந்தரவடிவேலு**

தன்மான வீரர் பெரியார்'



என்ற தலைப்பில் பேசுகையில், பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் நெ. து. சுந்தர வடிவேலு அவர்கள் குறிப்பிட்டதாவது:

உலக வரலாற்றில் எந்த மேதைக்கும், எந்த அரசிலும் இதுபோல் நூற்றாண்டு விழாவை ஓராண்டுக் காலம் எடுக்கப் பட்டதில்லை. அந்த வகையில் இந்த அரசு இணையற்ற பெருமைக்குரியதாகிறது.

தொடக்கம் முதலே தியாகத்தின் உருவாகத் திகழ்ந்தவர் தந்தை பெரியார்.

தந்தை பெரியாருக்கு நூற்றாண்டு விழாக்காணும் இந்த அரசுக்கு-தமிழர்கள் காலகாலத் திற்கும் கடமைப்பட்டவர் களாவர்!

**டாக்டர் வே. சண்முகசுந்தரம்**

'சிந்தனைச் சிற்பி பெரியார்



என்ற தலைப்பில் பேசுகையில், டாக்டர் வே. சண்முகசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதாவது :

தமிழகத்தில் இன்றைய தினம் நாம் காணுகின்ற எழுச்சிக்கும், விழிப்புணர்ச்சிக்கும் காரணமே தந்தை பெரியார் அவர்கள்தான்.

செயற்கரிய செய்த சிந்தனைச் சிற்பி அவர்கள்.

ஐயா அவர்களைப் பற்றி, ஐயா அவர்களோடு மிக நெருங்கிப் பழகியவர்களைக் கருத்துத் தெரிவிக்கச் சொல்லி அதை ஒலி பதிவு செய்து பாதுகாப்பது பிற்காலத்தில் பயனுள்ளதாக இருக்கும்.

அவர்கள் வாழ்வின் தொடக்க காலம் முதல், இறுதி வரையிலான சம்பவங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் தொகுத்துக் குறித்து வைக்க வேண்டும்.

தன்னிகரில்லாத அந்தச் சிந்தனைச் சிற்பியின் சீரிய கருத்துக்களை ஆராயவும், பரப்பவும் நிரந்தர நிதியொன்று ஏற்பாடு செய்வது நல்லது.

**திருக்குறளார் வீ. முனுசாமி**

'அறிவுலகத் தந்தை பெரி



யார்' என்கிற தலைப்பின்கீழ் பேசுகையில் திருக்குறளார் வீ. முனுசாமி அவர்கள் குறிப்பிட்டதாவது:

மனிதன் தனது அறிவைச் சிந்தித்துப் பயன்படுத்த வேண்டும் என்று, நமக்கெல்லாம் சிந்திக்கக் கற்றுத் தந்தவர் தந்தை பெரியார்.

சிந்தனை என்கிற அலைமோத மோதத்தான், புதுமை என்கிற ஒளி வெளிப்படுகிறது. அதற்கு எடுத்துக்காட்டு உதாரணம்தான் அறிவுலகத் தந்தை பெரியார் அவர்கள்.

பெரியார் ஒரு தனிப்பட்ட இயக்கம் என்று நமது முதல்வர் அவர்கள் முன்பொருமுறை குறிப்பிட்டார்கள். அது மிகவும் பொருத்தமான வார்த்தையாகும்.

நாம் எத்தனையெத்தனை தனையோ தலைவர்களைக் கண்டிருக்கிறோம். ஆனால் சாதிக் கொடுமைகளையும், மதப்பிரிவுகளையும் உரிய நேரத்தில், உரிய விதத்தில், உரிய இடத்தில் கண்டித்த ஒரே தலைவராக விளங்குபவர் ஐயா ஒருவர் மட்டுமேயாவார்!

அவரது கொள்கைகளை நாம் பின்பற்றுவோம். அதுவே, அவருக்கு நாம் செலுத்தும் நன்றியாக அமையும். நம்மை நாமே உயர்த்திக் கொள்வதற்கான வழியாகவும் அமையும்!

—இவ்வாறு திருக்குறளார் வீ. முனுசாமி அவர்கள் உரையாற்றியதோடு, காஞ்சியில் நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவின் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

உரை நிகழ்த்தியவர்களுக்கெல்லாம் விழாக் குழு சார்பில் பெரியார் அவர்களின் திருவுருவச் சிலை வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

**பிற்பகல் நிகழ்ச்சிகள்**

காஞ்புரம் வீதியெலாம் வண்ணத் தோரணங்கள், அலங்கார வளைவுகள் அணிசெய்தன.

மாவட்ட நலக்குழு விளையாட்டரங்கத்திலிருந்து பிற்பகல் 3.30 மணியளவில் மாபெரும் ஊர்வலமொன்று புறப்பட்டது.

என்.சி.சி., சாரணர், ஊர்க்காவல் படையினர், மகளிர்-மாணவர் ஆகியோர் பங்கேற்ற இந்த ஊர்வலத்தில் தந்தை பெரியார் அவர்களின் கருத்து விளக்க அல்ங்கார வண்டிகள் பதினான்கு அணி செய்தன.

பட்டத்து யானை முன்னே வர, கரக ஆட்ட, சிலம்ப ஆட்ட புலியாட்ட, பொய்க்கால் குதிரைக் குழுவினர் பின்னே வந்தனர்.

வீதியின் இருமருங்கும்திரண்டிருந்த காஞ்சி மக்கள் களிப்பில் ஆழ, உற்சாகக் கொந்தளிப்போடு சென்ற இந்த ஊர்வலம் மாலை 6 மணியளவில் அறிஞர்



# 7 திரைப்படங்களுக்கு 1 லட்சம் ரூபாய் நிதி உதவி



நல்ல கருத்தோட்டமிக்கத் தரமான ஐந்து தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா ஒரு லட்சம் வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டத்தைக் கடந்த ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு செயல் படுத்தி வருகிறது.

இத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு மூன்று திரைப்படங்கள் நிதி உதவி பெற்றன. இந்த ஆண்டு இதற்கெனத் தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்ட குழுவால் ஏழு திரைப்படங்கள் இந்த நிதி உதவிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ரூபாய் ஒரு இலட்சம் வீதம் உதவித் தொகை பெறும் ஏழு தமிழ்த் திரைப்படங்கள் பின்வருமாறு :

1. அன்பின் அலைகள்
2. அச்சாணி
3. பட்டிணப் பிரவேசம்
4. பெண்ஜென்மம்
5. ஆளுக்கொரு ஆசை
6. புவனா ஒரு கேள்விக் குறி
7. நாம் பிறந்த மண்





அண்ணா காவல் அரங்கத்தை அடைந்தது.

**சிறப்புக்கூட்டம்**

அண்ணா காவல் அரங்கத்தில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் மாலை 7 மணியளவில் சிறப்புக் கூட்டம் தொடங்கியது. கூட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியாகக் காவல் துறையினரின் கரக ஆட்ட நிகழ்ச்சி, நையாண்டி மேளத்தோடு சிறப்புற நடைபெற்றது.

திரு, மோகனரங்கம், எம்.பி., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

பெரியார் நூற்றாண்டு விழாக் குழுத்தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விழாத் தலைமையேற்றார்.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி.டி.சரசுவதி திரு கே.எஸ். அப்துல்வகாப் எம்.எல்.சி., டாக்டர் எம். சந்தோஷம், திரு அ[illegible] மார்க்க [illegible] எம்.எல்.ஏ., [illegible] கு.கிருஷ்ணசாமி ஆகியோர் உரையாற்றினர்.

தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்தை டாக்டர் ராஜா சர் முத்தையா அவர்கள் திறந்து வைத்தார்.

திரு எஸ்.எம். துரைராஜ் எம்.எல்.ஏ., அவர்கள் நன்றியுரையாற்றினார்.

கலப்பு மணம், விதவைமணம் புரிந்து கொண்டோருக்கு விழாத் தலைவர் நாவலர் அவர்கள் பரிசுப் பத்திரங்களை வழங்கிச் சிறப்பித்தார்.

**'நீதிதேவன் மயக்கம்'**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு,சௌந்தரராஜன் அவர்கள் தலைமையில்-பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'நீதிதேவன் மயக்கம்' நாடகம் இரவில் நடைபெற்றது.

கரிக்கோல் ராஜ் குழுவினர் நடத்திய இந்நாடகத்தில் எஸ்.வி பொன்னுசாமி, கே. ஆர். சீதாராமன், ஏ.கே. [illegible]சுந்தர், லலிதா, சீதா, பத்மி[illegible]கியோர் சிறப்புற நடித்[illegible]

ஆர்.



# அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீன்

(தென் ஜெர்மனியில் உள்ள உட்டம்பர்க் என்ற சிறுநகரத்தில், ஹெர்மன் ஐன்ஸ்ட்டீன் என்பவருக்கும் பாலின் என்னும் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்த ஐன்ஸ்ட்டீன் உலகுபுகழ் விஞ்ஞானியாவார். மார்ச் 14, 1979 அவருடைய நூற்றாண்டு விழா. அதை யொட்டி இந்தக் கட்டுரை இங்கே வெளியிடப்படுகிறது.)

ஆல்பர்ட் ஐன்ஸ்ட்டீன் குழந்தைப் பருவத்தில் நலிவான உடலுக்குச் சொந்தக்காரராக இருந்தார். அந்நாளில் அவரது அறிவும் அவ்வளவு வளர்ச்சியுற்றிருக்கவில்லை. பேசவும் அவரால் இயலவில்லை. ஒரு சொல்லுக்கும் மற்றொரு சொல்லுக்கும் நீண்ட இடைவெளி இருந்தது. மகன் பேசுவானா மாட்டானா என்று பதறிக் கொண்டிருந்த அவரது தந்தையின் கவலை பல ஆண்டுகள் கழித்து மறைந்தது; ஆம். ஐன்ஸ்ட்டீன் வாய் திறந்து பேசத் தலைப்பட்டார்.

* * * *

ஐன்ஸ்ட்டீன் பிஞ்சுப் பருவத்தில், ஏனைய குழந்தைகளோடு விளையாடுவதில்லை. தனியாகவே அமர்ந்து எப்போதும் சிந்தித்துக் கொண்டே இருப்பார். கற்பனையில் மூழ்குவார்; அற்புதமான கனவுகளைக் காண்பார்.

* * * *

அப்போது ஐன்ஸ்ட்டீனுக்கு ஐந்து வயது. அவரது தந்தை ஹெர்மன், விளையாடுவதற்காக மின்காந்தத் திசை காட்டும் கருவி ஒன்றினைத் தன் மகனுக்குக் கொடுத்தார். விளையாட்டில் விருப்பமில்லாத ஐன்ஸ்ட்டீன் அக்கருவியைக் கையில் எடுத்தார். அதைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். எந்தத் திசையில் திருப்பினாலும் அந்தக் கருவியிலிருந்த காந்த ஊசி வடக்குத் திசையையே காட்டியது. அச்செயல் ஐன்ஸ்ட்டீனுக்கு வியப்பை அளித்தது. 'ஊசியைச் சுற்றியுள்ள வெட்ட வெளியில் எதுவும் இருப்பதாகக் கண்ணுக்குத் தெரியவில்லை. ஆனால், கருவியின் காந்த ஊசி வடக்குத் திசையையே நோக்குகிறது. எனவே, வெட்ட வெளியில் அந்த ஊசினய இழுக்கும் ஓர் ஆற்றல் நிறைந்திருக்க வேண்டும் என அவர் எண்ணினார். இந்தச் சிந்தனை, அவர் அறிவியல் அறிஞர்களின் பட்டியலில் சேர்வதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.

அறிவியல் நூல்கள் என்றால ஐன்ஸ்ட்டீனுக்கு அதிக ஆர்வம். அவற்றை விரும்பி விரும்பிப்படிப்பார். எந்தப் பொருளைப் பார்த்தாலும் எந்த நிகழ்ச்சியைக் கண்டாலும், ஏன்? எப்படி? என்னும் வினாக்களை அவர் உள்ளம் எழுப்பி வந்தது.

* * * *

கணிதம், ஐன்ஸ்ட்டீனுக்குக் கற்கண்டு போல இனித்தது. அவரது வாழ்க்கையில் சுறுசுறுப்பை வழங்கியது கணிதநூல், நாவலைப் படிப்பதுபோல கணித நூல்களைப் படித்தார், அவர்!

* * * *

ஐன்ஸ்ட்டீன் துவக்கப் பள்ளியில் பயிலும் காலத்தில் கூட, பொய்சொல்லியதில்லை. பொய்யை அவரது உள்ளம் மிகவும் வெறுத்தது. குற்றம் செய்ய நேர்ந்தால்-அதனை மனப்பூர்வமாக ஆசிரியரிடம் சொல்லி, அவர் தரும் தண்டனையை ஏற்றுக் கொள்வார். பொய் சொல்வதைவிடத் தண்டனை பெறுவது சிறப்பு என்பது அவரது எண்ணம்.

* * * *

அறிவியலிலும் கணிதத்திலும் அக்கறை காட்டி வந்த ஐன்ஸ்ட்டீன், இசையிலும் நாட்டம் செலுத்தியது உண்டு. அவரது அன்னையார் இசையில் ஈடுபாடு உடையவர். அதன் காரணமாய் ஐன்ஸ்ட்டீனும் வயலின் பயிற்சி பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இசைவாணர் ஆனார். துன்பம் நேர்கையில் வயலினை இசைத்து இன்பம் சேர்த்தார். மனத்தொல்லைகள் ஏற்பட்ட காலத்தில் வயலினை இசைத்து மன எழுச்சிப் பெற்றார். இசைக் குழுவினரோடு சேர்ந்து இசையரங்குகளிலும் ஒளி வீசித் திகழ்ந்தார்.

* * * *

ஐன்ஸ்ட்டீனுக்கு மதத்திலே நம்பிக்கை கிடையாது. மூடப் பழக்க வழக்கங்களை அவர் சாடி வந்தார். மதச் சடங்குகளை அவர் வெறுத்தார்.

* * * *

பௌதிகப் பேரறிஞர்கள் பலரின் நூல்களை விரும்பி விரும்பிப் படித்தார். இரவு பகல் பாராது கற்றார். பௌதிக விதிகளை வேதமாக எண்ணி மனப்பாடம் செய்து மகிழ்ந்தார். பௌதிகத்துக்கு அடிப்படையான கணக்கியல் கருத்துக்களை அவர் உருவாக்கினார்.

இயங்கும் பொருள்களின் மின் காந்த இயக்கங்கள்.

ஆற்றலின் தடை எதிர்ப்பாற்றல்

பிரவுன் கண்ட இயக்கங்களின் ஒழுகமைதி.

ஒளியின் தோற்றமும் மாறுபாடும் பற்றிய பயன்மிக்க மதிப்பீடு.

அணுத்திரளின் பருமான அளவைகளை அறுதியிடுவதற்கு உரிய முறை.

இவை எல்லாம் வெறும் தலைப்புகளல்ல, ஐன்ஸ்ட்டீன் எழுதி வெளியிட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள்! 1905-ல் வெளியிடப்பட்ட இக்கட்டுரைகள்—பௌதிகத் துறையில் புது மாற்றங்களை உருவாக்கியதுடன் பௌதிக அறிஞர்களின் சிந்தனைக்கு விருந்தும் வழங்கின. உலக அறிஞர்களின் கவனத்தை ஐன்ஸ்ட்டீன் பக்கம் திரும்புவதற்கும் வழி வகுத்தன.

* * * *

ரிக்கின்ஸ்டன் என்பவர் ஐன்ஸ்ட்டீனின் ஆசிரிய நண்பர். அடிக்கடி ஐன்ஸ்ட்டீனின் இல்லத்திற்குச் சென்று கலந்துரையாடி, மகிழ்ச்சி பெறுவது இந்த நண்பருக்குப் பழக்கமான நிகழ்ச்சி. ஒருநாள்.. ஐன்ஸ்ட்டீனைக் காணச் சென்ற ரிக்கினிஸ்டன் வியப்புக்கு ஆளானார்.

அவர் சென்றபோது-வீடு திறந்து கிடந்தது. ஐன்ஸ்ட்டீனின் மனைவி அங்கே இல்லை. வெளி அறையில் அமர்ந்திருந்த ஐன்ஸ்ட்டீன் தன் குழந்தை படுத்திருந்த தொட்டிலை ஒருகையால் ஆட்டிக்கொண்டிருந்தார்; மறுகையில் புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார்.

இதைப் பார்த்துவிட்டு, அந்த நண்பர் மேலும் உள்ளே சென்றார். அறைமுழுதும் புகை, அதன் நெடி வேறு! அந்த இரண்டு இடையூறுகளையும் மறந்து ஐன்ஸ்ட்டீன் படிப்பில் ஆழ்ந்துகொண்டிருந்தார். ஆசிரிய நண்பர் உண்மையிலேயே வியப்படைந்துவிட்டார்.

* * * *

ஆராய்ச்சி வகுப்பில் ஆசிரியருக்கும் மாணவருக்கும் நெருங்கிய உறவு இருக்க வேண்டும் என்பது ஐன்ஸ்ட்டீனின் கொள்கை மாணவர்கள் சிக்கலான ஆராய்ச்சியில் இறங்கும்போது, ஐன்ஸ்ட்டீனும் அதில் ஈடுபடுவார். எவ்வளவு நேரத்தையும் அவர் ஆராய்ச்சிக்காகச் செலவிடுவார்.

'உண்மையான சிக்கல் இருந்தால் எப்போது வேண்டுமென்றாலும் வரலாம். எனது அறைக் கதவு திறந்தே கிடக்கும்'' என்று மாணவரிடம் கூறுவார் ஐன்ஸ்ட்டீன். இந்த பண்பு மாணவரின் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்தது.

* * * *

தமது எண்ணத்தில் உதித்த புதுக் கருத்துக்கள் ஏற்கக் கூடியவைதானா என்பதை அறிந்துகொள்ள மாணவர்களின் ஆய்வுக் கூடத்தையே அவர் பெரிதும் நாடுவார்; மாணவர்களைக் கூட்டி வைத்து உரத்த குரலில் தமது கருத்துக்களை எடுத்து வைப்பார். அவர்களது முகக் குறிப்புகளிலிருந்து தமது கருத்து வெற்றி பெற்றுள்ளதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வார்.

'ஆசிரியருடைய அறிவு மட்டும் மாணவனை உயர்த்திவிடாது; மாணவனுடைய அறிவும் துணையாக இருக்க வேண்டும்' என்பது அவர் கொண்டிருந்த கொள்கை.

* * * *

ஐன்ஸ்ட்டீனும் அவரது நண்பர் ஒருவரும் பெர்லினில் உள்ள போஸ்டாம்பில் வானிலை ஆராய்ச்சி நிலையத்திற்குச் செல்ல முடிவு செய்தனர். எனவே, இருவரும் எங்கே சந்தித்துக் கொள்வது என்பது பிரச்சினை! இறுதியாக-போஸ்டாம்பில்உள்ள பாலம் ஒன்றில் சந்திப்பது என்ற முடிவுக்கு வந்தனர்.

நண்பர் பெர்லினுக்குப் புதியவர் ஆகையால் அவர், ''குறிப்பிட்ட நேரத்தில் என்னால் அங்கு வரமுடியாதே என்ன செய்வது!' என்று கேட்டார்.

''நான் அங்கு எவ்வளவு நேரம் வேண்டுமென்றாலும் காத்திருக்கிறேன்''—ஐன்ஸ்ட்டீன் பதில் சொன்னார்.

''உங்கள் பொன்னான நேரம் பாழாகிவிடுமே!''—நண்பர் கவலையுடன் கூறினார்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை! நான் என்ன வேலை செய்வேனோ அந்த வேலையை எங்கிருந்து வேண்டுமானாலும் செய்வேன். வீட்டிலிருந்து செய்யும் ஆராய்ச்சியைப் பாலத்தின் அமர்ந்து செய்யாக் கூடாதா'' என்று களிப்புடன் கேட்டார், ஐன்ஸ்ட்டீன்.

* * * *

ஐன்ஸ்ட்டீனின் அறிவியல் கருத்துக்கள் பாராட்டுப் பெற்ற அதே நேரத்தில் எதிர்ப்பையும் சிலரிடம் பெற்று வந்தன. என்றாலும் உலகில் பல்வேறு நாட்டவர்கள்?—அவரைக் காண விரும்பினர். தங்கள் நாட்டுக்கு அவர் வந்து சொற்பொழிவாற்ற வேண்டும் என விரும்பினர். எனவே, ஆதரவாளர்களின் அன்பழைப்பை ஏற்று, ஹாலந்து, செக்கோஸ்லோவேக்கியா, ஆஸ்டிரியா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின், ருஷ்யா, கலிபோர்னியா ஆகிய நாடுகளுக்கெல்லாம் சென்று—அறிவியல் குறித்துச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

சீனா, ஜப்பான், இந்தியா முதலிய நாடுகளுக்கும் அவர் வந்து சென்றிருக்கிறார்.

* * * *

1905-ல் அவருக்கு ஜரிக் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியது.

1922-ல் அவர் நோபெல் பரிசு பெற்றார்.

புகழ்மிக்க ஐன்ஸ்ட்டீன் கடைசி வரை எளிமையாக வாழ்ந்தார்; நாகரிக உடைகளை வெறுத்தார், நற்பண்புக்கு நிலைக்களனாகத் திகழ்ந்தார். எந்நாளும் பிறர்க்கென வாழ்ந்தார். 1955-ல் மறைந்தார். உலகத்தார் எல்லாரின் உள்ளத்திலும் நிறைந்தார். அவரது அரிய ஆராய்ச்சிகள் காலத்தை வென்று நிலைத்து நிற்கின்றன.

''இந்தப் பெரிய உலகம் இருப்பது மனிதர்களாகிய நம்மால் அன்று. அது நம் முன்னே என்றுமுள்ளதோர் பெரும் புதிர்போல உள்ளது. அதனை ஓரளவேனும் நாம் ஆராய்ந்து 'சிந்தித்துப் பார்க்க வழியுண்டு; இந்த உலகினைப் பற்றி எண்ண எண்ண அது விடுதலை அளிக்கும் அழைப்பாக இருந்தது. அந்த விடுதலைப் பேறு காண நான் சென்ற பாதை சமயச் சார்பான வீடு பேறு நோக்கிய பாதை போன்று அவ்வளவு ஆறுதலாகவும் கவர்ச்சியாகவும் இல்லை. எனினும், அதுவும் நம்பிக்கைக்கு உரியதாகவே இருந்தது. நான் அதனைத் தெரிந்தெடுத்தேன். அது குறித்து எனக்கு வருத்தமே இல்லை'' அவர் கூறிய இந்தக் கருத்துக்கள் உலகெங்கும் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன.

— **தமிழ்ப்பித்தன்**

# அறிவிப்புகள்- ஆக்கப்பணிகள்

(1.3.79 முதல் 16.3.79 முடிய)

## 1—3—79

தமிழ்நாடு கல்வி ஆலோசனைக் குழுவை அரசு திருத்தி அமைத்துள்ளது. மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள இக்குழு, கல்வித் துறையில் உருவாகியுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆய்வு செய்வதுடன், கொள்கைகள் குறித்தும் அறிவுரை வழங்கும்.

## 2—3—79

குடும்பநலப் பணிகளில் சிறந்த முறையில் பணியாற்றுகின்ற இரண்டு மாவட்டங்களுக்கும், இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் உருள்கலங்களை அரசு பரிசாக வழங்கும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு சௌந்தரராஜன் தெரிவித்தார்.

## 3—3—79

மாநில அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு வாடகை முறையில் அல்லது சுலபத் தவணை விற்பனை முறையில், வீடுகள் கட்டித் தருவதற்கு அரசு ஆலோசித்து வருகிறது என்றும், அதற்குரிய பொருளாதார உதவியை நகர்ப்புற வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் (HUDCO) நாட்டுடைமையாக்கப்பட்ட நிறுவனங்கள் நாட்டுடைமையாகாத வங்கிகள் ஆகியவற்றிலிருந்து பெறுவதற்கு அரசு முயன்று வருகிறது என்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

## 4—3—79

1973—83 ஆம் ஆண்டில்-தமிழ்நாடு முழுதும் உள்ள 1300 கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதிக் கழகங்களின் மூலமாக 40 கோடி ரூபாய் செலவில் கிராமப்புற ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தரப்படும் என்று வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. ஏ. இ. செல்லையா தெரிவித்தார்.

சென்னை நகருக்குள் செல்லும் அரசுப் பேருந்துகளில் தானே இயங்கும் கதவுகள் விரைவில் பொருத்தப்படும் என்றும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

## 5—3—79

தமிழ்நாட்டில் வருவாய்க் கோட்டப் பகுதிகள் சிலவற்றில் உள்ள குடிசைப்பகுதிகளில் வீட்டுக்கு வீடு சென்று மருத்துவ வசதி செய்து தரப்படுகிறது. இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் இந்த வசதி எல்லாக் குடிசைப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும் என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராசன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

## 6—3—79

ஓய்வு பெற்ற மாநில அரசு ஊழியர்கள், தனியார் நிறுவனங்களிலும் - வணிக நிறுவனங்களிலும் பணிபுரிவதற்கு அரசு அனுமதிக்கிறது. அவர்கள் செய்யும் பணியின் வகையையும் அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்வோரையும் பொறுத்து, இந்த அனுமதி வழங்கப்படுகிறது என மாண்புமிகு நிதியமைச்சரின் பார்லிமெண்டரி செயலர் திரு. வின்செண்ட் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

## 7—3—79

சென்னை—திருச்சிராப்பள்ளி, சென்னை—சேலம், சென்னை — பாண்டிச்சேரி, கோயம்புத்தூர்-பெங்களூர், மதுரை — பெங்களூர் ஆகிய நெடுந்தொலைவு வழித் தடங்களில் செல்லும் அரசு விரைவுப் பேருந்துகளில் குளிர்சாதன வசதி செய்யப்படும் என்று, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் தெரிவித்தார்.

## 8—3—79

குற்றவியல் வழக்குத் தொடர்பாக, உயர் தகுதி படைத்த அலுவலர் ஒருவரைத் தலைமை இயக்குநராகக்கொண்ட இயக்ககம் ஒன்றினை உருவாக்குவதற்கு அரசு முடிவு செய்துள்ளது என்றும், தமிழ்நாட்டில் 1978 மே மாத மத்தி


மிகவும் நம்பிக்கையூட்டும் இணையற்ற ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ்
அறிமுகப்படுத்தும்
ஈடு இணையற்ற
புதியவகை
பாலியஸ்டர்
சர்ட்டிங்குகள்
எமது பிரசித்திபெற்ற விற்பனை நிலையங்களில் கிடைக்கும்
100% பாலியஸ்டர்
80X20 பாலியஸ்டர் பிளண்டட்
80X20 பாலியஸ்டர் பிளண்டட்
67X33 பாலியஸ்டர் பிளண்டட்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

வரையில்-மொத்தம் 3,57,842 தமிழ்த் தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு கே. நாராயணசாமி முதலியார் சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் உள்ள கலைக்கூடம் புதுப்பிக்கப்படும் என்றும், புகழ் பெற்ற ஓவியர் சில்பி அவர்களால் வரையப் பெற்றுள்ள புகழ்மிக்க தமிழ்நாட்டின் ஆலயங்களின் ஓவியங்கள் அச்சிடப் பெற்ற நாட்காட்டிகளை அறநிலையத்துறை வரும் ஆண்டில் வெளியிடும் என்றும் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் தெரிவித்தார்.

இளம் சிறார்களைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு வைத்துக் கொள்வதைத் தடை செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது என மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

## 10—3—79

மைய அரசின் பணித் தேர்வுகளுக்குரிய வினாத்தாள்கள் தற்போது ஆங்கிலத்திலும் இந்தியிலும் அச்சிடப்பட்டு வருகின்றன. வட்டார மொழிகளிலும்அவை வெளியிடப்பட வேண்டும் என்னும், கருத்தை, தமிழக அரசு மைய அரசிடம் வலியுறுத்தும் என மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு சி. அரங்கநாயகம் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

## 11—3—79

சென்னையில் வசிக்கும் அரிசன இனத்தைச் சேர்ந்த (இந்து சமயத்திலிருந்து கிறிஸ்தவ சமயத்துக்கு மாறியிருப்பவரானாலும்) அரிசன மலைவாழ் இனத்தைச் சேர்ந்த, ஆண்டொன்றிற்கு 3 ஆயிரம் ரூபாய் வருமானத்துக்கு அதிகம் இல்லாத எவரேனும் மரணம் அடைந்துவிட்டால், அவரது ஈமச் சடங்குகளுக்கு 50 ரூபாய் உதவிப்பணம் வழங்குமாறு மாநகராட்சிக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

## 12—3—79

நிர்வாக வசதியை முன்னிட்டு பெரிய மாவட்டங்களை இரண்டு பகுதிகளாகப் பிரிப்பதற்கு அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது என்றும், முதற் கட்டமாகக்கோவை மாவட்டம் இரண்டு பகுதியாகப் பிரிக்கப்படும் என்றும், பின்னர் இராமநாதபுரம், மதுரை, வட ஆர்க்காடு மாவட்டங்கள் பிரிக்கப்படும் என்றும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி.சோமசுந்தரம் சட்டமன்ற மேலவையில் குறிப்பிட்டார்.

## 13—3—79

வெளியூர்ப் பகுதிகளில் புதிய சாலைகளை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் ஏறக்குறைய 78 கோடி ரூபாய் தொகையை விரைவில் அனுமதிக்க வேண்டும் என்று மத்திய அரசை, தமிழக அரசு கேட்டுள்ளது என மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் குறிப்பிட்டார்.

சமூக நலத்துறை மூலம் நடத்தப்படும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இரண்டாம் நிலை ஆசிரியர் பயிற்சி பெற்றுத்தேறிய பெண்கள், இரண்டாம் நிலை ஆசிரியர் வேலைக்குச் சேரும் வயது வரம்பு 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தச் சலுகையை 6.7.78 முதல் நீட்டித்து அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## 14—3—79

அடகுக் கடைக்காரர்கள் தங்களிடம் அடகு வைக்கப்பட்ட பொருட்களை 1979 ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் நாள் உள்ளிட்ட காலம் வரை விற்பனை செய்யக்கூடாது என விதிக்கப்பட்டிருந்த தடைச் சட்டத்தை மேலும் மூன்றுமாத காலத்திற்கு (ஜூன் மாதம் 15 ஆம் தேதி வரை) நீட்டிக்கும் சட்டம் சட்டமன்றத்தால் ஏற்கப்பட்டு, குடியாட்சித் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டு, சட்டமாக இயற்றப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள 7 அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், ஏறக்குறைய 7 கோடி ரூபாய் இலாபத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன என்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

## 15—3—79

சென்னை நகரில் உள்ள கடைகளிலும் நிறுவனங்களிலும் தமிழில் எழுதப்பட்ட பெயர்ப் பலகைகள் இடம் பெறவேண்டும் என்று அரசு விடுத்திருந்த ஆணை சரிவரக் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்கு ஒரு குழுவை அரசு அனுப்ப இருக்கிறது என மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

ஆறாவது திட்டக் காலத்தில் ஏறக்குறைய 10 கோடி ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் அயல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் சட்டமேலவையில் தெரிவித்தார்.

தனியாருக்குச் சொந்தமான வனப் பகுதிகளை நாட்டுடைமையாக்குவதற்கு அரசு தீவிர ஆலோசனை செய்து வருகிறது என மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

## 16—3—79

ஆபாசச் சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடுப்பதற்கு, கடுமையான சட்டத்தை அரசு கொண்டுவர இருக்கிறது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் சட்ட மன்றத்தில் தெரிவித்தார்.

தமிழ் மாநில அரசின் 1979-80க்கான பட்ஜெட்டில் பரபரப்படையக்கூடிய அம்சம் எதுவுமில்லையென்பது ஒரு குறைபாடல்ல. ஒரு புது வரியும், ஒரு புது ''விஸ்தரிப்பும்'' தவிர பெரிதாக புதுவரிகள் இல்லாதது வரவேற்கத்தக்க அம்சம்.

மக்கள் நலம் அல்லது கஷ்ட நிவாரணம் பற்றிய பகுதியில் ''வேலை வாய்ப்பு அபிவிருத்தி'' வேலையில்லாதாருக்கு ''உதவி'' ஆகிய ஆரம்ப யோசனைகள் கவனத்துக்குரியவை.

மொத்தத்தில் இந்தப் பட்ஜெட்டானது புகார்களுக்கு இடம் தராத பட்ஜெட், ''சாதுவான'' பட்ஜெட் என்று சொல்லலாம் என்பது வரவேற்கத்தக்க அம்சம்.

**'தினமணி' 6—3—79**

**(துணைத்தலையங்கம்)**

## தமிழக அரசின் புரட்சித் திட்டம்

கிராமங்களில் ''அனைவருக்கும் வேலை'' என்ற இலட்சியத்துடன் தமிழக அரசு வெளியிட்டிருக்கும் புரட்சிகரமான புதிய திட்டம், வார்த்தை அளவில் அல்லாமல் உண்மையிலேயே ஒரு புரட்சித் திட்டம் என்பதில் சந்தேகம் இல்லை.

நிலம் இல்லாத ஏழைகளும், உயர்படிப்பு இல்லாத பாமர மக்களும், கிராமப் பகுதிகளில் படும் அவதியை வர்ணிக்கவே முடியாது. எந்தத் தொழிலும் நடத்த முடியாத வறுமை, படித்திருந்தும் வேலைவாய்ப்பு இல்லாத கொடுமை, உடல் உழைப்புக்குத் தயாராக இருந்தாலும் சுரண்டிக் கொழுக்கும் இடைத்தரகர்களின் குறுக்கீட்டினால் அதற்கும் வழியில்லாத அவல நிலை—

இதுதான் பெரும்பாலான கிராமவாசிகளின் நிலைமை.

கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பல புதிய நீர்ப்பாசனத் திட்டங்களும், மின்சார உற்பத்தித் திட்டங்களும், நிறைவேற்றப்பட்டிருப்பது உண்மைதான், ஆனால், பாசன வசதியும் மின் வசதியும் நிலம் இல்லாத ஏழைக்குச் சோறு போடாது.

கிராமப் பகுதி மக்களுக்காகப் பல தொழில் பயிற்சித் திட்டங்கள் அமல் நடத்தப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால்,



அதிகப் படிப்பு இல்லாத கிராமத்து ஆட்களுக்கு அரசாங்கத்தின் தொழில் பயிற்சித் திட்டங்களினால் என்ன பலன்?

வளரும் நாடுகளில் தொழில் வளர்ச்சித் திட்டங்களின் பலனை நகர்ப்புற மக்களும், வசதி உள்ள நிலச் சொந்தக்காரர்களும்தான் அனுபவிக்க முடிகிறது.

ஆண்டாண்டுக் காலமும் கிராமபுற ஏழைகள் நிரந்தர ஏழைகளாகவே காலம் தள்ள வேண்டுமா? அவர்களுடைய பிள்ளைகளுக்கு எதிர்காலமே கிடையாதா? அவர்களுடைய வீட்டுப் பெண்கள் மாற்றுத் துணிகூட இல்லாமல் அவதிப்பட வேண்டுமா?

சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகளுக்குப் பிறகும் இதே நிலைதானா?

இப்படி எல்லாம் வாழ்க்கையின் அடித்தளத்தில், வறுமையின் எல்லைக் கோட்டில் அடங்கி ஏங்கித் தவிக்கும் இலட்சக்கணக்கான கிராமப்புற மக்களுக்குப் புதுவாழ்வு அளிக்கும் திட்டத்தைத் தமிழக அரசு வெளியிட்டிருக்கிறது.

அதுதான், புதிய பட்ஜெட்டில் வெளியிடப்பட்டிருக்கும் 'அனைவருக்கும் வேலை' என்ற திட்டம்.

**'மக்கள் குரல்' தலையங்கம் 4-3-79**

## சபாஷ் எம்.ஜி.ஆர்.

வேலையில்லாது தவிக்கும் கிராமப்புற மக்களுக்கு அவர்கள் படித்தவர்களாக இருந்தாலும் சரி, படிக்காதவர்களாக இருந்தாலும் சரி, நாள் ஒன்றுக்கு ரூ. 3 ரொக்கமும், அரிசி, கோதுமையும் கிடைக்க வழி செய்திருக்கிறார் எம்.ஜி.ஆர்.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவரும் இந்தத் திட்டத்தின் கீழ், பலன் பெறலாம். ''எல்லோருக்கும் வேலை' என்ற இலட்சியத்தின் அடிப்படையில் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் அரசு பல அபிவிருத்தித் திட்டங்களை அமல் நடத்த வாய்ப்புக் கிடைக்கிறது. அத்துடன் வேலையில்லாமல் தவிப்பவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 3 ரூபாய் ரொக்கமும், அரிசி, கோதுமையும் கிடைப்பதற்கும் வழி ஏற்படுகிறது.

கிராமவாசிகளின் அவதி தீர உண்மையிலேயே பாடுபடுபவர்களின் புரட்சிகரமான திட்டங்கள் இவை....

எம். ஜி. ஆரின் திட்டம் நாட்டுக்கே வழிகாட்டியாக உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை.

—'அலிபாபா' 11-3-79

## தெம்பு தரும் பட்ஜெட்

...அசந்துபோய் உட்கார்ந்தவர்களைத் தூக்கி நிறுத்தி இருக்கிறது தமிழக பட்ஜெட், கணிசமான வரி உயர்வு எதுவும் இல்லாமல் சமாளித்ததோடு புதிய சில திட்டங்களையும் வகுத்து, இன்றைய மிக முக்கியமான பிரச்சினையைத் தன்னுடைய அளவில் சமாளிக்கத் தமிழக அரசு முன் வந்துள்ளது.

மக்கட்தொகை பெருகி வரும் இந்த நாளில் படித்தவர்கள், படிக்காதவர்கள் அனைவருக்குமே, பொதுவாக இருக்கும் பிரச்சினை, வேலை இல்லாத் திண்டாட்டம்தான். அதைச் சமாளிக்கும் வகையில், கிராமப் புறங்களில் உள்ள பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பணிகள், அந்தந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. ஒப்பந்தக்காரர்கள் குறுக்கீடு இன்றி அரசாங்கமே இந்தப் பணிகளைச் செய்யப் போவதால், நிறைய ஆட்களுக்கு வேலை கிடைக்கும் விதமாகவும், லாப நோக்கம் இல்லாமலும் செயற்பட முடியும். வேலை இல்லாத நாட்களிலும் அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியமாக ஒரு ரூபாயோ, உணவு தானியமோ அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வேலை இல்லாத் திண்டாட்டம் என்பது ஒரு மிகப்பெரிய பிரச்சினை. அதைச் சமாளிக்க, எளிய முறையில் ஒரு தொடக்கத்தைத் துணிந்து மேற்கொண்டுள்ள தமிழக அரசைப் பாராட்டுகிறோம். இந்த நல்ல தொடக்கம் தமிழகத்தில், விரிவாகப் பல பணிகள் கிராமப் புறங்களில் மேற்கொள்ளப்படுவதற்கும், தமிழக மக்களின் உழைப்பையும் திறனையும் பயன்படுத்திக் கொள்வதற்கும் வழி வகுக்கும் என்று நம்புகிறோம்.

—'இதயம் பேசுகிறது' 18-3-79

## காந்தீய உள்ளம்

தமிழக அரசு பட்ஜெட் முற்போக்கான பட்ஜெட், வரியில்லாத பட்ஜெட்டே! வேலையில்லாத எல்லோருக்கும் தினம் 3 ரூபாய் சம்பளம், வேலை என்றால் அதற்கேற்ப அரிசி, கோதுமை வழங்கும் என அரசு அறிவித்து இருக்கிறது.

இந்த அரசு விவசாயிகளின் பிரச்சினையாக இருந்தாலும் சரி மாணவர்-தொழிலாளர் பிரச்சினையாக இருந்தாலும் சரி—மக்களின் அன்றாடப் பிரச்சினையாயிருந்தாலும் சரி—இன்றுள்ள நிலவரப்படி கருணையோடு—பரிவோடு காந்திய நெறியில் இரும்புக்கரம் கொண்டு செயல்படாமல் அணுகுகிறது.

இந்த பட்ஜெட் பற்றி பிரசாரம் செய்யப்பட்டால், நமது தமிழகத்திலே பாலாறும், தேனாறும் ஓடும்! அரசும் செயல்பட்டால் நாட்டுக்கு நல்லதே! ஆக மொத்தத்தில் இந்தப் பட்ஜெட் ஏழைகள் நல்வாழ்வு பட்ஜெட்டே!

—ஆர். முனுசாமி,
30-வது வட்டம், சென்னை.
மக்கள் மலர், 16-3-79.

## குழந்தைகள் ஆண்டில் சத்துள்ள ரொட்டி

தில்லி, பம்பாய் உட்பட நாட்டில் உள்ள நிறைய நிலையங்களுக்குச் சத்துள்ள ரொட்டிகளைக் குறைந்த விலையில் அளிக்கப்படும்.

சர்வதேசக் குழந்தைகள் ஆண்டாகக்கொண்டாடும் வகையில் 'மாடர்ன் பேக்கரி' நிறுவனத்தார் விலையைக் குறைத்துள்ளனர். மாடர்ன் பேக்கரிக்கு விலைக் குறைப்பினால் 18 இலட்ச ரூபாய் கூடுதலாகச் செலவு ஏற்படுகிறது.

நாடு முழுவதும் 10 இலட்சம் குழந்தைகளுக்கு மேல் சத்துள்ள ரொட்டிகளை மாடர்ன் பேக்கரி, குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கும் திட்டம் மூலமாக அளிக்கிறது.

மகாராஷ்டிராவில் 2 இலட்சம் குழந்தைகளும், குஜராத்தில் 1.6 இலட்சம் குழந்தைகளும், தில்லியில் 1.39 இலட்சம் குழந்தைகளும், மேற்கு வங்கத்தில் 1.38 இலட்சம் குழந்தைகளும், கர்நாடகாவில் 1.32 இலட்சம் குழந்தைகளும், கேரளாவில் 1.13 இலட்சம் குழந்தைகளும், தமிழ்நாட்டில் 52 ஆயிரம் குழந்தைகளும், ஆந்திரப்பிரதேசத்தில் 38 ஆயிரம் குழந்தைகளும், பஞ்சாப், சண்டிகரில் 37 ஆயிரம் குழந்தைகளும் இதனால் பயனடைகின்றனர்.

நீங்களே கண்டுகொள்ளுங்கள்

# மின்னலடிக்கும், ஸூப்பர் ரின் வெண்மை.. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை




வேளை தவறாமல் உபயோகியுங்கள் ஸூப்பர் ரின், எத்தகைய வெள்ளைவெளேர் சலவை கிடைக்கிறது பாருங்கள்—இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை அது. காரணம், மேம்பட்ட வெளுப்பூட்டும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின். நீங்களே கண்டுகொள்ளுங்கள்.




## இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் விட அதிக வெளுப்பூட்டும் சக்தி.

லின்டாஸ்-RIN 34-2317 TM (RR)

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

# நெற்பயிர் பாதுகாப்பு

—பெ. மெய்க்கும் பெருமாள், பி.எஸ்சி.(வே)
மாவட்ட வேளாண்மை அலுவலர்,
நாகப்பட்டினம்.

பசுமைப் புரட்சியில் குறைந்த செலவில் அதிக விளைச்சலும், அதிக வருவாயும் பெற பயிர் நிர்வாகம் முக்கிய அம்சமாகும்.

பயிர் நிர்வாகத்தில் வயலைத் தயார் செய்தல், எரு விடுதல், களை எடுத்தல், நீர் பாய்ச்சுதல், பயிரைக் காத்தல் என ஐந்தும் வேளாண்மைக்கு இன்றியமையாதன.

இவ் ஐந்தில் பயிரைக் காத்தல் மிக முக்கியமாகும். வருமுன் காத்தலும், வந்தபின் காத்தலும், அடிப்படை நிர்வாகத்தின் குறிக்கோளாகும். இதனை வள்ளுவர்,

''ஏரினும் நன்றாம் எருஇடுதல் நட்டபின் நீரினும் நன்றதன் காப்பு'' என்று கூறியுள்ளார்.

காப்பு அல்லது காத்தல் என்பது பயிர் நிர்வாகத்தில் பயிரைத் தாக்கும் பூச்சி, பூஞ்சாண எதிரிகளிலிருந்து காப்பது என்பதனை இங்கு நாம் எடுத்துக் கொள்வோம்.

பூச்சிகளும், நம்மைப் போன்று, மற்றும் பயிர்களைப் போன்று உயிரினத்தைச் சார்ந்தவை. உண்ண, வளர ,இன விருத்தி செய்ய மறைவிடம் மற்றும் உறைவிடம் தேட, பூச்சிகள் பயிர்களை நாடுகின்றன. சாதாரணமாக பூச்சிகளின் வாழ்க்கையில் முட்டை, புழு, கூண்டுப் புழு, முழு வளர்ச்சி அடைந்த பூச்சி என்று 4 பருவங்கள் உள்ளன. முட்டை மற்றும் கூண்டுப் புழுப் பருவங்களினால் பயிர்களுக்குச் சேதம் கிடையாது. வளரும் புழுக்கள், பூச்சிகள் தங்கள் வளர்ச்சிக்கேற்ப அதிக அளவில் பயிரைத் தாக்கிச் சேதமுண்டாக்குகின்றன. அதாவது பயிர் பாகங்களைக் கடித்து உண்ணல், பயிர் பாகங்களில் வீக்கங்களை உண்டாக்குதல், வேரைக் கடித்தல், பயிர்ச்சாற்றை உறிஞ்சுதல் ஆகிய கேடுகளை விளைவிக்கின்றன. இப்பூச்சிகளைத் தக்க பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு ஒழிக்க வேண்டும்.

நெற் பயிரில் அதிக அளவு சேதம் விளைவிக்கும், பூச்சி பூஞ்சாண நோய்கள் பற்றியும் அதனை ஒழிக்கும் முறை பற்றியும் தெரிந்துகொள்வோமா?

நெற்பயிரில் குறிப்பாக அதிக அளவு தாக்கி, கேடு விளைவிக்கும் பூச்சிகள் (1) நெற்பென் (2) பச்சை, வெள்ளை தத்துப் பூச்சிகள் (3) கூண்டுப் புழு (4) இலை சுருட்டுப் புழு (5) புகையான் (6) குருத்துப் புழு (7) ஆனைகொம்பன் (8)குருத்து ஈ (9) கதிர் நாவாய்ப் பூச்சி (10) சூரை அல்லது மாவுப் பூச்சி.

பூச்சிகளைத் தவிர நெற்பயிரைத் தாக்கும் பூஞ்சாண நோய்கள்: 1. செம்புள்ளி நோய் 2. தண்டு அழுகல் நோய் 3. தூர் அழுகல் நோய் 4. பாக்டீரியா இலை கருகல் நோய் 5. சூலை நோய்.

மேலே சொன்னவற்றில் பூச்சிகளுக்கும், பூஞ்சாண நோய்களுக்கும் வித்தியாசம் என்னவெனில், பூச்சி, புழுக்களை நமது கண்ணால் பார்க்கலாம். அதனுடைய தாக்குதலையும் நாம் அறிந்துகொள்ளலாம். ஆனால், பூஞ்சாண நோய்களின் தாக்குதலை மட்டுமே நாம் பார்க்கமுடியும். நோயின் காரணத்திற்குரிய பூஞ்சாணங்கள் நமது கண்ணிற்குத் தெரிவது இல்லை. விதையிலேயே தாக்கி விதை முளைக்கும்போது அதனோடு இப்பூஞ்சாணங்களும் வளர்ந்து கால நிலையும், பயிர் நிலையும், பூஞ்சாணங்கள் வளருவதற்கு ஏற்ற நிலை வரும்போது அதிக அளவு பயிரைத் தாக்கிச் சேதமடையச் செய்கிறது.

மேற்கூறிய பூச்சி பூஞ்சாண வளர்ச்சியையும், தாக்குதலையும் தக்க பயிர்ப் பாதுகாப்பு முறைகளைக் கையாண்டு அவைகளை அழிக்கும் முறைகளைப் பார்ப்போம்.

## நெற்பேன் தாக்குதலின் அறிகுறிகள் :

நாற்றங்காலிலும், நட்ட பயிரிலும் 1 மாதம் வரையிலும் நுனியிலிருந்து தோகை ஓரங்கள் நடு நரம்பு நோக்கிச் சுருள்வதைக் கவனித்திருக்கிறீர்களா? இப்படி கவனித்ததுடன், சுருளும் தோகைகளைப் பிரித்துப் பார்த்தால், அதனுள் கறுப்பு நிறத்தில் இலைப் பேன் இருப்பதைக் கண்டிருப்பீர்கள். இந்த இலைப் பேனை அறிய தண்ணீரில் கையை நனைத்து, தோகைகளின் மீது தடவி, உள்ளங்கையில் பார்த்தால் கையில் கறுப்பு நிற இலைப்பேன் ஒட்டிக் கொண்டிருப்பது தெரியும். இதனால் நாற்றுகள் பசுமை இழந்து, தீய்ந்தது

போல் காணப்படும். இந்த இலைப்பேன் மழையில்லாத வெட்ப நாட்களில் அதிக அளவு தாக்கும். இதனைத் தடுக்க 1 ஏக்கர் நாற்றங்காலுக்கு 2 கிலோ பி.எச்.சி 10 சத மருந்தைத் தூவிக் கட்டுப்படுத்தலாம். நடவு வயலில் 1 ஏக்கருக்கு 10 கிலோ தூவ வேண்டும்.

### பச்சை தத்துப் பூச்சி

தத்திச் செல்லும் இப்பூச்சி பச்சை நிறத்துடன் சிறியதாக இருக்கும். ஆண் பூச்சிகளின் மேல் ஒரு கரும் புள்ளி இருக்கும். பயிரின் குருத்துக்களையும், தோகைகளையும் தாக்கி அவற்றிலிருக்கும் சாற்றை உறிஞ்சி விடுவதால் பயிர்கள் சிவப்பாக மாறி கடைசியில் உலர்ந்து விடும். பாதிக்கப்பட்ட செடிகள் வளர்ச்சியின்றி மஞ்சளாகத் தோற்றமளிக்கும்.

### வெள்ளைத் தத்துப் பூச்சி

பச்சைத் தத்துப் பூச்சியை விட உருவம் சற்றுப் பெரியது. வெண்ணிறமுடையது. பச்சைத் தத்துப் பூச்சியைப் போலவே சேதம் விளைவிக்கிறது. இவ்விரண்டினையும் பி.எச்.சி 10 சத விதம் ஏக்கருக்கு 10 கிலோ தூவி கட்டுப்படுத்தலாம்.

### கூண்டுப் புழு (தொங்கும் புழு)

நாற்றங்காலில் அல்லது நட்ட வயலில் அருகில் சென்று பார்க்கிறீர்கள். அங்கு பயிரின் தோகைகள் வெட்டப்பட்டிருக்கின்றன. வெட்டிய தோகைத் துண்டுகள் வயல் நீரில் மிதக்கின்றன. அத் தோகைகள் காகிதம் போன்று வெள்ளையாகத் தோற்றமளிக்கின்றன.

வெட்டப் பட்ட தோகை நுனிகளைக் கொண்டு ஒரு கூடு அமைத்துப் பல புழுக்கள் தோகைகளின் மீது தொங்குவதைப் பார்க்கலாம். இக்கூட்டுக்குள் இருந்து கொண்டு பழுப்புக் கலந்த ஆரஞ்சு நிறத்தலையை மட்டும் வெளியே நீட்டி இப்புழுக்கள் பச்சையத்தைக் குறிப்பாக தோகையின் அடிப்பகுதியைச் சுரண்டிச் சாப்பிடுவ. நப் பார்க்கலாம்.

பி.எச்.சி. 10 சதம் மருந்தினை ஏக்கருக்கு 10 கிலோ தூவலாம். அன்றியும், குருத்துப் புழுவினைத் தடுக்க கூறப்பட்டுள்ள மருந்துகளில் ஏதாவது ஒன்றினைத் தெளித்து இப்பூச்சியை அழிக்கலாம்.

நட்ட வயலில் நீரை 2 லிருந்து 3 நாட்களுக்கு வடித்து வைத்தால், கூண்டுப் புழு சுவாசிக்கத் தேவையான பிராண வாயு கிடைக்காமல் மடியும்.

### இலைச் சுருட்டுப் புழு

அமோக விளைச்சல் தரும் ரகங்களின் தோகைகள் பெரிதாக இருப்பதனால், அதிக அளவு தாக்குதல் காணப்படும். தொண்டைக் கதிர் பருவத்திற்குப் பின் நன்றாக வளர்ந்த பயிரில் தோகைகள் காய்ந்தது போல் குறிப்பாக நிழலடியிலும் தோகைக்கு அதிக அளவு தழைச் சத்து போட்ட இடங்களிலும் இத்தகைய அறிகுறி முதலில் தோன்றும். தோன்றும் தோகைகள் நீள வட்டத்தில சுருட்டப்பட்டுப் பச்சையம் சுரண்டப்பட்டிருக்கும். அங்கே பச்சையம் சுரண்டப் பெற்றமையால், ஒளிச்சேர்க்கை தடைபட்டு பயிரின் வளர்ச்சி குன்றி மகசூல் குறையும். சுருட்டுப் புழுவின் தாக்குதல் புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் அதிகமாக இருக்கும்.

### தடுப்பு முறை

ஏக்கருக்கு செவின் 50 சதம் ஒரு கிலோ, 200 மில்லி பாரத்தியான், 500 மில்லி சுமத்தியான், 500 மில்லி ஜோலான் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

### குருத்து ஈ

நாற்றங்காலிலும், நட்ட வயலிலும், தோகைகள், ஓரமாக அரிக்கப்பட்டு வெள்ளை நிறத்தில் பிசிறாக இருக்கும். ஆம். இது குருத்து ஈயின் புழுவினால் ஏற்பட்ட சேதம்தான். தோகைகள் விரிந்த பின் ஓரங்களில் வெள்ளை நிறப் பிசிறுகள் தோன்றுகின்றன. இந்த ஈ, நட்ட வயலில் நட்ட 1 மாதம் வரை தோகைகள் இளமையாக இருக்கும் போது அதிகமாகத் தாக்கும்.

குருத்துப் பூச்சிக்குரிய தடுப்பு முறையே போதுமானது.

### ஆனைக்கொம்பன் ஈ

நெற் பயிரில் வெங்காய இலை அல்லது ஆனைக் கொம்பு போன்று தோற்றம் சில சமயம் தோன்றக்கூடும். கால நிலை மப்பும் மந்தாரமுமாக தொடர்ந்து இருக்கும் நாட்களில் தூர் கட்டும் பருவத்தில் ஏற்படும். நெல் ரகத்திற்குத் தக்கவாறு அதன் நிறம் இருக்கும். இத்தகைய மாறுதல், பயிரில் ஏற்படக் காரணமாக உள்ளது ஒரு வகை ஈ, இது கிட்டத்தட்ட கொசுவின் அளவு இருக்கும். இதன் புழு வளரும் குருத்துக்களைத் தாக்குவதால் சாதாரணமாக உருவாக வேண்டிய தண்டு, தோகையின் வளர்ச்சி மாறி நீண்ட குழாய் அல்லது வெங்காய இலை போன்ற அமைப்பு உண்டாகிறது.

குருத்துப் பூச்சிக்குரிய தடுப்பு முறையே போதுமானது.

### குருத்துப்பூச்சி

நாற்றங்காலிலும், நட்ட பயிரிலும் நடுக் குருத்து வாடிய பயிர்களைப் பார்த்திருப்பீர்கள். அந்த வாடிய குருத்தைக் கையால் இழுத்து சோதித்திருக்கிறீர்களா? அதேபோல் கதிர் வாங்கிய பின் வெண் கதிர் தெரியுமே; அதனை இழுத்துப் பார்த்தால், இந்த காய்ந்த நடுக் குருத்தும் வெண் கதிரும் சுலபமாக கையுடன் வந்துவிடும். அவற்





றின் அடிப்பாகததில் கடித்து துண்டிக்கப்பட்டிருக்கும். அருகில் குறைந்த துவாரங்கள் தெரியும். இத்தகைய குருத்துக்களைப் பிளந்து பார்த்தால், மஞ்சள் நிறப் புழு உள்ளே இருப்பதைப் பார்க்கலாம். அதனுடைய கழிவுகளும், தண்டின் உள்ளே இருப்பது தெரியும். இப்புழுவே குருத்துப் புழு எனப்படும்.

இப்புழுவின் தாய் அந்துப் பூச்சியைப்போல் நிறமுடையது. இறக்கைகள் ஒவ்வொன்றிலும் கரும்புள்ளி இருக்கும். இந்த அந்துப்புச்சி முட்டையிட்டு அதிலிருந்து வரும் புழுக்கள் கணுக்கு அருகில் துளைத்துத் தண்டினுள் சென்று குடைந்து வாழும். ஒரு குருத்தை உண்டதும் நீரில் மிதந்து சென்று மறு குருத்தைத் தாக்கும்.

இக்குருத்துப் பூச்சி காற்றில் அதிக ஈரப்பசை, குறைவான வெப்ப நிலை உள்ள மாதங்களாகிய புரட்டாசி முதல் தை, மாசி முடிய சம்பாப் பயிரிலும் தாளடிப் பயிரிலும் அதிகமாக தாக்குதல் இருக்கும். இந்தப் பருவத்தில் ஐந்து தலைமுறை பெருக வாய்ப்புண்டு.

## தடுப்பு முறைகள்

நாற்றங்காலில் விதைத்த 10வது நாள் கீழ்க் குறிப்பிட்ட ஏதாவது ஒரு மருந்தைத் தண்ணீருடன் கலந்து தெளிக்கவேண்டும்.

200 மில்லி பாரத்தியான், 20 மில்லி லெபாய்கிட் 30 மில்லி தையோடான், 30 மில்லி எக்கலாக்ஸ், 10 மில்லி டைமக்கரான்.

நட்ட வயலில், 40, 60வது நாட்களில் 200 மில்லி பாரத்தியான், 200 மில்லி லெபாய்கிட் 300 மில்லி எக்கலாக்ஸ், 110 மில்லி டைமக்ரான், 300 மில்லி தையோடான், 600 மில்லி ஜோலோன் ஆகிய மருந்துகளில் ஏதாவது ஒன்றைத் தெளித்து பூச்சியைக் கட்டுப்படுத்தலாம்.

இது தவிர குருணை மருந்தாகிய பியூடான் மருந்தை 7 கிலோ வீதம் வயலில் 1 அங்குல நீரைத் தேக்கி இட வேண்டும். அந்நீரை 3 நாட்களுக்குக் குறையாமல் வயலில் வைக்க வேண்டும். இக்குருணை மருந்து 40 நாட்களுக்குக் குருத்துப் பூச்சி தாக்குதலிலிருந்து காப்பாற்றும் திறன் கொண்டது.

## புகையான் அறிகுறிகள்

குறுவைப் பயிரில் கதிர் வெளிவரும் அல்லது வெளிவந்த பின் பயிர் வட்டமாக, புகைந்ததைப் போல் காணப்படும். தண்டு வலுவிழந்து கீழே சாய்வதும், முழுமையாக முற்றாமல் பதராகி விடுவதும் புகையான் பூச்சியின் தாக்குதலால் ஏற்படும் அறிகுறிகள்.

புகையான் பூச்சி தண்டின் அடிப் பகுதியில் நீர்மட்டத்திற்குமேல் 1 லிருந்து 2 அங்குலத்திற்குள் மிக அதிகமாக பழுப்பு நிற தத்துப் பூச்சி கூட்டம் கூட்டமாக இருக்கும். புகையான் பூச்சி ஆவணி கடைசியிலிருந்து ஐப்பசி முடிய நெற்பயிரை அதிகமாகத் தாக்கும். இம்மாதங்களில் வானிலை மப்பும், மந்தாரமுமாக சிறு தூற்றலுடன் வெப்ப நிலை 30 டிகிரியிலிருந்து 32 செண்டிகிரேடும் உள்ள நிலை 10 முதல் 15 நாட்களுக்கு நீடித்தால், இப்பூச்சியின் வளர்ச்சி அதிகமாகிப் பயிர்ச் சேதம் மிகுதியாகும்.

## தடுப்பு முறை

வயலில் உள்ள நீரை நன்றாக வடித்துவிட்டு, ஏக்கருக்கு 20 கிலோ பி.எச்.சி.10 சதம் அல்லது செவின் 10 சதம், 10 கிலோவை பயிரின் தண்டு பாகத்தில் படும்படி தூவ வேண்டும். அல்லது 200 மில்லி டைமெக்ரான் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பயிரைப் பாத்தி பாத்தியாக வகுத்து சூரிய ஒளி படும்படி வகுத்து விடவேண்டும்.

## சூரை அல்லது மாவுப் பூச்சி

சம்பாப் பயிரில் தோகைகளைப் பிரித்து இடுக்குகளில் பார்த்தால், வெண்மையான மாவுப் பூச்சிப் அல்லது தள்ளிப்பூச்சி இருப்பதைக் காணலாம். இப்பூச்சி தனது ஊசி போன்ற வாய்ப் பகுதியைக் கொண்டு தோகைகள் மற்றும் தண்டுக்குள் செலுத்தி பயிரில் சாற்றை உறிஞ்சுகின்றன. பயிருக்கு ஊட்டச்சத்து இல்லாமல் வளர்ச்சி குன்றிவிடுகிறது. கதிர்கள் சரியாக வெளிவராது; வெளிவந்த கதிர்கள் பதர்களாக இருக்கும்.

குருத்துப் பூச்சி தடுப்பதற்கு உபயோகித்த மருந்தினை உபயோகிக்கலாம்.

## கதிர் நாவாய்ப் பூச்சி

கதிர்கள் வெளிவந்து பால் கிடைக்கும் பருவத்தில் இப்பூச்சி தனது ஊசி போன்ற வாயால் பாலை உறிஞ்சிச் சாப்பிடும். அதனால் கதிர்கள் வெண்சாரியான நிலைக்கு ஆகிவிடுகின்றன. இப்பூச்சி இருக்கும் வயலில் துர்நாற்றம் இருக்கும்.

இதனைத் தடுக்க பி.எச்.சி.10 சதம் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். அல்லது எக்கலாக்ஸ் மருந்தைத் தெளிக்கலாம்.

## எலிகள்

மூன்று வகை எலிகள் பயிரை வெட்டி அழிக்கின்றன. பூச்சி, பூஞ்சாண நோய்களைவிட எலி செய்யும் சேதந்தான் அதிக அளவு நஷ்டமடைய செய்கிறது.

எலித்தொல்லையைத் தடுக்க நான்கு முறைகள் உள்ளன. (1) கிட்டி வைத்து எலி பிடித்தல் (2) ஒரு பாகம் கிங் பாஸ்பைட் 49 பாகம் பொரி, கடலை, கருவாடு போன்றவைகளுடன் கலந்து வயலில் வைத்தல் (அல்லது) (3) போரெட் கரைசல் 2.5 கிராம் குருணைக்கு 10 லிட்டர் தண்ணீர் வீதம் போரெட் கரைசல் தயார் செய்து எலிகள் உள்ள வளைகளில் நிரப்பி வழியை மூடிவிட வேண்டும்.

ஒரு எலி வளைக்கு 10 முதல் 40 லிட்டர் வரை போரெட் கரைசல் தேவைப்படும்.

இம்மூன்று முறைகளில் ''போரெட் குருணை'' கரைசல் செய்து உபயோகிப்பதுதான் சிறந்தமுறை. இம் முறையினைப் பயன்படுத்தி ஆடுதுறை ஆராய்ச்சி நிலையத்தில் எலி அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டது.

இந் நோய் தாக்குதலையும் இதன் தடுப்பு முறைகளையும் பார்ப்போம்.

### சூலை நோய்

இளம் பயிர் நோயின் தாக்குதலுக்கு உள்ளானால், இலைகளில் வட்ட வடிவப் புள்ளிகள் காணப்படும். புள்ளிகள் நடுவில் விரிந்தும் ஓரங்கள் குறுகியும் காணப்படுகின்றன. இப்புள்ளிகள் பரவப் பரவ ஒன்று சேர்ந்து பெரிதாகும். இலைகள் பழுப்பு நிறமாகி வாடிவிடும். பயிரின் முதிரும் நிலையில் கதிரின் தொண்டைப் பாகங்கள் தாக்கப்பட்டு அவை கறுப்பு நிறமடைந்து தொங்கி விடுகின்றன.

இதனைத் தடுக்க ஏக்கருக்கு 300 மில்லி உறினோசான் தெளிக்கவும்.

### இலைப்புள்ளி நோய்

நீண்ட செங்கல் வடிவப் பழுப்பு நிறப் புள்ளிகள் தோகைகளில் காணப்படும். நோய் கடுமையாகத் தாக்கும்போது, கதிர் அறுந்தும், கதிரிலுள்ள மணிகளும் தாக்கப்பட்டு, கதிர் முழுவதுமோ, பாதியோ சாரியாகிவிடும். நோய், விதைகளின் மூலம் பரவுகிறது. இதனைத் தடுக்க விதைகளை அக்ரசான் மருந்துடன் கிலோவுக்கு 2கிராம் வீதம் கலந்து விதைக்க வேண்டும்.

நட்ட பயிரில் டைத்தேன் இசட்78, 500 கிராம் தெளிக்க வேண்டும்.

### தண்டு அழுகல் நோய்

இந்நோய் பொதுவாக வடிகால் வசதியற்ற நிலங்களில் தோன்றுகிறது. நோய்கண்ட பயிரில் அதிக கிளைத்தூர்கள் காணப்படும். இவைகள் கதிர் விடாமல் இறுதி வரை பசுமை நிறமாகவே இருக்கும். கதிர் வந்த பயிரில் நோய் தாக்கினால் செடிகளின் அடிப்பாகம் பலகீனமடைந்து கதிர்களும் கீழே சாய்ந்து விடுகின்றன.

இதனைத் தடுக்க வடிகால் வசதியைப் பெருக்குதல், தாக்கப்பட்ட பயிரின் நிலத்தை செரசான் கரைசலில் நனைத்தல் வேண்டும்.

### தூர் அழுகல் நோய்

நோய் தாக்கிய நாற்றுகள் மெலிந்து, நீண்டு வளர்ந்து வெளிறியதாக இருக்கின்றன. விரைவில் நோய் கண்ட நாற்றுகள் வாடிச் சாய்ந்து விடும். நட்ட பயிரில் நோய் கண்டால் நோயினால் தாக்குண்ட செடிகள் நீண்டு வளர்ந்து பருத்திருக்கும். தூர்கள் எல்லாம் வெளுத்து உலர்ந்திருக்கும். நோய்கண்ட செடிகளில் இருந்து பூட்டைகள் சீக்கிரமாகத் தோன்றுகின்றன. அவை மணி கட்டாமல் சாரியாய்போய்விடுகின்றன. விதையுடன் அக்ரசான் மருந்தை கிலோவுக்கு 2 கிராம் கலந்து விதைக்க வேண்டும்.

### பாக்டீரியா இலைக் கருகல் நோய்

இந்நோய் ஒரு வகை பாக்டீரியா என்னும் நுண்ணிய கிருமிகளால் உண்டாகிறது. இலைகள் முதலில் நுனியிலிருந்து கீழ் நோக்கி கருக ஆரம்பிக்கும். கருகுவதால் ஒழுங்கீனமாகவும் இலைகளில் ஓரங்களில் இருந்தும் ஆரம்பிக்கிறது. பெரும்பாலும் பூட்டையும், கருகிவிடுகிறது. இதனைத் தடுக்க நட்ட பயிரில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 500 கிராம் தெளிக்க வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பில் பூஞ்சாண நோய்கள் வருமுன் காப்பதற்கு கீழ்க்கண்ட தடுப்பு முறைகளைக் கைக் கொள்ளலாம்.

### விதை நேர்த்தி செய்தல்

விதைகளை அக்கிரசான் என்னும் பூஞ்சாண மருந்தில் கிலோவிற்கு 2 கிராம் வீதம் உபயோகித்து கோணிகளிலேயே 5 நிமிடங்கள் நன்றாக கலவையாகும் வரை கலக்கி வைத்துக் கொள்ளலாம். அக்ரசான். கலந்த விதையை, குறைந்த அளவு 24 மணி நேரத்திற்குப் பின் ஊற வைக்க வேண்டும். அக்ரசான் நன்முறைக் கலவை செய்தால் பூஞ்சாண நோய்களை அதிக அளவு தடுக்கிறது. இதன் செலவு சுமார் ஏக்கருக்கு 30 காசுதான்.

நோய்களைத் தடுப்பு செய்ய கீழ்க் குறிப்பிட்ட புதிய முறையையும் எடுத்துக் கொள்ளலாம்.

முளை கட்டிய விதைகளை விதைப்பதற்கு முன் 1.250 கிராம் அக்ரமைசின் மருந்தை 40 லிட்டர் தண்ணீரில் கலந்து அக்கலவையில் ஒரு ஏக்கருக்கு உரிய முளை கட்டிய விதை மூட்டையை அதில் 15 நிமிடங்கள் ஊற வைக்க வேண்டும். இதற்கு ஆகும் செலவு 25 காசு தான்.

சிக்கனச் செலவில் பயிர்ப் பாதுகாப்புச் செய்வதற்கு கீழ்க்கண்ட முறைகளைக் கைக் கொள்ளலாம்.

நாற்றங்காலில் பயிர்ப் பாதுகாப்புச் செய்தல்





## சேமிப்புக்கு ஒரு ஷகிலா !

ஷகிலா பானு தஞ்சை மகளிர் கிருத்தவ உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் முதல் வகுப்பு மாணவி. அவளுடைய சகோதரி அதே பள்ளியில் 8-வது வகுப்பில் படிப்பவள். அவளது சகோதரி 'சஞ்சாயிகா' என்னும் மாணவர் தேசீய சேமிப்புத் திட்டத்தில் உறுப்பினர்.

ஷகிலா தனது சகோதரி சேமிப்புத்திட்டத்தில் சேர்ந்து பணம் சேர்ப்பதைப் பார்த்தாள். அவள் பாஸ் புத்தகமும், 'செக்' புத்தகமும் வைத்திருப்பது ஷகிலாவின் சிந்தனையைத் தூண்டியது. தானும் சேமிக்க வேண்டுமென்று விடாது பிடிவாதம் பிடித்து தலைமை ஆசிரியையிடம் சென்று அக்காளுடன் அழுது வேண்டினாள். இத்தனை உற்சாகத்துடன் இருக்கும் குழந்தையை ஊக்குவிக்க தலைமை ஆசிரியை குமாரி லிடியா சாலமன், ஷகிலா ''சஞ்சாயிகா'' சேமிப்புத் திட்டத்தில் சேர உதவினார்.

ஒவ்வொரு நாள் காலையிலும், வெற்றிலை பாக்குக் கடைக்காரரான தனது தந்தையைப் பல முறைகளில் அன்பால் வற்புறுத்தி இவள் 50 காசு பெற்றாள்.

சஞ்சாயிகா ஆண்டு விழாவில் கலந்து கொண்டவர்கள், ரூ. 112 வரை சேர்த்து வைத்துப் பெருமையுடன் மேடை ஏறி முதல் பரிசு வாங்கிய ஷகிலா பானுவைப் பார்த்து ''இந்தக் குழந்தையா இத்தனை பணம் சேர்த்திருக்கிறாள்! அலாஸ்காவில் சுண்டெலிகள் முந்திரி போன்ற பருப்புக் கொட்டைகளை டன் டன்னாக பனிக்கட்டிக்கடியில் சேர்க்கிறதாம். அதுபோல இருக்கிறது இவளது சேமிப்பும்'' என வியந்து அவளது சேமிப்புப் பழக்கத்தை வெகுவாகப் பாராட்டினர். **

நாற்றங்காலில் நாற்றுப் பதிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் பயிர்ப் பாதுகாப்பு செய்தால் மருந்துத் தேவை குறைவதுமின்றி செலவும் குறைகிறது. அதாவது 1 ஏக்கர் நட்ட வயலில் மருந்து தெளிக்க 3 ரூபாய் தேவை என்றால், 1 ஏக்கருக்குரிய நாற்றங்காலில் மருந்து தெளிக்க 3 ரூபாய்தான் ஆகிறது. ஆகையினால், நாற்றங்காலில் மருந்து தெளிக்கலாம்.

நடுவதற்கு முன் வேரை நனைத்து நடுதல்:
தேவையான பொருட்கள்: 1. டர்ஸ்பான் மருந்து 100 மில்லி 2. யூரியா ½ கிலோ-தண்ணீர் 50 லிட்டர்.

30×50×15 செ. மீ. அளவுள்ள நீளமான குழியினை நடவு வயலின் ஓரத்தில் தயாரித்து பாலிதீன் தாளால் அதன்மேல் பரப்ப வேண்டும். அவ்வாறு செய்வதால் மருந்துக் கலவை கீழே போகாதவாறு தடுக்கப்படுகிறது.

டர்ஸ்பான் 100 மில்லி மருந்தை 2½ லிட்டர் தண்ணீரில் கலந்து அக்குழியில் ஊற்ற வேண்டும்.

பின் ½ கிலோ யூரியாவை 2½ லிட்டர் தண்ணீரில் கலந்து ஊற்ற வேண்டும். அதன்பின் 45 லிட்டர் தண்ணீரை குழியிலுள்ள கலவையில் ஊற்றி நன்றாகக் கலக்க வேண்டும். இப்பொழுது மருந்துக் கலவை தயாராகிவிட்டது.

இந்த டர்ஸ்பான் கலவையில் நாற்றின் வேர் பாகங்களை 20 நிமிடங்கள் வைத்து, பின் நடவு செய்ய வேண்டும்.

இவ்வாறு வேரை நனைத்து நடுவதனால் பயிரில் 40 நாட்கள் வரை குருத்து ஈ, குருத்துப் புழு, ஆனைக் கொம்பன் முதலிய பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

இதனை குறுவைப் பயிரைவிட சம்பா, தாளடிப் பயிரில் கடைப்பிடித்தால், நன்மை உள்ளது. சம்பா பயிர் சாகுபடி செய்யப்படும்போது அதிக அளவு மழை இருக்கும். அன்றியும் மருந்து தெளித்தவுடன் மழையினால் பயனில்லாமலாகிவிடுகிறது. ஆகையால் குறைந்தது சம்பா, தாளடி பயிர் சாகுபடியில் ''வேர் நனைத்தல்'' முறையைக் கைக் கொள்ளலாம்.

இதற்கு சுமார் 15 ரூபாய் வரை செலவாகும்.

பயிர்களில் பயிர்ப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை மத்திய, மாநில அரசுகள் உணர்ந்துள்ளன. ஆகையினால், அதிக சேதம் விளைவிக்கும் புகையான், குருத்துப் புழு ஆகியவற்றைத் தடுக்க, ''ஒருமித்த பயிர்ப் பாதுகாப்பு'' செய்ய மத்திய அரசு மானியம் வழங்குகிறது. குருத்துப் புழுவைத் தடுக்க கடன்முறையில் பயிர்ப் பாதுகாப்பு செய்ய மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

அன்றியும் ஒவ்வொரு விவசாய கிட்டங்கியிலும் குறைந்தது 4 விசைத் தெளிப்பான்கள் வைக்கப்பட்டுள்ளன. வாடகை, நாள் ஒன்றுக்கு ரூ. 2.50 தான். அதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வருடம் பயிர்ப் பாதுகாப்பிற்குத் தேவையான புதிய மருந்துகள் சந்தை விலையினைவிட குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதற்காகக் கிடங்குகளில் தேவையான அளவு வைக்கப்பட்டுள்ளன. இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள அரசு வேளாண் துறை சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

**பயிர் வளர்ப்போம்! பயிர் காப்போம்!!**
**பசிப்பிணி தீர்ப்போம்!!!**



# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
# பயிர்களுக்குத் தேவை விஜய்



குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக் களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக் கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

**VIJAY**
MADRAS FERTILIZERS




MFL-1517



# புஞ்சையில் இருபோக சாகுபடி!

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் அம்மா பட்டி கிராமத்தில் குடியிருக்கும் நான் ஒரு சிறு விவசாயி. எனக்கு 3 ஏக்கர் புஞ்சை நிலம் உள்ளது. எங்கள் கிராமத்தில் வழக்கமாக ஜுன், ஜுலை மாதங்களில் புஞ்சை நிலத்தில் நிலக்கடலை விதைக்கப்படும். கடலை அறுவடைக்குப்பின் ஒரு சில இடங்களில் மட்டும், கொள்ளு, ராகி இரண்டாம் பயிராக விதைப்பார்கள். 1977ம் ஆண்டு நான் குடுமியான்மலை விவசாயப் பண்ணையில் உள்ள உழவர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்பட்ட நான்கு நாள் விவசாயப் பயிற்சியில் கலந்து கொண்டு, புதிய சாகுபடி முறைகளைப்பற்றி நேரில் பார்த்து பலனடைந்தேன்.

பயிற்சிகளில் கூறப்பட்ட புதிய சாகுபடி முறைகளில் புஞ்சையில் நிலக்கடலைக்குப்பின் இரண்டாம் பயிராக உளுந்து சாகுபடி செய்யும் திட்டம் என்னைக் கவர்ந்தது. சென்ற ஆண்டு நான் எனது புஞ்சை நிலத்தில் ஜுன் மாதத்தில், நிலக்கடலை விதைத்து செப்டம்பர் மாதக் கடைசியில் அறுவடை செய்தேன். அறுவடைக்குப்பின் நிலத்தை உழுது அக்டோபர் மாத முதல் வாரத்தில் பொன்னமராவதியில் விவசாயக் கிடங்கிலிருந்து டி.9 உளுந்து வாங்கி, ஏக்கருக்கு 8 கிலோ வீதம் விதைத்தேன்.

விதைக்கும் முன்பு 8 கிலோ விதையுடன் ஒரு பாக்கெட் நுண்ணியிர் கலவையை கலந்துவிதைத்தேன். நவம்பர் மாதத்தில் அதிக மானமழைபெய்தும்டி.9 உளுந்துச் செடிகள் பாதிக்கப்படாமல் நன்றாக வளர்ந்தன. விதைத்த 25ம் நாளில் ஒரு களை எடுத்து மண்ணைக் கிளறிவிட்டேன். விதைத்த 65ம் நாளில் செடிகளில் காய்கள் முற்றி அறுவடைக்குத் தயாரா யிருந்தன. செடிகளில் சில காய்கள் பச்சையாக இருந்தன. 68ஆம் நாளில் முதல் தடவையாக செடிகளிலிருந்து நெற்றுக்களை எடுத்தேன். இந்த அறுவடை மூலம் எனக்கு ஏக்கருக்கு 270 கிலோ உளுந்து கிடைத்தது. அதன் பிறகு 25 நாட்கள் கழித்து எல்லாக் காய்களும் நெற்று ஆனதும் செடியைப் பிடுங்கிக் காய வைத்து அடித்து உளுந்தை எடுத்தேன். இரண்டாவது தடவையில் 180 கிலோ உளுந்து கிடைத்தது. ஆக மொத்தம் ஒரு ஏக்கருக்கு 450 கிலோ உளுந்து கிடைத்தது. நிலக்கடலை அறுவடை செய்த பின் இரண்டாம் போகமாக டி.9 உளுந்து விதைத்ததால் எனக்கு ஏக்கருக்கு கிடைத்த 450 கிலோ மகசூலைக் கண்டு எங்கள் கிராம மக்கள் வருகிற ஆண்டு உளுந்து சாகுபடி செய்வது என்று முடிவு செய்தார்கள். 1978ம் ஆண்டு எங்கள் அம்மா பட்டி கிராமத்தில் அனைத்து விவசாயிகளுமே புஞ்சையில் நிலக்கடலைக்குப் பின் டி. 9 மற்றும் கே. எம். 1 உளுந்து விதைகளை வாங்கி முறைப்படி உர மிட்டு விதைத்துள்ளோம். புஞ்சையிலும் இருபோகச் சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம் என்பது எனது நேரிடை அனுபவம்.

**திரு மு. ம. சின்னையா,**
**அமைப்பாளர்,**
**உழவர் ஆய்வு மன்றம்**
**அம்மாபட்டி.**




## அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டையோட்டி சிறப்பு அஞ்சல் தலைகள்!

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டையொட்டி அஞ்சல் தந்தித்துறை 1979 மார்ச்சு 5-ஆந் தேதி இரண்டு சிறப்பு அஞ்சல் தலைகளை வெளியிட்டது.

25 காசு அஞ்சல் தலையில் காந்தியடிகள் ஒரு குழந்தையுடன் இருப்பது போல் அச்சிடப்பட்டுள்ளது. ஒரு ரூபாய் அஞ்சல் தலையில், அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டிற்கான இந்திய அரசின் முத்திரை அச்சிடப்பட்டுள்ளது ''மகிழ்ச்சியான குழந்தை-நாட்டுக்குப் பெருமை'' என்ற இந்தியாவின் சிறப்பு வாசகம் இரண்டு அஞ்சல் தலைகளில் அச்சிடப்பட்டுள்ளன.

1979 மார்ச்சு 5-ஆந் தேதி புது தில்லியில் ஒரு விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் திரு பி. டி. ஜாட்டி அவர்கள் அஞ்சல் தலைகளை வெளியிட்டார்



# பெருவிளக்கப் பண்ணை



நிலச்சீரமைப்பு, பாசன நிர்வாகம், பருவத்திற்கேற்ற ரகங்களைக் கையாளுதல், நவீன சாகுபடி முறைகளைப் புகுத்துதல் ஆகியவைகளே பெருவிளக்கப் பண்ணை அமைப்பதன் நோக்கங்களாகும்.

மேற்கூறிய நவீன வேளாண்மை தொழில் நுட்பங்களை வயலில் பெரிய அளவில் புகுத்தும் பொருட்டு கோபி ஒன்றியம் கூகலூர் கிராம கருங்கரடு அருகே இருபோக நெல் சாகுபடி நடைபெற்றுவரும், இருமன் பாடு கொண்ட 41-65 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இப்பரப்பு 29 நபர்களுக்கு சொந்தமானது ஆகும். இங்கு கடந்த ஆண்டுகளில் வயல்கள் சிறியதாகவும், சீரான நேரான வரப்புகள் இல்லாமலும் வாய்க்கால்கள் இல்லாமலும் வயலுக்கு வயல் நீர்பாய்ச்சும் நிலைமையும் இருந்து வந்தது. முதல் போகத்தில் ஐ.ஆர்.20, பவானி நெல் ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வந்ததால் நெல் பயிர்கள் கதிர்ப் பருவத்தில் புகையான் தாக்கப்பட்டு நெல் விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்டு நெல் சாகுபடி செய்யவே இப்பகுதி விவசாயிகள் அஞ்சினர்.

இந்நிலையில் 29 விவசாயிகளையும் ஒன்று சேர்த்து, சிறிய வயல்களைப் பெரியதாக்கி 10 செண்ட் முதல் 15 செண்ட் கொண்ட வயல்களாக்கி டிராக்டர் உழவுக்கு உகந்ததாகச் செய்யவும், வரப்புகளை நேராக்கவும், வயல்களுக்கு வயல் நீர் பாய்ச்சுதலை நிறுத்தி வாய்க்கால்கள் அமைக்கவும் பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டத்தினை 6 விவசாயிகள் ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்தனர். முதல்போகத்தில் புகையான் பூச்சியின் கொடுமை ஆரம்பிக்கு முன்பே அறுவடைக்கு வரக்கூடிய குறுகிய கால ரகத்தினைச் சிபாரிசு செய்து ஆடுதுறை 31, ஐஈடி 1722 ரகங்கள் பரிந்துரைக்கப்பட்டன. இதை ஏற்று 17 விவசாயிகள் ஆடுதுறை 31 நெல் 22.35 ஏக்கரிலும் ஆறு விவசாயிகள் வைகை நெல் 5.50 ஏக்கரிலும் எட்டுக்கால் அமைத்து டை அமோனியம் பாஸ்பேட் அடியுரமாக செண்ட் ஒன்றுக்கு இரண்டு கிலோ கிராம் இடும் புதிய முறையை 15 விவாயிகள் ஏற்றுக் கொண்டு 20.90 ஏக்கரிலும் செயல்படுத்தப்பட்டது. நாற்றுக்களின் நேர்களை டாஸ்பான் மற்றும் யூரியா கலந்து நீர்க் கலவையில் நனைத்து 15 நிமிடம் வைத்திருந்து நடவு செய்யும் முறையை ஆறு விவசாயிகள் புதிதாகக் கையாண்டதில் 11 ஏக்கர் பரப்பில் இம்முறைசெயல்படுத்தப்பட்டது இம்முறையை மேற்கொள்ள 10 அடி நீளம் 2 அடி அகலமும் அரை அடி ஆழமும் கொண்ட குழி ஒன்று எடுக்கப்பட்டது. இதில் பாலித்தீன் விரிப்பை பரப்பி தற்காலிக தொட்டி அமைத்து 45 லிட்டர் நீர் வைக்கப்பட்டது. பின்பு 2½ லிட்டர் நீரில் தனியாக 100 மில்லி டார்ஸ்பான் மருந்து கலக்கப்பட்டது. இதே போல் 2½ லிட்டர் நீரில் ½ கிலோ யூரியா தனியே கலக்கப்பட்டது.

இந்த இரண்டு கலவையையும் 45 லிட்டர் நீரில் கலக்கப்பட்ட போது தற்காலிக பாலிதீன் தொட்டியில் 50 லிட்டர் கலவையாக ஆகிவிட்டது. பாலிதீன் தொட்டியில் ஒரு செண்டில் பறிக்கப்பட்ட நாற்றுக்களை வேர் நனையும் அளவுக்கு ஒரு தடவையில் வைக்க முடிந்தது. இதுபோல் எட்டுத் தடவைகள் எட்டு செண்ட் நாற்றுகள் ஒவ்வொரு தடவையும் 15 நிமிடம் வைத்து எடுக்கப்பட்டன. இவ்வாறு ஒரு ஏக்கர் நாற்றுகள் வைத்து எடுத்து நடப்பட்டன.

எட்டுத் தடவை முடிந்த பின் மேற்கண்ட முறையில் மீண்டும் கலவை தயாரிக்கப்பட்டது. ஆக ஒவ்வொரு ஏக்கருக்கான நாற்றுகள் நனைத்து முடிந்ததும் மேற்கூறிய முறையில் புதிய கலவை தயாரிக்க வேண்டும். இவ்வாறு தயாரித்து நடவு செய்ததில் விரைவில் நடவு வயலில் வழக்கத்திற்கு மாறுபட்டபடி பசுமை திரும்பியது. நட்ட வயலில் அவ்வப்போது கண்காணித்த போது எந்த வகையான பூச்சியும் தென்படவில்லை. நாற்பது நாள் வரைக்கும் மருந்து தெளிக்கும் நிலை ஏற்படவில்லை. நாற்பத்தைந்தாவது நாளில் இந்த வயல் உள்ள அருகாமை வயல்களில் புகையான் அதிகம் இருப்பது அறிந்து தற்காப்பு செய்யும் வகையில் ஆம்பித்தியான் 500 மில்லியுடன் ஹினோசான் 300 மில்லி 100 லிட்டர் நீரில் கலந்து விசைத் தெளிப்பானால் தெளிக்கப்பட்டது. வேறு எந்தவிதமான பூச்சி மருந்துகளும் இந்த 11 ஏக்கர் பரப்பு அறுவடை வரை பயன்படுத்தப்படவில்லை. சரியாக 11 வது நாளில் அறுவடை செய்தபோது மகசூல் அறுத்தவுடன் தானியம் ஏக்கருக்கு2900 கிலோவும் ஈரத்தாள் 6800 கிலோவும் கிடைத்தது. உள்ளூர் அளவுப்படி கணக்கிட்டால் ஏக்கருக்கு 44 மூட்டைகள் அதாவது 11 பொதிகள் என்று உள்ளூர் விவசாயிகள் கணக்கிடுகிறார்கள். 29.8.78 அன்று அறுவடை விழா நடந்த போது கூகலூர் கிராம விவசாயப் பெருமக்கள் கூடியிருந்த பயிரையும் மகசூலையும் கண்டனர். சுற்று வட்டார விவசாயிகள் பெற்ற மகசூல் 2500 கிலோ ஆகும். பெருவிளக்கப் பண்ணை விவசாயிகள் பெற்ற மகசூல் 2900 கிலோ. மேற்கொண்ட இரண்டாம் பருவத்தில் புதிய முறைகளைக் கையாளத் திட்டமிட்டுள்ளனர்.



# அரிசன மக்கள் ஆக்கம் பெற....

**கோ**வை மாவட்டத்திலுள்ள அரிசன நல மேம்பாட்டிற்காக வீட்டுமனைப்பட்டா வழங்க கடந்த ஆண்டு ரூ.8 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இதுவரை 4,32,000 செலவில் 84.23 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இது வரை 1769 வீட்டு மனைப்பட்டாக்கள் ஒதுக்கப்பட்டன.



நடப்பு ஆண்டில் கோவை மாவட்டத்தில் 40 அரிசன குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி செய்ய ரூ.2.4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசன வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் இதுவரை கோவை மாவட்டத்தில் 3260 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு 400 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அரிசனப் பகுதிகளிலுள்ள பாதைகளைச் சீர்செய்ய ரூ.1 இலட்சத்து 74 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் இதுவரை 1 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

அரிசன மாணவர்களுக்கு இதுவரை 10 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் 2246 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 40 ஆயிரம் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு 4 இலட்சத்து 69 ஆயிரம் செலவில் நோட்டு, புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அரிசனப் பெண்களுக்கு 30 தையல் இயந்திரங்களும், காலணி தயாரிப்பதற்கு 13 தையல் இயந்திரங்களும், 25 சலவைத் தொழிலாளர்களுக்குச் சலவைப் பெட்டிகளும், 13 பேருக்கு மரவேலை செய்யும் கருவிகளும், 48 பேருக்குச் சிகை அலங்காரக் கருவிகளும், 76 பேருக்குச் செருப்புத் தைக்கும் கருவிகளும் மார்ச் மாதத்திற்குள் வழங்கப்படும்.

இவ்வாண்டில் புதியதாக 2 அரிசன மாணவர் விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. மொத்தம் எண்ணிக்கை 34லிருந்து 36ஆக உயர்கின்றது. புதியதாக 3 சமூகநல மன்றங்கள் தொடங்கத் திட்டம் உள்ளது. தீண்டாமை ஒழிப்புத்திட்ட சட்டத்தின்கீழ் 48 பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் அரிசனக் குடியிருப்புகள் வளர்ச்சிக்காக 1977-78ல் 4.45 இலட்ச ரூபாய்ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 40 வேலைகள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அரிசனக் குடியிருப்புகளில் பள்ளிக்கூடங்கள் கட்டுதல், ஆசிரியர்களுக்கு விடுதிகள் கட்டுதல்போன்றவைகளுக்கு இத்தொகை செலவிடப்படும்.

இம்மாவட்டத்தில் இந்த ஆண்டு 9 இடங்களில் விவசாயக் கிடங்குகளும், 10 விலங்குகள் மருத்துவமனைகளும், 53 ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டடங்களும் 116 இணைப்புச் சாலைகளும் போடத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் இதுவரை 2 விவசாயக் கிடங்குகளும், 5 விலங்குகள் மருத்துவ மனைகளும், 25 ஆரம்பப் பள்ளிக்கூடக் கட்டடங்களும், 72 இணைப்புச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

குடும்ப நலத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு இதுவரை 13 ஆயிரத்து 247 பேருக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அரசு ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளது; இதன்படி குடும்பநலத் திட்ட தீவிர இயக்கத்துக்கு 3 இலட்சம் ரூபாய் வரை உபரி நிதியுள்ள ஊராட்சிகள் ரூ.30 ஆயிரம் செலவிடவும், அதற்குக் குறைவான வருமானம் உள்ள ஊராட்சிகள் 5 ஆயிரம் ரூபாய் வரை செலவிடவும் அனுமதிக்கப்பட்டுள்ளன. குடும்பநல தீவிர இயக்கத்துக்கு மொத்தம் ரூ.6 இலட்சத்து 40 ஆயிரம் செலவிடப்படும்.

சிமெண்ட் விற்பனை செய்ய மாவட்டத்தில் 2357 பெர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. 7 ஆயிரம் டன் சிமெண்ட்டு விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

# படமும் செய்தியும்



தலைமை கடற்படைத் தலைவர் அட்மிரல் ஆர். எல். பெரேயரா மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்களை 20.3.79 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.



மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு பி. குழந்தைவேலு அவர்கனை ஆந்திரமாநில சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் அமைச்சர் திரு ஜி. தாஸ் அவர்கள் 24.3.79 அன்று சந்தித்தார்.



தலைமைச் செயலகச் சங்கத்தின் சார்பில் 27-3-79 அன்று நடைபெற்ற தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்தை திறந்து வைத்தார்கள். விழாவில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களும் கலந்து கொண்டார்கள்.



ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் தலைமைச் செயலகத்தில் 16.3.79 அன்று மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்தார்கள்.



சென்னை மைலேடிஸ் கார்டனில் மலர்க் காட்சியை 24.3.79 அன்று மேதகு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி திறந்து வைத்தார். மாண்புமிகு ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் தலைமை வகித்தார்கள்.

அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட் காட்சியின் நிறைவு விழா 11.3.79 அன்று சென்னை தீவுத்திடலில் நடைபெற்றபொழுது மத்திய அரசு சுற்றுலா மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. புருஷோத்தம் கௌசிக் பொருட்காட்சியில் சிறந்து விளங்கிய அரங்குகளுக்கு பரிசுகள் வழங்கினார்.



மாண்புமிகு கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு கே. இராசா முகமது அவர்கள் 18.3.79 அன்று செங்கற்பட்டு மாவட்டம் உத்திர மேரூர் ஊராட்சி ஒன்றியம் அழிசூர் ஊராட்சியில் தரைமட்ட குடிநீர்த் தேக்க தொட்டியினைத் திறந்து வைத்தார்.



சென்னையில் ஊனமுற்றோர் உலகநாள் விழா 25.3.79 அன்று நடைபெற்றபொழுது மாண்புமிகு சமுகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரசுவதி அவர்கள் தலைமை உரை ஆற்றி ஊனமுற்றோர்களுக்கு நிதி உதவித் தொகை வழங்கினார்.









# கல்லும் கதை சொல்லும்

குரங்கிலிருந்து மனிதனாகத் தோன்றிய காலத்திலிருந்தே, அதாவது சுமார் கி.மு.1,25,000 முதல் கி.மு.4000 ஆண்டுகள் வரை பழங்கால மனிதன் தமிழ் நாட்டிலும், இந்தியாவின் பல இடங்களிலும், மேலை நாடுகளிலும், செம்மையான ஆனால் எளிய வாழ்க்கையை நடத்தி வந்தான் என்பதற்குக் கல்லினாலாகியபல சான்றுப் பொருள்கள் (Artifacts) தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்தில் கடந்த நூறு ஆண்டுகளாகச் சேகரிக்கப்பட்டு, காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. எழுத்து தோற்றுவிக்கப்படவில்லை அந்தக் காலத்தில். ஆயினும் கற்கால மனிதனின் பண்பையும், பண்பாட்டையும், பல ஆயிரம் ஆண்டுகள் ஆயினும் அழியாது நிலைத்து நின்றுள்ள இந்தக் கல் ஆயுதங்களிலிருந்துதான் நாம் ஒருவிதமாக அறிய முடிகிறது.

மனிதன் தோன்றுதவற்கு முன் பூமி, பல மாறுதல்களை அடைந்தது. பிளைஸ்டோசீன் (Pleistocene) என்ற காலப் பிரிவில் பூமி பனியினால் நிரப்பப்பட்டிருந்தது. பிறகு பனி உருகி நதியாகவும், ஆறாகவும் ஓடியது. மலைகளும், குன்றுகளும், பள்ளத்தாக்குகளும் தோன்றின. குரங்கு இனத்தின் உச்சக்கட்டத்தை சேர்ந்த மனிதன் என்னும் பிறவி, தனது உடல், நடை, மூளை ஆகியவற்றின் வளர்ச்சியினால் இந்த புதிய உலகில் வாழ தோற்றுவிக்கப்படுகிறான். இந்த கற்கால (Old Stone Age) மனிதன் இரண்டு கால்களால் நடந்து அருகிலுள்ள ஆற்றோரமாகச் செல்லுகிறான். மற்ற மிருகங்களைப் போலவே அவனுக்கும் பசி ஏற்பட்டது. சிறிது நேரம் யோசிக்கின்றான். தனது இரு கைகளின் வலிமையை நன்கு உணருகிறான். அவைகளை எவ்விதமாகப் பயன்படுத்த முடியும் என்பதையும் அறிய ஆவல் கொள்ளுகிறான். ஆற்றின் கரையில் சிதறிக் கிடக்கும் பெரிய கற்களை அவன் காணகின்றான். பொருள்களைப் பற்றிப் பிடிக்கும் தன்மை வாய்ந்த தனது இரு கைகளினாலும் ஒரு பெரிய பாறாங்கல்லைத் தூக்குகிறான். அருகில் நிரந்தரமாக பூமியில் நடப்பட்டிருக்கும் வேறு ஒரு பெரிய பாறாங்கல்லின் மீது தன் கையிலுள்ள கல்லை மோதி (Block on Block Technique) உடைக்கின்றான். சிறிது சிறிதாக உடைக்கப்பட்டுக் கொண்டு வரும் இக்கல்லை பிறகு தனது இடதுகையில் நன்றாக இறுகப் பிடித்து, வலது கையில் வைத்திருந்த ஒரு குழாய்கல்லினால் அக்கல்லினை (Direct Percussion Technique) இன்னமும் உடைக்க முற்படுகின்றான். இவ்விதமாக ஒடித்து, மடித்து, செதுக்கி தன் மனத்தில் உருவெடுத்தபடி ஓர் ஆயுதத்தை முதன் முதலில் வெட்டி எடுக்கின்றான். அதுதான் கூரானதும், வெட்டுமுனையினையுடையதுமாகிய கைக்கோடாரியாகும் (Hand Axe). மேலும் ஒரு கல்லை மற்றொரு கல்லுடன் குறிப்பிட்ட வேகத்தில், குறிப்பிட்ட கோணத்தில் தாக்கி, வில்லைகளை ஒடித்து கைக்கோடாரிகள் மட்டுமின்றி, பிளக்கும் கோடாரிகளையும் (Cleavers), சுரண்டும் கற்கருவிகளையும் (Scrapers) மனிதன் செய்தான். கைக்கோடாரியைக் கொண்டு பூமியைத் தோண்டி, கிடைக்கும் வேர்கள், தண்டுகள், கிழங்குகள் ஆகியவற்றை தன் ஆகாரமாகக் கொண்டு மலைகளிலும், காடுகளிலும், வனாந்திரத்திலும், நாடோடியாகச் சுற்றித் திரிந்தான். மேலும் வலிமை பொருந்திய கையினால் மரம், செடி, கொடிகளிலுள்ள கனி, காய், பழம் ஆகியவற்றையும் பறித்து உண்டான். தேன் கூடுகளிலிருந்து தேனையும் பருகினான்; இரவு வந்தது. தான் இளைப்பாறவும், உறங்கவும், பழங்கால மனிதன் மூன்று குடியிருப்பு ஸ்தலங்களை உண்டு பண்ணினான். அவைகள் ஆற்றின் கரையில் திறந்த வெளியில் இயற்கையாக அமைக்கப்பட்ட தளங்கள் (River Terraces) குன்றுகளில் இடுக்குச் சரிவுகள் (Rock Shelters), குகைகள் (Caves) ஆகும்.

இவைகளில் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட இடம் ஆற்றங்கரைத் தளங்கள் தாம். இந்தத் தளங்கள் இயற்கையினால் ஏற்பட்டவையா? அல்லது மனிதனின் செயற்கையா? பனி உருகித் தண்ணீராகி நதியாக மாறி ஓடியது. தண்ணீரின் ஓடும் வேகத்தினால் ஆற்றின் இருபுறக் கரைகளும் அரிக்கப்பட்டு வெட்டப்பட்டன. ஆற்றின் தண்ணீர் மட்ட அளவு உயர்ந்தபொழுதும் குறைந்த பொழுதும், புதிய புதிய தளங்கள் கரையில் ஏற்படுத்தப்பட்டன. படிக்கட்டுப் போன்ற இந்த ஆற்றங்கரைகளில்தான் பழைய கற்கால மனிதர்கள் வாழ்க்கை நடத்தினர். கற்கருவிகளைச் செய்தனர். அருகிலிருந்த நதியிலிருந்து அவ்வப்போது தண்ணீரைப் பருகினர். காலமும், நாட்களும் பறந்தன. ஒருநாள் திடீரென்று ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தது, கரைபுரண்டது. ஒருவேளை அது இரவு நேரமாக இருக்கலாம். எந்த முன் எச்சரிக்கையும் இந்த மனிதனுக்கு இல்லாததால், தானும், தன் குடும்பமும், தான் செய்து உபயோகித்த கற்கருவிகளும், ஆற்றின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. சில பொருள்கள் ஆற்றில் மூழ்கிப் போயின.

சில ஆண்டுகளுக்கு பிறகு வேறொரு குடும்பம் பல இடங்களைச் சுற்றித் திரிந்து இதே ஆற்றங்கரைக்கு வந்து சேருகிறது. இவர்கள் தான் இடைக்

கற்கால மனிதர்கள் (Middle Stone Age) சுமார் கி. மு. 10,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள். முன்பு வாழ்ந்து மரித்துப்போன மக்களுடன், அவர்களுடையஆயுதங்களுடனும் நாளடைவில் ஆற்றின் மண்ணும், கல்லும், சேறும் ஒன்று சேர்க்கப் பட்டு அடுக்குகளின் கனம் உயர்வை அடைத்தது. இப்படிப் பட்ட அடுக்கின்மேல் இந்த இடைக்கற்கால மனிதர்கள் வாழ்க்கையைத் தொடங்கினார்கள். தங்கள் முன்னோரைப் போல பெரிய கற்களிலிருந்து கைக் கோடாரிகளையும், பிளக்கும் கோடாரிகளையும் இவர்கள் உற்பத்தி செய்யாமல் அபூர்வமான கற்களாகிய அகேட், சால்சிடோனி, செர்ட், கார்னீலியன், ஜாலியன் ஆப்சீடியன், குவாட்ச்சு முதலியவைகளிலிருந்து செதுக்கிய துண்டுகளை அல்லது வில்லைகளைக் கொண்டு சிறிய ஆனால் கூர்மையான ஆயுதங்களைச் செய்தனர். அவைகள் கத்தி (Knife), ப்ரின்யூ (Burin), லூனேட் (Lunate), முக்கோணம் (Triangle), அம்பு முனை (Arrow Point) போன்ற உருவங்களில் படைக்கப்பட்டன. இச்சிறிய கற்கருவிகளை வரிசையாக கைப்பிடியிலமர்த்தி கத்திகளாகவும், கொடுவாட்களாகவும், அரிவாட்களாகவும், அம்புகளாகவும் உபயோகித்து, காடுகளிலும், ஆறுகளின் அருகிலும் காணப்பட்ட மிருகங்களை வேட்டையாடி, உணவைப் புசித்து வாழ்க்கை நடத்தி வந்தனர். காலப் போக்கில் இவனும் ஆற்றங்கரைத் தளங்களிலும், குகைகளிலும், குன்றுகளின் சரிவுகளிலும்தனது வாழ்க்கையை கழித்து மறைந்து போகிறான். ஆனால் இவன் உபயோகித்த கல்லாயுதங்களும், எலும்பாயுதங்களும், தளங்களில் பதியப்பட்டு ஓர் அடுக்காகக் காட்சியளிக்கிறது.

இடைக்கற்கால மனிதனின் மறைவிற்குப் பிறகு புதிய கற்கால மனிதன் (Late Stone Age) சுமார் கி.மு.6000 முதல் கி.மு. 4000 ஆண்டுகள் வரை ஆட்சி செலுத்துகின்றான். தன் முன்னோர் செய்த கரடுமுரடான கற்கருவிகளை அப்படியே உபயோகிக்காமல் அவைகளை இவன் நன்றாகத் தேய்த்து, வழவழப்பாக்கி, மரம் அல்லது எலும்பு அல்லது மானின் கொம்பு ஆகியவைகளால் கைப்பிடி அமர்த்தி காய்கறிகளை வெட்டவும், நறுக்கவும், உபயோகித்தான். பல ஆண்டுகளாக இயற்கையின் உணவுப் பொருள்களை தேடுகின்ற நாடோடியாகவும், வேடுவனாகவும் இருந்து வந்த பழைய கற்கால, இடைக்கற்கால மனிதரைப் போலில்லாமல், இந்த புதிய கற்கால மனிதன் உணவு உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை நன்கு அறிகிறான். இவ்விதமாக இயற்கையின் உணவை நாடித் தேடி, சேகரிப்பதை விட்டு விட்டு, உணவை தான் உற்பத்தி செய்யும் பணி, தன் வாழ்க்கையில் ஒரு புரட்சியை உண்டாக்குவதைக் கண்டு மகிழ்ந்தான். சமுதாயங்கள் மாற்றங்களையும், மறுமலர்ச்சிகளையும் அடைய புரட்சிகள் அவசியம். இப்புரட்சிக்கு இன்றியமையாதது உழவுத் தொழிலும், ஆடுமாடுகளை வீட்டு விலங்குகளாகப் பழக்கி பயன்படுத்துவதே, என்பதை அவன் அறிந்தான். ஆகவே இந்த புதிய கற்கால மனிதன், பள்ளத்தாக்குகளையும், மேடுகளையும், காடுகளையும் சமப்படுத்தி, விலங்குகளை வசப்படுத்தி ஏரில் பூட்டி, கோதுமை நெல், பார்லி, கிழங்கு வகைகளைச் சாகுபடி செய்தான். அறுவடைக்காக அவன் ஓர் இடத்தில் நிரந்தரமாகப் பல மாதங்கள் தங்க நேர்ந்தது. ஆகவே அம்மக்கள் நிரந்தரமான இருப்பிடங்களை வயல் அருகே அமைத்துக் கொண்டு ஒன்று சேர்ந்து வாழும் கிராமிய வாழ்க்கைக்கு முதல் முறையாக வகையும் வழியும் செய்து காட்டினான்.

செல்ட் என்று சொல்லப்படும் வெட்டுங்கோடாரியுடன், தானியங்களை அரைக்க அம்மிக்கல், சுத்திக்கல், குழவிக்கல் ஆகியவைகளை முதன் முறையாக, கரடுமுரடான வகையில் இம்மனிதன் செய்தான். மேலும் பொருள்களைச் சமைக்க கையினால் செய்த மண்பாண்டங்களையும் செய்தான். இம்மனிதன் தீயின் பயனை அறிந்து உணவுப் பொருள்களைத் தீயிலிட்டுச் சமைத்து உண்டான். தோலுடை அல்லது தழையுடை அவனது ஆடையாகும். இயற்கை மொழியாகிய இழைத்தல் மொழி என்னும் நாவசைத்துப் பொருள் விளங்கப் பேசும் மொழியில் தன் கருத்தை மற்றவர்களுக்கு அறியப்படுத்தினான். குகைகளின் உட்சுவரில் தான் பார்த்த, தான் துரத்திச் சென்ற, தான் வேட்டையாடின, மிருகங்களின் உருவங்களை வரைந்து சிறந்த ஓவியனாக மாறினான்.



பழைய கற்காலக் கருவிகள் (Palacoliths) தமிழ் நாட்டில் பல்லாவரம், அத்திரம்பாக்கம் (பூண்டி அணை அருகில்), செங்குன்றம், வடமதுரை, பெரியபாளையம், எருமைவெட்டிபாளையம், மஞ்சள் கருணை (செங்கை மாவட்டம்) என்ற இடங்களிலும், இடைக்கற்கால கருவிகள் (Microliths) குறிப்பாக சாயர்புரத்திலும் (திருநெல்வேலி மாவட்டம்) புதிய கற்கால கருவிகள் (Neoliths) சேலம், பெல்லாரி போன்ற இடங்களிலிருந்து சென்னை அருங்காட்சியகத்திற்கு சேகரிக்கப்பட்டவையாகும். முக்கியமாக இந்தியாவிலே முதன் முறையாக தொல்பொருள் வல்லுநர் ராபட் புரூஸ்புட் என்பவரால் செப்டம்பர் மாதம் 1863ம் ஆண்டு அத்திரம்பாக்கத்தில் வெட்டும் கோடாரி (Cleaver) ஒன்று கண்டெடுக்கப்பட்டு, சென்னை அருங்காட்சியகத்தில் ஒரு சிறப்புப் பொருளாக விளங்குகிறது.

செங்கை மாவட்ட பூண்டி அணையை (சத்தியமூர்த்தி நீர்த் தடாகம்) ஒட்டியுள்ளதே அத்திரம்பாக்கம் அல்லது ஆற்றம் பாக்கம் என அழைக்கப்படும் ஒரு சிறு கிராமம் ஆகும். இவ்வூரைச் சார்ந்தாற் போல் ஓடுவதுதான் குற்றளையார் என்னும் சிறு அருவி. பூண்டி அணையின் நீர், கலங்களில் பாய்ந்து இந்த அருவி வழியாக ஓடுகிறது. நமது பள்ளிக்கூடச் சிறுவர்கள் ஆண்டு தோறும் உல்லாசப் பயணமாகப் பூண்டி அணைக்கட்டிற்குச் செல்வது வழக்கம். கல்லூரி மாணவ மணிகள் கூட்டமாகவும் ஒரு விடுமுறை நாளை மகிழ்ச்சியின் நாளாக இந்த அணைக்கட்டின் பூங்காவில் கழிப்பதும் உண்டு. தேக்கப்பட்டுள்ள நீரையும், அணையின் அமைப்பையும், எழில்மிகு மலர்களையும், மற்றும் கண்கவர் காட்சிகளையும் இவர்கள் கண்டு களித்துச் செல்லுகின்றனர். தவிர காலடியில் விழுந்து சிதறிக் கிடக்கும் எண்ணற்ற சிறு கற்கருவிகளைப் பற்றிய வியப்பையும், அவற்றின் மதிப்பையும், அவற்றின் கதையையும் கேட்காதவாறும், பார்க்காதவாறும் செல்கின்றனர்.

தொல்பொருளியல் துறை கல்லூரி மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், சரித்திரக்காரர்கள் ஆகியவர்கள் மட்டுமே, குற்றளையார் நதியின் தளங்களில் பரந்து, பரவிக் கிடக்கும் பழங் கற்கால மனிதனின் கல் ஆயுதங்களிலிருந்து அந்த மனிதன் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், எப்படி வாழ்ந்தான், எதைச் செய்தான், எந்தப் பண்பாட்டை



உலகிற்கு விட்டுச் சென்றான் என்பதினை ஒரு தொடர் கதையாகக் கூறமுயலுகின்றனர். வளர்ச்சியடையாத அக்காலத்தில் ஆற்றங்கரைகளில் கல்லாயுதத் தொழில் பட்டறைக்கு ஒத்த சாலையை ஏற்படுத்தி, கல் ஆயுதங்களைத் தானே பல விதத்தில், பல வகையில் உற்பத்தி செய்து ஆதிமனிதன், இயற்கையின் பொருள்களைச் சேகரித்தும், வேட்டையாடியும், உணவுப் பொருள்களைப் பெருக்கியும் வாழ்க்கையைத் திறம்பட நடத்தினான் என்றால் அது நமக்கு வியப்பை அளிக்கிறதல்லவா?

இவ்வித கல்லாயுதத் தொழில் பட்டறைகள், கல்லாயுதங்கள், ஆற்றங்கரைப் படிக்கட்டுத் தளங்கள், ஆறுகள் ஆகியவைகளைச் சேர்த்து இந்த மாதிரியான இடங்களை ஆதிமனிதத் தொழில் வள, கலாச்சார திறந்த வெளி அருங்காட்சியகக் கூடங்கள் என்று அழைக்கலாமே! ஆராய்ச்சியாளர்கள் மட்டுமின்றி பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும், மாணவர்களும் இவ்விதக் கல்வி அறிவினையூட்டும் இடங்களைப் பார்வையிட்டு அறிவினை வளரச் செய்யலாமே!



**—என். தேவசகாயம்,**
**மானிடவியல் காப்பாட்சியர்,**
**தமிழ்நாடு அரசு அருங்காட்சியகம்,**
**சென்னை—600 008.**

## முகவையில் சிரமதானப் பணி!

சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்குப் புத்துயிர் அளிக்கும் முகமாகவும், கிராம மக்களும் அரசு அலுவலர்களும் சிரமதானப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் ஒவ்வொரு மாதமும் ஓர் ஊராட்சி ஒன்றியத்தில் பயன் பெறும் திட்டங்கள் செயலாற்றப் பட்டு வருகின்றன.

அதன்படி இராமநாதபுரம் மாவட்டம் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம் கே. புதுப்பட்டியில் செவந்தான். குடிநீர்



ஊரணி ஆழபபடுத்தும் சிரமதானப்பணி 15-3-79 அன்று மேற்கொள்ளப்பட்டது. சிரமதானப் பணியை இராமநாதபுரம் மாவட்டம் ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைக்க, பாராளுமன்ற உறுப்பினர் திரு பெ. தியாகராசன், சட்டப்பேரவை உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம், அரசு அலுவலர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களும் மண்வெட்டி பிடித்து, மண்வெட்டி சிரமதானப் பணியினை மேற்கொண்டனர்.

சிரமதான பணியில் சரிசல்பட்டி, செட்டிக்குறிச்சி, பிரான்பட்டி, தர்மபட்டி, கொண்டபாளையம், வலசைப்பட்டி, முசுண்டப்பட்டி, கீழவயல், மணலூர், வாராப்பூர் முதலிய ஊராட்சிப் பகுதியைச் சேர்ந்த 1,000 பேர் ஈடுபட்டு சுமார் ரூ. 3,000 மதிப்புள்ள பணியைச் செய்து முடித்தனர்.



# குழந்தை உள்ளம்

[அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு இது. இத்தருணத்தில் குழந்தைப் பருவம், அதன் உணர்ச்சிகள், பழக்க வழக்கங்கள், பெற்றோர் கடமை போன்ற அரிய கருத்துக்களை விளக்குகிறது இக்கட்டுரை. கட்டுரை ஆசிரியர் திரு. வித்யா கம்தகார்.]

குழந்தைப் பருவம் ரம்மியமான பருவம், ஆவலைத் தூண்டும் விளையாட்டுப் பருவம்!

ஒரு குழந்தை வளர்வதைப் பார்த்துக் கொண்டிருப்பது ஒரு தனி இன்பம். குழந்தைப்பருவ வளர்ச்சி மிகவும் அதிசயிக்கத்தக்கது.

நம்மைப் போன்ற வயதானவர்களுக்குக் குழந்தைகள் மிகவும் ஆபத்தை அணைத்துக் கொள்ளும் பருவத்தினர் என்று தோன்றும்.

குழந்தைகளுக்கு அத்தகைய அச்ச உணர்வு எதுவும் இருப்பதில்லை. முதியவர்களைச் சார்ந்திருக்கிறோம் என்ற உணர்வேயில்லாமல் குழந்தைகள் ஒவ்வொரு காரியத்திலும் உச்சாணிக் கொம்பிற்குச் சென்று விடுகின்றனர்.



மனித சமுதாயத்தில் மறுபிறப்பு குழந்தை! தங்களைப் போன்று வயது வந்தவர்களும் நடக்க வேண்டும். குறிப்பாக தங்களது பெற்றோர்கள் தங்களைப் போன்று செயல்பட வேண்டும் என்று குழந்தைகள் விரும்புகின்றன.

குழந்தைகளைப் பராமரிப்பதில் யார் வெற்றி பெறுகிறாரோ அவர்தான் மனிதாபிமானம் உள்ளவர்கள். எனவே பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பில் மிக ஜாக்கிரதையாக அணுக வேண்டும். தங்களது மனிதாபிமான உணர்வு சோதிக்கப்படுகிறது என்பதைப் பெற்றோர்கள் உணர வேண்டும்.

குழந்தை மென்மையான களி மண்ணைப் போன்றது. இயற்கை அதை உருவாக்க முடியும். இயற்கையால் பெருமளவிற்குக் குழந்தை உருவாக்கப்படுகிறது. 21 நூற்றாண்டுகளுக்கு முன்பு பிளாட்டோ, கூறிய தத்துவ விளக்கம் இன்றும் பொருந்துவதாக இருக்கிறது.

ஒரு மனிதனது ஆற்றல் அவனோடு பிறப்பது; குழந்தைப் பருவத்தில் பெறுகிற பயிற்சி அவனது வாழ்க்கையில் அவன் மேற்கொள்ளுகிற பணிகளுக்கு உரு கொடுக்கிறது.

மற்றொரு உலகப்பெரும் தத்துவஞானியான ரூசோ, குழந்தை வளரும் சில ஆண்டுகள் அதனுடைய எதிர் காலத்திற்கு முக்கியமான பருவம் என்று விளக்கினார் என்றாலும் ரூசோ குழந்தைகள் தங்களது இயற்கை உள்ளுணர்வுகளைச் சுதந்திரமாக வெளியிட அனுமதிக்க வேண்டும் என்று விளக்கினார்.

குழந்தைகளுக்கு மறைக்கும் எந்த உணர்வுகளும் கிடையாது. குழந்தைகளது எண்ணங்கள் மேன்மையானவை. அவர்களுக்கென்று உரித்தானவை. பெற்றோர்களும் சிந்தனையாளர்களும் தங்களது சொந்தக் கருத்துக்களில் குறித்து வைத்து தத்துவ விளக்கங்களை எழுதும் சலுகைகளைப் பெற்றிருக்கின்றனர். ஆனால், குழந்தைகள் தங்களது எண்ணங்களை, எண்ண ஓட்டத்தை எழுதி வைக்கமுடியாது. திரும்ப நினைத்துப் பார்க்க இயலாது. நாம் அவர்களது உலகத்திற்குள் புகுவோம்.

குழந்தை விழித்திருக்கும் போது என்ன நினைக்கிறது?

அந்தக் குழந்தைக்குத் தாம் நினைத்ததை வெளியில் சொல்வதற்கு நாம் ஒரு வாய்ப்புக் கொடுத்தால் அது இப்படித்தான் சொல்லும்.

''குழந்தையாக இருப்பது விளையாட்டல்ல. தாயார் கோபமாக இருக்கிறார். என்னை முதுகில் பலமாக அறைந்தார். சுவரில் பற்பசையால் சித்திரங்கள் தீட்டினேன். தந்தை பார்த்தார். ஓங்கி ஒரு அறை அறைந்தார். கதவை மூடவும், திறக்கவும் எனக்குத் தெரியும். தெருவில் வேகமாக ஓட விரும்புகிறேன். அப்படி நான் ஓடும்போது, என்னை இழுத்து வந்து வீட்டில் உதைக்கிறார்கள். உயிரோடு உயிர்ப்புச் சக்தியோடு எப்படி வாழ்வது, அது எவ்வளவு விந்தையானது என்பதை அவர்கள் அறியமாட்டார்கள்''

குழந்தைக்குப் பெயர் சூட்டியதும் அதற்குத் தனி ஆர்வம் பிறக்கிறது. சமுதாயத்திலிருந்து தான் தனித்து இருப்பதாக அப்போதுதான் அந்தக் குழந்தைக்கு எண்ணம் வருகிறது. குழந்தைகளுக்குத் தங்களது விருப்பம் போல் எல்லாப் பொருட்களையும் வாங்கிக் குவிக்க வேண்டும் என்ற கருத்து உண்டு. நமக்கு மிகச் சாதாரணமாக தோன்றும் விஷயங்கள் எல்லாமே குழந்தைகளுக்கு அழகானதாகவும் பொருள் பொதிந்ததாகவும் தோன்றும். எந்த விதமான முன்னேற்பாடும் இல்லாமல் திடீரென்று குழந்தைகள் மனம் விட்டுச் சிரிப்பது நமக்கு மகிழ்வூட்டும் ஓர் அம்சம்.

ஒன்றுக்கொன்று தொடர்புடைய நுணுக்கமான விஷயங்கள் குழந்தையின் வளர்ச்சியில் பங்கு வகிக்கின்றன. உடல் வளரவும் அறிவு வளக்கிறது. தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்குகிறது. அப்போது குழந்தை சமூகத்தில் ஓர் அங்கமாகி விடுகிறது.

வெளி உலகத்தோடு தொடர்பில்லாமல் அல்லது குழந்தையின் நடவடிக்கைகளுக்கு, எந்த விதமான விளைவும் இல்லாமல்



போய் விடுமானால், குழந்தைக்கு உள்ளுக்குள் ஆத்திரம் பொங்கி வருகிறது.

சாதாரணமாக குழந்தைகள் பருவநிலையை ஒலிகள், அன்பு, அனுதாபம், பல்வேறு வர்ணங்களில் இயற்கைக் காட்சிகள் இவற்றைக் கண்டு தங்களது உணர்வுகளை எப்படி வெளிப்படுத்துகின்றன என்பதை நாம் பார்த்திருக்கிறோம்.

நம்முடைய பாட்டியோ அல்லது தாயாரோ தங்களது அனுபவத்தை நமக்குச் சொல்லும்போது, குழந்தைகள் எந்த அளவிற்கு மற்றவர்கள் போதிக்கும் படிப்பினைகளால் வளர்க்கிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

குழந்தைகளின் கவனத்தை மிகச் சுலபமாக வேறு திசைக்குத் திருப்பி விடலாம். வயதானவர்கள் தங்களது கருத்துக்களில் உறுதியாக இருப்பார்களானால் குழந்தைகளைத் தங்கள் வழிக்குக் கொண்டு வந்துவிட முடியும்.

குழந்தைகளுக்குக் கற்பனை என்றால் மிகப் பிரியம். கற்பனைக்கு எட்டாத கதைகளைச் சொல்லி அவர்களைச் சுலபத்தில் நம் வழிக்குக் கொண்டுவந்து விடலாம்.

## வனப்பாதுகாப்பு பெண் அலுவலர்கள்

அருணாசலப் பிரதேசத்தின் ரிசர்வ் காடுகளைப் பாதுகாப்பதற்கான அலுவலர்களாக, நான்கு பெண்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதுவரை வனத்துறையில் ஆண்கள்தான் எல்லா மட்டத்திலும் அலுவலர்களாகப் பணியாற்றி வந்திருக்கிறார்கள். இப்போது நியமிக்கப்பட்டுள்ள இவர்கள் அனைவரும் மலைப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் வனவலங்குப் பாதுகாப்பு, பராமரிப்பில் அக்கறை கொண்டவர்கள்.

வனத்துறை அலுவலர் காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஜோமினி தெலி (வயது 18), நங்காராம் ஜாசா (வயது 20), தபாயாதி (வயது 18), நந்திங்காமிங் (வயது 20), டானா யானா வயது (20) ஆகியோரில் நந்திங்காமிங் தவிர மூவரும் திருமணமானவர்கள். இவர்களுக்கு இந்தி, அசாமி தெரியும். ஓரளவிற்கு ஆங்கிலமும் அறிந்தவர்கள்.

**

குழந்தைகள் தங்களுக்கு எதிரி என்ற முடிவிற்கு வந்துவிட்டால் அதற்கு அப்புறம் என்ன சொன்னாலும் குழந்தைகளைத் திருத்த முடியாது.

குழந்தைகள் உலகம் நம்மில் இருந்து வேறுபட்டது. ஆழ்ந்த கற்பனைத் திறம் இல்லாமல் குழந்தைகள் உலகிற்குள் நாம் புக முடியாது. வயதானவர்கள் நியாயமானது என்று கருதுகிற காரியங்களைக் குழந்தைகள் எதிர்க்கும். வயதானவர்கள் என்ன கட்டளையிட்டாலும் அது குழந்தைகளுக்குப் புரியாது. இது சம்பந்தமாகக் குழந்தைகள் தொடர்பான மனோதத்துவ நிபுணர்கள் தெளிவான விளக்கமளித்திருக்கின்றனர்.

குழந்தை தனித்தன்மை கொண்டது. அதற்கென்று தனிக் கண்ணோட்டம் உண்டு. சில குழந்தைகள் எப்போதும் சுறுசுறுப்புடன் கூச்சலிட்டுக்கொண்டேயிருக்கும். சில குழந்தைகள் நாணத்துடன் காணப்படும். இந்த உணர்வுகளை நாம் வெளியுலக அளவுக்கோலைக்கொண்டு மதிப்பிட முடியாது. குழந்தைகள் தங்கள் இயற்கைச் சூழ்நிலைகளில் வளர அனுமதிக்கப்பட வேண்டும்.

குழந்தைப் பருவத்தில் ஏமாற்றத்திற்கு உள்ளானால் இளைஞனாகும்போது அந்த ஏமாற்றம் பிரதிபலிக்கும். அந்தக் குழந்தை பெரியவனாகி வாழ்க்கையின் இறுதி வரை அந்த ஏமாற்ற உணர்வுகள் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும்.

தினசரி, குழந்தை, தான் சந்திக்கும் பெற்றோர்கள், மற்றவர்கள், தான் விளையாடும் பொம்மைகள் ஆகியவற்றோடு தனது உலகத்தைச் சுருக்கிக் கொள்கின்றன. பழக்கவழக்கங்கள் வேகமாக வளர்கின்றன.

படங்கள் நிறைந்த ஒரு புத்தகத்தைத்தலை கீழாகப் பிடித்துக் கொண்டிருக்கிற குழந்தைகூட, அதில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளுக்கு, அர்த்தத்தை புரிந்து கொள்ள விரும்புகிறது. அல்லது குறைந்த பட்சம் மழலை மொழி பேசுகிறது.

வயது வந்தவர்களை மிகஎளிதாகக் குழந்தைகள் பின்பற்றுகின்றன. எனவே, குழந்தைகள் சிந்தனை, வளர்வதில் பெற்றோர்களின் பங்கு மகத்தானது. எனவே, பெற்றோர்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு குழந்தைகளை வளர்க்க வேண்டும். குழந்தைகள் தங்களது பெற்றோர்களையும் வயதானவர்களையும் பார்த்து நடக்க கற்றுக் கொள்கின்றன. எனவே, வயதானவர்கள், பெற்றோர்கள் தங்களது நடவடிக்கைகாள முறையாக — குழந்தைகளைப் புரிந்து கொண்டு, தங்களது வாழ்க்கை நெறிமுறைகளை அமைத்துக் கொள்வதையும் தவிர வேறு இன்பம் எதுவும் இல்லை!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


மது விலக்கை ரத்து
செய்வதன் மூலம் கிடைக்கும்
வருமானத்தை விட, தாய்மார்களின்
மகிழ்ச்சி பொருந்திய குடும்பங்கள்
தான் தமிழக அரசுக்கு முக்கியம்!
- பேரறிஞர் அண்ணா
- இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.






குழந்தைகள் அறிவியல் கண்காட்சி - திருச்சி.

தமிழரசு இலவச இணைப்பு

1—4—1979

# எங்கும் சமநீதி



மாண்புமிகு

முதல்வர்

# எங்கும் சமநீதி

**மாண்புமிகு முதல்வர்**

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

# பதிப்புரை

தமிழ்நாடு சட்டப் பேரவையில் கொண்டுவரப் பட்ட கண்டனத் தீர்மானங்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்து 26-2-79 அன்று மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ஆற்றிய உரையினைத் தொகுத்து, 'தமிழரசி'ன் இலவச இணைப்புகளாக வெளியிட முடிவு செய்துள்ளோம். அவ்வுரையின் முதல்பகுதியாகச் 'சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை' குறித்த பகுதிகள் 'எங்கும் சமநீதி' என்ற தலைப்பில் 1-4-79 'தமிழரசு' இதழின் இலவச இணைப்பாக வெளி வருகிறது. மற்ற பகுதிகள் அடுத்துவரும் இதழின் இலவச இணைப்பாக வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். தமிழ் மக்கள் தெளிவான கருத்து விளக்கம் பெற 'எங்கும் சமநீதி' பயன்படும் எனப் பெரிதும் நம்புகிறோம்.

சென்னை-2
26-3-79

செய்தி—மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், இதற்குமுன் மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் சேர்ந்து கண்டனத் தீர்மானங்கள், நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு அதற்குப் பதில் அளிக்க வேண்டிய பொறுப்பிலே நான் என் கடமைகளைச் செய்ய முன் வந்திருக்கிறேன்.

இங்கே ஒட்டுமொத்தமாகப் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், குற்றச்சாட்டுகளை எடுத்து வைத்து, பல் வேறு பிரச்னைகளுக்குப் பதில் பெற விரும்பியிருக்கிறார்கள். அந்த வகையில் எங்களுடைய அரசின்மீது நம்பிக்கை இல்லை என்று கூறியதுடன், கண்டனத் தீர்மானங்கள் மூலம் குற்றச்சாட்டுகளை எங்கள் மீது சுமத்தியவர்களும், உண்மை நிலை என்ன என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பை, அவர்கள் வெளிப்படுத்தியதன் மூலம் கிடைத்த வாய்ப்பை எனக்கு அளித்ததற்காக நான் இந்த அமைச்சர் அவையின் சார்பாக நன்றி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டி ருக்கிறேன்.

பொதுவாக இங்கே பேசிய கருத்துக்களின் தலைப்புகள் வெள்ள நிவாரணம், கல்வி, தொழில், பதிவு பெறாத அரசு அலுவலர்கள், சங்கம், தேர்தல்கள், பொதுப்பணித்துறை, வருவாய்த் துறை, வணிக வரி, அறநிலையத் துறை, லஞ்சம், ஊழல், உள்துறை, காவல் துறை, அதோடு மதுவிலக்கு, உணவுத்துறை, கூட்டுறவுத் துறை, சமூகநலத் துறை, நாட்டு உடைமைக் கொள்கை, மொழி, அண்ணாயிசம் என் றெல்லாம் இங்கே இத்தனை தலைப்புகளை வைத்து, அதற்குப் பதில் கூறவேண்டிய அளவிற்கு அவர்கள் நிறைய பொருள்களை, கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள்.

இங்கே முதலில் மாமன்ற உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பதிலுக்குப் பிறகு, நீங்கள் என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள் என்பதைப் பற்றி நான் எண்ணாமல், அந்த எண்ணத்தைக் கொண்டு இங்கே நான் கருத்துக்களைக் கூற முன் வரவில்லை என்பதை யும், எனக்குத் தெரிந்த உண்மைகளை, என்னிடம் இருக் கின்ற ஆதாரங்களை மூலமாக எடுத்துக் கொண்டு கூறுகின்ற நிலையில் என்னுடைய பேச்சு அமைய இருக்கின்றது என் பதைக் கூறிக் கொள்கிறேன். இங்கே இந்த மாமன்றத்திலே

இருக்கின்றவர்கள் நீங்கள் சில சமயம் பேசும்போது இங்கே கேட்டுக் கொண்டிருப்பவர்கள், நேரமாகிறது என்ற நினைக்கிற சூழ்நிலை உருவாகுமானால், சீக்கிரம் முடித்து விட்டார் என்ற வகையிலே கருத்துக்கள் சொல்வதும், ஆனால் வெளியிலே போய் மேடையிலே பேசும்போது இன்னின்ன கேள்விகளைக் கொடுத்தோம், குற்றச்சாட்டுக்களை முன் வைத்தோம், அதற்கெல்லாம் சரியான பதில் தரப்படவில்லை என்று கூறுவதும், சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் தலைவர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

## ஆதாரத்துடன் தரப்படும் பதில்

அதோடு சில நேரங்களில் இன்னொன்றும் சொல்லுகிறார்கள். நான் இலக்கண இலக்கியம் படித்த தமிழ் அறிஞனாகவோ, தமிழ்க் கவிஞனாகவோ அல்லது தமிழில் புலமை பெற்றவனாகவோ இல்லாத காரணத்தால் நான் என் கருத்துக்களை எடுத்து வைத்து மாமன்ற உறுப்பினர்களுடைய சந்தேகத்தைத் தீர்த்து வைக்க முயலும்போது அதைக் கேட்டுவிட்டு வெளியே போகிற உறுப்பினர்கள் தமிழைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள் 'முதலமைச்சர் என்ன பேசினார் என்றே எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை' என்ற குற்றச்சாட்டை என்மீது சுமத்துகிறார்கள் என்பதையும் நான் இங்கே சொல்லித் தீர வேண்டியவனாக இருக்கிறேன்.

பட்டியல்களைக் கையிலே வைத்துக் கொண்டு ஆதாரங்களைப் படித்துக் காட்டினால் 'அவர் எங்கே தன்னுடைய கருத்தை வெளியிட்டார், அதிகாரிகள் எடுத்துக் கொடுத்ததை அல்லவா படித்தார்' என்று சொல்லுகிறார்கள். நானாகப் பேசினால் பேசியது புரியவில்லை என்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு தர்ம சங்கடமான நிலையில் இருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு நல்ல விளக்கத்தைத் தருவதற்கு ஆதாரத்தோடு தரப்பட்டுள்ள பட்டியலையும், விவரங்களையும் படிப்பது ஒருவேளை என் தமிழ் புரியாது என்ற காரணத்தால் அந்தத் தமிழ் புரியும் என்ற நிலைமையில் அந்த முயற்சியை மேற்கொள்வதாக இருக்கிறேன்.

## நியாயமான உரிமை

நான் முதலில் குறிப்பிட்டது போல் ஏறத்தாழ 20 தலைப்புகளில் நான் பதில் கூறவேண்டியவனாக இருக்கிறேன். இந்த 20 தலைப்புகளில் எத்தனையோ மாமன்ற உறுப்பினர்கள், ஒரே பிரச்சினையைப் பற்றியல்ல, ஒரே துறையைப் பற்றி அல்ல, வேறு வேறு கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் பதில் கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கி விட்டிருப்பதால் மாமன்ற உறுப்பினர்கள் நேரமாகிறது என்று கோபித்துக் கொள்ள மாட்டார்கள் என்றும், கேட்பதிலே அக்கறை காட்டுவார்கள் என்றும் நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன்.

அவர்களுக்கு எப்படி என்னிடத்திலிருந்து பதிலை எதிர் பார்க்க உரிமை இருக்கிறதோ, அதுபோல் அந்த ஒத்து ழைப்பை அவர்களிடத்திலிருந்து எதிர்பார்க்க எனக்கு நியாயமான உரிமையுண்டு. அந்த ஒத்துழைப்பைத் தரு வார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

அந்த வகையில் ஒவ்வொன்றையும் வரிசைப்படுத்திக் கொண்டு போகக்கூடாது என்றாலும், நான் ஒருசிலவற்றை எடுத்துக் கொண்டு பேசுவது முறையாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

தலைவர் அவர்களே, இங்கு பேசிய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் பேசுகையில் விவ சாயத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்பது வீண் பண விரயம் என்று பேசியிருப்பதாகக் குறிப்பிட்டதாகத் தெரிகிறது. நான் உண்மையிலேயே எங்கள் கருத்தைத் தெரிவித்துக் கொள்வது இந்த நேரத்தில் மிகப் பொருத்தமானதும், தேவை யானதும் ஆகும் என்று கருதுகிறேன். அப்படி அவர்கள் கூறியிருப்பார்களேயானால் அது சரியானது அல்ல என்றும் நான் அதற்காக எங்கள் அமைச்சரவையின் சார்பில் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன்—நம்பிக் கையில்லாத் தீர்மானம் போன்றவைகள்—கண்டனத் தீர் மானம் முதலியவைகள், ஒரு நாட்டின் மேல், மக்களின் மேல் நம்பிக்கையைப் பாதுகாக்கவும், முன்னால் இருந்த தவறுகள் மீண்டும் தொடர்ந்து விடக் கூடாது என்ற எண்ணத்தினா லும், தவறுகளைச் செய்தவர்களை மக்கள் என்ன முடிவைத் தந்திருக்கிறார்களோ அதே முடிவு இப்பொழுது இருப்பவர் களுக்கு வந்துவிடக்கூடாதே என்ற நல்லெண்ணத்துடனும் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே எடுத் துக் காட்ட விரும்புகிறேன்.

### வரவேற்கிறோம்

இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள்கூட இதே கருத்தைத்தான் வலியுறுத்திச் சொன்னார்கள்., என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, நாங்களும் அப்படிப்பட்ட நிலையை அடைந்துவிடக் கூடாது என்பதற் காக நாங்கள் அதை வலியுறுத்துகிறோம் என்ற வகையில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறியது இந்த நேரத்தில் எனக்கு நினைவிற்கு வருகிறது.

எனவே, இப்படிப்பட்ட தீர்மானங்கள் கொண்டு வருவது தேவை என்பதும், அவர்கள் எந்த மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டு வந்து இருக்கிறார்களோ அந்த மக்களுக்கு அவர்கள் செய்யும், ஆற்றும் கடமை என்கிற எண்ணத்தில் இந்தத் தீர்மானங்கள் கொண்டு வரப்படுகின்றன என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து அதை வரவேற்பதிலே மகிழ்ச்சியும் அடைகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகள் போராட்டத்தையொட்டியும் மின் கட்டணத்தையொட்டியும் அரசு எடுத்த நடவடிக்கை பற்றியும் சில கோரிக்கைகளைச் சிலர் இங்கே சொல்லியிருக்கிறார்கள்.



## விவசாயிகளுக்குச் சலுகைகள்

மின் கட்டணம் 10 பைசா, 9 பைசா என்றிருந்தது உயர்த்தப்பட்டது. முன்பு, அதாவது 1970-ல் நடந்த போராட்டத்தின் விளைவாக இந்தக் கட்டணம் குறைக்கப்பட்டு, மீண்டும் 1972-ல் மின்கட்டணம் ஒரு அளவுக்கு நிச்சயிக்கப்பட்ட பின்னால், அவசர நிலைக் காலத்தில் சற்று மேலும் உயர்த்தப்பட்டு, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் 12, 14, 16 பைசா என்றிருந்த நிலையை 14, 12 என்ற அளவுக்கு எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் நேரில் ஒப்புக்கொண்டுவிட்டு, பின்னால் வெளியே வந்து சில போராட்டங்களைத் தொடங்கிக் கொண்டிருப்பதன் விளைவாக, இப்போது மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்வதும், அது மட்டுமல்ல, மின் கட்டணம் மட்டுமல்ல, வரியையும் கட்ட வேண்டாம் என்று சொல்லுகிற அளவுக்குச் சிலர் இறங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டியது கடமை என்று எண்ணுகிறேன்.

எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஜப்திகளுக்காக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதற்கான ஒரு குறிப்பை இந்த மாமன்றத்திற்கு எடுத்துக்காட்டுவது, இந்த மாமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற சந்தேகத்தைத் தீர்க்கும் என்று நம்புகிறேன். கூட்டுறவுக் கடன் வசூல் சம்பந்தமாக எந்த அளவுக்குக் காலம் கொடுக்கப்பட்டது என்பதை அறிவித்திருக்கிறோம்.

7—4—78-ல் எல்லா விவசாயிகளும் இரண்டு மாதத் தவணை கட்டினால் போதும் என்று அறிவிக்கப்பட்டது.

78-ல் சிறு விவசாயிகள் மீது நடவடிக்கை தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

15—12—78-ல் உயர்மட்டக் குழுஅறிக்கையின் மீது நடவடிக்கை எடுப்பது வரையில் நடவடிக்கை இல்லை என்று கூறி நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்தக் குழுவின் அறிக்கை வராத காரணத்தால்-இப்போது பிப்ரவரி 15-ஆம் தேதி வரை நடவடிக்கை இல்லை என்று முடிவு செய்து அதற்குப் பிறகும் உச்ச மட்ட கமிட்டி இன்னும் தனது அறிக்கையைத் தரவில்லை. விரைவில் இதன் முடிவு அறிவிக்கப்படும் என எதிர்பார்ப்பதால், அதுவரை தவணை கொடுத்திருக்கிறோம். இருப்பினும், இதில் முக்கியமாக மின்சாரக் கட்டண வசூலில் ஒரு இறுதியான முடிவுக்கு வரவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றுமுள்ள அத்தனை பேர்களுக்கும் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**வரிகொடா இயக்கம் ஜனநாயக முறையா?**

சில நேரங்களில் அரசியல்வாதிகள் தான் ஏதோ தவிர்க்க முடியாத சூழ்நிலையின் விளைவாகத் தங்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்திக் கொள்வதற்குச் சில சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்ற குறை கூறப்பட்டாலும், தனிப்பட்டவர்கள் இந்த நாட்டில் ஒழுங்கீனத்தை ஏற்படுத்துகின்ற நிலைமையும்-அதிலும் ஒரு கட்டுப்பாடான பொது நன்மையைக் குலைக்கும் வகையில் ஜாதியின் பெயரால் சில நிகழ்ச்சிகளை ஏற்படுத்துவது போல், விவசாயிகளைத் தூண்டுகின்ற காரியங்களைச் செய்வதற்குத் தங்களை



ஈடுபடுத்திக்கொண்டு அதில் ஒப்படைத்துக் கொண்டு செயல்படுகின்றவர்கள் அந்த வகையில் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தால் இந்த அரசு அதை அனுமதிக்க முடியுமா என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாகச் சிந்திப்பார்கள் என்பதும், அந்த முறையில் வரிகொடா இயக்கத்தைப் பற்றிப் பேசுவதோ, வரி கொடுக்காதீர்கள் என்று சொல்வதோ, இந்த நாட்டில் இருக்கின்ற ஜனநாயக அமைப்பில்—ஜனநாயகத்தை நன்கு உணர்ந்த இந்த மாமன்ற உறுப்பினர்கள் அப்படிப்பட்டவர்களுக்கு நிச்சயம் ஆதரவு தர மாட்டார்கள் என்றும் இந்த அரசு நிச்சயமாக நம்புகிறது.

அரசு ஏதோ பிடிவாதமாக அல்லது வேண்டுமென்றே அலட்சியப்படுத்தி, பழிவாங்கும் நோக்கோடு காரியங்கள் செய்வார்களானால், அதைக் கண்டிப்பதற்கும், அதைப்பற்றி எடுத்துரைப்பதற்கும் வேறு வழிமுறைகள் இருக்கின்றன. அந்த வகையிலே மாமன்ற உறுப்பினர்களுக்குக் கடமையும், பொறுப்பும், உரிமையும் இருக்கின்றன. அந்த வகையிலே இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலே கருத்துக்கள் தெரிவித்தால் உதவியாக இருக்கும். ஆனால், அதே நேரத்தில் வரி கொடா இயக்கத்தைப் போன்றுடிக்களைத் தவறான வழியில் தூண்டிவிட்டு, அந்த வகையிலே அவர்களை இழுத்துச் செல்கின்ற செயல்முறைகளுக்கு இந்த மாமன்றம் நிச்சயமாக ஆதரவு தராது என்று நான் எதிர்பார்க்கிறேன்.

விற்பனை வரி ஆலோசனைக் குழு ஒன்றை நியமிப்பது சம்பந்தமாக அரசு பரிசீலித்து வருகிறது என்பதை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு மாரிமுத்து அவர்கள், விவசாயிகள் கடன்கள் ரத்து செய்யப்பட வேண்டும். விளைச்சல் கிடையாது என்று அவர்கள் போராடுகிறார்கள். அதைப் பற்றி அரசு கருத்தில் கொண்டு கருத்தைச் சொல்லவில்லை என்று சொன்னார்கள்.

திரு. அழகர்சாமி அவர்களும் கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும்போது இப்படிப் பட்ட காரணங்கள், சட்டங்கள் எல்லாம் கொண்டு வரப்படுகின்றன. காரண காரியத்தில் 1974-75, 1977-78-ஆம் ஆண்டுகளில் எல்லாம் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு வசூல் ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால், இப்போது வசூல் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. விவசாயம் செய்வது என்றால் ஆரம்பத்திலேயே முதல் போட வேண்டியிருக்கிறது' என்று குறிப்பிட்டார்கள்.

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படும் மொத்தக் கடனுக்கு ஒருபகுதியை இந்திய ரிசர்வ் வங்கி மறுநிதியிலிருந்தும் பொதுமக்களிடத்தில் இருந்து வசூலிக்கப்படும் வைப்புத் தொகைகளிலிருந்தும் ஈடுகட்ட வேண்டும். கூட்டுறவு வங்கிகள் ரிசர்வ் வங்கியிலிருந்து பெறக்கூடிய மூலதனத்தை விட்டுக் கொடுக்க முடியாது. கடன்களை ரத்து செய்வது என்பதை இந்த அரசு ஏற்றுக் கொள்ள முடியாது. கடன் சுமையினால் விவசாயிகள் பல இன்னல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி அரசு நியமித்திருக்கக்கூடிய உயர் அதிகாரக் குழு ஆராய்ந்து வருகிறது. இக்குழு அறிக்கை கொடுத்த பிறகுதான் அரசு இறுதியான ஒரு முடிவை எடுக்க வேண்டியிருக்கிறது. அதுவரை கடுமையான நடவடிக்கை மூலம் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்களை வசூலிப்பதை அரசு தடை செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.




## இந்திய அரசிடம் வற்புறுத்தியிருக்கிறோம்

அதேபோல் திரு அழகர்சாமி அவர்கள் 'நீங்கள் கொடுக்கிற வாக்குறுதிகள் எத்தனையோ நிறைவேற்றப்படுவதில்லை. சிறு விவசாயிகளிடம் ஜப்தி பண்ணமாட்டோம் என்று சொன்னீர்கள். தொடர்ந்து ஜப்தி நடக்கிறது. நில அடமான பாங்கியில் கடன் வாங்கிய காரணத்தால் அவ்வளவு க்ளோஸ். 1973-ஆம் ஆண்டில் வாங்கிய கடன் 5,000 ரூபாய்க்கு வட்டி. ரூ. 1507.71 என்றும், தண்ட வட்டி 2048 ரூபாய் என்றும் இப்படி வசூல் செய்திருக்கிறார்கள்' என்றும் குறிப்பிட்டார்கள்.

நான் முதலில் பேசும்போதே குறிப்பிட்டிருக்கிறேன். இதைப் பற்றி நான் அங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த நிலமைகளை இந்தியப் பேரரசு நிச்சயமாகக் கவனித்தே ஆகவேண்டுமென்பதை எந்த அளவுக்கு வற்புறுத்த முடியுமோ அந்த அளவுக்கு நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன். தமிழக அரசு விவசாயிகளுடைய கஷ்டங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு—எப்படியாவது நடந்தது நடக்கட்டும். நாம் நம்முடைய காரியத்தை நடத்திக் கொண்டு போகலாம் என்பது போல் இந்த அரசு இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கேயாவது, எந்த அதிகாரியாவது நாங்கள் இங்கே குறிப்பிடுகிற கருத்துக்கு, மாறாக, வாக்குறுதிக்கு மாறாகச் செயல்பட்டால் எங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று மட்டுமல்ல, தெரிவிக்க வேண்டியவர்கள் தெரிவிக்கத் தவறி விட்டார்களேயானால், மாமன்ற உறுப்பினர்கள் எடுத்துக் காட்டினால் தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதை அரசு சார்பில் உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

**திரு க. சுப்பு:** துணைத் தலைவர் அவர்களே கர்நாடக மாநிலத்தைப் பொறுத்த வரை விவசாயிகளுக்கு இருக்கும் கடன்கள் முழுவதையும் ரத்து செய்திருக்கிறது.

மராட்டிய மாநிலத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் 130 கோடி ரூபாய் முழுவதையும் ரத்து செய்திருக்கிறார்கள். நாம் மட்டும் விவசாயிகளுடைய கடன்களை ரத்து செய்ய முடியாமல் என்ன இடையூறு இருக்கிறது என்பதை அரசாங்கம் அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநில அரசு நிச்சயமாக அப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்து இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் கொஞ்சம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். மராட்டிய மாநில அரசு அதிகாரிகளையும் சந்திக்க ஏற்பாடு செய்து தெரிந்து கொண்டது, இன்னும் அமல்படுத்தவில்லை என்றும் அவர்கள் எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார்கள் என்றும், செயல்படுத்த முனைகிறார்கள் என்பதுதான் நிலைமை என்று குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசிலிருந்து அவர்களும் இதற்கான பணத்தைப் பெறவேண்டுமென்ற விருப்பத்தில் இருக்கிறார்கள். அதிலே அங்கே நிறையப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. பிரச்சினைகள் எழுந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். ஒவ்வொரு மாநில அரசும் அப்படிச் செய்கிறது என்றால், அப்படிச் செய்வதை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிற நிலைமை இருக்குமானால், தமிழக அரசு மட்டும் வாளா இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஒரு நடவடிக்கையை எடுக்க இந்தியப் பேரரசு ஒத்துக் கொள்கிற நிலைமை இருக்குமானால் நிச்சயமாகத் தமிழகம் அப்படிப்பட்ட ஒரு நிலைமையை ஏற்படுத்தத் தயங்காது என்பதை இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முத்துசாமி அவர்கள் பேசும் பொழுது, 'சென்ற கூட்டத் தொடரின்போது சீக்கனாங்குப்பம் என்ற கிராமத்திலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அரசாங்கம் நிர்ணயித்தபடி கூலி கொடுக்கப்படவில்லை. அதற்காக அவர்கள் போராட்டத்தை நடத்தியும்கூட அந்த மிராசுதார்கள் வேலை கொடுக்காததன் காரணமாக அவர்கள் அப்போது சட்டமன்றம் நடந்து கொண்டிருந்தபோது, நடந்தே இங்கே வந்து திரு ஏ. ஆர். மாரிமுத்து அவர்களுடைய தலைமையில் என்னைச் சந்தித்ததாகவும் சந்தித்துத் தங்கள் குறைகளைச் சொன்னதாகவும் சொன்னார்கள். ஆனால், வேலை கொடுக்கப்படவில்லை. நிர்ணயிக்கப்பட்ட கூலி கொடுக்கப்படவில்லை, சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன, வழக்குகள் போடப்படுகின்றன என்று சொன்னதாகவும், அப்போது நான் உறுதிமொழியைச் சொல்லி ஒரு வாரத்திற்குள் அவர்களுடைய குறைகளைப் போக்குவதாகச் சொன்னேன் என்றும், ஆனால், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இன்னும் 36 பேர்கள் கோர்ட்டிற்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். அந்தவழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை. மிரசுதாரர்கள் அவர்களுக்கு இன்னும் வேலை

கொடுக்கவில்லை. அவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கூலி வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்து இருக்கிறார்கள்.

**நிர்ணயிக்கப்பட்ட கூலி வழங்காவிட்டால் நடவடிக்கை**

வருவாய் வாரியம் மூலமாகச் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளரைக் கலந்தாலோசித்தபோது விவசாயத் தொழிலாளர்கள் முறையாக நிர்ணயிக்கப்பட்ட கூலி வழங்கப்படுகிறார்கள் என்ற தகவலைத் தெரிவித்து இருக்கிறார்கள். குறைந்த அளவு ஊதியம் வழங்கப்படுகிறது என்ற புகார் வருமானால், அதன் மீது தனி நடவடிக்கை இப்போது தேவையில்லையென்றிருந்தாலும் அப்படிப்பட்ட நடவடிக்கை தேவை என்ற கட்டாயம் உருவாக்கப்படுமானால் இந்த மாமன்றத்தின் எண்ணத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளுகின்ற இந்தத் தமிழக அரசு நிச்சயமாக அதை ஏற்றுக் கொள்ளும்.

அவர்களுக்குக் கூலி குறைத்துக் கொடுப்பதை, சட்டபூர்வமாகத் தடுக்க-அவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஆட்களை வைத்து அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றுவார்களானால்-அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு துரை முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 36 வழக்குகள் அவர்கள் மீது போடப்பட்டிருக்கிறது. அவைகளை வாபஸ் வாங்க வேண்டுமென்றும், திருட்டுப் போன சொத்துக்களைத் திருப்பி வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டும் இருக்கிறார்கள். ஆனால், ஒரு ஆண்டு ஆகிவிட்டது. இன்னும் வழக்குகள் திரும்பப் பெறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** நான் வெளியிட்ட கருத்துக்களை அவர்கள் ஒரு முறை அந்தப் புத்தகத்தை வாங்கிப் படித்து எந்த உறுதிமொழியை நான் கொடுத்தேன் என்பதை அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உடைமைகள் கிடைத்துவிட்டால் அவைகளை அதிகாரிகள் வைத்துக் கொண்டிருக்க முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்.

அவர்கள் வைத்திருந்து திருப்பித் தராமல் இருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக அதைக் கொடுக்கும்படிச் செய்ய வேண்டிய நிலைமையை, பொருட்கள் கிடைத்து விட்டனவா என்று பார்த்து அதற்கேற்ப அந்தப் பணியை அவர்கள் செய்யுமாறு தூண்டிவிடுவதன் மூலமாக வேகமாக, விரைவாக அவர்கள் அந்தப் பணியைச் செய்ய முன்வருவார்கள் என்ற நிலையில் அந்த வகையில்தான் உறுதிமொழி தந்திருக்கப்படுமே தவிர, வேறு வழியில் தந்திருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வழக்குகள் திரும்பப் பெறப்படுவது என்பது பரிசீலனையில் இருக்கிறது என்றும் வழக்குகளைச் சட்டப்பூர்வமாகத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் அதைப் போன்று பல வழக்குகள் திரும்பப் பெற வேண்டியிருக்கிறது என்று ஒவ்வொன்றையும் பார்த்துத் திரும்பப் பெறுகின்ற முறையிலே சிந்திக்கப்படுகிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அரசு நடைமுறையில் சில உத்தரவுகள் எவ்வளவு தாமதமாக நிறைவேற்றப்படுகின்றன என்பதை அனுபவபூர்வமாகத் தெரிந்தவர்கள் இங்கே நிறைய இருக்கிறார்கள். ஆகையால் துரிதமாக விரைவாகக் காரியங்களைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதை அவர்களுக்கு நினைவுப்படுத்தி, நான் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க அவர்களுக்கு உத்தரவிடவும் அதற்குரிய நடவடிக்கை எடுக்காதவர்கள், அலட்சியப்படுத்தியவர்கள் மீது வேறான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பணியாளர்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை பற்றி மாண்புமிகு உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்கள் சில ஐயப்பாடுகளை வெளியிட்டுக் குறிப்பிடும்பொழுது, அரசிதழ் பதிவு இல்லாத சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கும்பொழுது இன்னொரு போட்டிச் சங்கத்திற்கு அனுமதி அளித்து இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படுவதற்கு அரசு ஏன் ஒப்புதல் தந்தது என்கின்ற வகையில் கேட்டு, 75 ஆண்டுகளாக ஒரு சங்கம் அனுமதிக்கப்பட்டிருக்கும்போது இன்னொரு சங்கத்தை அனுமதித்து இருப்பது நியாயமானதா, எனவே, அரசாங்க ஊழியர்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

எனக்குக் கிடைத்த குறிப்புகளை வைத்து நான் ஒரு சிலவற்றைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். 75 ஆண்டுகளாக அரசு அங்கீகாரம் பெற்ற அரசு ஊழியர்



சங்கம் எதுவும் இல்லை என்று எனக்குக் குறிப்புத் தந்திருக்கிறார்கள் அதிகாரிகள். தமிழ்நாடு அரசு அலுவலர் கழகம் (சி மற்றும் டி பிரிவு) என்னும் சங்கம் தனது 28-3-1978 ஆம் ஆண்டு நாளிட்ட கடிதத்தில் அரசின் அங்கீகாரத்தைக் கோரியிருந்தது. அச்சங்கத்தின் கோரிக்கை முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் காரணங்களுக்காக அங்கீகாரம் மறுக்கப்பட்டது.

## ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் பற்றி

அரசுப் பணிகளில் அரசிதழ் பதிவு பெறாத அலுவலர், அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர் என்ற பாகுபாடு நீக்கப்பட்டு ஊதிய விகிதப்படி ஏ, பி, சி, டி எனப் பிரிக்கப்பட்ட பணியாளர்களுக்கான பணி விதிகள் மாற்றம் செய்யப்படவில்லை. இரண்டாம் முறையாக அச்சங்கம் தனது 15-7-78ஆம் நாளிட்ட கடிதத்தில் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த பணியாளர்கள் உறுப்பினராக உள்ளதாகவும், 40,267 உறுப்பினர்கள் இருப்பதாகவும் கூறி அங்கீகாரம் கோரியது. அரசு மீண்டும்அச்சங்கத்தின்கோரிக்கையைப்பரிசீலித்து 3-2-79ஆம் நாளிட்ட அரசாணை பல்வகை எண். 99(பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம்)ன் படி அச்சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்கியது. ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன் என்ற கொள்கைப் பணி விதிகள் முழுவின் (சர்வீசஸ் ரூல்ஸ் கமிஷன்) ஆய்வில் உள்ளது. இன்னும் இறுதியான முடிவு கிடைக்கப் பெறவில்லை.

ஒன்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற நிலைமை நாட்டிலே உருவாக்கப்படும் என்றால் அதைப் பற்றி நிச்சயமாக இந்த அரசு வரவேற்கும், ஒத்துழைக்கும் என்பதையும் இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாட்டில் சங்கங்கள் புதிது புதிதாகத் தோன்றினால் தான், அதன் விளைவாகப் பிரச்சனைகள் புதிதாகத் தோன்றினால்தான் விளைவுகள் நன்றாக இருக்கும் என்றால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் தேவை என்பதையும், இப்பொழுது புதிய சங்கங்கள் தோன்றுவதையோ தடுக்க சட்டம் இல்லை. புதிதாகச் சங்கங்கள் வருவதை விரும்புவதும் இல்லை என்றும் எல்லா உறுப்பினர்களும் கூறியிருக்கிறார்கள். அவர்கள் தந்த விவரத்தை எடுத்துக் கொண்டு அரசு இந்த முடிவுக்கு வந்தது என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் பற்றிப் பேசும்போது மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் கூட்டுறவுத் துறை பற்றியும், விவசாயிகள் போராட்டத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார். ஏற்கெனவே நான் அதைப் பற்றிச் சொல்லியிருக்கிற காரணத்தினால் மீண்டும் அதை நான் சொல்ல வேண்டியது இல்லை என்று நம்புகிறேன்.

மாண்புமிகு எம். ஏ. லத்தீப் அவர்கள் கடையநல்லூரில் காதர் மொகிதீன் மசூதி அருகே, போலீஸ்காரர்கள் மசூதிக்கு

உள்ளே சென்று தொழுகை நடத்திக் கொண்டிருந்தவர்களைத் தாக்கினார்கள் என்று சொன்னார்கள். அதை முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று சொல்கிறார்கள். நான் சொன்னதை அவர்கள் எப்படிப் புரிந்து கொண்டார்கள் என்று தெரியவில்லை. பாதுகாக்கப்பட வேண்டியவர்கள், பாதுகாப்புப் பெற வேண்டியவர்கள் இருக்கின்ற இடத்திற்குக் காவல் துறையினர் போக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் கட்டாயம் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்-அதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**கலவரம்-கைது என்பதற்கான காரணங்கள்**

திருநெல்வேலி கடையநல்லூரில் காதர் மொகிதீன் மசூதிக்குள்ளே இரண்டு முஸ்லீம்கள்-பிரிவுகள் ஒன்று, மங்கள் சுந்தர் முஸ்லீம்கள், இரண்டாவது பேட்டை முஸ்லீம்கள்-இரண்டு பிரிவினர் இருக்கின்றனர். இறந்து போன ஒரு முஸ்லீமை ஒரு பிரிவினர் மசூதிக்குள் புதைக்க எண்ணினர்-தமிழ்நாடு 'வஃக் போர்டின்' வழக்கங்களின்படி அதன் காரணமாக வேறு பிரிவினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இருப்பினும் மங்கள் சுந்தர் முஸ்லீம்கள் சவ அடக்கத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்-ஆத்திரம் அடைந்த பேட்டை முஸ்லீம்கள் தாக்குதல் நடத்தினர். இரு பிரிவினருக்கும் இடையில் கலவரம் வராமல் தடுப்பதற்காகப் போலீஸ் படையினர் உள்ளே சென்றனர்-ஆத்திரம் அடைந்த முஸ்லீம்கள் அவர்கள் மீது கற்களை வீசினர்-இதனால் கலவரம் ஏற்பட்டு-காவல் துறையினர் 64 பேரைக் கைது செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

கடையநல்லூர் காவல் துறையினர் முறையாக வழக்குகளை எந்த வகைகளில் பதிவு செய்யலாமோ அப்படித்தான் செய்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதைத் தவிர காவல் துறையினர் மசூதிக்குள் நுழைந்து தாக்கினர் என்பது உண்மையில்லை என்பதையும் நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுமென்றே இப்படிச் செய்யவில்லை என்றும் கூறும்போது, முஸ்லீம் மக்கள் மீது இந்த அரசு மைனாரிட்டி என்ற வகையில் அலட்சியம் காட்டுகிறது என்பதையும், நாங்கள் அவர்களுக்கு ஏதோ பாதகத்தை விளைவிக்க விருப்பப்படுவது போலவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் அதைச் சொல்லும்போது, இந்தச் சட்டமன்றத்தின் தொடக்கத்திலேயே 77-ஆம் ஆண்டுக் கூட்டத்தில் அவர் பேசியபோதும், முஸ்லீம்களின் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டார்-நான் அப்போதே கூறியது, எங்கள் கட்சியிலும் மற்றும் பிற கட்சிகளிலும் முஸ்லீம் நண்பர்கள் வந்து இருக்கிறார்கள். அப்படி முஸ்லீம்களின் பிரதிநிதி அவர் மட்டும் என்று சொல்வது சரியல்ல. நான் ஒருவன்தான் முஸ்லீம்களின் பிரதிநிதி என்று சொல்ல வேண்டாம்-என்றுதான் சொன்னேனே தவிர அவர் முஸ்லீம் அல்ல என்றோ, முஸ்லீம்களின் பிரதிநிதி அல்ல என்றோ கூறவில்லை என்பதை அவருக்குக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

நாங்கள் அலட்சியப்படுத்தவில்லை என்பதற்காகவும், ஒரு பணியிலே யார் யாரையும் ஜாதியைப் பாராமல், மதத்தைப் பாராமல், காவல் துறையில்கூட அவர்கள் செயல்பட வேண்டும் என்பதற்காக, பொறுப்பு வகிக்க வேண்டும் என்ற அடிப்படையில் நியமித்து இருக்கிறோம் என்பதை நான் இங்கே ஒரு உதாரணத்தின் மூலம் கூற விரும்புகிறேன்.

**ஜாதி மத அடிப்படையில் பணிகள் தரப்படுவதில்லை!**

கோவை மாவட்டத்தில் மொய்னுதீன் மாவட்ட ஆட்சித் தலைவர், பகீர் முகமது மாவட்ட நீதிபதி, முகமது அலி காவல் துறைக் கண்காணிப்பாளர், அப்துல்லா துணைக் கண்காணிப்பாளர், கோவை நகரம். மகபூப் ஜான் ரகசியப் பிரிவு மற்றும் புலனாய்வுத்துறை, கோவை—இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒரே மாவட்டத்தில் எந்தெந்தத் துறைகளில் பதவி வகிக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு என்று தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் முஸ்லீம்கள் என்றோ,




கிருஸ்டியன் என்றோ, வேறு வகுப்பினர் என்றோ, ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று கருதியோ, மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதியோ யாரையும் எந்தப் பணிகளுக்கும் தேர்ந்தெடுப்பது இல்லை, வேறுபடுத்தியது இல்லை என்பதையும் நாங்கள் அதிகாரபூர்வமான சீனியாரிட்டி தகுதிப்படி எத்தனை வருடங்கள் எங்கே இருந்தார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு எந்தெந்த இடங்களில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்கிற நிலைமை இருக்கிறதோ அந்த இடங்களுக்கு மாற்றப்படுகிறார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிடுவது அவர் என்னுடைய கருத்துக்களை நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள் என்கிற எண்ணத்தில்தான் ஏற்பார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எதற்கு எடுத்தாலும் இந்த அரசு வந்த பிறகு வகுப்புக் கலவரங்கள், ஜாதிக் கலவரங்கள் அதிகமாகிவிட்டது என்று குறைகூறுவதில் அவர்கள் வேண்டுமென்றே குறை கூறுகிறார்கள் என்று குறிப்

பிடவில்லையென்றாலும், எப்படியோ விளம்பரத்தின் மூல மாகவே அல்லது அவர்களுக்குச் செய்தி அதிகமாக விளம் பரப்படுத்தப்பட்டு தரப்படுகிற காரணத்தாலே இங்கே கூறு கிறார்கள் என்ற வகையில் நான் சில உதாரணங்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

1947-ம் ஆண்டு வகுப்புக் கலவரங்கள். 23—10—47 அன்று மதுரை மாவட்டம் தேவதானம்பட்டியில் இந்துக் களும் அரிசனங்களும் திருவிழா ஒன்றை நடத்தும் வகையில் பஜனை பாடிக்கொண்டு வரும்போது, வழியில் முஸ்லீம்கள் 50 பேர் இந்துக்களைத் தாக்கி காயப்படுத்தி இருக்கிறார்கள். பின்னர் 400 இந்துக்களும், 100 முஸ்லீம்களும் ஆயுதங்கள், கம்புகள் எடுத்துக் கொண்டு வீடுகளுக்குத் தீ வைத்து விட்ட னர். இதனால் துப்பாக்கிச்சூடு நேர்ந்தது. இது ஏதோ இந்து முஸ்லீம் கலவரம், ஏதோ மத நம்பிக்கையால் ஏற் பட்ட கலவரம் என்று சொல்லிவிடலாம். ஆனால், 5-8-47 அன்றுநெல்லைமாவட்டம்மேலைப்பாளையத்தில்தேசியமுஸ் லீம் லீக்கைச் சார்ந்தவர்களுக்கும், முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த வர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. முஸ்லீம்கள் 4,000 பேர் கூடி கலவரம் செய்ததால் ஒரு எஸ். ஐ. யும், 3 காவலர்களும் காயமுற்றனர். எஸ். ஐ. கீழே விழுந்துவிட்டார். காவல் துறை, கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தால் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். 3 பேர் இறந்தார்கள். ஒரு எஸ். ஐ. 3 காவலர்கள் உட்பட 11 பேர் காயமுற்றனர் என்ற செய்தியை நாம் கவனிக்க வேண்டும்.

அதேபோல் நெல்லை மாவட்டம் பாபநாசம் ஹார்வி தொழிலாளி ஒருவர் (இதயத்துல்லா) இறந்தார். அவர் இறந்தது குறித்து விசாரணை செய்ய வேண்டும் என்று காவ லர்கள் கோரிய காரணத்தால், 5,000 பேர் கூடி கற்கள் வீசினர். ஒரு இன்ஸ்பெக்டரும், 13 காவலர்களும் காயமுற்ற னர். நிலையைக் கட்டுப்படுத்த காவல் துறையினர் துப் பாக்கிப் பிரயோகம் செய்தனர். 4 பேர் இறந்தார்கள். 36 பேர் காயமுற்றனர். இதையெல்லாம் நான் குறிப்பிடுகிற போது....

**திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** முதலமைச்சர் அவர்கள் புள்ளி விவரங்கள் கொடுப்பதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. பழைய சம்பவங்களை மீண்டும் நினைவுப்படுத்தி இப்போதுள்ள அமைதியான சூழ்நிலையைக் கெடுத்துவிடக் கூடாது. இனிமேல் இது போன்ற நிகழ்ச்சிகள், வகுப்புக் கலவரங்கள் கட்டுப்படுத்தப்படும் என்று உறுதிமொழி தந்து அண்ணா வழியைப் பின்பற்றி இந்த நாட்டில் வாழும் எல்லா சமுதாயத்திற்கும் சமநீதி வழங்கப்படும் என்று உத்தரவாதம் கொடுத்தால் போதும். பழைய நிகழ்ச்சிகளை நினைவுகூர்வ தால் இப்போதுள்ள அமைதி கெட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

**மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலை வர் அவர்களே. புதிய எந்த ஆர்ப்பாட்டத்தையும் உருவாக்கு வதற்கு அதை நான் சொல்லவில்லை. இங்கே வெளியிட்ட கருத்துக்கள் எந்தெந்த உணர்வுகளை-மக்களுக்கு ஏற்படுத்

தும் சூழ்நிலை ஏற்படுத்தும் அளவிற்கு உருவாக்கப்பட்டது என்கிற காரணத்தால் அவர்களுக்குப் பழைய நினைவுகளை ஏற்படுத்தி, இப்படியும் நடந்தது அந்தக் காலத்தில், அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லை. நான் அரசியலில் இருந்தேனா என்பதுகூட மக்களுக்குத் தெரியாத நிலையில், அதாவது அரசியலில் நான் விலாசம் இல்லாதவனவாக, முகவரி இல்லாதவனாக இருந்தேன். அப்போதே இது நடந்து இருக்கிறது என்பதற்காக இதைச் சொன்னேன். ஆகவே, இந்த அரசு வந்த பிறகுதான் இவைகள் நடக்கின்றன என்று கூறுவதை நான் இதைப் போன்ற நிகழ்ச்சிகளைப் பல்வேறு உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

அதிலும் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் மிக வேகமாக என்னென்ன பேசினார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் நினைவுகூர்ந்து கொண்டால் நல்லது என்பதற்காகத் தான் இதை நான் இங்கே குறிப்பிடுகிறேனே தவிர வேறல்ல.

அவர்கள்தான், நான் இவைகளை இங்கே குறிப்பிட வேண்டிய கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

லத்தீப் அவர்கள் இங்கே பேசும்போது, வேண்டுமென்றே ஒரு பிரச்சனையைச் சொல்லி, அது மக்கள் மத்தியில் வந்து, அதனால் வேறு விளைவுகள் வந்தால் நிலைமை எப்படி எல்லாம் இருக்கும்; இதனால் அதன் உண்மை என்ன என்பதைக் கண்டுபிடித்த பின்னால் அந்தப் பிரச்சனைபற்றி வெளியே கூறினால் என்ன என்று லத்தீப் அவர்கள் சொன்னார்கள். மற்றவர்கள் சொல்லிவிட்ட பிறகு, இந்த ஆட்சி வந்த பிறகு, வகுப்புக் கலவரம் என்றாலும் சரி, ஜாதிக் கலவரம் என்றாலும் சரி, மதக் கலவரம் என்றாலும் சரி, அல்லது வேறு எந்தக் கலவரமானாலும் சரி, இப்படியெல்லாம் நடக்கிறது என்று சொல்லும்போது நான் அவை எந்த நேரத்தில் எந்தக் கட்டத்தில் நடந்தது என்பதையும் அதன் விளைவுகளையும் எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

**தொடரும் சம்பவங்கள்:**

இப்படிப்பட்ட சம்பவங்கள் எல்லாம் 1948-லிருந்தே அதற்கு முன்னாலிருந்தேகூட நடைபெற்றிருக்கின்றன. நான் இங்கே குறிப்பிடுகின்ற சம்பவங்கள் எந்த ஆண்டிலிருந்து தொடருகிறது. எப்படி நடந்தது, எப்படி பாதிக்கப்பட்டது என்பதை எடுத்துக் காட்டி, அது என்னுடைய வாதத்திற்கு ஆதாரமாக அமையும் என்பதால் வெளியிடுகிறேனே தவிர, வேண்டுமென்றே இது மக்களுக்குத் தெரிந்து புதிய குழப்பம், அல்லது கலவரம் வரவேண்டுமென்ற எண்ணத்தில் வெளியிடவில்லை.

அந்த எண்ணம் இந்த அரசுக்கு நிச்சயமாக இல்லை.

அப்படி ஏதாவது கலவரம் வந்தாலும் அதைத் தடுக்க

நாங்கள்தான் இருக்கிறோம், அதைத் தீர்ப்பதற்கு நாங்கள் தான் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை மறந்துவிடவில்லை.

அதோடு மகாத்மா காந்தியடிகள் சுடப்பட்ட நேரத்தில் *31—1—1948*-ல் கோவை மாவட்டத்தில் ஈரோட்டில் இந்துக்கள் முஸ்லீம் மக்களைத் தாக்கினார்கள், மசூதிகளை எல்லாம் சேதப்படுத்தினார்கள் என்ற குறிப்பு என்னிடம் இருக்கிறது. அதற்குக் காரணம், நான் முன்பே சொன்னதைப் போல காந்தியடிகளைக் கொன்றவன் ஒரு முஸ்லீம் என்ற எண்ணத்தின் காரணமாகத்தான் அப்படிச் செய்தார்கள். இதைத்தான் நான் மேலவையில் குறிப்பிட்டேன். யார் யாரைத் தாக்கினார்கள், யார், யாரைக் கொன்றார்கள் என்பதைப் பற்றி முடிவு தெரிவதற்கு முன்னால் நாமாகவே ஒரு முடிவுக்கு வருவதாக இருந்தால், அது உண்மைக்குப் புறம்பானதாக இருந்தால்கூட அதன் விளைவுகள் எப்படி இருக்கும் என்பதைச் சொன்னேன். அப்போது அங்கே இருந்தவர்கள் அது உண்மை என்பதை ஏற்றுக் கொண்டார்கள் என்று நம்புகிறேன். அதைப் போல இந்த மாமன்றத்தில் உள்ளவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**அமைதி கெட அடிப்படைக் காரணம்:**

ஏதோ ஆபத்தோ அல்லது தாக்குதலோ ஏற்படும்போது முன்னதாகவே இந்தக் கட்சியைச் சேர்ந்தவர் அல்லது இந்த மதத்தைச் சேர்ந்தவர் அல்லது இந்தச் சாதியைச் சேர்ந்தவர், அதனால்தான் இப்படிச் செய்தார். இதற்கு இதுதான் காரணம் என்று செய்தி வெளியிட விரும்பினால் நாட்டிலே அமைதி நிச்சயமாகக் கெட்டுவிடும்.

உண்மையிலேயே அவர் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்காரர் என்று இருக்குமானால், தீர்ப்பு வந்த பிறகு, அவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்க வேண்டுமோ அது நீதிபதி அவர்களால் தெரிவிக்கப்பட்டால் அதை நிறைவேற்ற இந்த அரசு நிச்சயமாகத் தயங்காது; தீர்ப்பின்படி தண்டனையை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அடிப்படையிலேதான் நான் சொன்ன காரணத்தைக் கூறினேன், தாக்கப்படுகின்றவர் தாக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்; தாக்குகின்றவர் தாக்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நான் குறிப்பிடுகின்ற சம்பவங்களை ஆதாரமாக வைத்து, பயன்படுத்தவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவையிலே குறிப்பிட்ட ஒன்றை இங்கே குறிப்பிட்டார்கள். ஒருவர் கொல்லப்பட்டாலோ அல்லது கொல்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலோ அதன் உண்மையான விவரங்கள் தெரிவதற்கு முன்னாலே திடீரென்று ஒரு கட்சிக்காரரின் பெயரைச் சொல்லக்கூடாது என்று மேலவையில் சொன்னதாகவும், மேலவை உறுப்பினர்கள் அதை ஏற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்கள்.

மிகவும் மகிழ்ச்சி. ஆனால், அவர்கள் அப்படி ஒரு கருத்தைக் கூறுகின்ற அதே நேரத்தில், சென்னையிலே யாரோ கொல்லப்பட்ட சம்பவத்திற்கு அவர்களுடைய-முதலமைச்சரவர்களுடைய கட்சியைச் சேர்ந்த புதிய அமைப்புச் செயலாளர் அந்தக் கொலைக்குக் காரணமானவர்கள் கருணாநிதிக் கட்சிக்காரர்கள்தான் என்று நேற்றும் இன்றும் பத்திரிகையில் செய்தி வெளியிட்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதை, அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். யார் அப்படிச் சொன்னாலும் அவர், எங்கள் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, அமைச்சர்களானாலும் சரி, நானாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் அது கண்டிக்கப்பட வேண்டும். இந்த அரசு கண்டிக்கும் என்பதை அவர்களோடு சேர்ந்து நானும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த முறை மாற்றப்பட்டுத்தான் தீரவேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் நான் அந்தப் பத்திரிகையைப் படிக்கவில்லை. நிச்சயமாக அவரிடம் கேள்வி கேட்டு, உரிய நடவடிக்கை எடுக்கிறேன். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களை உண்மை தெரிவதற்கு முன்னால் யாரும் சொல்லக்கூடாது என்ற கருத்தை எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வலியுறுத்தியிருக்கிறேன்; அதன்படி நடந்து கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**உறுப்பினர்கள் பொறுப்பு :**

உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்களின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. யாரும் அதிலே அலட்சியப்படுத்திவிட்டார்கள் என்றோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதற்கோ அடிப்படை ஆதாரம் இருக்க முடியாது. அப்படி உண்மையிலேயே குறிப்பிடப்பட்ட உதவிகள் மறுக்கப்பட்டிருந்தால், தேவையானவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருந்தால் அதை எடுத்துக்காட்டுவது உறுப்பினர்களின் பொறுப்பு என்பது மட்டுமல்ல, அதை நிறைவேற்ற வேண்டியது எங்கள் கடமையாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



30 கிராமங்கள் பாதிக்கப்பட்டன. 1,190 குடிசைகள் முழுமையாகவும், 5,964 குடிசைகள் பகுதியாகவும் சேதமடைந்தது. சேதமுற்ற குடிசைகளுக்கான கருணை மானியம் ரூ. 100 அல்லது ரூ. 50 ஆக ரூ. 3,58,680 வழங்கப்பட்டுள்ளது. முதலில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஒரு வாரத்திற்கு, ஒரு குடும்பத்திற்கு 5 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டது. மேலும், மீனவர்கள் வீடு இழந்து படகுகள் சேதமடைந்ததால் மீன் பிடிக்கச் சில காலம் செல்ல இயலாததால் 135 கடலோரப் பகுதிகளில் வாழும் 5,439 மீனவர்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் கூடுதலாக 15 கிலோ அரிசி வழங்கப்பட்டது. ரூ. 1,87,968 மதிப்புள்ள 5,874 வேட்டியும் புடவையும் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளின் விவரங்களாவன: 1. கட்டுமரங்கள்

முழுமையாகப் பாதிக்கப்பட்டவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 2,000. பகுதிச் சேதமடைந்த ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000.

2. நாட்டுப் படகுகள்/வள்ளம்,

முழுமையாகப் பாதிக்கப்பட்டவை ஒவ்வொன்றுக்கும் ரூ. 4,000. பகுதிச் சேதம் அடைந்த ஒவ்வொன்றுக்கும் ரூ. 2,000.

3. நைலான் வலைகள்
முழுச் சேதம் ரூ. 3,000

நிவாரணம் 50 சதவிகிதம் மானியமாகவும், 50 சதவிகிதம் கடனாகவும் அளிக்கப்படுகிறது. நிவாரணம் அளிப்பதற்கு மீன் துறை இயக்குநருக்கு அரசு ரூ. 50 இலட்சம் அளித்துள்ளது.

**நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டோம்!**

இப்படி எந்தெந்த வகைகளில் நாங்கள் எங்களால் கடமைகளை உத்தரவின் மூலமாகச் செயல்படுத்த உத்தரவிட்டும், அவைகள் ஒழுங்காக, முறையாகப் போய்ச் சேரவில்லை என்று நிரூபித்தால் எந்த அதிகாரிகள் அந்தத் தவறைச் செய்தார்களோ அவர்கள்மீது நாங்கள் நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம் என்று ஒவ்வொன்றிலும் குறிப்பிடுவது போல் ஒட்டு மொத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். வேதாரணை என்னுமிடத்தில் ஆறுமுகம் என்னும் மீனவர் படகைக் காப்பாற்றும் முயற்சியில் உயிரிழந்தார் என்றும், அவர் இறந்ததைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த அறிக்கை தவறானதென்றும், அந்தப் பகுதி மக்கள் வன்மையாக மறுக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஜகுபர், மாவட்ட

ஆட்சித் தலைவர் விடுத்த அறிக்கை உண்மைக்குப் புறம்பானது என்று சொல்வதாகக் கூறுகிறார்கள்.

திரு. சாதிக்பாட்சா அவர்கள் இதே பொருள் பற்றி 5—12—78 நாளிட்ட முரசொலி பத்திரிகையிலும் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். திரு. ஆறுமுகம் என்ற மீனவரின் இழப்பு பற்றி மண்டபத்தைச் சேர்ந்த கிராமத் தலைமை அலுவலர் (ஹெட்மேன்) கொடுத்த அறிக்கை கீழ் வருமாறு:

''மண்டபம் குரூப் வலையர்வாடி கிராமத்தைச் சேர்ந்த பெரிய கருப்பன் மகன் ஆறுமுகம் என்பவர் மண்டபம் கிராமத்தைச் சேர்ந்த எகியா என்பவருடைய விசைப்படகில் தினக்கூலியாக வேலை செய்து வந்தார். இவருக்கு தினக்கூலி ரூ. 7 கிடைக்கும். 24—11—78 தேதி மாலை புயல் காற்று அடித்துக் கொண்டிருக்கும்போது, தான் வேலை பார்த்து வரும் விசைப்படகைக் கண்காணிக்கும் பொருட்டு மற்றொரு விசைப்படகு இந்த விசைப்படகுடன் மோத வரும்பொழுது, அதைத் தடுத்து நிறுத்த எத்தனிக்கும்பொழுது, தன்னுடைய நெஞ்சில் அடிபட்டு அந்தக் காயத்துடன் சிகிச்சை எதுவும் பெறாமல் மண்டபம் தென்கடற்கரையிலிருந்து சுமார் இரண்டு மைல் நடந்து தான் குடியிருக்கும் வலையர்வாடி கிராமத்திற்குச் சென்று கிராம முறைப்படி வைத்தியம் செய்து பலனில்லாமல் 24-11-78-ஆம் தேதி இரவு சுமார் 10 மணி அளவில் இறந்துவிட்டார். இறந்து போன ஆறுமுகத்திற்கு வயது சுமார் 26 இருக்கும். இவருக்கு நிலமோ, வீடோ சொந்தத்தில் மண்டபம் குரூப் கிராமத்தில் கிடையாது. இவர் வசதியற்றவர். இவருக்குத் தினக்கூலியில் கிடைக்கும் சம்பளம் தவிர வேறு வருமானம் கிடையாது.

**முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி :**

''இவர் வசதியற்றபடியாலும், வசதியற்ற குடும்பத்தை விட்டு விட்டு இறந்துபோனபடியாலும் ஆறுமுகம் குடும்பத்திற்கு, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்கலாம்'' என்று சிபாரிசு செய்யப்பட்டது. அந்த அடிப்படையில் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஆயிரம் நிவாரணத் தொகையாகக் கொடுக்கலாம் என்ற அரசு ஆணைக்கு ஏற்ப, இயற்கை எய்திய திரு. ஆறுமுகம் அவர்களின் மனைவி திருமதி சினியாயி அம்மாள் அவர்களுக்கு ரூ. 1,000 வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அதை நிறைவேற்ற அரசு ஆணையிட்டது. அதை நிறைவேற்றினார்கள்.

மீனவருக்கு 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவி முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுக்க வேண்டியதை ஏன் இங்கே நிறைவேற்றவில்லை என்று கேட்டால், மீன் பிடிக்கிற தொழிலில் ஈடுபட்டு இருக்கும் பொழுது இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், ஒரு கட்டுமரத்திற்கு ஏற்படவிருக்கும் விபத்தைத் தடுக்கப் போய்தான் நடந்தது என்றும், இந்தக் கேள்வியைக் கேட்ட, விளக்கத்தை விரும்பிய மாண்புமிகு உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபடாதிருக்கும்போது இன்னொரு பட்கை விபத்திலிருந்து காப்பாற்றப்போய் இந்த விபத்திற்கு ஆளானார் என்ற காரணத்தினால்தான் அந்த உதவிப்பணம் மீனவர்களுக்காக வழங்கப்படும் உதவிப்பணம் ரூபாய் 5,000 கொடுக்கப்படவில்லை என்றும், தவிர இந்த நிலைமை ஏற்பட்டால், நிச்சயமாக நிதி நிலைமை அந்த அளவுக்கு இருக்காது என்பதையும்-உண்மையாகவே மீன் பிடிக்கச் சென்று வீடு திரும்பாத பரிதாபமான மீனவர் களின் குடும்பங்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகை நாங்கள் சொன்னபடி கொடுக்க முடியாமல் போய்விடும் என்று இந்த அரசு அச்சப்படுகிறது என்பதை நான் கூற விரும்புகிறேன்.

**ஆயிரம் ரூபாய் தர அரசு பரிசீலனை:**

இருப்பினும் இதுபோல் நிலைமை ஏற்பட்டால் ஆயிர மாவது கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இதே போல இன்னொரு குறையை மாண்புமிகு உறுப் பினர் திரு சாதிக்பாட்சா அவர்கள் சொல்லியிருக்கிறார்.

77 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின்போது வீடு இடிந்து அந்த வீட்டில் புருஷனும் மனைவியும் இறந்து விட்ட னர். அதுபற்றிய விவரங்களைக் கொடுத்து அவர்களுக்கு ஏன் உதவிப்பணம் கொடுக்கப்படவில்லை என்று கேட்டிருக் கிறார். சென்ற 1977-ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் நாள் பெய்த மழையின்போது இரண்டு பேர் வீட்டின் ஸன் ஷேட் விழுந்து புருஷனும்-வயது 50, மனைவியும்-வயது 42 இறந்து விட்டார்கள் என்றும், அது சம்பந்தமாகச் சம்பந்தப்பட்ட துறைக்குப் புகார்கள் அனுப்பியும்-ஏதும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும், மழையில் உயிரிழந்த குடும்பங் களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உதவித் தொகை ரூபாய் ஆயிரம் கொடுக்கப்படவில்லை என்றும் கேட்டிருக்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவரின் நடவடிக்கைகளின்படி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணைப்படி உதவித் தொகையான ஆயிரம் ரூபாய் இறந்தவரின் மகன் திரு. கந்த சாமி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு கந்தசாமி அவர்களின் பெயரில் உள்ள 96194 என்ற நம்பரில் அஞ்சல் துறையில் உள்ள சேமிப்புக் கணக்கில் போடப்பட்டு, அவரிடம் ஒப்பு விக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படி உண்மையென்று அரசுக்குத் தெரிந்த எல்லா விதக் குடும்பங்களுக்கும் கொடுக்க வேண்டிய உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித் துக் கொள்கிறேன்.

அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி

அவர்கள் ஒரு குறையைப் பற்றிக் கூறினார்கள். பாலதண்டாயுதம் பெயரால் ஒரு நகர்-அவரைப் பற்றி அதிகமாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும் ஏன் என்றால் அவர்களுடைய வாழ்நாட்களிலே 14 வருடம் ஜெயிலில் இருந்திருக்கிறார் என்றும், அவர் அப்போது தனக்கு அதிகமாக உதவி செய்திருக்கிறார் என்றும் இங்கே குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள்.

அவர்கள் பெயரால் ஒரு நகர் சென்னையை அடுத்து கோடம்பாக்கத்தில் அமைத்திருந்ததாகவும்-அதைத் தற்போது அகற்றப் பார்க்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் அங்கே எம். ஜி. ஆர். பெயரால் நகர் ஒன்றை நிறுவ இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

**யாரானாலும் நடவடிக்கை :**

நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய பெயரால் அப்படி ஒரு நகர் இருந்து அது அங்கே அமைக்கப்பட்டு இப்படி ஒரு நகர் அங்கே இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள் என்றால், அதுவும் சட்டத்திற்கு முரணாகச் செய்திருக்கிறார்கள் என்றால் அது மிகவும் கண்டிப்பதற்கும், நடவடிக்கைகள் எடுப்பதற்கும் உரிய விஷயம் ஆகும். அப்படி நடந்திருந்தால் அந்த அதிகாரி யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக் கொள்கிறேன்.

எனக்கு வந்த தகவல் எம். ஜி. ஆர். நகரைக் காலி செய்து விட்டார்கள் என்றும் அதற்குப் பிறகு அந்த நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். எது உண்மை என்று தெரியவில்லை.

**திரு கூத்தக்குடி ச. சண்முகம் :** எம். ஜி. ஆர். நகர் என்று இல்லை. பாலதண்டாயுதம் நகர் என்று இருப்பது உண்மை. முதன் முதலில் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் அவர்கள் அங்கே வீடுகள் கட்டிக்கொடுக்க அனுமதிக்கப்பட்டனர். அதன்படி அவர்கள் வீடுகள் கட்டிக்கொண்டு இருக்கின்றனர். பின்னர் அரசாங்கம் அங்கே தண்ணீர் தேங்கியிருக்கிறது என்று சொல்லி காலி செய்யச் சொன்னார்கள். அங்கேயுள்ள அந்தப் பள்ளத்தைத் தூர்த்து விட்டால் வீடுகள் கட்டிக் கொள்ளச் சிரமம் இருக்காது. ஆகவே, அதைச் செய்ய அரசு முன் வர வேண்டும். அந்த பாலதண்டாயுதம் நகர் அப்படியே இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** 1976-ஆம் ஆண்டு பரமக்குடியில் இருக்கும் பாலதண்டாயுதம் நகரில் 91-பேர்களுக்கு நில ஒப்படை செய்யப்பட்டது. 40 முதல் 45 வரை உள்ள நபர்கள் குடிசை போட்டுள்ளனர். ஒரே ஒரு நபர் மட்டும் கல் கட்டடம் கட்ட அடித்தளம் போட்டு இருக்கிறார். ஒப்படை செய்யப்பட்ட நிலம் ஊரணி புறம்போக்கு. ஒப்படை செய்கிறபோதே அந்த ஊரணியைத் தூர்த்து விட்டுக் குடிசை கட்ட வேண்டும் என்று நிபந்தனை போடப்

பட்டது. அவ்வாறு செய்யாமல் குடிசை போட்டதால் நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட பெருமழையால் அந்த இடத்தில் 5 அடி தண்ணீர் நின்றுவிட்டது. அந்த இடம் தாழ்வான இடம் என்றும், அந்த இடத்தை மேடு செய்யாவிட்டால் எதிர்



காலத்தில் ஆபத்து ஏற்படக் கூடும் என்பதாலும், அத்தகைய நிலைகளைப் போக்க சென்னையிலே அந்தப் பிரச்னைகள் குடிசைவாழ் பகுதியிலே இருக்கின்றனவோ, அதைப்போலத் தமிழ்நாடு எங்கும் ஆங்காங்கு புறம்போக்கு நிலங்களில் குடிசை போட்டு கூடியிருப்பவர்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றும், குறிப்பாக ஏரிகள், குளங்கள், தாழ்வான பகுதிகள் ஆகிய இடங்களில் வீடுகள் கட்டி இருந்தாலும் குடிசைகள் கட்டியிருந்தாலும் அவர்கள் நிச்சயமாக அந்த இடங்களில் இருக்க அனுமதிக்கக் கூடாது.

அதனால் மழைக் காலங்களில் அவர்கள் வாழ முடியாமல் கஷ்டப்படும் நிலையேற்படுகிறது. இதற்கு மாற்று வழி கண்டுபிடித்தாக வேண்டும் என்ற நிலையில் இந்த அரசு தீவிரமாகத் திட்டமிட்டுப் பரிசீலித்து வருகிறது என்பதையும், அந்த வகையில் சென்னை மாநகரத்தில் ஏரிப் பகுதிகளில் வாழும் மக்கள் வெள்ளம் வந்தபோது குறைந்தது 4 அடி அளவிற்கு அல்லது 3 அடி அளவிற்குத் தண்ணீர் தேங்கியிருக்கும் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள். அவர்களை எங்கே மாற்றுவது என்ற பிரச்சனையும், அதேபோல் இனிமேல் வரிகட்டாது புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு கூடாது என்னும் திட்டத்தையும், அங்கே அப்படி குடியிருப்புகள் கட்ட விரும்புகிறவர்கள் இருந்தால் அவர்களுக்கு மேடான இடத்தில் வீடுகள் கட்டித்தரவும் திட்டமிட்டு, அந்த இடத்தில்தான் அவர்களுக்கு வீடு கட்ட வேண்டும் என்று வந்தால், அந்த இடத்தை உயர்த்திக் கொடுக்கும் நிலையையும், நாங்கள் செய்து தர இருக்கிறோம். நான் வெள்ளப்பகுதிகளில் நேரில் சென்று பார்த்த நேரத்தில் மழை நேரத்தில், இடுப்பளவு தண்ணீரில் அந்த வீடுகள் முழுகிக் கிடந்ததைப் பார்த்தேன்...

**திரு செ. சிவசாமி:** அங்கே தேங்கியிருக்கும் தண்ணீர் போவதற்கு ஒரு சிறு பாலம் போட்டுவிட்டால் தண்ணீர்

போய்விடும். ஏற்கெனவே 47 குடிசைகள் இருக்கின்றன. அந்தத் தண்ணீர் வடிந்து விட்டால் மற்றவர்கள் குடிசை போடுவதற்கும் வசதியாகப் போய்விடும். ஆகவே, பாலம் கட்டித் தர அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** மனிதாபி மானத்தோடு பார்த்தால் இந்தக் கேள்வி நியாயமானதாகத் தான் நான் கருதுகிறேன். அதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், எல்லா இடங்களிலும் இப்படி அனுமதிக்கத் தொடங்கினால், இதன் முடிவு என்ன ஆகும் என்பதையும், அது சீராக எல்லோருக்கும் பயன்படும் வகை யில் அமைக்க முடியுமா என்பதையும், நிதி போதுமா என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



வெள்ள நிவாரணத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது சென்னையில் ஊழல் நடைபெற்றிருக்கிறது என்றும் யார், யாரோ சிபாரிசு செய்தார்கள் என்றெல்லாம் சொல்லி, இங்கே நாங்கள் சரியாக, ஒழுங்காக, சீராகப் பணம் கொடுக்கவில்லை என்றும், எங்கள் கட்சியை அதாவது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தலையிட்டு மற்ற கட்சியைச் சேர்ந்த கஷ்டப்பட்ட மக்களுக்கு உதவிகள் கிடைப்பதைத் தாமதப்படுத்தினார்கள், அல்லது உதவி கிடைக்காமல் செய்ய முயற்சி செய்தார்கள் என்றும் குறை கூறினார்கள்.

நான் முன்னதாகவே சொல்லியிருக்கிறேன். சில இடங் களில் தவறு நடந்திருந்தால் சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுடைய சிபாரிசு களுக்கு நாங்கள் அதிக கவனம் செலுத்தினோம் என்றும், அந்த வகையில் நாங்கள் தனிப்பட்ட கட்சி அபிமானத்தோடு

அதிகாரிகள் நடக்கும்படி செய்தார்கள் அல்லது அதிகாரிகள் அப்படி நடந்தார்கள் என்றெல்லாம் குற்றஞ்சாட்டினார்கள்.

**பட்டியல் போட்டு உதவியவர்கள் :**

அது தவறு. இப்போது எதிர்க்கட்சியில் இருக்கிற பொறுப்புள்ளவர்கள், சிபாரிசு செய்தவர்களுக்கெல்லாம் பட்டியல் போட்டு உதவி செய்திருக்கிறார்கள் என்பதை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு மு. கருணாநிதி :** தலைவரவர்களே, என்னுடைய தொகுதிப் பிரச்சனை ஒன்றை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அண்ணா நகரில் நமசிவாயபுரம் பகுதி இருக்கிறது. வெள்ளத்தில் சுமார் 400 வீடுகள் மூழ்கி, அவர்கள் பெருத்த சேதத்திற்கு ஆளாக்கப்பட்டார்கள். அங்கு 40 பேர்களுக்கு, 40 வீடுகளுக்குத்தான் இந்த நிவாரணம் போய்ச் சேர்ந்தது. 400 வீடுகளில் மற்றவர்களுக்கு இந்த நிவாரணம் போய்ச் சேரவில்லை. இந்தச் செய்தி எனக்கு ஏற்கெனவே வந்துவிட்டது. ஆனால் எனக்குப் பேச நேரம் இல்லாத காரணத்தால் அப்போது சொல்வதற்கு விட்டுப் போய்விட்டது.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** இது அண்மையில் சொல்லப்பட்ட குறைபாடா அல்லது 15, 20 தினங்களுக்கு முன்னால் சொல்லப்பட்டதா என்று தெரியவில்லை. இருந்தாலும் இப்படிப்பட்ட குறைபாடு இருக்குமானால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கக் கூடிய தகுதி இருந்தும் 15 நாட்களுக்கு முன்னால்கூட கிடைக்காதவர்களுக்கு மீண்டும் கிடைக்க வாய்ப்பு இருந்தது; அதிலும் கிடைக்கவில்லை என்றால் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கவனித்துச் சொல்வார்கள் என்றால் நிச்சயம் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

**திரு க. சுப்பு :** தலைவரவர்களே, என்னுடைய தொகுதியிலும் கோயம்பேடு பகுதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் உங்கள் எம். எல். ஏ. யிடம் போய்க் கேளுங்கள்; அவர் கொடுப்பார் என்று சொல்கிறார்கள். உதவித்தொகை எம். எல். ஏ. கொடுக்கிறாரா அல்லது அரசாங்கம் கொடுக்கிறதா என்பதுகூட அவர்களுக்குத் தெரியாதா? அரசாங்கம் தானே உதவி செய்கிறது என்று கேட்டால் ஆளும் கட்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் உதவியே தவிர, உங்களுக்கு அல்ல என்று சொல்கிறார்கள். இதுவரையில் நிவாரணம் அளிக்கவில்லை.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, யார் அப்படிச் சொன்னார், எந்த அதிகாரி சொன்னார் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அவர் மீது நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு க. சுப்பு:** கோயம்பேடு பகுதியில் உதவித் தொகையை விநியோகம் செய்தவர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, நான் சென்னை நகரத்தின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் என்னுடைய பகுதியும் இருக்கின்ற காரணத்தால் ஒன்றைக் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தவறுகள் இருந்தால் சுட்டிக் காட்டுங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று. ஆகவே, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியைப் பொறுத்தவரையில் அங்குள்ள குறைகளைப் பற்றிப் பட்டியல் போட்டு மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கு அனுப்பி இருக்கிறோம். தாசில்தாருக்கும் அனுப்பி இருக்கிறோம். இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்....

**வெள்ள நிவாரணப் பணியில் குறைபாடா?**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தொகுதிகள் நிறைய இருக்கலாம். ஆகவே எல்லா உறுப்பினர்களும் அதைச் சொல்ல ஆரம்பித்தால் அதற்கு மட்டுமே நேரம் சரியாகிவிடும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னார்கள். ஆகவே, எல்லோரும் பேச வேண்டும் என்று நினைக்கக் கூடாது.

**திரு க. அன்பழகன்:** தலைவரவர்களே தனித்தனியாக இந்தப் பிரச்சினை குறித்து எழுப்புவதற்கு நேரம் கிடையாது என்பதை நான் அறிவேன். ஆனால், சென்னை நகரத்திலே இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருப்பதன் காரணத்தால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மாவட்ட ஆட்சித் தலைருக்கு அனுப்பப்படுகிற எல்லா விண்ணப்பங்களும் முறைப்படி பரிசீலிக்கப்பட்டுத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஒரு அறிவிப்பைத் தருவார்களேயானால் உறுப்பினர்கள் தனித்தனியாக இதுபற்றிச் சொல்ல மாட்டார்கள்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்களது கருத்தை, உணர்வை நான் மதிக்கிறேன். நாங்கள் இந்த உதவியை யார் யாருக்குக் கொடுக்க விரும்புகிறோம். யார் யாரை அந்த உதவியைப் பெறுவதற்குரிய தகுதி உடையவர்கள், என்று குறிப்பிட்டிருக்கிறோம் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் தயவுசெய்து நினைவுகூர வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாகும். அந்த வெள்ள நிவாரணத்திற்கு என்ற வகையில் பணத்தை ஒதுக்கி அரிசி, துணி இவைகளை ஒதுக்கிக் கொடுக்க முற்பட்டபோது நகரசபை, நகரமன்றத்தை நடத்துகின்ற அதிகாரிகள் மற்றும் ஆணையர் அவர்கள் யார் யாருக்குப் பாதுகாப்பளித்து உதவிகள்

வழங்கினார்களோ அந்த இடங்களிலே தங்கி இருந்தவர்களுக்கு மட்டும் இந்த உதவிகளைச் செய்வது என்பதுதான் முதலிலே கணக்கிலே எடுத்துக் கொண்ட முயற்சியாகும். ஆனால், போகப் போகக் கொஞ்சம் கொஞ்சமாக எண்ணிக்கை அதிகமாகி பின்னாலே பட்டியல் பெருகி தொடர்ந்து சிபாரிசுகள் வந்து கொண்டே இருந்தது என்பதையும், நாட்கள் நீடிக்க நீடிக்க எண்ணிக்கை அதிகமாகியது என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். இருந்தாலும் நாங்கள், துணிகளும், பொருளும் கொடுத்தோம் என்பது குறித்து நான் மேலவையில் கொடுத்த விளக்கத்தையும் இங்கே திரும்பவும் படித்துக்காட்டி நேரத்தை வீணாக்க விரும்பவில்லை எனக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு சாதிக்பாட்சா அவர்கள் ஒரு குற்றச்சாட்டை இங்கே கூறினார்கள். அதாவது, ஊழலை அனுமதிக்க மாட்டோம் என்று சொல்கிறீர்கள். எம். சுப்பிரமணியம் தான் தவறு செய்ததோடு அல்லாமல் அரசு ஊழியரையும் முறைப்படி தங்கள் அறிவிப்புக்கு மாறாக நடக்க வைத்துள்ளார்'' என்று ஒரு கடிதத்தைப் படித்துக் காட்டினார்கள். முழுமையையும் படிக்க நேரம் இல்லை என்று சொன்னாலும் குறிப்பிட்ட 9 டோக்கன்களை அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாஜி கார்ப்பரேஷன் எம். சி. சுப்பிரமணியத்திடம் 100 ரூபாய்க்கான டோக்கன்களைக் கொடுத்து விட்டுச் செல்கிறார். ஆனால், அந்த டோக்கன்கள் உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படாமல், பாதிக்கப்படாதவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அவர்களிடமிருந்து சுப்பிரமணியம் பணம் பெற்றுக்கொண்டார் என்று அதில் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். எனக்கு வந்திருக்கிற குறிப்புகளிலிருந்து சொல்கிறேன். 19-2-79 அன்று தமிழ் நாடு சட்டமன்ற உறுப்பினர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் சொன்ன இந்தக் குற்றச்சாட்டை மறுக்கிற வகையில் நான் இங்கே ஒரு செய்தியை வெளியிட வேண்டியிருக்கிறது.

77-ஆம் வட்டத்தில் பாளையத்தான் தெரு, மைலாப்பூர் தெருவில் அரிசி, துணி, பாதிக்கப்பட்ட ஐம்பது குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. குடிசைப் பகுதிகள், மழையால் வீடுகள் இடிந்து உண்மையில் பாதிக்கப்பட்ட எட்டுக் குடும்பங்களுக்கு மட்டும் தலா ரூ. 100 வீதம் உதவித்தொகை



வழங்கப்பட்டது. கௌடியாமடம் சாலையில் 14 குடும்பங்களுக்கு அரிசி, துணி மட்டும் வழங்கப்பட்டது. இந்தப் பகுதியில் யாருக்கும் ரூ. 100 உதவித் தொகை வழங்கப்படவில்லை. ராயப்பேட்டை, லாயிட்ஸ் சாலை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் இந்த இரண்டு பகுதியில் உள்ளவர்களுக்கு உதவி வழங்கப்பட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி 77-வது வட்டத்தில் ரெவின்யூ அதிகாரியால் டோக்கன்கள் பாதிக்கப்பட்ட நபர்களைத் தவிர வேறு எவருக்கும் கொடுக்கப்படவில்லை, சுப்பிரமணியத்திற்கும் கொடுக்கவில்லை என்று குறிப்பு இருக்கிறது. உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் வருவாய் அதிகாரிகளால் குடிசைப் பகுதிகளில் உதவித் தொகை வழங்கப்பட்டது. உதவி பெற்ற எட்டுப் பேர்களிடமும் கையெழுத்துப் பெறப்பட்டுள்ளது. கணக்கில் எட்டுப் பேர்களுக்குத்தான் உதவித் தொகை வழங்கப்பட்டதாகக் காணப்படுகிறது. ஆகவே, ஒன்பது டோக்கன்கள் சுப்பிரமணியத்திற்கு வழங்கப்பட்டு அவை பாதிக்கப்பட்டவர்களுக்குச் சேரவில்லை என்பது ஆதாரமற்ற குற்றச்சாட்டு. பட்டியல் இருக்கிறது, யார் யார் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் அல்லது விரல் அடையாளம் இட்டிருக்கிறார்கள் என்ற பட்டியல் இருக்கிறது.

**திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா:** நான் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது இதுபோன்ற ஏராளமான பேர்களுக்கு வரவில்லை என்ற நிலை இருக்கிறது. நான் சொல்லிய குற்றச்சாட்டினை நிரூபித்து எடுத்துச் சொன்னேன். அதிகாரிகள் எப்படியெல்லாம் விளக்கங்கள் தருவார்கள்-நானும் ரெவின்யூ அமைச்சராக இருந்திருக்கிறேன்—என்பதை, எப்படி அதிகாரிகள் விளக்கங்கள் தந்து அரசாங்கத்தைத் திசை திருப்புகிறார்கள் என்பதை இப்போதுதான் நான் புரிந்து கொண்டேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** நான் ஒரு நெருக்கடியான நிலைக்கு ஆளாகியிருக்கிறேன். சில மாமன்ற உறுப்பினர்கள் குடும்பங்கள்கூட அரிசி, துணி முதலியவற்றை வாங்கியிருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கெல்லாம் வழங்காமல் அவர்களை அலட்சியப்படுத்தி விட்டார்கள் என்று சொல்ல முடியாது என்பதையும், அவர்கள் சிபாரிசு செய்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இங்கே நான் ஆதாரத்தோடு கூறமுடியும். ஆனால், அவர்களின் பெயர்களைச் சொல்ல நான் விரும்பவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் உணருவார்கள். ஏன் தெரிவிக்கவில்லை என்பதை அவர்கள் நன்கு புரிந்து கொள்வார்கள் என்பதையும் கூறி (ஓரிரு படங்கள் காண்பிக்கப்பட்டது) இந்தப் படங்களில் அவர்களது குடும்பத்தினர் இருக்கிறார்கள். அவர்களுடைய மைத்துனி அல்லது தாய் போன்றவர்கள் இதில் பங்கு கொண்டு வாங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் சொல்லும்போது அவர்கள் அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் பணத்தைச் சேர்த்தவர்கள் அல்ல என்பதில் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும் என்பதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். அந்த நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்

என்ற் அந்த நிலையைப் பாராட்ட வேண்டும். ஆனால, வேண்டுமென்றே யாருக்கும் கொடுக்க முடியாமல் மறைக்கிறார்கள் என்று சொல்வது விரும்பத்தக்கதல்ல.

மாமன்ற உறுப்பினர் திரு சாதிக்பாட்சா அவர்கள் ஆதாரத்தோடு சொன்னார்கள். நான் வருவாய்த்துறை அமைச்சராக இருந்திருக்கிறேன், அதிகாரிகள் இப்படியும் திசை திருப்புவார்கள் என்பதைத் தான் தெரிந்து கொண்டதாகச் சொன்னார்கள். இந்த நல்ல எடுத்துக்காட்டை ஒரு உபதேசமாக வைத்துக் கொள்கிறேன். உங்கள் அனுபவத்தை எச்சரிக்கையோடு பயன்படுத்திக் கொள்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். இதிலிருந்து நாங்கள் ஏமாற்றப்பட்டோம். அதிகாரிகள் இப்படியும் திசை திருப்புவார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன் என்று அவர்கள் சொன்னதிலிருந்து நாங்களும் ஏமாந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லும்போது, நாங்கள் அதை அலட்சியப்படுத்துவதாகவோ அல்லது கேலி செய்வதாகவோ அமையாது, நிச்சயமாக அதை வரவேற்கிறோம். உங்கள் அனுபவத்தை நாங்கள் பயன்படுத்திக் கொள்வோம் என்பதை உறுதியாகக் கூறிக் கொள்கிறேன். எந்த அதிகாரியாவது இப்படிப்பட்ட போக்கைத் தவறாக உருவாக்கித் தந்திருப்பார்களேயானால் விசாரணைக்குப் பின்னால் அது எனக்குத் தெரியவருமானால், நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்பதை மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றி இதற்கு மேலும் நான் கருத்துக் கூற விரும்பவில்லை.

### தொழிலாளர்களும் ஊதியப்பட்டுவாடாவும்

குரோம் லெதர் கம்பெனியில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் 1978-ஆம் ஆண்டு ஜுலை, ஆகஸ்டு மாதங்களுக்கு ஊதியம் பட்டுவாடாச் சட்டத்தின்கீழ் அதிகாரியின் முன் மனுச் செய்ததன் பேரில், அவ்வதிகாரி 26—10—1978 அன்று ஊதியம் பட்டுவாடா செய்ய உத்தரவு பிறப்பித்தார். பின்னர் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, குரோம் லெதர் கம்பெனியின் சொத்துக்கள் தங்கள் வங்கிக்கு அடமானமாக உள்ளதாகப் பட்டுவாடா சம்பந்தப்பட்ட மட்டில் வங்கிக்கு முன் உரிமை வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுள்ளது. எனினும் சம்பளப் பட்டுவாடாச் சட்டத்தின் கீழ் ஊதியத்தை வாங்கிக் கொடுக்க பூந்தமல்லி சப்டிவிஷன் மாஜிஸ்திரேட்டிடம் முறையிடப்பட்டுள்ளது. நீதிபதியின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

....பொதுவாக வேலை நிறுத்தங்கள் நடைபெறும்போது வன்முறை ஏற்படுவதும், வன்முறை ஏற்படும்போது அதைத் தடுக்கக் காவல் துறையினர் தலையிடுவதும் உலகெங்கும் நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு உமாநாத் அவர்கள் கோடிட்டுக் காண்பித்திருக்கிறார்கள்.

**திரு ரா. உமாநாத் :** நான் என்னமோ சொன்னேன், வேலை நிறுத்தம் என்பது உலகெங்கும் நடக்கிற நிகழ்ச்சி என்று நான் சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேறு மாதிரியாகச் சொல்கிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை. ரிக்கார்ட்களைப் பார்க்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். வேலை நிறுத்தம் என்பது சோஷியோ-எக்னாமிக் பிரச்சினையின் அடிப்படையிலே உலகம் எங்கும் வேலை நிறுத்தம் இருக்கிறது என்று சொன்னதை முதலமைச்சர் அதோடு வேறு எண்ணத்தைச் சேர்த்துச் சொல்வது சரியல்ல. (குறுக்கீடு).....

.....**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, எனக்காகப் பேராசிரியர் பேசியதற்காக நன்றி, வேலை நிறுத்தம் ஏற்பட்டால் தவிர்க்க முடியாத நேரங்களிலே வன்முறை ஏற்படுவதும் உண்டு. வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகிறார்கள் என்றால் வன்முறைக்காக ஈடுபடுவதில்லை. வேலை நிறுத்தத்திலே ஈடுபடுகிறவர்களுக்கு, இனிமேல் பட்டினி கிடப்பது முடியாது, எத்தனை நாட்களுக்கு வருமானம் இல்லாமல் இருப்பது என்ற முறையிலே எண்ணம் ஏற்பட்டு வளர்ந்து வெறுப்பு மனப்பான்மையாக அது வளரும்போது வன்முறையில் ஈடுபடுகிறார்கள். அதன் விளைவாகப் பல தொல்லைகள் விளைகின்றன என்பதும், வேறு வழியின்றிக் காவல் துறையினர் தலையிட்டு நாம் விரும்பாத நிகழ்ச்சிகள், விபரீதங்கள் நடந்துவிடுகின்றன என்பதையும் விளக்குவதற்காகத்தான் நான் குறிப்பிட்டேன். அந்த வகையில் தான் நான் சொல்ல விரும்புகிறேன், வேலை நிறுத்தம் செய்கின்ற உரிமையைத் தொழிலாளர்களிடமிருந்து



பறித்து விடவேண்டுமென்பதில் நிச்சயமாக அரசுக்கு அக்கறை இல்லை. ஆனால், வேலைநிறுத்தம் செய்துதான் ஆகவேண்டுமென்ற நிலைமை ஏற்படுகின்ற அளவுக்கு ஆலை அதிபர்களோ முதலாளிகளோ அடிப்படிப்பட்ட வாய்ப்பை உண்டாக்குவது சரியல்ல என்பதைக் கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கிறேன். அரசைப் பொறுத்தவரையில் வேலைநிறுத்தம் நடைபெறாமல் பொருள் உற்பத்தி தடங்கள் ஏற்படாமல் மேலும் வளருவதற்கும் அதிகப்படுத்துவதற்கும் நல்லதொரு சூழ்நிலையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் நான் கூறுகிறேனே தவிர, வேலை நிறுத்தமே தவறு என்றோ, வேலை நிறுத்தத்திலே

தொழிலாளர்கள் ஈடுபடவே கூடாது என்றோ நான் கூறவில்லை. ஆனால், முன்னதாகவே தவிர்த்துவிட வேண்டும் என்பது எங்களுடைய கருத்து, மாண்புமிகு உமாநாத் அவர்களுடைய கருத்தும் அதுவாகத்தான் இருக்கும் என்று நான் நம்புகிறேன். சில நேரங்களிலே சட்டங்கள் என்று பேசிக்கொண்டு சட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டு அதன் விளைவாக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டு, பிறகு ஒப்பந்தங்கள் பாதகமாக இருக்கிறது; அல்லது சாதகமாக இல்லை என்ற நிலையில் மாறுபாடான நிலைமையை அமைத்துக் கொள்ளக்கூடிய நிலைமை வேதனை தோன்றுகிறபோது சட்டத்திற்குப் புறம்பாக ஏதாவது ஒரு வழியைக் கடைப்பிடித்தாவது ஒரு நன்மையைப் பெறலாமா என்று முயற்சிப்பது சரியல்ல என்ற நிலைமையைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரி நெருக்கடி ஏற்படாமல் தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்துவதற்கு எந்த வழியைப் பின்பற்றுவது என்று இனிமேல் நாம் அனைவரும் சேர்ந்து ஒரு வழியைக் கடைப்பிடிக்க முன்வந்தால் பிரச்சினைகளை அந்த அளவிற்கு மற்றவர்கள் தூண்டிவிட்டாலும் நாம் அதற்குப் பலியாகாமல் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று கருதுகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு உமாநாத் அவர்கள் தங்கள் கருத்துக்களைப் பல்வேறு பிரச்சினைகளிலே சொல்லியிருக்கிறார்கள். இங்கே இப்போது அத்தனையையும் சொல்வதற்கு நேரம் போதாது என்று கருதுகிறேன். நேரம் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால், ஒன்றைக் குறிப்பிட்ட விரும்புகிறேன். சில சமயங்களில் திரு உமாநாத் அவர்கள் எந்த அளவிற்குச் சிரித்து அன்போடு பேசுகிறார்களோ பழகுகிறார்களோ அதற்கு நேர் மாறாக என்று நான் சொல்ல மாட்டேன். அதைவிட அதிகமாக அவருக்குக் கோபம் வரும் என்று இன்றுதான் புரிந்து கொண்டேன். கோபம் வருவதற்கு அடிப்படை நியாயத்தை வைத்துக் கொண்டால் கொஞ்சம் உதவியாக இருக்கும் என்பது என்னுடைய வேண்டுகோள். அவரது வீட்டில் நடந்த அக்கிரமத்தை அநியாயத்தை எதனால் ஏற்பட்டது என்பதையெல்லாம் விசாரணையில் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று கூறி அதையும் பேச முடியாத நிலை எங்களுக்கு ஏற்பட்டு விடுகிறது என்ற மனத் தாங்கல் எங்களுக்கும் உண்டு. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அந்த நேரங்களில், அதுபோன்ற சமயங்களில் கொஞ்சம் விட்டுக் கொடுத்து ஒரு சில நாட்கள் பொறுத்திருந்து, உண்மை வெளியில் வரவில்லை. சரியான நிலையில் தீர்ப்பு அளிக்கக்கூடிய வகையில் வழக்கு நடத்தப்படவில்லை என்று நிச்சயமான நிலை ஏற்படும் என்றால், அதைப்பற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்த அல்லது அதைப்பற்றி விளக்கம் கோருவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமையிருக்கிறது. இந்த மாமன்றத்தில் இந்த நாட்டு நிலைமையைப் பற்றி, சட்டமன்ற வாசகங்களுக்கு எந்த அளவிற்கு மரியாதை கொடுத்துப் பயன்படுத்தி உணர்ச்சிகளை வெளிக்காட்ட முடியுமோ அந்த அளவிற்கு எதையும் செய்யலாம். அந்த எண்ணத்தை வெளிப்படுத்தலாம் என்ற வகையில் அப்பொழுது அந்தச் சூழ்நிலையிலே

இதையெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்....

## சட்டமும் ஒழுங்கும்

மாண்புமிகு உறுப்பினர் திரு கந்தசாமி அவர்கள் இன்னொரு பிரச்னையை எடுத்துக் கூறினார்கள். அவர்கள் பேசிய கருத்துக்களுக்குள் பலவற்றிற்கு நான் பதில் சொல்ல நேரம் இல்லாமல் இருந்தாலும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சட்டம் ஒழுங்கு பிரச்சினை பற்றி நிறையப் பேசியிருக்கிறார்கள். பேசியவர்கள், அவர்களது எண்ணத்தை வெளியிடுகிறவர்கள் பதில் பெற வேண்டும் என்றோ அல்லது பதில் கிடைக்காவிட்டாலும் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்த வேண்டும் என்றோ உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறுகிறார்கள். ஆனால், பதில் கிடைக்காமல், நான் பதில் சொல்ல மறந்துவிட்டால் அல்லது நேரமில்லை என்று நிறுத்திவிட்டால் சில மாமன்ற உறுப்பினர்கள் எங்கள் கேள்விகளை இந்த அமைச்சரவை முக்கியமாகக் கருதவில்லையா அல்லது அவைகளை முக்கியமாக எடுத்துக் கொள்ளவில்லையா என்ற கேள்விக்கு நாங்கள் நிச்சயமாகப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அனைவருக்கும் பதில் சொல்லக் கூடிய நிலையில், பத்து மணி நேரம் விவாதம் நடந்து கருத்துக்களை எடுத்துச் சொன்னவர்களுக்கு ஒன்றரை மணி நேரத்தில் பதில் சொல்லுங்கள் என்று சொன்னால் அது எளிதாக முடியக்கூடிய காரியம் அல்ல என்பதை நாம் உணருகிறோம். ஆனால், இனிமேல் இதற்கு என்ன வழி என்பது பற்றி ஒரு நியாயமான முறையைக் கண்டுபிடித்தால்கூட உதவியாக இருக்குமென்று கருதுகிறேன். பதில் சொல்லாமல் போனால் உறுப்பினர்கள் வருத்தப்படுகிறார்கள். நாங்கள் இவ்வளவு தூரம் கருத்துக்களைச் சொன்னோமே, அவற்றிற்குப் பதில் இல்லையே என்று வருத்தப்படுகிறார்கள். நேரில் கேட்காவிட்டாலும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கு இருக்கிறது. ஊரில் இருக்கிறது என்பதை உணருகிறோம். அவர்கள் தொகுதியில் இருப்பவர்கள் கேட்பார்கள். வாக்காளப் பெருமக்கள் கேட்பார்கள். நீங்கள் எவ்வளவோ சொல்லியும் பதில் இல்லையே என்று கேட்பார்கள் நீங்கள் சொன்னதற்கு என்ன பதில் வந்தது என்று கேட்பார்கள். சில பிரச்சினைகள் பற்றி எடுத்துக் கூறப்படுகிறது. எல்லாவற்றையும் அக்கறையோடு கவனித்துக் கொண்டிருக்கிற திரு துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல், பட்ஜெட்டில் வாய்ப்புக் கிடைக்குமே அப்போது சொல்லுங்கள் என்று சொல்வார்கள். எங்கள் பேரில் நம்பிக்கையில்லை என்பதற்கான காரணங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த காரணங்களுக்கு நாங்கள் நியாயமாக அதற்கு உடந்தையாக இருப்பவர்களா என்பதை விளக்கியாக வேண்டிய கடமை இருக்கிறது என்கின்ற காரணத்தினால், சிலவற்றைப் படித்துக் காட்டி பேசுகிறேனே தவிர மேலவையில் சொல்லியதுபோல் இங்கும் சொல்லியிருந்தால், அந்த அளவுக்குத் திருப்தி ஏற்படாது. என்றாலும், பதில் சொல்லவில்லை என்ற எண்ணம் உருவாகக்கூடாது என்கிற காரணத்தினால், இந்த அளவுக்கு விவரங்களைப் படித்துக் காட்ட வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

இங்கு ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சட்டப் பிரச்சினை பற்றி இங்கு குறை கூறியவர்களுக்கெல்லாம் தரப்பட்டிருக்கின்ற பதில்களை முழுமையாக என்னால் படித்து விளக்கம் தரமுடியாமல் அல்ல. உங்களால் கேட்டுக் கொள்ள வேறு வேலைகளை விட்டுவிட்டு இருக்க முடியுமா என்கின்ற ஐயம் இருக்கின்றது என்ற வகையில் இப்போது ஒத்தி வைப்பதை—அதாவது கூட்டத்தை அல்ல—இந்தப் பிரச்சினைகளை—நாங்கள் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை என்மேல் போடாமல் கேட்டுக் கொள்வதற்கு நேரம் இல்லாமல் போய்விட்டது என்பதை வெளியில் பேசுகின்றவர்கள் இந்த உண்மையைச் சொல்ல வேண்டும் என்று மாமன்ற உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் சாதிக்பாட்சா அவர்கள் குறிப்பிட்ட ஒரே ஒரு பிரச்சினைக்கு மட்டும் விளக்கம் தர வேண்டியவனாக இருக்கிறேன்... அதாவது—

**காவல் நிலையத்தில் அடித்தனரா ?**

திருமதி சின்னம்மாள் ஈ-3 காவல் நிலையத்தில் காவல் துறையினரால் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டதாகக் கொடுத்த புகார்மீது சென்னைக் காவல்துறை உதவி ஆணையாளர் கொடுத்த அறிக்கையைப் படிக்க விரும்புகிறேன். 20-2-1979 அன்று மனுவில் குறிப்பிட்டுள்ள சின்னம்மாள் சென்னை தேனாம்பேட்டையில் சுமார் 40 ஆண்டுகளாகக் கோழி வியாபாரம் செய்து வருவதாகவும், தேனாம்பேட்டைக் காவலர்களுக்கு 2, 3 ரூபாய் மலிவு விலையில் கோழி கொடுத்து வருவதாகவும், 14-1-1979 அன்று காவலர்கள் வந்தபோது, அன்றைய முன்தினம் பொங்கல் தினமாக இருந்ததால் அதை முன்னிட்டுக் கோழிகள் எல்லாம் விற்றுப்போய் விட்டதால் அவர்களைத் திருப்தி செய்ய முடியவில்லை என்றும், இதனால் ஆத்திரமடைந்து 20-1-1979-ல் தேனாம்பேட்டை சப்-இன்ஸ்பெக்டரும் மற்றும் காவலர்களும் ஒரு ஜீப்பில் வந்து ஐந்து கோழிகளைக் பலாத்காரமாக எடுத்துச் சென்றதாகவும், ஜீப் ஓட்டுநர் மனுதாரின் துணிப் பையில் இருந்த 37 ரூபாயை எடுத்துக் கொண்டதாகவும், மற்ற காவலர்கள் கல்லாவிலிருந்து 50 ரூபாயை எடுத்துக் கொண்டதாகவும், பாங்கு பாஸ் புக்கில் இருந்த 1000 ரூபாயை வேறு காவலர்கள் எடுத்துக் கொண்டதாகவும், தன்னைக் காவல் நிலையத்தில் அடித்ததாகவும், மதுவிலக்குக் குற்றம் சாட்டியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

மனுதாரரின் மனு காவல்துறை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டது, அதன்மேல் சைதாப்பேட்டைக் காவல்துறை உதவி ஆணையாளர் விசாரணை செய்தார். அவர் தனது அறிக்கையிலே கீழ்க்கண்ட விவரங்களைத் தெரிவித்துள்ளார். இந்தக் கடை மனுதாரரின் சகோதரருக்குச் சொந்தமானது. மனுதாரர் அவருக்கு உதவியாக இருந்து வருகிறார். மனுதாரருடைய கடை தேனாம்பேட்டைக் காவல் நிலையத்தைச் சேர்ந்தது. ஆனால், மனுதாரர் குறைந்த விலையில் கோழிகளைக் காவலர்களுக்குக் கொடுப்பதாக மேலதிகாரிகளுக்குப் புகார் செய்யவில்லை. மேலும், இந்தக்கடை

1-10-1978-க்கு முன் மாம்பலம் காவல் நிலைய ஆளுகைக்குள் இருந்து வந்ததாகவும், 1-10-1978-க்குப் பிறகு தேனாம் பேட்டைக் காவல் நிலைய ஆளுகைக்கு வந்ததாகவும் சொல் லப்படுகிறது. தேனாம்பேட்டைக் காவல் நிலைய சப்-இன்ஸ் பெக்டர் டி.எஸ். லட்சுமிநாதன் என்பவர் காவலர்கள் சில ருடன் மது விலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காகச் சென்றபோது, சரோஜா என்ற ஒருவரைக் கைது செய்து, மனுதாரரின் கடைக்கு முன்பு ஜீப்பில் வந்தபோது, மனு தாரர் சந்தேகப்படும் வகையில் சாக்குப் பையைத் தூக்கிக் கொண்டு ஓடினார். அப்படி ஓடும்போது கீழே விழுந்து அடி பட்டது என்றும், அவர் கையில் வைத்திருந்த சாக்குப் பையைச் சோதனையிட்டபோது 3 பிராந்தி பாட்டல்கள் அகப்பட்டது என்றும், இந்த விவரங்களையெல்லாம் இரு சாட்சிகளின் முன்னால் மகஜரில் எழுதப்பட்டு, மனுதாரரின் கையெழுத்து வாங்கப்பட்டது. உதவி கமிஷனர் ஸ்தலத் திற்குச் சென்று, விசாரணை செய்தபோது, அப்போதும் மனுதாரர் எந்தவிதமான ஆட்சேபணையும் சொல்லவில்லை. மனுதாரரின் கடையைப் பார்க்கும்போது, அவரிடம் அவ் வளவு பெரிய தொகை இருப்பதற்கும் நியாயமில்லை. ஜீப் பில் இருந்த சரோஜாவும், காவல் துறையினர் மனுதாரரை அடிக்கவில்லை என்றும் மறுத்திருக்கிறார். மனுதாரரும் காவல் துறையினர் தன்னை அடிக்கவில்லை என்று சொல்லி யிருக்கிறார். 21.1.1979 அன்று மனுதாரரை சைதாப் பேட்டை மாஜிஸ்திரேட்டு முன்பு ஆஜர் செய்தபோதும் காவலர்கள் தன்னை அடிக்கவில்லை என்று சொல்லியிருக் கிறார். அவரைச் சோதனை செய்த மருத்துவ அதிகாரியும் அவருக்கு இடுப்பில் காயம் இருந்தது என்றும், அதுபற்றி மனுதாரரைக் கேட்டபோது, தான் தவறி விழுந்ததாகவும், அப்போது அடிபட்டதாகவும் கூறியிருக்கிறார். இதற்கு முன்பு மனுதாரர் குற்றம் செய்யாதவரா என்று பார்க்கும் போது, இதற்கு முன்பு 5 பிராந்தி பாட்டில்கள் வைத்திருந்த தற்காகச் சைதாப்பேட்டை கோர்ட்டிலே நீதிபதியால் ரூ. 150/- அபராதம் விதிக்கப்பட்டு, அபராதம் செலுத்தியுள் ளார். அந்த வழக்கிலே மனுதாரர் தன் பெயரைச் சின்னக் குழந்தை என்றும், இந்த வழக்கிலே தன் பெயரைச் சின்னம் மாள் என்றும் தந்திருக்கிறார். இந்த இரு வழக்குகளிலும் எடுக்கப்பட்ட கைரேகைகள் ஒன்றாக இருக்கின்றன. அக்கம் பக்கத்திலே உள்ளவர்களுக்குக் கோழி விற்பதாகப் பாவனை செய்துகொண்டு, குறிப்பிட்ட நபர்களுக்கு பிராந்தி விற்பனை செய்து வந்திருக்கிறார் என்கிற குற்றச்சாட்டுக்களை அதி காரி தன் அறிக்கையிலே தந்திருக்கிறார்கள்.

இதற்கு மேலும் ஓரளவு சொல்லலாம். நீங்களே இப்ப டிச் சொன்னால், கட்டளை பிறப்பித்தால், என்ன நடக்கும் என்பது தெரியாதா என்று சொல்வார்களானால், அதைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்று விரும்பினால், விசாரிக்க லாம். ஆனால், இப்படி திரும்பத் திரும்ப விசாரணை செய் கிறபோது அதிகாரிகள் மேல் சந்தேகப்படுகிறோம். அவர்கள் மேல் நம்பிக்கை இல்லை என்ற ஒரு நிலை ஏற்படும். அதன் காரணமாக அதிகாரிகள் தங்கள் கடமையை, உரிமையை எப்படிச் செய்வார்கள்? அவர்கள் தங்கள் நலனை எப்

படிக் காப்பாற்றிக் கொள்வதற்குச் செயல்படுவார்கள் என்பதையெல்லாம் நாம் சிந்தித்தாக வேண்டும்.

**கொலைக்குற்றங்கள் குறைந்திருக்கின்றன !**

நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, நாங்கள் கொலைகளைச் செய்வதற்குத் தூண்டுகிறோம் என்றும், கொலைகள் அதிகமாகிவிட்டது என்றும், இங்கே சட்டம் ஒழுங்கு இல்லை என்றும் சொல்லப்படுகிறது. பலர் அப்படிச் சொல்வதுமுண்டு.



மாமன்ற உறுப்பினர்கள் சிலர் வேறு விதமாகவும் கூறுவதுண்டு. உண்மையிலேயே, அவ்வப்போது பத்திரிக்கைகளிலே வருகின்ற பொய்யான தகவல்களை, உண்மைக்கு மாறான தகவல்களை வைத்துக் கொண்டு இப்படிச் சொல்கிறவர்களும் உண்டு. உண்மையிலேயே, எனக்குக் கிடைத்துள்ள புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, எனக்கு இந்த ஐயப்பாடுதான் ஏற்படுகிறது.

**பொதுக்கூட்டங்களின் எண்ணிக்கை :**

முதலில், பொதுக்கூட்டங்களுக்குச் செல்லும்போது நாம் உயிரோடு திரும்பி வருவோமா என்ற அச்சம் ஏற்படுகின்ற வகையில் இன்றையதினம் நாடு இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். இதுசம்பந்தமாக, இங்கே நான் ஒரு புள்ளி விவரத்தைக் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் நடந்த பொதுக்கூட்டங்களின் எண்ணிக்கை 1974-ஆம் ஆண்டு 17,896; 1975-ஆம் ஆண்டு 14,397; 1976-ஆம் ஆண்டு 2,328; 1977-ஆம் ஆண்டு 12,953; 1978-ஆம் ஆண்டு இதுவரை 18,737. ஆக, தேர்தல் நேரங்களை விட இப்போது கூட்டங்கள் அதிகமாக நடைபெறுகின்றன என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அப்படியானால் பொதுக்கூட்டங்களுக்குத் தடைகள், பொதுக்கூட்டங்களுக்கு இடைஞ்சல்கள் அல்லது ஏதோ நடைமுறைகளில் தடங்கல்கள் ஏற்படுத்துகிறார்கள் என்று சொல்வது இந்தப் புள்ளிவிவரங்களோடு எப்படி ஒத்து வருகின்றன என்பதை அனுபவம் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கூட்டங்களின் எண்ணிக்கை என்று பார்க்கும்போது அதிகமாக வரும். எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் கூட்டம் நடத்தும்போது இரவு 10 அல்லது $10\frac{1}{2}$ மணிக்கு ஒலிபெருக்கியை எடுத்து விடுவார்கள். ஆளும் கட்சிக்கு இந்த மணி வரையறை கிடையாது. இரவு 12 மணி 1 மணி வரை நடக்கிறது. இரண்டும் கூட்டந்தான். இதுவும் ஒரு கூட்டம், அதுவும் ஒரு கூட்டம். எண்ணிக்கைகளை வைத்துப் பொதுவான வாதம் செய்கிறபோது குறைபாடுகளுக்குத் தக்க விளக்கம் கிடைக்காது.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட்டம் 12 மணி வரை நடை பெறுகிறது என்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட்டம் 10 அல்லது $10\frac{1}{2}$ மணிக்கு நிறுத்தப்படுகிறது என்றும் மாண்பு மிகு உறுப்பினர் பேராசிரியர், துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வது-நாங்கள் உத்தரவிட்டு அதை எங்காவது பின்பற்ற மறுத்து, ஆட்சிக் கட்சியினருக்குச் சலுகை காட்டும் வகையில் எந்த அதிகாரிகளாவது நடந்து கொண்டால் அதைத் தயவு செய்து ஆதாரத்தோடு காண்பிப்பார்களானால் நான் நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டேன். அப்படி நடவடிக்கை எடுக்க வில்லை என்றால் இந்தப் பதவியில் இருக்க மாட்டேன் என்பதை இங்கே உறுதிப்படுத்த விரும்புகிறேன். அந்த அளவுக்கு ஆதாரத்தோடு சொல்லப்பட்டால் அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பேன் என்பதை உறுதிப்படுத்து கிறேன்.

**புள்ளி விவரங்கள் காட்டும் உண்மை :**

சட்டம், ஒழுங்கு என்பது பற்றியும், கலவரம், கொலை என்பது பற்றியும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1972-ல் 2849 கலவரங்கள், 879 கொலைகள்; 1973-ல் 3462 கல வரங்கள், 912 கொலைகள்; 1974-ல் 2679 கலவரங்கள், 937 கொலைகள்; 1975-ல் 1826 கலவரங்கள், 853 கொலை கள், 1976-ல் இங்கே கணக்கு இல்லை; 1977-ல் 2520 கலவரங்கள், 628 கொலைகள். நான் பணிவோடு தெரி வித்துக் கொள்கிறேன். இந்தக் குறிப்பைத் தந்திருப்பவர்கள் எங்களுக்குச் சாதகமாகத் தந்திருக்கிறார்கள் என்று கருத மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்தப் புள்ளி விவரங் களை எல்லாம் நான் குறிப்பிடும்போது இதற்கு யார் கார ணம், ஆட்சியாளர்கள் செய்கிறார்கள் அல்லது ஆட்சிக் கட்சி யில் இருப்பவர்கள் செய்கிறார்கள் என்ற விவாதத்தில் இறங் காமல் நாங்கள் வந்தபிறகு சட்டம் ஒழுங்கு குலைந்துவிட்டது, பாதுகாப்பு இல்லை என்ற நிலைமையில் இந்தப் புள்ளி விவரங்கள் நிச்சயமாக இந்த அரசு எந்த அளவுக்குத் தங் களுடைய கடமையைச் செய்து கொண்டிருக்கிறது என் பதைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

**தமிழ்நாட்டில் போலீசார் எண்ணிக்கை :**

அதே நேரத்தில் 1977-ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி

தமிழகத்தின் கொலைகள் 668; ஆந்திரத்தில் 1143; கர்நாடகத்தில் 806; கேரளத்தில் 351; பீகாரில் 1793 மத்தியப் பிரதேசத்தில் 1864; மகாராஷ்டிரத்தில் 1855; உத்திரப் பிரதேசத்தில் 4844; மேற்குவங்காளத்தில் 872. நான் எனது மதிப்பிற்குரிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இங்கே சட்டம், ஒழுங்கு இல்லை என்று சொல்கிற நீங்கள் மேற்கு வங்கத்திலே 872 கொலைகள், தமிழகத்திலே 668 கொலைகள். இது கணக்கிட்டுப் பார்த்துப் பெருமைப் பட்டுக் கொள்ளக்கூடியதல்ல. இந்தக் கொலைகளும் நடக்காமலிருந்தால்தான் சரியான ஆட்சியை நாங்கள் நடத்துகிறோம் என்று சொல்ல முடியும். கொலை எண்ணிக்கையைக் காட்டுவதால் சரியாக ஆட்சி நடத்துகிறோம் என்று பெருமைமைப்பட்டுக் கொள்ளவோ அல்லது தப்பித்துக் கொள்ளவோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த எண்ணிக்கையைப் பார்க்கிறபோது அரசுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது. எப்படிப் பணியாற்றுகிறது என்பதைப் பொது மக்கள் புரிந்து கொள்ள முடியும் என்பதற்காகச் சொல்லுகிறேன். காவல் துறையில் 100 சதுர கிலோ மீட்டருக்கு எத்தனைப் போலீஸார்கள் இருக்கிறார்கள் என்பதைச் சில மாநிலங்களிலே உள்ள நிலைமையில் புள்ளி விவரங்களைத் தருவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

| மாநிலம் | 100 சதுர கிலோ மீட்டருக்கு போலீசாரின் எண்ணிக்கை |
|---|---|
| மேற்கு வங்காளம் | 76.4 |
| உத்திரப் பிரதேசம் | 46.2 |
| பஞ்சாப் | 49.2 |
| கேரளா | 50.7 |
| தமிழ்நாடு | 33.0 |

இதை நான் இங்கே குறிப்பிடும்பொழுது ஒன்றை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த நிலையில் எண்ணிக்



கையை அதிகப்படுத்தப்பட்டதா இல்லையா, 10 ஆயிரம் பேர்களைப் புதிதாகச் சேர்ப்போம் என்று சொன்னீர்களே என்ன ஆயிற்று என்று கேட்கிறபொழுது நாங்கள் அறிவித்த பொழுது பத்திரிகைகளிலே வெளியிட்டார்கள். தங்கள் ஆட்களைக் குண்டர்களைச் சேர்ப்பதற்குப் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று பத்திரிகைகளிலே படித்தேன்.

நாங்கள் அதை அறிவித்தபொழுது எந்த அளவிற்கு எங்களைப் பற்றி சந்தேகப்படுகிறார்கள் அல்லது குறை கூறுகிறார்கள்-எங்களிடம் குற்றம் காணுகிறார்கள் - குற்றம் காணுகிறவர்கள் இருந்தால் எங்களுக்கு நல்லதுதான்-நாங்கள் தவறு செய்தால் எச்சரிக்கை செய்யக்கூடிய நிலைமை ஏற்படும் குறை காணுகிறவர்கள் எவ்வளவு அதிகமாக இருக்கிறார்களோ அவ்வளவு அதிகமாக எங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று எங்களுக்குத் தெரியும். ஒரு எண்ணத்திற்கு, ஒரு காரியத்திற்கு நாங்கள் வடிவம் கொடுக்க முயற்சிக்கிறபோது அவர்கள் அதைப்பற்றி சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள். திறனாய்வு செய்கிறார்கள் என்றால் நாங்கள் மற்றவர்களின் சந்தேகத்திற்கு ஆளாகாமல் நாட்டு மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே எந்த அளவிற்குச் செய்வது என்பதிலே சட்டப் பிரச்சினைகள் எல்லாம் வருகின்றன. சட்ட வல்லுநர்களைத் தேடவேண்டியிருக்கிறது என்ற நிலைமையையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

**காவல்துறையை மூன்றாகப் பிரிக்க:**

புதிதாக ஒரு திட்டத்தைக் கொண்டு வரலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம், காவல் துறையை மூன்றாகப் பிரிக்கலாமா என்று ஒன்று. மதுவிலக்குத் தொடர்பான வழக்குகள், வன்முறைகள் கலவரம், குற்றங்கள் போன்றவைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் இன்னொன்று நிர்வாகத்தைக் கவனித்து ஆங்காங்கே மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிற பணிகள், அது தொடர்பாக வழக்குகளை மேற்கொள்ளுவது ஆகிய இந்த மூன்று பிரிவுகளைக் காவல் துறையைப் பிரிக்க முடியுமா என்று திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறோம். அவர்களைக் கேட்டிருக்கிறோம், அதற்காகக் காத்து இருக்கிறோம். அதற்கான திட்டங்கள் கையில் கிடைக்கும்பொழுது அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தி, 4½ கோடி மக்கள், 4 கோடியே 15 இலட்சம் மக்கள் என்று சொன்னாலும்-சரியான புள்ளிவிவரம் நமக்குக் கிடைக்காவிட்டாலும்-அங்கே என்று 76.4 சொல்லி அத்தனைக் கொலைகள் விழுகிறது என்ற நிலையிலே 33.0 என்ற நிலையில் 668 கொலைகள் என்று சொன்னாலும் எண்ணிக்கையை இன்னும் குறைத்து, மக்களுக்குப் பாதுகாப்புத் தருகிற வகையில் எப்படியெல்லாம் திறம்பட பொதுமக்களுக்குப் பயனுள்ள பணியாக அமைக்க முடியும் என்பதைப் பற்றி நாங்கள் ஆர்வத்தோடும் அக்கறையோடும் செயல்படுகிறோம். இந்த நேரத்திலே மாமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாகச் சந்தேகப்பட மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, உங்கள்

மூலமாக முதல் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். அவர் பதில் சொல்வதற்கும் வசதியாக இருக்கும். பஸ் முதலாளிகளிடத்திலே 1½ கோடி ரூபாய், தியேட்டர் முதலாளிகளிடத்திலே 17 இலட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கப்பட்டு இருப்பதாகக் குற்றச்சாட்டு. இதை நீதி விசாரணை வைத்து தீர்ப்பதாயிருந்தால் நான் நிரூபிக்க தயாராக இருக்கிறேன். ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. முதலமைச்சர் அவர்கள் நீதி விசாரணைக் குழு வைக்கத் தயாரா என்று கேளுங்கள். எங்கள் கட்சியின் சார்பாக நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இதுபோல் பேசிப்பேசி இந்த நாட்டிலே ஒரு உண்மையைச் சொந்தமாக்கி நாங்கள் ஆட்சிக்கு வந்தவர்கள் என்பதை மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் மறந்து இருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால், விசாரணை வேண்டும் என்று சொல்வதைவிட்டு விட்டு, அதை இங்கே சொல்லிவிட்டால் நானே நடவடிக்கை எடுக்கிறேன் என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

**திரு அ. ரகுமான்கான்:** தவறு நடந்து இருக்கிறது என்பது இங்கே மறுக்கப்பட்டு இருக்கிறது. நீதி விசாரணை வைத்தால் நிரூபிக்கத் தயார்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** அப்படியானால் பிரச்சினை இங்கே இல்லை. கவர்னர் இடத்தில் இருக்கிறது. நான் பதில் சொல்லவில்லை என்கிறார்கள். கவர்னர் மத்திய அரசுக்கு அனுப்பி அவர்கள் என்ன செய்கிறார்களோ அதுவரையில் காத்து இருக்க நான் தயார்.

**திரு அ. ரகுமான்கான்:** விசாரணைக் கமிஷன் வைக்கப்பட்டால்தான் சம்பந்தப்பட்டவர்கள் வந்து சாட்சி சொல்ல வசதியாக இருக்கும். ஆகவேதான் விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். முதலமைச்சர் அவர்கள் ஆரம்ப காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது குற்றச்சாட்டு சொல்கிறபோது கூட விசாரணைக் கமிஷன் வேண்டும், அதுவும் வேறு மாநிலத்தில் இருந்து நீதிபதி வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இது பிரேமா கொலை வழக்கில் சாட்சியம் இருக்கிறது என்று சொன்னது போல் ஆகிவிடக்கூடாது. தாங்கள் பொறுமையோடு இருக்க வேண்டும். கவர்னரிடத்தில் மனுகொடுத்து இருக்கிறீர்கள். அவர் என்ன செய்கிறார் என்பதை நாங்கள் எதிர்பார்த்துக் காத்து இருக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் எதைச் சொன்னாலும் அதைச் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, தயவு செய்து நான் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், உங்களுடைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறி

அந்தப் பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எடுத்துச் சொல்லச் சொல்லி, மத்திய அரசை விசாரணைக் கமிஷன் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லுங்கள்.....

.....இது 'கொலைகார அரசு' என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள், ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நான் அவர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். 'கொலைகார அரசு' என்று சொன்னார்களே, கொஞ்சம் இந்தப் பிரச்சினை மனம் புண்படும் என்று எனக்குத் தெரியாது, இதற்கு முழுப் பொறுப்பும் மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்களைத்தான் சேரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமரர் அண்ணா அவர்கள் முதுகுளத்தூர் சம்பவத்தைப் பற்றி இந்த மன்றத்திலே ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஜாதிப் பிரச்னையைப் பற்றி ஒரு இடத்திலே கூறுகிறார்கள். 'இந்தப் பிரச்சினை நாட்டு மக்களை மிகமிக அதிகமாகப் பாதிக்கக்கூடிய பிரச்சினை மாத்திரமல்ல. அதைப்பற்றி நாம் பேசுகின்ற வார்த்தைகளில் எந்த அளவிற்கு பொறுப் புணர்ச்சியைக் கடைப்பிடிக்கிறோமோ, அதைப் பொறுத்து தான் தமிழ்நாட்டின் எதிர்காலமே அமைந்திருக்கிறது. இங்கே ஏதாவது ஒரு பக்கத்தில் இன்றைய தினம் ஒன்று சேர்ந்து அதற்கான தீர்மானங்களைத் திருத்தியோ, செய்திகளை வகுத்தோ, பிரித்தோ கட்சிகளின் சார்பாகச் செய்துகொண்டிருக்கின்ற காரணத்திலே அங்கே இருக்கின்ற புகைச்சலை



அடக்கிவிட முடியாது' என்று கூறியிருக்கிறார்கள். அது போல் இன்னும் பல இடங்களிலே குறிப்பிட்டிருந்தாலும், இதை நான் சொல்லும்போது ஜனதா கட்சித் தலைவர், அன்புக்குரிய மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன்.

நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள். இது கொலைகார அரசு என்கிறீர்கள். நான் 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு முதுகுளத்தூரில் நடந்த சம்பவத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன். அந்த ஆண்டில் எவ்வளவு பேர் கொலை செய்யப்பட்டார்கள்,

எவ்வளவு பேர் சுடப்பட்டார்கள் அதற்கு யார் காரணம் என்று கேட்டால் நான் யாரை மதிக்கிறேனோ இன்றைய தினம் இந்த நிலையில் யாரைப் பற்றிப் பேசக்கூடாது என்ற அனைவரும் விரும்புகிறோமோ அவர்களைத் தலை குனிய வைக்கிற நிலைமை ஏற்படக்கூடாது. ஆனால் நீங்கள் ஏற்படுத்துகிறீர்கள் என்பதை மட்டும் மன வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். கொலைகார அரசு என்று சொல்லுகிற அளவுக்கு அப்படி என்ன நடந்துவிட்டது. புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டினேன்—எவ்வளவு கொலைகள் ஒவ்வொரு ஆண்டும் நடந்திருக்கின்றன என்ற புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டினேன். அதே நேரத்தில் அந்தக் காலத்தில் என்னென்ன நடந்தது என்பதைத் தயவு செய்து கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். யார் ஆட்சி செய்தார்கள் அன்று யாரால் சுடப்பட்டார்கள்? எவ்வளவு பேர் கைது செய்யப்பட்டார்கள்? எவ்வளவு பேர் சிறைச்சாலைக்குச் சென்றார்கள்? ஆயிரக்கணக்கானவர்கள் மீது வழக்கு போடப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எத்தனைத் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள்? எவ்வளவு பேருடைய பிணம் சிறைச்சாலையிலிருந்து வெளியே அனுப்பப்பட்டது என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

**திரு ரா. ஜெபமணி:** துணைத் தலைவர் அவர்களே, இப்போது முதலமைச்சர் அவர்கள் நம்மைக் கடந்த காலத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள். மிக்க நன்றி. அப்போது அவையின் முன்னால் கண்டனத் தீர்மானம் வந்து பேசும் போது அவர்களால் போற்றப்படுகிற பேரறிஞர் அண்ணா என்று அருமையாக அழைக்கப்படுகிற அவர்கள் ஓட்டெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. நான் ஒன்று மட்டும் சொல்லுகிறேன். முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று விரும்பினால், அப்படிப்பட்ட துர்பாக்கிய நிலை வருமானால் நிச்சயமாக அதற்கு ஒருநாள் குறிப்பிட்டால் அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய கடமையை நிறைவேற்றுகிற வகையில் அவர்கள் பழகிவிட்ட காரணத்தால் உள்ளத்தில் ஊறியிருக்கும் தேசீய உணர்வாலும், கட்சி உணர்வாலும் பேசுகிறார்கள். நான் அதைப் பெரிதுபடுத்த விரும்பவில்லை. நான் குறிப்பிட்டது யாரை என்பது தெரியும். அது தெரிந்ததே போதும் என்பதுதான் என்னுடைய எண்ணம். அதற்கு மேல் கூற விரும்பவில்லை. இதற்குமேல் கூறினால் நாம் போற்றிப் பேசுகிறவர்களைப் பற்றிப் பேசுவதாக முடியும். ஆனால், எங்களைக் கொலைகார ஆட்சி என்று சொல்லுகிற போது இந்த நாடு எப்படி இருந்தது, இப்போது எப்படி இருக்கிறது என்ற புள்ளி விவரங்களைச் சொல்லும்போது அவர்கள் ஆத்திரப்படுவது நியாயம். நாங்கள் ஆத்திரப்படவில்லை. அமைதியாகப் பதில் சொல்லுகிறோம். இது விவாத மன்றமே தவிர, நிச்சயமாகப் போராட்ட மன்றம்

இல்லை. நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) இதை விவாதத்திற்குரிய பொருளாக்கவேண்டாமென்று பெரியவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களிடம் நான் மரியாதை வைத்திருக்கிறேன்.

**திரு ரா. ஜெபமணி :** நான் முதலமைச்சர் அவர்கள் பேரில் ரொம்ப மரியாதை வைத்திருக்கிறேன். ஒரு தவறு இன்னொரு தவறுக்குச் சமாதானம் ஆகாது. ஜேம்ஸ் அவர்கள் சொன்னது தவறு என்று சொன்னால் அதைப் பற்றிப் பேசுவதில் தவறு இல்லை. அதைப் பற்றிப் பேசலாம். அதற்கு மாறாக நடந்த சம்பவங்களைப் பற்றிப் பேசுவது என்ற வகையிலே போவார்களானால் அந்தப் பிரச்சினைகளுக்கு இட்டுக் கொண்டு போவாரேயானால் நாட்டில் மீண்டும் வேறு காரியங்களை உண்டு பண்ணியவர்களாவோம் என்ற ஐயத்தின் காரணமாகத்தான் கூறுகிறேன். எனக்கு ஒன்றும் அதைப் பற்றி விவாதிப்பதில் ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** ஆட்சேபணை இல்லை என்று சொல்வதற்கு நன்றி. அது எங்கே இழுத்துச் செல்லும் என்பதை அறிவுறுத்தியதற்காக நன்றி. மகாத்மா காந்தியடிகளைச் சுட்டுக் கொன்றது முஸ்லிம் அல்ல என்று வானொலியில் நாள் முழுவதும் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார்கள் என்று மேலவையில் சுட்டிக்காட்டினேன். யாரையும் புண்படுத்த வேண்டுமென்பது அல்ல. நாங்கள் நிரபராதி என்று சொல்லும்போது கொலைகார ஆட்சி என்று சொன்னால் உண்மையில் புள்ளிவிவரங்களைச் சொல்லிவிட்டு அப்படிப்பட்ட கொலைகார ஆட்சி முன்பு இருந்தது என்று சொல்லும்போது வரலாற்றைத்தான் சொல்லுகிறேனே தவிர வேறல்ல.

**திரு ரா. ஜெபமணி :** அதை நீங்கள் தெளிவாகச் சொல்லி விடுங்கள். நடந்துவிட்ட காரியங்கள் நாட்டு மக்களுக்குத் தெரிந்து தான் ஆகவேண்டும்மென்றால் அதைப் பற்றி விவாதிக்கலாம். பயமுறுத்துவது நல்லதல்ல.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** பெரியவர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்-வாழ்த்துவதோடு அவர்கள் பல ஆண்டுகள் வாழ வேண்டும், விவாதங்களிலே கலந்து வெற்றி பெற வேண்டும். அதற்கு என்னுடைய அன்னை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்பது என்னுடைய ஆசை என்று தெரிவித்துக் கொண்டு அவர்களுக்கு இந்த வயதிலும் அவர்களுக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது என்று தெரியவில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். நல்ல வேளையாக அவர்கள் சிரித்து விட்டார்கள். எனக்கு இருக்கிற வேதனையெல்லாம் மறைந்தவர்களைப்பற்றி இழுக்குத் தேடவேண்டிய நிலைமைக்கு நாம் யாரையும் ஆளாக்கிவிடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு அதனால்தான் நான் பெயரையோ விவரங்களையோ குறிப்பிட்டுப் பேசவில்லை. அவைகளைச் சொல்வது நாகரீகம் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். எங்களைக் கொலை




கார ஆட்சி என்று சொன்னால் அதற்கு விளக்கம் தரவேண்டு மென்பதற்காகத் தான் சொன்னேன். துணைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகிவிட்டது, மாமன்ற உறுப்பினர் கள் என்னை மன்னிக்க வேண்டும். இன்னும் பல மாமன்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறுவதற்கு எனக்கு நேரம் இல்லை என்பதை அவர்களே அறிவார்கள். இன்னும் நீடித்தால் அவர்களுக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்படும் என்பதை அவர்களே அறிவார்கள். இந்த நம்பிக் கையில்லாத தீர்மானத்தின் மீதும், கண்டனத் தீர்மானங் களின் மீதும் எழுதப்பட்ட பிரச்சினைகளுக்கு எங்களுடைய ஆதாரங்களை எடுத்து வைத்திருக்கிறோம். அதற்குப்பிறகு என்ன முடிவு எடுக்கப் போகிறார்கள் என்பதை அவர்கள் தான் முடிவு எடுக்க முடியும். நாங்கள் வற்புறுத்த முடியாது. நாங்கள் சொன்னதிலே நியாயம் இருக்கிறது. அதிலே குறை கள் இருந்தால் நிச்சயமாக அதை எடுத்து நீங்கள் வைத்தால் அதைத் தடுத்து நிறுத்துவோம் என்ற நம்பிக்கை இருந்தால் அவர்கள் தீர்மானத்தைப் பற்றி முடிவு எடுக்கட்டும். கண் டனத் தீர்மானங்களின் மூலம் அவர்கள் எந்த நம்பிக்கையை உத்தரவாதத்தைப் பெறவேண்டுமென்று விரும்பினார்களோ அதைப் பெற்றுவிட்டார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் தேவைப்பட்டதைப் பெறவில்லை என்று அவர்கள் கருதி னால்-நான் தனிமையிலே சொன்னதை இங்கே சொல்ல விரும்புகிறேன்-எப்படியாவது தனிப்பட்ட தொழிலாளர் களை அழைத்து கையெழுத்து வாங்குவது, அடிமைகளாக் குவது போன்ற முறையைத் தடுப்பதற்கு எப்படியாவது சட்டத்தைத் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறோம். அதற்கு நாங்கள் முயற்சிக்கிறபோது அவர்கள் அதற்கு ஆவன செய்ய அதற்கு ஒத்துழைப்புத்தர வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது எங்களுக்கு ஏற்புடையது அல்ல. அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதும் இல்லை. வேறு வழியின்றி அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற் படுகிறபோது சட்டம் குறுக்கே நிற்கிறது. சிம்கோ பிரச் சினைப் பற்றி மீண்டும் அந்த அதிபரை அழைத்துப் பேச இருக்கிறேன் என்பதைக் கூறி கண்டனத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

....இன்னொன்றைச் சொல்ல வேண்டுமென்று விரும்பி யிருந்தேன். முருகையன் அவர்களுடைய கொலையைப்

பற்றி அவையிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லும்பொழுது ஒன்றைச் சொன்னார்கள். ஒரே மனிதன் 34 இடங்களில் குத்த முடியுமா அல்லது தாக்க முடியுமா என்ற சந்தேகத்தோடு கேட்டார்கள். அதனால் சந்தேகப்படுகிறேன் என்று சொன்னார்கள் அதோடு இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். மருத்துவர்கள் சொல்லியிருக்கிறார்கள், வெவ்வேறு ஆயுதங்களால், நான்குக்கும் மேற்பட்ட வெவ்வேறு ஆயுதங்களால் தாக்கப்பட்டிருப்பதாக மருத்துவர்கள் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த மருத்துவருடைய குறிப்பு வந்திருக்கிறது. அதிலே அவர்கள் குறிப்பிடுகிறார்கள், நான்கு வெவ்வேறு விதமான ஆயுதங்கள் என்று குறிப்பிடவில்லை என்பதையும், 33 காயங்கள் இருந்தன என்பதையும் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கே அவர்கள் பார்வைக்கு வைக்கிறேன். நேரமில்லை என்பதால்தான் அதை அவர்களிடத்தில் கொடுக்கிறேன்.

அத்தோடு அதைக் குறிப்பேட்டில் இருந்து நீக்கிவிட வேண்டும் என்ற வேண்டுகோளுடனேயே இந்தப் பத்திரிகைச் செய்தியைப் படிக்கிறேன். இது அவசியமானது அல்ல. தேவையானதும்- இது ஒரு பத்திரிகையில் வந்த செய்தி அவ்வளவுதான்....

**திரு ரா. உமாநாத்:** ஒரு விஷயம், நாங்கள் முருகையன் படுகொலை சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தபோது, கோர்ட்டில் இருக்கிறது-அதைப்பற்றி பேசுவது பாதகமாகும் என்று கூறினீர்கள். இன்று ஒரே ஆளாக குத்தியிருக்கலாம் வேறுபட்ட ஆயுதங்கள் இல்லை என்று டாக்டர் சர்டிபிகேட் வந்து இருப்பதாகச் சொல்லப்பட்டது. இந்த அவையின் முன்னால். இப்படிக் கோர்ட்டில் வழக்கு சம்பந்தமாக வந்திருக்கும் ரிப்போர்ட்டை இங்கே சொல்வது சரியாகுமா?

**மாண்புமிகு முதலமைச்சர்:** நாங்கள் அதை எதற்காகக் குறிப்பிட்டிருக்கிறோம் என்றால் அது பரவவேண்டும் என்பதற்காக அல்ல. பிரச்சினைகளைக் கொண்டு வந்ததற்காகத்தான் சொல்லியிருக்கிறேன். சொல்லாமல் இருந்தால் சொல்ல வேண்டும் என்று சொல்கிறீர்கள். சொன்னால் இப்படியா....

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி:** நான் இந்த ரிப்போர்ட்டை இங்கே படிப்பதற்கு நேரம் இல்லை. நம்பிக் கொடுத்தால் படித்து விட்டுத் தருகிறேன். இதிலே போட்டிருக்கிறது.

**மாண்புமிகு முதலமைச்சர்:** அவர் அதை வைத்துக் கொள்ளட்டும். படித்து விட்டுத் தரட்டும். அவர் அதை வைத்துக் கொள்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

பிரச்சினைகளைக் கொண்டு வந்ததால் பதில் சொல்ல வேண்டி எனக்கு வந்தது. அது மட்டும் இல்லை-இதைப் பத்

திரிகைகளிலேயும் போட்டிருக்கிறார்கள்-அதனால் இதில் இரகசியம் ஒன்றும் இல்லை என்றுதான் இந்த ரிப்போர்ட்டைப் பற்றிச் சொன்னேன்.

ஆனால், ஒருவர் மட்டும்தான் அப்படிச் செய்ய முடியுமா என்று கேட்டால் அதற்கு நான் என்ன செய்வது? ஒரு சந்தேகத்தை இங்கே கிளப்பி விட்டார்கள். அதற்கு நான் ஒரு பத்திரிகை செய்தியைப் படித்துக் காட்டுவதன் மூலம் உங்களுக்கு விளக்கம் தரலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு முதலமைச்சர் :** இது வெறும் பத்திரிகை செய்திதான். இதையே பதிலாக எண்ண வேண்டாம். இது போன்ற செய்திகள் எல்லாம் இப்பொழுது அதிகமாக வந்து கொண்டுதான் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பத்திரிகைச்செய்தி படிக்கப்பட்டதை குறிப்பேட்டில் இருந்து நீக்கிவிட உத்தரவு இடுகிறேன்.

**துரை கோவிந்தராஜன் :** அவருடைய மனைவியை விசாரிக்கச் சொல்லி சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு முதலமைச்சர் :** இந்தப் பத்திரிகைச் செய்தியைக் குறிப்பிடத்தான் விரும்பினேன். ஆனால் நான் இதில் தலையிட விரும்பவில்லை. இதைப்பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. யாராக இருந்தாலும் சரி எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் நான் அந்த அதிகாரியுடன் அதைப்பற்றி பேசியிருப்பதாகச் சொல்ல முடியாது. அதைப் பற்றி நான் யாருடனாவது தொடர்பு கொண்டதாகச் சொல்ல முடியுமா? ஆகவே நான் சொல்கிறேன். அவர்கள் என்ன செய்கிறார்களோ அந்த அதிகாரிகள் இந்த விஷயத்தில் என்ன செய்கிறார்களோ அதைப்பற்றிக்கூட எனக்குத் தெரியாது. அதிகாரிகள் உண்மையில் தவறு செய்திருந்தால் அதற்கேற்ற தண்டனை அவர்களுக்கும் யாராக இருந்தாலும் சரி வழங்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆனால் மக்கள் மத்தியில் இப்படி ஒருபிரச்சாரத்தைச் சொல்லிக்கொண்டு போனால் அரசு எதையோ மறைக்கிறார்கள். அவர்கள் இப்படி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நீதியை நிலைநாட்டாமல் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில் பரவிவிடக் கூடாது என்ற எண்ணத்தில்தான் இதைப் படிக்க வேண்டி வந்தது...

**திரு மு. அம்பிகாபதி :** பாராளுமன்ற உறுப்பினர் கொலை நடந்தபிறகு அதில் நேரிடையாகத் தலையிடவேண்டிய அவசியம் இருக்கிறபோது நான் இதில் தலையிட விரும்பவில்லை என்றால் என்ன அர்த்தம்?....

**திரு சோ. அழகர்சாமி :** அம்பிகாபதி கேட்டால்..

ஒரு குரல்-உட்கார்.

**திரு. மு. அம்பிகாபதி :** உட்கார முடியாது. என்ன

நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்-பாராளுமன்ற உறுப்பினர் கொலை வழக்கைப் பற்றி நாங்கள் கொதித்துக் கொண்டிருக்கிறோம்-இந்த நேரத்தில் உங்களுக்குக் கிண்டலும் கேலியுமா.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அழகர்சாமி தயவு செய்து அமருங்கள். உணர்ச்சி வசப்படாமல் இருங்கள்.

**திரு சோ. அழகர்சாமி :** இந்த அவையில் பேச உறுப்பினர்கள் அனைவருக்கும் உரிமையுண்டு. நாங்கள் உட்காரவில்லை. வெளி நடப்பு செய்கிறோம்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்கிறார்கள்.

**மாண்புமிகு முதலமைச்சர் :** தலைவர் அவர்களே, சிரித்திருக்கக்கூடாது. அவர்கள் சிரித்தது தவறுதான் என்று உணர்கிறேன். அதற்காக உண்மையிலேயே வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.....

**திரு எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, சிரிப்பது என்பது பாராளுமன்றத்திலோ சட்ட மன்றத்திலோ நடைபெறக்கூடாத நடக்காத ஒன்று அல்ல. ஆனால், உட்காருடா என்று மரியாதைக் குறைவாக ஆளும் கட்சித் தரப்பில் உள்ள உறுப்பினர்கள் சொல்லிக் கொண்டிருப்பது நல்லதல்ல. இது இந்த அவையின் பண்பாட்டிற்கே நல்லதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அதற்காகத் தமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். இதை மேலும் கிளறுவது சரியல்ல.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** இந்த நேரத்தில் நான் ஒன்று சொல்லிக் கொள்வது. நான் இங்கே படித்த பத்திரிகைச் செய்தி குறிப்பேட்டில் வரவேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஆகவே குறிப்பேட்டில் இருந்து எடுத்து விடலாம் என்று தெரிவித்தேன். என்மீது தவறான கருத்தை வெளியிடுகிறவர்கள், நான் குறுக்கிட்டால் இன்னும் என்ன பேசுவார்களோ என்கிற சந்தேகத்திற்கு உள்ளாகும் நிலையில், நான் அதில் தலையிடாமல் தவறுகள் நேர்ந்தால் அவர்கள்தான் பொறுப்பு என்று கட்டளையிட்டு இருக்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நானே அவ்வப்போது கூப்பிட்டு அழைத்துப் பேசிக்கொண்டு இருந்தேன் என்றால் எவ்வளவு பெரிய சுமை என்மீது சுமத்தப்பட்டு இருக்கும் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள் என்று நான் அறிவேன். ஆகவே, நான் இங்கே எடுத்துக் காட்டியதற்குக் காரணம், அந்தக் கொலைக்கு யார் காரணம் இருந்தாலும் அவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, வெளியேறியவர்கள் திரும்பி வந்து இந்த மன்றத்தில் நிகழ்ச்

சிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு துரைமுருகன், திரு சுப்ரவேலு ஆகியோர் எழுந்தனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இருவரும் உட்காருங்கள்.

**திரு கா. சுப்ரவேலு :** சார், நான் அடிக்கடி எழுந்து கேட்பது கிடையாது. ஆகவே, அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாராளுமன்ற உறுப்பினர் கொலை வழக்கின் சில உண்மைகள் மறைக்கப்பட்டு இருக்கின்றன. அவருடைய மனைவி விசாரிக்கப்படவில்லை. அங்கேயிருந்த பஞ்சாயத்தார் ஸ்டேட்மென்ட்டை போலீசார் எழுதிக் கொடுத்து அவர்கள் கையெழுத்துப் போட மறுத்துவிட்டார்கள். உடனடியாக அவருடைய மனைவி விசாரிக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். இப்படிப்பட்ட கேள்விகளும், என்னுடைய பதிலும் அந்த வழக்குக்கு உதவி செய்யும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் நம்பமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட கேள்வி கேட்பதை விட்டு விட்டு, வேறு வகையில் கேள்விகளைக் கேட்டால் நான் பதில் சொல்ல வசதியாக இருக்கும். இங்கே குற்றங்கள், குறைகள் சாட்டுகிறபோது, என்னென்ன நடைபெற்று இருக்கிறது என்று விசாரணைக்கு முன்பு சொல்ல வேண்டும் என்று நிர்ப்பந்திப்பது நியாயம்தானா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படித்தான் நாங்கள் வற்புறுத்துவோம். என்று சொன்னால் நான் பேசாமல் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என் பதில் ஒரு வேளை அந்த வழக்கிற்கு பாதகமாக இருந்தால், அது குற்றவாளி தப்பிப்பதற்கு வசதியாகப் பயன்பட்டுவிட்டால் அது நீதிக்கு எவ்வளவு பெரிய இழுக்கை ஏற்படுத்தும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எதுவும் பேசாமல் இருக்கமுடியாது என்கிற நிலையில் ,தவிர்க்கமுடியாத அந்தச் சூழ்நிலையில் இருப்பதைச் சொல்கிறேன். முதலில் நான் பதில் சொல்ல வேண்டும் என்று எண்ணவில்லை. அப்படிப்பட்ட பிரச்னைகளை நான் தொடக்கூடாது என்று வைத்து இருந்தேன். இருப்பினும் மாமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பியதால் இதைச் சொன்னேன்.

**திரு மு. கருணாநிதி :** நான் கேள்வியாக அல்ல, முதலமைச்சரின் கவனத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். ஒரு போலீஸ் புலன் விசாரணை கொலை வழக்கு நடைபெறுகிற நேரத்தில், கொலை செய்யப்பட்டவருடைய மனைவியைக் கூட நேற்றுவரையில் விசாரிக்கவில்லை என்று கொலை செய்யப்பட்டவரின் சகோதரர் எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறார். அதைக் காலையில் படித்துக் காட்டினேன். அந்த நான் முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் :** இந்த விளக்கத்தை நான் மனதில் பதிய வைத்துக் கொண்டு இருக்கிறேன் என்று சொன்னால் போதுமானது. அவருக்கு அதுவும் புரியும் என்று நான் கருதுகிறேன்.

**திரு க. சுப்பு :** தலைவரவர்களே, நான் இந்தப் பிரச்னையில் கேட்கவிரும்பவில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் இல்லை. உட்காருங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கேள்விகள் கேட்கலாம். நேரம் இல்லை. இன்னும் தீர்மானத்தை முன்மொழிந்தவர்களுக்கு பதில் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டும்.

**திரு க. சுப்பு :** ஒரே ஒரு கேள்வி மட்டும் கேட்டு விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுக்கு ஒரு கேள்வி இருக்கலாம். ஒவ்வொருவரும் ஒரு கேள்வி என்றால் நேரம் இல்லை. இருக்கிற நேரத்திற்குள் நான் கட்டுப்படுத்தி உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டியிருக்கிறது.

**திரு க. சுப்பு :** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல அறிவிப்புகளை இங்கே தந்தார்கள். ஆனால் தொழிலாளர்களின் மீது போடப்பட்ட வழக்குகள், டி.ஐ.சைக்கிள் தொழிற்சாலை, தொழிலாளர்கள், பல்லவன் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள், டி.வி.எஸ். தொழிலாளர்கள் இப்படிப் பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளைத் திரும்ப பெற உத்தரவிட்டிருக்கிறேன் என்று சொன்னார்கள்; ஆனால் இன்னும்கூட பல வழக்குகள் திரும்பப் பெறப்படவில்லை. அதற்குக் காரணம் போலீஸ் தரப்பைப் பொறுத்தவரை, வன்முறை என்று சொன்னதால், அவர்கள் எல்லாவற்றையுமே அநத வன்முறைக்குள் அடக்கிவிட்டார்கள். ஆதலால் முதலமைச்சர் அறிவித்த பிறகும் வன்முறைச் சம்பவம் என்ற காரணத்தைக் காட்டி, வழக்குகளைத் திரும்பப் பெறாமல் இருக்கிறார்கள். ஆகவே, பழைய கதைக்குப் போகாமல் தொழிலாளர்கள்மீது இருக்கிற வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்குவோம் என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** நான் ஒரு கருத்தை வைத்துத்தான் அதைச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இந்த நிலையை வெளியிட்டதற்குப்பிறகு ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக வழக்குகள் சம்பந்தப்பட்ட 'ஃபைல்' களை எல்லாம் வரவழைத்து, உண்மையாகவே சில குறிப்பிட்ட வன்முறைச் சம்பவங்களில் யார், யார் ஈடுபட்டார்கள் என்பதைப் பரிசீலனை செய்து பார்த்து, குறைந்தபட்சம் தவறு செய்தவர்கள் மீதுள்ள வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்க முயற்சி செய்கிறேன்.

**திரு துரைமுருகன் :** தலைவரவர்களே. ஒரே ஒரு கருத்தை மட்டும் கூற வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் இல்லை. அனுமதிக்க முடியாது; தயவு செய்து உட்காருங்கள்.

**திரு துரைமுருகன் :** நான் அடிக்கடி குறுக்கிடவில்லை. ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். நான் எழுப்பிய ஒரு பிரச்னைக்கு முதலமைச்சர் பதில் சொல்லவில்லை. எங்கள் தலைவர் மீது உளி வீசப்பட்டது பற்றி கூறினோம். அதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் இப்போது பேசியது முறையா? என்னுடைய அனுமதி இல்லாமலேயே நீங்கள் பேசியிருக்கிறீர்கள். (திரு துரைமுருகன் நின்று கொண்டிருந்தார்) மேலும் நான் அனுமதிக்க மாட்டேன், உட்காருங்கள்.

**திரு துரைமுருகன் :** என்னுடைய கருத்தைச் சொல்ல விடுங்கள். நான் சொல்லப்போவது என்ன என்பதைத் தெரியாமலே உட்காரு, உட்காரு என்றால் என்ன அர்த்தம்? (மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உட்காரும்படி சைகை காட்டினார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்வதை நீங்கள் கேட்கமாட்டீர்கள். அங்கே பாருங்கள். உங்கள் தலைவர் சொல்வதையாவது கேளுங்கள். அவர் சொல்லியும் கேட்க மாட்டேன் என்றால் உங்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.

**திரு மு. கருணாநிதி :** தலைவரவர்களே, 'ஆண்டவன் தான் உங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று' சொன்னீர்கள். நான் ஏற்கனவே ஆண்டவன், அதனால் காப்பாற்றுவேன் (பலத்த சிரிப்பு)

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, என் தம்பி துரைமுருகனுக்கு இப்படி ஒரு ஆண்டவன் கிடைத்ததற்கு மிக்க மகிழ்ச்சி. அதற்காக என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் குறிப்பிட்டதும் வழக்குமன்றத்திலே இருக்கிறது என்ற காரணத்தினால் மட்டுமல்ல; அதுபற்றிப் பேச ஆரம்பித்தால் இந்த அவையிலே மீண்டும் என்ன நடைபெறும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். நான் ஒன்றைச் சொல்லும்போது அவையிலே எப்படியும் வேறுபட்ட கருத்து வரத்தான் செய்யும். நான் தலையீடு இல்லை என்று விவாதித்து, எப்படித் தலையீடு இல்லை என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்தால் அதற்கு முடிவே இருக்காது. நான் வேண்டுமென்றே அந்தப் பிரச்னையை நீக்கிவிடவில்லை. நேரம் இல்லை என்பதால் தள்ளிவிட்டிருக்கிறேன். உங்களுடைய கருத்துக் கூட அதில் இருக்கிறது.

பட்ஜெட்டில் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். வயதிலே குறைந்தவராக இருந்தாலும் யோசனை மற்றவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இருக்கிறது. உங்கள் பக்கம் நியாயம் இருந்தாலும் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? (சொல்ல விடமாட்டேன் என்கிறாரே தலைவர்). தலைவர் அப்படித்தான் இருப்பார். தலைவரோடு ஒத்துப் போய், பிரச்னையை எடுத்துவைக்க முயற்சிக்க வேண்டும்.

**திரு மு. கருணாநிதி :** தலைவரவர்களே. * *

**மாண்புமிகு திரு கே. இராஜா முகம்மது :** தலைவரவர்களே * *

**திரு சி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் * * * * அமைச்சரவர்கள் அடக்கமாக இருக்க வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அந்த வரலாறு, பூர்வீகம் ஆகியவைகளை......

**திரு மு. கருணாநிதி :** தலைவரவர்களே' மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்து, அதை நீங்கள் கேட்டுக் கொள்ள, நாள் விளக்கம் கூறியபிறகு, மறுபடியும் அமைச்சரவர்கள் எழுந்து * * * * என்று குறிப்பிட்டார் அவ்வாறு அவர் குறிப்பிட்டதற்கு அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும். அவரிடமிருந்து மன்னிப்புக் கடிதம் வாங்கி இங்கே வைக்க வேண்டும் முதலமைச்சரவர்கள். அதைச் சொல்லும் வரை நாங்கள் இங்கிருந்து வெளியேற மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அவர் சொன்ன அந்த வார்த்தைக்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லாவற்றையும் சேர்த்துத்தான் நீக்கும்படி உத்தரவிடுகிறேன். * * * அடுத்து நேரம் அதிகம் இல்லாத காரணத்தால் தீர்மானங்களை முன்மொழிந்தவர்கள் சுருக்கமாகப் பேசினால் நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு முதல்வர் :** ஆக, நீங்கள் குறிப்பிட்ட பிரச்னையைப் பற்றி நான் இங்கே எதுவும் சொல்லவில்லை என்பதால் நான் அதை அலட்சியப் படுத்துகிறேன். என்று பொருளல்ல. எதிர்க்கட்சித் தலைவர்மீது உளி வீசப்பட்டது என்பதைக் கேலி செய்தவர்களைக் கண்டிப்பேனே தவிர மன்னிக்கமாட்டேன் என்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞரை தாக்க முயற்சி செய்ததை மட்டுமல்ல; அல்லது நண்பர் உமாநாத் வீட்டில் நடந்ததைப்போல நடப்பதையும் நான் எப்போது ஏற்றுக் கொண்டவன் அல்ல. இன்னொன்றையும் சொன்னார்கள். உமாநாத் அவர்கள் வீட்டில் சோடா பாட்டிலை எறிந்தவர்களை விட்டுவிட்டு யார் மீதோ கேஸ் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னதை நான் கவ

னத்தில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதுபற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பேன் என்ற உறுதியை மட்டும் இப்போது தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு இராஜா முகமது அவர்களும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்ட,

* * * * *

வார்த்தைகள் அவை மரபுக்கு உகந்தவையாக இல்லை என்பதால் அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா:** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நீண்ட ஒரு சொற்பொழிவை இங்கே ஆற்றி இருக்கிறார்கள். ஆகவே நானும் பேசி இந்த அவையினுடைய கோபத்திற்கு ஆளாக விரும்பவில்லை. உறுப்பினர்கள் எல்லோரும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித்தரத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு நான் தடையாக இருக்கக் கூடாது. முதல்வர் அவர்கள் அளித்த விளக்கங்கள் திருப்திகரமாக இல்லாத காரணத்தால் இந்தத் தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

**திரு ஏ. உமாநாத்:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேசுகிறபோது மேற்கு வங்கத்தில் நடந்து இருக்க வேண்டிய கொலைகள் பற்றிய கணக்குகளை எல்லாம் சொன்னார்கள். மேற்கு வங்கத்திலே நடப்பதைத் ஃபேஸ் பண்ணத் தயங்கக்கூடியவர்கள் அல்ல நாங்கள். ஆனால் சொல்லாத ஒன்றைச் சொன்னதாகச் சொல்லி அந்த ஆர்க்யூமெண்டை டெமாலிஷ் பண்ணக்கூடிய அளவிலே சொல்லப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டின்போது இது பற்றிப் பேசிக் கொள்கிறேன்.

அடுத்து இரண்டாவது விஷயம், இந்த அரசு தொழிலாளர் விரோதக் கொள்கையை கொண்டிருக்கிறது என்பது அது குறித்து முதலமைச்சரவர்கள் பேசுகிறபோது நான் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். அப்போது, தொழிலாளர் விரோதக் கொள்கையைப் பொறுத்தவரைக்கும் ரிவர்சலாக ஒரு மாறுதலைக் கூடத் தெரிவிப்பதற்கு அரசாங்கம் தயார் என்ற அறிகுறியே தென்படவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். நல்ல சட்டங்கள் வரும்போது நாங்கள் கட்டாயம் ஆதரிப்போம். ஆனால் உங்களுடைய தொழிலாளர் விரோதப் பாலிஸியிலே ஒரு சேஞ்ச் கொண்டு வருவதற்குரிய அறிகுறியே இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சிம்கோ விஷயத்தைப் பற்றிச் சொல்கிறேன். அந்த விவகாரம் ஆரம்பித்து 79-வது நாள் வரைக்கும் அரசு தலையிடவே இல்லை. 79-வது நாள் நான் ஒரு கடிதம் எழுதிய பிறகு முதலமைச்சரவர்கள் தலையிட்டார். அப்போது என்ன சொன்னார். 12-3 ஆக்ட் இருந்தாலும்

இல்லாவிட்டாலும், இர்ரெஸ்பெக்டிவ் ஆஃப் தட ஆக்ட, செட்டில் பண்ணுங்கள் என்று சொல்லிவிட்டார். அது 12-ஆம் தேதி ஆரம்பித்தது. இன்று 26-ஆம் தேதி, ஸ்டில் கோயிங் ஆன், கோயிங் ஆன். இப்போது சமீபத்தில் நம்முடைய முதலமைச்சரவர்கள், டெல்லியிலே இருந்த போது கூட பேச்சுவார்த்தை நடந்தது. அதற்குப் பிறகு சில நாட்களிலே முடிவு தெரியும் என்று எதிர்பார்த்தோம். கடைசியில் முதலாளிகள் ஹைக்கோர்ட்டிற்குச் சென்று ஸ்டே வாங்குகின்ற அளவிற்கு முதலாளிகளுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது...

....**திரு ரா. உமாநாத்**: ஆகவே காலையில் எழுப்பிய போது கூட திரு. இராகவானந்தம் அவர்கள் குறிப்பிட்டார் கள். முதலமைச்சர் அவர்கள் வந்த பிறகுதான் முடிவைச் சொல்வார்கள் என்று சொன்னார்கள். கனம் முதலமைச் சர் அவர்கள் கூறும்போது' 'பர்ஸூ' செய்கிறேன் என்று சொல்கிறார்கள். இன்னும் 'பர்ஸூ' செய்கிறேன் என்று சொல்வது ஸ்ட்ரைக்குக்கும் பிறகு இப்படிச் சொல்வது முத லாளிகளுக்கு கதவைத் திறந்துவிடுவது போலாகும். ஆகவே நம்பிக்கையை இழந்துவிட்டேன் என்று வேதனையோடு சொல்கிறேன். 126 பேர்கள் பட்டினி கிடக்கிறார்கள். இது ஸ்ட்ரைக்கை உடைக்கும் முயற்சியோ என்ற அச்சம். கேஸ் விஷயமாக வாபஸ் வாங்குவதுபற்றி பரிசீலனை செய்வதாகச் சொன்னார்கள். போட வேண்டிய கேஸ்கள் ஏன் போட வில்லை? டி.வி.எஸ். சிவகுமார், இன்னும் ஆறு கேஸ்கள் பற்றிச் சொல்லியிருக்கிறேன். பகிரங்கமாக வெட்டியதை டி.எஸ்.பி. பார்த்ததை சபையில் சொன்னேன். இந்தத் தீர்மானத்தின்மீது சொன்னேன். முதலமைச்சர் அவர் களிடம் நேரடியாக ப்ரூஃப் காட்டினேன். ஏன் கேஸ் போட வில்லை? அதற்கு பதில் சொல்லவில்லை. வன்முறைகள் நடந்தும் போலீஸ் அதிகாரிகள் பார்த்திருந்தும் கேஸ்போட மல் இருப்பது முதலமைச்சர் அவர்களுக்கு தெரிந்தும் பதில் சொல்லாமல் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்**: தெரிந்தும் பதில் அளிக்காமல் இருப்பது என்று கூறுவது அவர்களுடைய தகுதிக்கு ஏற்ற காரியமல்ல. எனக்குத் தெரிந்திருந்தால் நிச்சயமாக நடவடிக்கைகள் எடுத்திருப்பேன் என்பதை மட் டும் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு ரா. உமாநாத்**: நான் சொன்ன கருத்து என் தகு திக்கு ஏற்றதல்ல என்று சொன்னார்கள். நான் ஃபாக்ட்ஸை நிச்சயப்படுத்திய பிறகுதான் பேசுவேன். சில சமயங்களில் தவறு ஏற்படலாம். சிவகுமார் விஷயத்தில் எக்ஸ்ரே போட் டோவோடு இங்கு பேசியும் பதில் கிடைக்கவில்லை என்று சொல்லும் போது, உங்கள் மாம்பலம் ஆபீசுக்கு வந்து நேரடியாக சிவகுமார் விஷயத்தைப் பற்றியும், மற்ற ஐந் தாறு பேர்கள் தாக்கப்பட்டதுபற்றிச் சொல்லியும், அதற்கு நடவடிக்கைகள் எடுக்கிறேன் என்று சொல்லியும்-அதைத் தான் சொல்கிறேன், தெரிந்தும் பதில் சொல்லாமல் இருக் கிறார்கள் என்று.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்**: அதிகாரிகள் தெரிந்தும் நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்கிறார்கள்

என்ற பொருள் அதில் வரககூடாது என்பதற்காகச சொல்கிறேன். நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்கிறார்கள் என்பதை இப்போது உணருகிறேன். நடவடிக்கை எடுக்காவிட்டால் நான் நடவடிக்கைகள் எடுப்பேன்.

**திரு ரா. உமாநாத்:** கடைசியாக இந்த சென்ஷர் மோஷனை வலியுறுத்துவதின் மூலம் அரசாங்கம் மீண்டும் தன்னுடைய தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்கும் மாற்றுவதற்கும் வாய்ப்பளிக்கும் என்ற முறையில் வலியுறுத்துகிறேன்.

**திரு ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இந்த அரசின் சட்டம் ஒழுங்கைக் கொள்கையை இந்த அவை நிராகரிக்கிறது என்று கண்டனத் தீர்மானத்தை நான் முன்மொழிந்து இங்கே பேசியிருக்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நான் எடுத்துக்கூறிய கருத்துக்கள் பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை என்பதை இந்த மன்றம் நன்கு உணருகிறது. இந்த மாநில மக்களும் நன்றாக அறிகிறார்கள். கடந்த மாதம் 20-ம் தேதி இந்த மாநிலத்தில் நடைபெற்ற வன்முறைகளை எல்லாம் அடுக்கடுக்காக சுட்டிக்காட்டப்பட்டன. அதற்கு ஆதாரமாக பல பத்திரிக்கைகளையும் படித்துக் காட்டினேன். கடைசியாக நாகர்கோவிலில் நடைபெற்ற கோர நிகழ்ச்சி, ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்த ஏழு பேர்கள் கொளுத்திக் கொலை செய்யப்பட்டதும், அடுத்து அந்தத் தீ விபத்தில் காயம்பட்டவர்கள் மூன்று பேர்கள் மருத்துவ மனையில் இறந்ததும் ஆக பத்துப்பேர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியை இங்கு எடுத்துக் கூறினேன். ஆனால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், இந்த நாட்டின் முதல் மனிதராக இன்று நாட்டிலிருக்கிற நாலரைக் கோடி மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய பொறுப்பை ஏற்றிருக்கக் கூடிய முதல் அமைச்சர் அவர்கள்.....

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்குமானால், இன்னும் பல விளக்கங்களை எல்லாம் சொல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். எவ்வளவோ விஷயங்களுக்கு பதில் சொல்ல முடியாமல் போய்விடுகிறது என்று ஏற்கனவே நான் குறிப்பிட்டேன். ஒன்றை மட்டும் நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். எந்த விதமான வேறுபாடும் கருதாமல் இங்கு கூறப்பட்ட மற்ற காரியங்களுக்கெல்லாம் நான் எடுத்திருக்கிறேனோ- அந்த வகையில் இங்கு கூறப்பட்ட அத்தனைக்கும் நான் நடவடிக்கை எடுப்பேன். இந்த நிலையை உணர்ந்து மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் சொன்ன கருத்துகளுக்கு நான் பதில் சொல்லவேயில்லை என்ற நிலை வரக்கூடாது. இன்னும் எனக்குப் பேசுவதற்கு இந்த மாமன்றம் அனுமதிக்குமானால் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல நான் தயாராக இருக்கிறேன்.

**திரு ஜே. ஜேம்ஸ்: ஏறத்தாழ அய்ந்தேகால் மணி நேரம் பதில் சொன்ன முதலமைச்சர் அவர்கள் பத்து உயிர்களை கொள்ளை கொண்ட இந்த நிகழ்ச்சியைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. சொன்னால் என்ன? அது மட்டுமல்ல.**

இந்த நிகழ்ச்சிக்கு நியாயம் கற்பித்து அதற்குப் பதிலாக முதுகுளத்தூர் நிகழ்ச்சியை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இப்படி சொன்னதை நாங்கள் மட்டுமல்ல.—இந்த மாநிலத்துள்ள நாலரைக்கோடி தமிழ் மக்களும் அறியத்தான் போகிறோம். முதுகுளத்தூர் நிகழ்ச்சி என்னைப் பொறுத்தவரையில் முதுகுளத்தூர் நிகழ்ச்சிக்கு கடமைப்பட்டவன் அல்ல. நான் இந்த அரசின் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தேன் என்றால், இந்த நாட்டில் ஏராளமான வன்முறை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று, நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய வன்முறை நிகழ்ச்சிகளை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறேன். அதற்கான ஆதாரங்களையும் கூறியிருக்கிறேன். அதையெல்லாம் சொல்வதற்கு எனக்கு உரிமையிருக்கிறது. அதனால் செய்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த மாமன்றத்தின் முதலமைச்சர் அவர்களால் தயார் செய்து இன்றைய தினம் அய்ந்தேகால் மணி நேரம் உரையாற்றிய முதலமைச்சர் எப்போதாவது இப்படிப் பத்து பேர் உயிரிழந்தவர்களை பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை என்றால், அதைப் பற்றி என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அங்கு இறந்தவர்கள் எல்லாம் மனிதர்கள் அல்ல. பறவைகள் என்று நினைக்கிறார்கள் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. நான் ஏதோ கொலைகார அரசு என்று சொன்னதற்குகாக வருத்தப்பட்டுக் கொண்டார்கள். ஆனால் ஏன் அவ்வாறு சொன்னேன் என்பதற்கான காரணங்களை எல்லாம் ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதையெல்லாம் நான் மீண்டும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இந்த நாட்டிலுள்ள நிலைமைகளைப் பற்றி தெரிந்து இருக்க வேண்டுமே தவிர முதுகுளத்தூர் நிகழ்ச்சியைப்பற்றி இப்போது சொல்ல வேண்டிய தேவையில்லை. முதலமைச்சர் அவர்கள் இதைச் சொல்ல வந்ததிலிருந்து இப்போது நடைபெற்ற காரியங்களை எல்லாம் ஜஸ்டிஃபை செய்வதற்கு ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் இப்படிச் சொல்வார் என்று நான் எதிர்பாக்கவில்லை...

'Maintenance of law and order is the basic responsibility of the Government'

இந்த மாநிலத்தில் மக்களுடைய உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லையோ என்று கேட்டால், அதற்கு என்றோ ஒரு நாள் நடந்த சம்பவத்தை கூறி, அப்போது இது நடக்கவில்லையா என்று சொல்லிவிட்டால், அது நியாயமாக ஆகாது. எப்போதோ நடந்த நிகழ்ச்சியை இப்போது எடுத்துச் சொல்லி தப்பித்துக் கொள்வது சரியல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தலைவர் அவர்களே, நான் கூறிக்கொள்வது என்னவென்றால், நிச்சயமாக இந்த * * * என்பதை இப்போதும் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

**The Hon'ble Thiru K. Narayanaswami Mudaliar:** Mr. Speaker, he has used the word.... is equally an Abetment. Abetment is an offence. The word "........." may be expunged from the proceedings.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் ஆத்திரத்தில் தான் என்ன பேசுகிறோம் என்பதில் கவனம் செலுத்தவில்லை என்று நினைக்கிறேன். ஆத்திரத்தில் இந்த நிகழ்ச்சிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தான் காரணம் என்று நேரடியாகச் சொல்லி பேசுவது சரியல்ல. ஆகவே, அவர்களது பேச்சில் * * * என்று சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

**திரு ஜே. ஜேம்ஸ்:** நான் முதலமைச்சர் என்ற எண்ணத்தில் சொல்லவில்லை.. இந்த அமைச்சரவை தான் என்ற எண்ணத்தில் நான் சொல்லுகிறேன். ஏனென்றால் அந்த அளவுக்கு இன்றைக்குச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நாட்டுக்கு ஜனநாயகத்தை வாங்கி கொடுத்த ஜனதாக் கட்சியின் கொடிகள் இன்றைக்குப் பல இடங்களில் சுட்டு எரிக்கப்படுகின்றன. எத்தனையோ கொடி மரங்கள் வெட்டப்படுகின்றன. போலீஸ் அதிகாரிகளின் முன்னிலையில் இவைகள் எல்லாம் நடந்திருக்கிறது என்று சொன்னால், தலைவர் அவர்களே, இத்தனை நிகழ்ச்சிகளும் ஆளும் கட்சியின் அனுகூலத்தோடு தான் நடந்திருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்......

.....**திரு எம். ஏ. லத்தீப்:** ஆனால் அவர்கள் மேலவையிலே சொல்ல வேண்டியவற்றைச் சொல்லிவிட்டிருக்கிறார்கள். அது அவர்களுடைய நிலை. அதை நான் புரிந்து கொள்ளுகிறேன். நாடு புரிந்து கொள்ளுகிறது. அவ்வளவுதான். அவர்கள் மேலவையிலே அந்த ஊரைப்பற்றி, அந்தப் பகுதியில் இருக்கிற நிலைமைகளைப் பற்றி, தன்மைகளைப் பற்றி யாரையோ சுட்டிக்காட்டி, இரண்டு அமைச்சர்களையும் சுட்டிக்காட்டி, அதிலும் முஸ்லீம் அமைச்சரே பார்த்துவிட்டு வந்து இந்த மாதிரிச் சொல்லுகிறார் என்று சொல்லியிருக்கிறார்கள். முஸ்லீம் அமைச்சர்களாக நியமிப்பது முஸ்லீம்களை முதுகில் குத்தும் கத்தியாகப் பயன்படுத்தத்தான் நியமிக்கிறீர்களா? அங்கே அமைதி ஏற்பட வேண்டுமென்பதற்காக நான் இங்கே அமைதியாக உட்கார்ந்திருந்தேன்-காலையிலிருந்து. நான் முதலமைச்சர் அவர்கள் பேச்சில் குறுக்கிட விரும்பவில்லை. மேலும், அவர்களுடைய பேச்சை விமர்சனம் செய்யவும் தயாராக இல்லை. நாட்டில் அமைதி ஏற்பட வேண்டுமென்பதில் எனக்குப் பெருத்த அக்கறை உண்டு. நான் ஒரு சமுதாயப் பிரதிநிதி. அப்படிச் சொல்லலாமா என்று கருதுகிறார்கள். தோழமைக் கட்சியாக இருந்த போதும் அப்படித்தான் தெரிவித்தேன். திரு சாதிக்பாட்சாவைப் பார்த்துக் கொண்டே முதலமைச்சர் சொல்லுகிறார்? ஏன் சாதிக்பாட்சாவைப் பார்த்துக் கொண்டே சொல்லுகிறார்? இது எங்கள் அடிப்படையான கொள்கை. சாதிக்பாட்சாவைப் பார்த்துக் கொண்டு சொன்னாலும் வேறு யாரைப் பார்த்துக் கொண்டு சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் வேறு விஷயம். இது தான் அடிப்படையான கொள்கை. ஏற்கெனவே என்னுடைய பேச்சில் சொல்லியிருக்கிறேன்.—

**This is a division of Labour. You do something;all people cannot do everything** என்ற வகையிலேதான்

**In our political life we have chosen the weaker section of the society so that we might devote our attention for the uplift ment of that people.**

என்ற முறையிலேதான் வருகிறதே தவிர யாரையும் குறைத்துச் சொல்லவில்லை. சாதிக்பாட்சாவைப் பார்த்துக் கொண்டு சொன்னால் அவருடைய எண்ணம் புரிகிறது. அந்த எண்ணங்களுக்கெல்லாம் நாங்கள் ஆளாகிவிடமாட்டோம். அதனால் எங்கள் நிலையை மாற்றிக் கொள்வது என்பது முடியாது. ஈட்டிமுனையில் நிறுத்திவிட்ட போதிலும் கொள்கையை இழக்க மாட்டோம்: அதுதான் எங்களுடைய பண்பாடு. அதுதான் தமிழ்ச் சமுதாயத்திற்கு இருக்கிற பண்பாடு. நான் ஒரு தமிழன், தமிழ் முஸ்லீம் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமைப்படுகிறேன். தமிழ் முஸ்லீம் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைவது மட்டுமல்ல, அதைத் தக்க வைத்துக் கொள்ள இந்த உயிர், உடல், ஆவி அத்தனையும் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறேன்.

நான் எதையும் பேசலாம். சாதாரணமானவன், இந்த அவையில் உட்கார்ந்திருக்கும் ஒருவன். அதைப்பற்றி சர்க்கார் கட்சிக் கொறடா அவர்கள் கூட ஒழுங்குப் பிரச்சினை மூலமாக எழுப்பினார்கள். நான் ஒருவன்தான். இந்த ஒருவனைப் பார்க்காதீர்கள். இந்த ஒருவனுக்குப் பின்னால் இருக்கும் உணர்வுகளைப் பாருங்கள். பின்னால் இருக்கும் மக்களைப் பாருங்கள். தயவு செய்து இப்படியெல்லாம் பேசாதீர்கள். முதலமைச்சர் அவர்கள் பேச்சு அமைதிப் படுத்த வேண்டுமென்ற முறையில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்கள் அப்படிப் பேசியிருக்கக்கூடாது. மேற்கொண்டு இருக்கிற சூழ்நிலையைக் கெடுக்கிற வகையில் அவர்கள் பேசவேண்டுமா? 'உறுப்பினர்கள் சொல்லுகிறார்கள். இந்த மாதிரி சூழ்நிலை நாட்டில் இருப்பது நல்லது அல்ல. இந்த அரசாங்கத்திற்குப் பொறுப்புண்டு. நிச்சயமாகச் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும். சமூக நீதி ஏற்படும்.' என்ற முறையில் இரண்டு வார்த்தைகள் சொல்லியிருக்கக்கூடாதா?

*1947*-லேயே நடந்தது. இப்போதுதான் புதிதாக நடக்கவில்லை என்று பேசுவது என்றால் என்னைப் போன்ற சிறியவர்கள் பேசிவிடலாம். தாங்கள் பொறுப்பான முதலமைச்சர் பதவியில் இருக்கிறீர்கள் உங்கள் வார்த்தையை நாடு கவனிக்கிறது. மக்கள் கவனிக்கிறார்கள். அந்த வார்த்தைகளை இப்படியா சொல்ல வேண்டும்? ஒரு முஸ்லீமே பார்த்து விட்டு வந்து சொல்லிவிட்டார் என்று சொல்லுகிறீர்கள். உங்களுடைய அமைச்சர் ஒரு முஸ்லீம். அவருடைய பேச்சை மதிக்கிறீர்கள். நானும் அந்தப் பகுதியைச் சார்ந்தவன். நானும் ஒரு முஸ்லீம். எந்தக் காரியமாக இருந்தாலும் உள்ளத்தில் எது உண்மை என்று படுகிறதோ அதைப் பேசிப் பழக்கப்பட்டு விட்டவன். எதையும் யாரிடத்திலும் எதிர்ப்பார்க்காதவன். சிறு வயதிலிருந்தே இந்தச் சமுதாயத் தொண்டுகளில் ஈடுபட்டிருப்பவன். எந்தச் சமுதாயத்தையும் வெறுப்பவன் அல்ல. அத்தனை சமுதாயங்களையும் நேசிக்கும் மனப்பான்மையில் சிறு வயதில் இருந்தே பழக்கப்பட்டவன். நான் இங்கே ஒருவனாக இருக்க முடியும். நான் சொல்வதை நினைத்துப் பார்க்கக்கூடாதா? என்னிடம்

சில வரைபடங்கள் இருக்கின்றன. அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் தருகிறேன்.

**திரு ஜே. ஜேம்ஸ் (தொடர்ச்சி):** அடுத்து நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். 'டபுள் ஸ்டாண்டர்டு' கொள்கையைக் கடைப்பிடிப்பதாக நான் சொன்னேன். அதற்கான விளக்கம் இங்கே கூறவில்லை. இன்னொன்றையும் நான் கூறினேன். 'ஊழல் ஆட்சி' என்றும் கூறினேன். சர்க்காரியா கமிஷன் அறிக்கை என்ன ஆயிற்று? இவற்றுக்கெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூற நேரமில்லை. ஆகவே, இந்த நாட்டு மக்கள் அறிந்து கொள்வார்கள்; அறிந்து கொள்ளட்டும் மக்கள் முடிவு செய்யட்டும் என்று சொல்லி என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்தி அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். எங்கள் மீது சுமத்தப்பட்ட 'கொலைகார ஆட்சி' என்ற வார்த்தையை நான் மன வருத்தத்தோடு ஏற்றுக் கொள்கிறேன். அதனால் இப்போது நாட்டிலே நடக்கின்ற வன்முறைகளை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றோ, கொலைகளை நாங்கள் வரவேற்கிறோம் என்றோ சொல்லவில்லை. ஒரு நிகழ்ச்சிகூட நடைபெறாமல் இருந்தால்தான் எங்களுக்கு நிம்மதியாக இருக்கும் என்ற நிலைமையை நாங்கள் மிகத் தெளிவாகச் சொன்னோம். அதைச் சொல்லாமல் இங்கே நடந்தவைகளைக் கற்பனையாகச் சொல்லும் வகையில், நீங்கள் இன்றையதினம் குற்றம் சாட்டுவது பொருத்தமல்ல என்பதைச் சுட்டிக் காட்டி, தலைவர் அவர்கள் மூலம் மறுபடியும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் விரும்பினால், அவர்கள் சலித்துப் போகவில்லை என்று சொன்னால், என் பதிலை அவர்கள் பெறலாம்; தரலாம்.



**திரு எம். ஏ. லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, நானும் மிகமிகச் சுருக்கமான ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். குரலும் இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய நீண்ட பதிலில் நான் பாராட்ட

வேண்டிய ஒரே ஒரு அம்சம் இருக்கிறது. இந்த மன்றத்தில் சுதந்திரம் பெற்று முதல் சட்டமன்றம் கூடிய பிறகு, 3 முதல் அமைச்சர்கள் இந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது, எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய எதிர்க்கட்சித் தலைவராக இந்த மன்றத்திலே பணியாற்றிய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் திருவுருவப் படம் இங்கே திறந்து வைக்கப்படும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், அவர்களுடைய திருவுருவப படத்தைத் திறந்து வைக்க வேண்டுமென்பதில் நம்மைப் போன்றவர்களுக்குத் தான் விருப்பம். ஆனால், அவருடைய விருப்பம் அல்ல. நம்முடைய விருப்பமாக, இதை நாம் செய்கிறோம். ஆனால், அவருடைய விருப்பம் எதுவாக இருந்தது? வாழ்க்கை முழுவதும் அவர்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற நலிந்த, மெலிந்த, அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுள்ள சிறுபான்மை மக்களுக்கு வாழ்வு வேண்டும். அப்படி கிடைக்கின்ற வாழ்வில் அமைதி வேண்டும் என்பதற்காக அவர்கள் வாழ்ந்தார்கள். அதுதான் அவருடைய விருப்பமாக இருந்தது. நீங்கள் அவர்களுக்கு அவரது திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கிறீர்கள். அதே நேரத்தில், எந்தக் கொள்கைக்காக, தத்துவத்திற்காக, இலட்சியத்திற்காக அந்தப் பெருமகனார் வாழ்ந்தாரோ அந்த வாழ்க்கைக்குரிய இலட்சியம் இன்றைக்கு நாட்டிலே இல்லை; அதற்கு மாறுபட்ட சூழ்நிலைதான் இருக்கிறது. அதைக் காப்பாற்றித் தாருங்கள் என்பதற்காகத்தான், அதை உணர்த்துவதற்காகத்தான் இந்த கண்டனத் தீர்மானத்தைக் கொடுத்தேன். நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். அந்தப் பெருமகனார் வாழ்ந்த இலட்சியமாகக் கொண்டு உழைத்த அந்த சிறுபான்மையோருக்கு வாழ்வு தாருங்கள். இதைச் சொல்வதால், மற்றவர்களை அழித்து அல்ல; மற்றவர்கள் வாய்ப்பைக் குறைத்து அல்ல. மற்றவர்கள் வாழ்வுக்கு ஒரு வாய்ப்பு இருக்கும் போது, இந்த சிறுபான்மை மக்களுக்கும் வாழ்வு தாருங்கள். அந்த வாழ்வு அமைதியான வாழ்வாக இருக்கட்டும். அவர்கள் எதற்காக வாழ்ந்தார்களோ அந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதன் மூலம்தான், நாம் அவர்களுக்கு உண்மையான அஞ்சலி செலுத்தியதாகும். அதைத்தான் காயிதே மில்லத் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் இங்கே நான் எழுப்பிய பிரச்சினைகளுக்கு எதற்கும் பதில் அளித்ததாக நான் நினைக்கவில்லை. அதைப் பற்றி எனக்கு ஆச்சரியமோ, அதிர்ச்சியோ ஒன்றுமில்லை. நான் எதிர்பார்த்த வகையில் தான் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். மேலும், இந்த அவையிலே நாம் எதிர்பார்ப்பதற்கு வேறு ஒன்றுமில்லை. மேலவையிலே இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய பதட்ட சூழ்நிலையைப் பற்றியும், அதற்கான ஏற்பாடுகளைப் பற்றியும் மிக அச்சத்தோடும், அக்கறையோடும் தகவல் தந்து பேசிய முதலமைச்சர் அவர்களின் பேச்சு, அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு உதவும் என்று எண்ணிக் கொண்டிருந்தோம்.

அவர்கள் பார்ப்பார்கள். ஆனால், அங்கேயிருந்து வருகிற ரிப்போர்ட்டைத்தான் அவர்கள் படிப்பார்கள். எங்களைப் போன்றவர்களை அழைத்து இது என்ன என்று கூட கேட்க மாட்டார்கள். அதைப்பற்றி நான் வருத்தப்படவில்லை. என்னுடைய விதி அப்படித்தான். இங்கே எங்களுக்கு அமைச்சர்கள் பாதுகாப்புத் தராமல் போகலாம், அரசுகள் எங்களுக்குப் பாதுகாப்புத் தராமல் போகலாம். ஆனால், அரசனுக்கெல்லாம் அரசனான நீதி, சத்தியம், இறைவனாக இருக்கிற அவருடைய பாதுகாப்பிலே நாம் இருக்கிறோம். அந்தப் பாதுகாப்பிலே நிச்சயமாக அநீதி அழியும். அரசன் அன்று கொல்லும், தர்மம் நின்று கொல்லும் என்ற முறையிலே உணர்வுகளைப் பிரதிபலிக்க மக்களால் அனுப்பப்பட்டிருக்கின்ற ஆட்சியாக இருந்தாலும் தரைமட்டமாகிவிடும். இது நீதி, தர்மத்தினுடைய குரல், காலத்தினுடைய கட்டளை. நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே இந்த வரைபடத்தைக் கொடுத்துவிட்டு, நாட்டிலே சிறுபான்மை மக்களுக்கு ஒரு நீதியை ஒரு அமைதியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முதலமைச்சர் பதிலிலே நான் சொன்ன எந்தப் பிரச்சினைக்கும் பதில் இல்லை என்ற காரணத்தாலோ நான் எழுப்பிய பிரச்சினைகள் அத்தனையும் அப்படியே இருக்கின்றன. அவை குறிப்பிலேயும் இருக்கட்டும், சட்டமன்றத்திலேயும் இருக்கட்டும். நீதி தலைதூக்கும்பொழுது அது கண்திறந்து பார்க்கும்போது யாரை எரிக்க வேண்டுமென்ற நிலை வருகிறதோ அவர்களை எரித்தே தீரும். இங்கே நான் கொடுத்திருக்கிற தீர்மானம் தோல்வியடைந்தாலும் சத்தியத்தினுடைய சந்நிதானத்திலே அது வெற்றிபெறும் என்று கூறி அமைகிறேன்.

**உண்மைக்குப் புறம்பானது**

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு லத்தீப் அவர்கள் மிக உணர்ச்சியோடும் நல்ல நோக்கத்தோடும் சில கருத்துக்களை வெளியிட்டார்கள். நான் உண்மையிலேயே அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் சொல்கின்ற முறையிலே எவ்வளவு உணர்ச்சியோடு கூறினார்கள், அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மீண்டும் மீண்டும் இந்த அவையிலே எடுத்து வைக்கிறேன். நான் பதில் கூறத் தயார். அவர்களும் இருந்தால் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். திரு ஜேம்ஸ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், என்னுடைய பேச்சைக் கேட்டு எல்லோரும் சலித்து இருக்கிறார்கள் என்று, இவ்வளவு பிரச்சினைகளை இங்கே எடுத்து வைத்து சொன்ன உங்களுக்கு அப்படி என்றால் அவ்வளவையும் உட்கார்ந்து படித்து எடுத்து எனக்கு அப்படித் தோன்றாததற்குக் காரணம் நான் முதலமைச்சர் பதவியில் இருக்கிறேன் என்ற ஒரே காரணம் தான். திரு லத்தீப் அவர்கள் பேசும்போது என்னைப் பெரியவர் என்று ஒத்துக் கொண்டதற்கு நன்றி. ஆனால், அவர் சிறியவர் என்று சொன்னதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. என்னை விட அதிகம் படித்தவர், பட்டம் பெற்றவர், இருந்தாலும் நான் பதில் சொல்லவில்லை என்று சொல்லியதற்

காக நான் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில ஊர்களிலே இருந்த பிரச்சினைகளைப்பற்றி எடுத்துக் கூறியிருக்கிறேன். சில பிரச்சினைகளைப் பற்றி நாங்கள் ஆதாரத்தோடு இல்லையென்று கூறியிருக்கிறோம். எதற்குமே முதலில் முடிவை வைத்துக் கொண்டு பேசுவது என்பது வேறு, விவாதத்தைக் கேட்ட பிறகு பேசுவது வேறு. முடிவை வைத்துக் கொண்டு இருக்கிற நீதிபதி போல் அவர்கள் பேசுகிறார்கள். இந்த நிலையில் அவாகள் நாங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைத்தால் ஏமாற்றம்தான் திரு சாதிக்பாட்சா அவர்களைப் பார்த்து ஏதோ சிரித்துக் கொண்டிருந்ததாக திரு லத்தீப் அவர்கள் சொன்னார்கள். எங்களைப் பற்றி திரு சாதிக் பாட்சா அவர்களுக்குத் தெரியும். அவர்களைப் பற்றியும் எனக்குத் தெரியும். நாங்கள் எப்படிப் பழகினோம் என்று அவர்களுக்குத் தெரியும். நாங்கள் அந்த வகையில் கட்சியைக் கட்டிக் காப்பாற்றக் கூடிய பரிதாப நிலையிலே இல்லை என்பதை நான் திரு லத்தீப் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு நாங்கள் சிரித்துப் பேசி அவர்கள் கவனத்தை இழுத்து அப்படியெல்லாம் அரசியல் நடத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் திரும்பப் பெறாவிட்டால் அது அவர்களுக்குள்ள உரிமை. ஆனால் நாங்கள் வேண்டுமென்றே அலட்சியப்படுத்துகிறோம் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு கூத்தக்குடி ச. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வேதனையோடு வெளிநடப்பு செய்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் வேதனை தரும் அளவிற்குப் பேசிப் பழக்கப்பட்டவன் அல்ல. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், எதிர்க்கட்சித் தலைவரவர்கள். முருகையன் கொலை சம்பந்தமாக டாக்டர் சர்ட்டிபிகேட் பற்றி சொல்லி, அது சம்பந்தமாக முதல்வரவர்கள் ஒரு விளக்கம் சொல்ல எழுந்து சொல்லும்போது டாக்டர் சர்ட்டிபிகேட்டைக் கொடுப்பதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதைக் கொடுப்பதோடு நிற்காமல்-வேறொன்றைப் பத்திரிகைச் செய்தி என்ற பெயரால் ஒருவன் பல குத்துக்களைக் குத்த முடியும் என்பதற்கு உதாரணமாகச் சொல்வது போல் சொல்லியது சரியாக இருக்குமா? அவர்களே சொன்னார்கள். வழக்கு இருப்பதால் நான் தலையிடவில்லை என்று சொல்லிவிட்டு, கலைஞரிடத்திலே சொல்லுகின்ற முறையில் வாதாடுகின்ற முறை இருக்கிறதே, அது நிச்சயமாக ஒரு ஆள் குத்தியிருக்க முடியும் என்பதற்கு வேறொரு விளக்கத்தைக் கொடுக்கும்பொழுது ஒருவன்தான் குத்தினான் என்ற கருத்தை ஏற்படுத்த முயல்வது நியாயமாக இருக்கிறதா என்பதை அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, எப்பொழுதுமே ஒரு பிணம் விழும் பொழுது ஒரு சாவு ஏற்படும்பொழுது அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கு அதிகமாகத் துக்கம் இருக்கும். சந்தேகம் ஏற்பட்டிருக்கும். அதை நிவர்த்தி செய்ய வேண்டும், அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருவதற்கு உரிமை உண்டு.

அதேநேரத்தில் உணர்ச்சி வசப்பட்டு தனி நபர் கருத்துக் களைப் பற்றிப் பேசியிருக்கும்போது, நாங்கள் கருத்துக் களைக் கூற எழுந்திருக்கும்பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் இந்தக் கொலை சம்பந்தமாக ஏன் தலையிடவில்லை. தலையிட்டு இருக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்ல வரும்பொழுது, சத்தம் வந்தால் அவைகளைப் பற்றி விவாதிக்கக்கூடிய நிலைமை இருக்குமா, அதை நிவர்த்திக்க முடியுமா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சரவர்கள் வருந்துகிறேன் என்று சொல்லி அதற்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது, அதை மறுபடியும் எழுப்ப வேண்டாம்.

**திரு கூத்தக்குடி ச. சண்முகம்:** தலைவரவர்களே, எனக்குச் சந்தேகம் இருக்கலாம், இல்லாமல் இருக்கலாம், அதேபோல் அழகர்சாமிக்குச் சந்தேகம் இருக்கலாம். இல்லாமல் இருக்கலாம். ஆனால், எங்கள் அணிக்குச் சந்தேகம் வந்திருக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள். அதை நிவர்த்தி செய்தால் எங்களுக்கும் நல்லது, உங்களுக்கும் நல்லது. எனவே, சி. பி. ஐ. விசாரணைக்கு உத்தரவிடுவது இரண்டுபேருக்கும் நல்லது; அதற்கு முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சை நீண்ட நேரம் கேட்டுப் பொறுமையாக இருந்தவர்கள், கடைசியிலே நான் சொல்ல வேண்டிய அவசியத்தை உண்டாக்கி விட்டதைப் பற்றி அவர்கள் சிந்தனை செய்யாமல் இந்த அரசு உடந்தையாக இருக்கிறது என்று மேடையிலே பேசுவது மட்டுமல்லாமல், இங்கேயும் ஒருவர் கொல்லவில்லை. பலர் கொன்றிருக்கிறார்கள் என்று ஆதாரங்களை எடுத்து வைக்கலாம். ஆனால், நாங்கள் எங்களுக்குக் கிடைத்த ஆதாரங்களைச் சொல்லக்கூடாது என்பது என்ன நியாயம்? குற்றம் சாட்டப் பட்டால் நாங்கள் பேசாமல் இருக்க வேண்டும், எங்களுக்குக் கிடைத்த ஆதாரங்களைச் சொல்லக்கூடாது என்றால் என்ன நீதி? ஒருவர் குத்தியிருக்க முடியாது, பலர் குத்தியிருக்க வேண்டும் என்று வெளியிலே மேடைகளிலே பேசிக்கொண்டு வந்தால் அதுமட்டும் உண்மைக்கும், நியாயத்திற்கும் உட்பட்ட செயல் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருதுகிறார்களா? நாங்கள் பேசினால் நாங்கள் ஆதாரத்தை எடுத்து வைத்தால் அது குற்றம், ஆனால் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு பழியைச் சுமத்தினால் கற்பனை செய்து கொண்டு, அல்லது பிறகு உண்மை என்று தெரிய வந்தாலும், அதைப் பற்றிச் சொல்லும்பொழுது அதைப்பற்றி நாங்கள் பேசாமல் இருப்பது எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்று கேட்க விரும்புகிறேன்.

**யாருடைய மனத்தையும் புண்படுத்துவது எங்கள் நோக்கமல்ல**

ஆனால், என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அப்படிச் சொல்லியிருந்தால் அது தவறு என்பதற்கு நான் வருத்தம் தெரிவித்ததைப் பற்றித் தலைவரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். திரும்ப வந்து அவர்கள் கலந்து

கொள்ள வேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுத்தேன். நீங்கள் எதிர்த்து ஓட்டளிக்க இருக்கிறீர்கள். இருந்தாலும், நீங்கள் வர வேண்டும்என்று சொன்னேன். நீங்கள் இந்த மன்றத்திற்குள் இருந்து எங்களுக்கு எதிராக ஓட்டளிக்க விருப்பம் இருந்தால் அது நிறைவேற்றப்பட வேண்டும். உங்கள் எண்ணிக்கை இல்லை என்றால் நாங்கள் அதிக எண்ணிக்கை பெற்று விடுவோம் என்ற முயற்சியில் நாங்கள் இறங்கவில்லை என்பது அந்த வேண்டுகோளிலிருந்தே தெரியும் என்று நான் நம்புகிறேன். ஆகவே, எதிர்க்கட்சியிலிருப்பவர்களை அவமானப்படுத்த வேண்டுமென்ற எண்ணமோ அல்லது அலட்சியப்படுத்த வேண்டுமென்ற எண்ணமோ அல்லது அகந்தையால் எதையும் செய்வது என்பதோ எங்களுக்கு இல்லை என்பதை எங்கள் வரலாற்றைத் தெரிந்திருக்கின்ற நீங்கள் அறிவீர்கள். பல வரலாற்றைக் கொண்டிருக்கின்ற நாங்கள் இந்தப் பதவியும், இந்த அதிகாரமும் நிச்சயம் இல்லை என்று நம்புகிறோம். ஆனால், எங்களைப்பற்றி எந்த அளவிற்கு மக்கள் உணர்ந்திருக்கிறார்களோ அதைப்போல இந்த மாமன்றத்திலே இருக்கிற நீங்களும் தெரிந்திருப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். யாருடைய மனத்தையும் புண்படுத்த வேண்டும் என்பது எங்கள் நோக்கம் அல்ல. ஆனால், ஆட்சியிலே இருப்பவர்கள் இப்படிப்பட்ட தவறுகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்ற கருத்தை வெளியிடும் பொழுது, வெளியே பேசிக்கொண்டிருக்கும்பொழுது எனக்குக் கிடைத்த ஆதாரத்தை இங்கே வைக்க வேண்டாமென்று சொல்வது எப்படிப் பொருத்தமாகும் என்று கேட்க விரும்புகிறேன். அதைச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கிவிட்டு ஏன் அந்தச் சூழ்நிலை உருவாக அனுமதித்திருக்கிறீர்கள்? எது நியாயம் என்று நீங்கள் மட்டும் கூறலாம். ஆனால், நாங்கள் திருப்பி ஆதாரம் காட்டினால் குற்றம் என்று சொன்னால் அதுதான் நீதியா? அதுதான் தர்மமா? மாண்புமிகு லத்தீப் போன்றவர்களும் இப்படிச் சொல்வார்கள் என்றால் எது நீதி என்பதை நான் இயற்கைக்கே விட்டு விடத்தான் வேண்டியிருக்கும் என்றுதான் கூற வேண்டும்...

தமிழரசு

# இலவச இணைப்பு

# தமிழரசு

## இலவச
## இணைப்பு

தமிழரசு அச்சகம், சென்னை-600 002.